R. R. No. 1538/73

# இந்தியாவில் சமுதாய அபிவிருத்தி

வி. டி. கிருஷ்ணமாச்சாரி

Y744
N62
42862

கேஷன்ஸ் டிவிஷன்

1538 | 73
AHB

# இந்தியாவில் சமுதாய அபிவிருத்தி

வி. டி. கிருஷ்ணமாச்சாரி

பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்
செய்தி - ஒலிபரப்பு அமைச்சகம்
இந்திய சர்க்கார்

ஆஷாட 1884 (ஜூலை 1962)
July 1962 (Asadha 1884)

TAMIL NADU ARCHIVES LIBRARY
4262
9 DEC
MADRAS-600 008

# Community Development in India (Tamil)

Not For Sale

விற்பனைக்கு அல்ல

ARCHIVES LIBRARY
4262

Published by the Director, Publications Division, Delhi-6
and Printed at Shanti Press, Madras-1.

AHB
D.R. No. 1528/23

# பொருளடக்கம்

| அத்தியாயம் | | | பக்கம் |
|---|---|---|---|
| | ஆங்கிலப் பதிப்புக்கு முகவுரை | ... | 1 |
| 1. | இயக்கத்தின் தத்துவம் | ... | 5 |
| 2. | திட்டமும் கிராம அபிவிருத்தியும் | ... | 23 |
| 3. | வெற்றிக்கு உரைகல் | ... | 39 |
| 4. | இணைப்பான பணி | ... | 44 |
| 5. | சாதனையும் வருங்காலமும் | ... | 50 |
| 6. | நிர்வாக அமைப்பு | ... | 62 |
| 7. | கிரசம சுயாட்சி | ... | 70 |
| 8. | இரண்டாவது திட்டத்தில் விவசாயம் | ... | 90 |
| 9. | க்ஷேமநல அரசாங்க நிர்வாகம் | ... | 117 |
| 10. | கிராம வருமானம் இரட்டிக்க | ... | 130 |
| | அனுபந்தங்கள் | ... | 153 |

(இதில் உள்ள ஸ்ரீ வி. டி. கிருஷ்ணமாச்சாரியின்
உரைகளும் கட்டுரைகளும் புத்தக வடிவுக்கு
ஏற்ப முறைப்படுத்தப்பட்டுள்ளன.)

# ஆங்கிலப் பதிப்புக்கு முகவுரை

உலகிலே முன்னேறிய பகுதி என்று கருதப்படும் பிரதேச மானது, மாட்டுச் சாணத்தை எரிபொருளாக உபயோகிக்கும் நிலையி லிருந்து நீராவி—பெட்ரோல்—மின்சார சகாப்தங்களுக்கு முன்பு பாய்ந்து சென்றது; அந்தச் சகாப்தங்களின் வளர்ச்சி இந்தியா வைத் தீண்டாமல் தாண்டிப்போய் விட்டது; அப்போது இந்தியா கால்நடையுடனும் எருக்குழியுடனும் தொடர்பு கொண்ட வாழ்க்கை யைக் கட்டித் தழுவி நின்றது. செத்த காலத்தின் சீரையும் சிறப் பையும் செப்பி மகிழ்ந்தது இந்நாடு. தத்துவத்திலும் சித்தாந்த வாதத்திலும் ஊறித் திளைப்பதில்தான் அது பெருமிதம் கண்டது. ஆனால் பௌதிகம் கலக்காத வெறும் தத்துவமானது உடலற்ற ஆன்மாவே. இந்நிலைமையில் பூதபைசாச நம்பிக்கையின் ஆதிக்கத் துக்கு நாம் ஆட்பட்டிருந்ததில் ஆச்சரியமில்லைதான்.

டவுன்களிலும் நகரங்களிலும் மாத்திரமே ஒளியும் ஒலியும் நில வின. இந்த மாபெரும் உபகண்டத்தின் அன்ன தாதாக்கள் வாழ் கின்ற, ஜனத்தொகையில் 82 சதவிகிதத்தினர் வாழ்கின்ற, கிராமங் களில் இருள் மண்டிக் கிடந்தது. நகரக் குடியிருப்புகளில் 'நியான் விளக்கு நாகரிகம்' ஓங்குவதை நோக்கிய வண்ணம் இந்தியாவின் ஐந்தரை லட்சம் கிராமங்கள் படாத பாடுபட்டு உயிர்வாழ்ந்துவந்தன. சுறுசுறுப்பான உள்ளங்களும் உடலங்களும், அவற்றின் சிருஷ்டி களும் ஆண்டுதோறும் அந்த நகரக்குடியிருப்புகளை நோக்கிப் போய்க் கொண்டிருந்தன; பதிலுக்கு அங்கிருந்து கிராமங்களுக்கு வருவார் இல்லை. 1952-ல் பற்றவைக்கப்பட்ட சமுதாய அபிவிருத்தி என்ற தீப்பொறி இந்தத் தேக்கக் குட்டையை ஒரு கலக்குக் கலக்கியது; கிராமவாசிகள் காதைத் தீட்டிக் கொண்டு கவனித்தார்கள், தங்களுக்

குப் பழக்கமில்லாத ஏதோ ஒன்றை உணர ஆரம்பித்தனர். கிராம வாசியை நோக்கிப் புன்முறுவல் செய்பவரைக்கூட வீரராகக் கருதிப் போற்றுவது வழக்கம். நீண்டகாலப் பட்டினியால் நலிந்துபோன விவசாயிகளுக்கு அமுது அளிக்க முன்வந்த சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் புகழ் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் தூற்றப்படு வதில் வியப்பில்லைதான். சமீபகாலங்களில் நிகழ்ந்துள்ள வேறு எந்தச் சம்பவத்தையும் விட மிகவும் உன்னதமானது இது.

நம்மிடையே வாழ்ந்து செயலாற்றி வரும் மிகப் பழைய நிர்வாகி ஸ்ரீ. வி. டி. கிருஷ்ணமாச்சாரி. காலத்தையும் பிராயத்தையும் கடந்து நின்று அவர் அலுவல் புரிகிறார். அவரது வயதில் பாதிதான் ஆனவர் கள்கூட அவரைக் கண்டு வியந்து நாண வேண்டியிருக்கிறது. திட்டக் கமிஷன் உபதலைவர் என்ற ஹோதாவில், இந்த (ச. அ.) திட்டம் தோன்றிய நாள் முதல் தமது கேந்திர ஸ்தானத்திலிருந்த வண்ணம் அதனுடன் அவர் தொடர்பு கொண்டிருக்கிறார். இந்தத் திட் டத்தில் அவருக்கு இருக்கும் உற்சாகம் மற்றவர்களுக்கு ஆதர்சம் அளிக்கும் வற்றாத ஊற்றாக விளங்குகிறது. பல வருஷங்களுக்கு முன் னால் அவர் பரோடா திவானாக இருந்தபோது கிராமாந்தர விஸ்தரிப்புப் பணியை முதன் முதலாக நடத்தி அனுபவம் பெற்றார். அதிலிருந்து இந்தியாவின் வருங்காலத்துக்குக் கிராமம்தான் கேந்திரமானது என்று நம்பலானார். பஞ்சாயத்துக்கள், கிராமக் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவை மூலம் பரஸ்பர உறவுகொள்ளும் கிராமவாசிகள்தாம் புதிய தோர் கிராமக் கலாசாரத்துக்கும் சமுதாயத்துக்கும் அஸ்திவாரம் என் பதையும் அவர் உணர்ந்து கொண்டார். ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு பஞ்சாயத்தும் ஒரு கூட்டுறவு சங்கமும் வேண்டும்; இவற்றில் ஒவ் வொரு குடும்பமும் சுயவுரிமையுடன் அங்கம் வகிக்க வேண்டும், ஒவ் வொரு குடும்பமும் ஒரு உற்பத்தித் திட்டத்தை வகுத்துக்கொள்ள வேண்டும்; ஒவ்வொரு குடும்பமும் தனது உபரி உழைப்புச் சக்தி யில் ஒரு பகுதியைச் சமுதாயத்துக்கு நல்க வேண்டும்; கிராம அமைப்பில் ஒவ்வொரு பெண்ணுக்கும் குழந்தைக்கும் உரிய ஸ்தானத்தை அளிக்க வேண்டும் என்ற கருத்துக்களை அவர் வலி யுறுத்தி வருகிறார். அபிவிருத்திக் கமிஷனர்களது வருடாந்தர மகா நாடுகளின் அக்கிராசனர் என்ற முறையிலும், திட்டக் கமிஷன் உப

தலைவர் என்ற முறையிலும், இந்தியாவில் சமுதாய அபிவிருத்தி இயக்கத்தை நெறிப்படுத்தும் மத்தியக் கமிட்டியின் உறுப்பினர் என்ற ஹோதாவிலும் இக்கருத்துக்களை அவர் இடைவிடாமல், மத ஆர்வத்துடன் வலியுறுத்திவருகிறார். "மனித அம்சங்களைக்கொண்டு இந்த இயக்கத்தை அளவிட வேண்டும். ஆண்களும் பெண்களும் தங்கள் 'சொந்தப் பொறுப்பையும் கூட்டுப் பொறுப்பையும் உய்த்து உணர்ந்து பூரணமான சொந்த வாழ்க்கையையும், கூட்டாகப் பூரண மான சமூக வாழ்வையும்' பெறுமாறு செய்வதுதான் அதன் குறிக் கோள். இந்த வழியில்தான் கிராம வாழ்க்கை சமூக ஐக்கியத்தையும் தார்மிக இணைப்பையும் பெற முடியும். இந்த ஐக்கியம்தான் தேசிய ஒற்றுமைக்கு அடிப்படை," என்று அவர் இடையருமல் வற்புறுத்தி வருகிறார்.

க்ஷேமநல அரசாங்கத்தை உருவாக்க நாம் உறுதி பூண்டுள் ளோம். இதற்காக, தேசிய விஸ்தரிப்பு சர்வீஸ் பாணியில் நிர்வாக அமைப்பை வகுத்துள்ளோம். நாம் சுதந்திரம் பெற்ற பின் நிகழ்ந் துள்ள மிக முக்கியமான காரியம் இதுவே. உணவு உற்பத்திப் பெருக்க விசாரணைக் கமிட்டியின் தலைவர் என்ற ஹோதாவிலும் திட்டக் கமிஷன் உபதலைவர் என்ற முறையிலும் இக்கருத்தைத் தெரிவித்து, அதைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ளுமாறு செய்த பெருமை ஸ்ரீ. வி. டி. கிருஷ்ணமாச்சாரியையே சாரும். தவிர்க்க முடியாத சில குறைபாடுகளைக் களைவதற்கு நாம் இப்போது முயன்று வருகிறோம். கரடு முரடான வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதற் காக மக்கள் ஸ்தாபன ரீதியாகப் பாடுபடுவதற்கு ஈடாகமாட்டா ஊழியர்களின் உற்சாகமும் ஆர்வமும். குறைபாடுகளுக்கு இதுவே காரணம்.

இயக்கத்தின் தத்துவம், வேலைக்கிரமங்கள், நிர்வாக அம்சங் கள் ஆகியவற்றின் இணைப்பை இந்தப் புதிய பிரசுரம் எடுத்துக் காட்டுகிறது. ஸ்ரீ. வி. டி. கிருஷ்ணமாச்சாரி மாத்திரமே இவற்றை எல்லாம் இணைப்பாக விளக்க முடியும். சமுதாய அபிவிருத்தி மகா நாடுகளிலும், அவை போன்ற மேடைகளிலும் அவர் நேரில் தெரி வித்தவை இந்தச் செய்திகள். நமது அடித்தள ஊழியர்களும், இந்தத் திட்டத்துடன் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ தொடர்புள்ள

மற்றவர்களும் இச்செய்திகளைப் படித்தால், திட்டத்தின் இப்போதைய வாலைப் பருவ நெருக்கடியைத் தளர்த்துவதற்குப் பெரிதும் உதவியாய் இருக்கும். சமய சஞ்சீவியான, மிக முக்கியமான இந்தத் தொகுப்பைத் திரட்டியுள்ள செய்தி-ஒலிபரப்பு அமைச்சகத்துக்கு எங்கள் நன்றி. சக ஊழியர்களுக்கும் சகாக்களுக்கும் இதைப் பெருமையுடனும் பெருமகிழ்ச்சியுடனும் அறிமுகப்படுத்துகிறேன்.

புதுடில்லி,
ஜுலை 20, 1958

எஸ். கே. டே.

# 1. இயக்கத்தின் தத்துவம்*

தேசிய விஸ்தரிப்பு இயக்கத்தின் அடிப்படைக் கருத்து வருமாறு: ஒவ்வொரு குடும்பத்தின் ஒத்துழைப்பையும் திரட்டிக் கிராமங்களைத் தீவிரமாக அபிவிருத்தி செய்தல்; கிராம வாழ்க்கை முழுவதையும் இணைப்பாக அபிவிருத்தி செய்தல். இது புத்தம் புதிய கருத்து அல்ல, முன்பே பரீட்சிக்கப்பட்டதுதான். மஹாத்மா காந்தி, ஸ்ரீநிகேதனில் கவிஞர் டாகூர், மார்த்தாண்டத்தில் ஒய். எம் ஸி. ஏ. ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஸ்பென்ஸர் ஹாட்ச் ஆகியோரிடம் பயிற்சி பெற்ற நிர்மாண ஊழியர்கள் இதே நோக்கத்துடன் தான் பாடுபட்டார்கள். முந்திய பரோடா சமஸ்தானத்தின் கிராம அபிவிருத்தித் திட்டம்; பஞ்சாப் மாகாணம், குர்கான் ஜில்லாவில் ஸ்ரீ எப். எல். பிரேன் நடத்திய பரிசோதனைகள்; சமீப காலத்தில் பம்பாய் ராஜ்யம் மேற்கொண்ட சர்வோதயத் திட்டம்; சென்னை ராஜ்யத்தின் பிர்க்கா அபிவிருத்தித் திட்டம் ஆகியவையும் இதே கருத்தைக் கொண்டவைதாம். மற்றும், இந்திய சர்க்காரின் உணவு உற்பத்திப் பெருக்க இயக்கமும் இதைப் போன்றதே; இதன் ஆதிக் குறிக்கோள் குறுகியதாக இருந்தபோதிலும் இந்த இயக்கமும் மேற் சொன்ன பாதையில்தான் சென்றது.

இந்திய சர்க்கார் நியமித்த உணவு உற்பத்திப் பெருக்க விசாரணைக் கமிட்டி மேற்சொன்ன முயற்சிகளையெல்லாம் கவனமாக ஆராய்ந்தது. 1952, ஜூன் மாதம் அக்கமிட்டி சமர்ப்பித்த யாதாஸ்தில் முக்கியமான யோசனைகள் தெரிவிக்கப்பட்டன. இவற்றைத் திட்டக் கமிஷனும் சர்க்காரும் அங்கீகரித்தன. ஏழெட்டு வருஷங்களுக்குள் தேசம் முழுவதும் பரவக்கூடிய 'தேசிய விஸ்தரிப்பு இயக்கம்' ஒன்றை உருவாக்கவேண்டும் என்பது கமிட்டியின் முதலாவது சிபாரிசு. (ஆராய்ச்சி முடிபுகளை அனுஷ்டானத்துக்குப் பரப்புவதே 'விஸ்தரிப்பு' இயக்கம்.) இரண்டாவதாக, இந்தப் புதிய கொள்கைக்கு ஏற்ற உத்தியோக ஸ்தாபனத்தையும்

---

* 1954, ஆகஸ்ட் மாதம் "யு. பி. இன்பர்மேஷன்" சஞ்சிகையின் சுதந்திர தின மலருக்கு வழங்கிய கட்டுரை.

உத்தியோக சார்பற்ற ஸ்தாபனத்தையும் ராஜ்யம், ஜில்லா, ஸப் டிவிஷன், கிராமம் என்ற எல்லாக் கட்டங்களிலும் ஏற்படுத்த வேண் டும். 'செயல்முறை க்ஷேமநல ராஜ்யம்' என்று இந்தப் புதிய கொள்கையைச் சுருக்கமாகக் குறிப்பிடலாம். மூன்ருவதாக, ராஜ் யங்களில் தேசிய விஸ்தரிப்பு சர்வீஸை ஏற்படுத்துவதற்கு மத்திய சர்க்கார் அளிக்கவேண்டிய உதவியையும் கமிட்டி குறிப்பிட்டது.

இந்தச் சிபாரிசுகளின் பிரகாரம், ராஜ்ய சர்க்கார்களைக் கலந் தாலோசித்த பிறகு, "சமுதாய அபிவிருத்தித் திட்ட"த்தைத் தொடங்குவதற்கு 1952, மே மாதம் முடிவு செய்யப்பட்டது. இந்தியா வின் பல்வேறு பிராந்தியங்களைச் சேர்ந்த 55 தொகுதிகளில் இத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ஒவ்வொரு தொகுதியிலும் மூன்ருண்டு காலத்தில் நிறைவேற வேண்டிய தீவிர வேலைகள் சமுதாயத் திட்டத்தில் அடங்கியுள்ளன. (இப்போது இந்தக் காலகட்டம் மாற்றப்பட்டிருக்கிறது—மொ. ர்.) ஆனல் கிராம வாழ்க்கையை அபிவிருத்தி செய்வது நிரந்தரமான பணியாகும், மூன்ருண்டுகளில் முற்றுப் பெறுவது அல்ல. அதனுல் தான் சமுதாயத் திட்டத்துக்குத் துணையாக, அதைவிடத் தீவிரம் குறைந்த வேறொரு திட்டத்தை மேற்கொள்ள 1953 ஆரம்பத்தில் இந்திய சர்க்கார் தீர்மானித்தனர். அதுதான் "தேசிய விஸ்தரிப்பு சர்வீஸ்". உணவு உற்பத்திப் பெருக்க விசாரணைக் கமிட்டி, திட்டக் கமிஷன் ஆகியவற்றின் சிபாரிசுகளை ஆதாரமாகக் கொண்டே சர்க்கார் இவ்வாறு தீர்மானித்தனர். சமுதாய அபி விருத்தித் திட்டம் ஆரம்பமாகி ஒரு வருஷம் கழிந்தபின், அதாவது 1953, அக்டோபர் 2-ந்தேதி தேசிய விஸ்தரிப்பு சர்வீஸ் தொடங்கப் பெற்றது. 1953—54-ல் முதன்முதலாக 259 வட்டாரங்களில் அது அமலுக்கு வந்தது.

## இரு கட்டங்கள்

சமுதாய அபிவிருத்தித் திட்டத்துக்கும் தேசிய விஸ்தரிப்பு சர்வீஸுக்கும் இடையே உள்ள தொடர்பை விளக்குவது அவசியம். ஒரேமாதிரியான குறிக்கோள்களைக் கொண்ட இயக்கங்கள் அவை. தேசிய விஸ்தரிப்பு சர்வீஸ் நிரந்தரமானதோர் ஸ்தாபனம், அது நாடு முழுவதிலும் வியாபிக்கும். அடிப்படையான உத்தியோக ஸ்தாபனத்தையும், உத்தியோக சார்பற்ற ஸ்தாபனத்தையும் அது

ஏற்படுத்துகிறது. அபிவிருத்திப் பணிக்கு வேண்டிய குறைந்தபட்ச நிதி வசதியையும் அது தருகிறது. அதோடு, பல்வேறு அபிவிருத்தி வேலைகளுக்காக ராஜ்யங்களுக்கு மத்திய சர்க்கார் கொடுக்கும் நிதிகள், பல்வேறு இனங்களுக்காக ராஜ்ய சர்க்கார்களே ஒதுக்கும் நிதிகள் ஆகியவற்றிலிருந்தும் தே. வி. சர்வீஸ் வேலைகளுக்குப் பணம் கிடைக்கும்.

பொதுஜனங்களின் அதிகபட்ச ஒத்துழைப்புடன் வெற்றிகரமாகக் காரியங்கள் நிறைவேறியுள்ள தே. வி. ச. வட்டாரங்களில் மேற்கொண்டு மூன்று ஆண்டு காலம் தீவிர அபிவிருத்தி நடத்துகிறோம். இவையே 'சமுதாயத் திட்டத் தொகுதிகள்'. ஒவ்வொரு ஆண்டிலும் இருக்கக்கூடிய ஆதார சாதனங்கள், ஊராரின் ஆர்வமும் ஆதரவும், ஆகியவற்றைப் பொறுத்து எத்தனை தே. வி. ச. வட்டாரங்களில் இத்தகைய தீவிர அபிவிருத்தி வேலைகளை நடத்தலாம் என்பது தீர்மானிக்கப்படுகிறது.

போதிய உணவு, உடை, உறைவிடம், ஆரோக்கியம், பொழுது போக்கு வசதிகள் ஆகியவற்றைக் கிராமவாசிகளுக்கு அளிப்பது மாத்திரம் தேசிய விஸ்தரிப்பு சர்வீஸின் நோக்கம் அன்று. இந்த வசதிகள் எல்லாம் அளிக்கப்படுகின்றன என்றாலும், மக்களின் மனப்பான்மையை மாற்றுவதே தே. வி. சர்வீஸின் முக்கிய நோக்கமாகும். வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்ற ஆவலையும், அதற்காக உழைக்கும் உறுதியையும் அவர்களுக்கு ஊட்டவேண்டும். கிராமங்களில் வசிக்கின்ற ஏழு கோடிக் குடும்பங்களின் திருஷ்டியை எவ்வாறு மாற்றுவது? புதிய அறிவிலும், புதிய வாழ்க்கை முறைகளிலும் அவர்களுக்கு எவ்வாறு ஆர்வம் ஏற்படுத்துவது? இது மனித இயல்பு பற்றிய பிரச்னையாகும். உலக வரலாற்றிலேயே, எந்த ஒரு தேசத்துக்கும் ஏற்பட்டிருக்கக்கூடிய மிக மிகக் கஷ்டமான பிரச்னைகளுள் ஒன்று இது.

## முந்திய முயற்சிகள்

ஓரளவு நன்கு அமைந்திருந்த அபிவிருத்தி இலாகாக்கள் மூலம் கிராம அபிவிருத்தி வேலைகளை அரசாங்கம் முன்பு கவனித்தது. (விவசாயம், கால்நடை, கூட்டுறவு, சுகாதாரம், கல்வி முதலிய இலாகாக்கள் இவை). ஆனால் இந்த இலாகாக்கள் ஒன்றோடொன்று தொடர்பு இல்லாமல், பொதுக் குறிக்கோள் இல்லாமல், தனித்தனி

வேலைக்கிரமங்களைக் கடைப்பிடித்து வந்தன. ஒவ்வொரு இலாகாவும் தனது சொந்த அதிகாரி-வரிசை மூலமே கிராமவாசிகளுடன் தொடர்பு கொண்டிருந்தது. ஒவ்வொரு இலாகாவிலும் கிராமவாசியுடன் நேரடித் தொடர்புகொள்ளும் கடைசி அதிகாரி மிக மோசமானவராக இருந்தார். இந்தக் கடைசி அதிகாரிகளில் பெரும்பாலோர் போதிய பயிற்சி பெருதவர்கள், கிராமவாசிகளுக்கு வழிகாட்டும் திறமை அற்றவர்கள். இந்த அதிகாரி மிக விரிவான பிரதேசத்தைக் கவனிக்கவேண்டி யிருந்ததால், அவர் ஒருவர் இருப்பதையே கிராமவாசி உணர முடியவில்லை. அந்தந்தப் பிரதேசத்தின் ரெவின்யூ அதிகாரிகளின் அலுவல்கள், ஸ்தல ஸ்தாபனங்களின் அலுவல்கள் ஆகியவற்றுடன் இந்த இலாகாக்களின் அலுவல்களுக்கு இணைப்பு இல்லை. போக்குவரத்து வசதிகள், தண்ணீர் சப்ளை போன்ற க்ஷேமநல வசதிகள் பற்றிய சட்ட ரீதியான பொறுப்பை இந்த ஸ்தல ஸ்தாபனங்கள் வகித்துவந்த போதிலும் அவற்றுடன் அரசாங்க இலாகாக்களுக்குத் தொடர்பு இருக்கவில்லை. இத்தகைய நிலைமை காரணமாகக் கிராம வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் அபிவிருத்தி செய்யவும், விவசாயியின் திருஷ்டியை மாற்றவும், கிராம அபிவிருத்திக்காக ஊராரின் ஊக்கத்தையும் சாதனங்களையும் திரட்டுவதற்கும் ஒருமுகமான முயற்சி எதுவும் நடக்கவில்லை.

கிராமவாசியின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஸ்தாபனம் ஒன்றை அமைப்பது பற்றிக் கடந்த காலத்தில் எவ்வளவோ சிந்தித்திருக்கிருர்கள். குர்கான் ஜில்லாவில் ஸ்ரீ. எப். எல். பிரேன் 'கிராம வழிகாட்டிகளை' உபயோகித்துப் பரிசோதனை நடத்திஞர். இது ஒரு சிலாக்கியமான முறை என்று 1926-ஆம் ஆண்டிலேயே விவசாயம் பற்றிய 'ராயல் கமிஷன்' குறிப்பிட்டது.

1949-ல் இந்திய சர்க்கார் நியமித்த நிதிக் கமிஷன்,* 1950, ஜூன் மாதம் சமர்ப்பித்த யாதாஸ்தில் பின்வருமாறு குறிப்பிட்டது :-
"ஆராய்ச்சிக்கும் உற்பத்தியாளர்களின் செய்முறைகளுக்கும் இடையே தொடர்பு ஏற்படுத்துவதற்கான விஸ்தரிப்பு சர்வீஸ் ஒன்றை அமைக்க வேண்டும். தற்போது இந்தியாவின் மிகப் பெரிய தேவை இதுதான் என்பது எங்கள் கருத்து. பிரிட்டன், யு. எஸ்.

*1-வது அனுபந்தம் பார்க்கவும்

(அமெரிக்கா) முதலிய நாடுகளில் அரிய சேவை செய்துள்ள விஸ்தரிப்பு சர்வீஸைப் போல் இங்கும் ஏற்படுத்த வேண்டும். 40 அல்லது 50 கிராமங்களின் தொகுதிக்கு ஒரு விஸ்தரிப்பு அதிகாரி, உதவிச் சிப்பந்திகள் ஆகியோரைக் கொண்டு பரீட்சார்த்தப் பண்ணை ஒன்றை நடத்திக்காட்ட வேண்டும் என்பது எங்கள் கருத்து. கிராம அபிவிருத்தி சம்பந்தமான திட்டங்களை அமல் நடத்துவதில் அரசாங்க இலாகாக்கள் எல்லாவற்றுக்கும் இந்த அதிகாரி ஏஜண்டாக இருக்கவேண்டும். அந்தந்தப் பிரதேச விவசாயிகளுடன் அவர் நெருங்கிய தொடர்பு கொண்டு அவர்களது நண்பனாகவும் வழிகாட்டியாகவும் பணி புரிய வேண்டும்.

1950, மார்ச் மாதம் திட்டக் கமிஷன் தோன்றியபின் பொருளாதார, சமூக முன்னேற்றத்துக்கு விரிவான திட்டம் வகுக்கத் தொடங்கினோம். அப்போது விவசாய அபிவிருத்திதான் நாட்டின் மிக அவசரமான பிரச்னையாக இருந்தது. ஜனத்தொகையில் மிகப் பெரும்பாலோரான கிராமவாசிகளின் சோர்வை ஓட்டாவிடில் முன்னேற்றம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை. அப்போதைய நிலைமையில் ஒரு முரண்பாடு காணப்பட்டது. அதாவது, நமது விவசாய ஆராய்ச்சியும் கால்நடைப் பராமரிப்பும் சர்வதேசப் புகழ் பெற்றிருந்தன; கூட்டுறவு இயக்கத்தை நன்கு அறிந்து அதற்காக ஆர்வத்துடன் பாடுபடும் ஊழியர்கள் இருந்தனர்; அப்படியிருந்தும் பல தசாப்தங்களாக (தசாப்தம் = பத்து ஆண்டுகள்) நமது கிராம வாழ்க்கை தேங்கியே நின்றுவிட்டது. பயிர் நிலங்கள் அபிவிருத்தி செய்யப்படவில்லை; ஜனங்களில் சொற்பப் பகுதியினரே கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்திருந்தனர். இத்தகைய முரண்பாடான நிலைமைக்குக் காரணங்கள் யாவை?

நாட்டின் பொருளாதார அபிவிருத்தி சம்பந்தமான இந்த முக்கிய பிரச்னையைத் திட்டக் கமிஷன் 1950 முதல் 52 வரை ஒருமுகமாக ஆராய்ந்தது. நாடெங்கும் வியாபிக்கக்கூடிய தேசிய விஸ்தரிப்பு இயக்கம் வேண்டும் என்று சிபாரிசு செய்த நிதிக் கமிஷனின் யாதாஸ்து அப்போது திட்டக் கமிஷன் வசம் இருந்தது. பல்வேறு பிரிவினர்களைத் திட்டக் கமிஷன் கலந்தாலோசித்தது. பின்னர், 1951, ஜூலை மாதம் வெளியான முதலாவது ஐந்தாண்டுத் திட்ட 'ஆதார நகலில்' சில யோசனைகளைக் கமிஷன் குறிப்பிட்டது.

கிராமாந்தர விஸ்தரிப்பு சர்வீஸ் ஒன்றை ஏற்படுத்துவது, இணைப்பான அபிவிருத்திக்கு வசதியாக அந்த சர்வீஸை அமைக்கும் முறை ஆகியவை சம்பந்தமான யோசனைகள் அவை.

1952, பிப்ரவரி மாதம் உணவு-விவசாய அமைச்சகம் ஒரு கமிட்டியை நியமித்தது. 1947 முதல் அமல் நடந்து வந்திருக்கும் உணவு உற்பத்திப் பெருக்க நடவடிக்கைகளை ஆராய்வதும், விவசாய உற்பத்தியை விரைவாகப் பெருக்குவதற்கு யோசனை கூறுவதும் அக்கமிட்டியின் அலுவல்கள். நிதிக் கமிஷன் யாதாஸ்தில் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்ட கிராமாந்தர விஸ்தரிப்பு சர்வீஸ் என்ற கருத்தை உணவு உற்பத்திப் பெருக்க விசாரணைக் கமிட்டி மேற்கொண்டு வளர்த்தது. தீவிர கிராம அபிவிருத்திக்காக ஒரு ஸ்தாபனம் அமைப்பது அவசரத் தேவை என்று அது சுட்டிக்காட்டியது. ஒவ்வொரு விவசாயியுடனும் தொடர்பு கொண்டு கிராம வாழ்க்கை முழுதையும் இணைப்பாக மேம்படுத்துவதற்கு அந்த ஸ்தாபனம் உதவவேண்டும். யு. எஸ். ஏ. (அமெரிக்கா), பிரிட்டன் முதலிய நாடுகளில் உள்ள 'விஸ்தரிப்பு சர்வீஸ்' அல்லது 'ஆலோசனை சர்வீஸை'ப்போல இந்த ஸ்தாபனமும் வேலை செய்ய வேண்டும் என்று கமிட்டி சிபாரிசு செய்தது.

1949, ஆகஸ்டில் 'ஐக்கிய நாடுகள் உணவு-விவசாய ஸ்தாபனம்' இத்தகைய விஸ்தரிப்பு சர்வீஸ் சம்பந்தமாக ஒரு கூட்டம் நடத்தியது. விஸ்தரிப்பு சர்வீஸின் அலுவல்களை அக் கூட்டத்தின் அறிக்கை பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிட்டது:

> "விஸ்தரிப்பு சர்வீஸ், ஆலோசனை சர்வீஸ் போன்ற ஸ்தாபனங்களுக்குப் பின்கண்ட அலுவல்கள் இன்றியமையாதவை: விவசாயம், குடும்பக்கலை, விவசாய விவகாரங்கள் ஆகியவை சம்பந்தமாக விவசாயிகளுக்கு ஆலோசனை கூறுதல்; இந்தத் துறைகள் பற்றிய நவீன ஆராய்ச்சி முடிவுகளை அவர்களுக்கு உணர்த்துதல்; விளைபொருட்களின் உற்பத்தித் தரம், உற்பத்திச் செலவு, உற்பத்தி அளவு ஆகியவை பற்றி ஆலோசனை கூறுதல்; வேளாண்மை, கிராம வாழ்க்கை சம்பந்தமான திருந்திய வழிமுறைகளைப் போதித்தல்; ஆராய்ச்சிக்கு உரிய விவசாயப் பிரச்னைகளையும் குடும்பக் கலைப் பிரச்னைகளையும்

ஆராய்ச்சி நிலையங்களுக்குத் தெரிவித்தல்; பரஸ்பரம் கருத்துக்களைப் பறிமாறிக்கொள்ளவும் விவசாயத் தலைவர்களை உருவாக்கவும் வசதியாக விவசாயிகளின் கூட்டங்களை நடத்துதல்.''

நிர்வாக அமைப்பின் கடைசி உறுப்பான தாலுகாவை விஸ்தரிப்பு ஸ்தாபனத்தின் ஆதார உறுப்பாக அமைத்துக் கொள்ளலாம் என்று உணவு உற்பத்திப் பெருக்க விசாரணைக் கமிட்டி சிபாரிசு செய்தது. 100 முதல் 120 கிராமங்கள்வரை கொண்ட தாலுகாவை அபிவிருத்தி வட்டாரமாகக் கொண்டு அதற்கு ஒரு அபிவிருத்தி அதிகாரி அல்லது விஸ்தரிப்பு அதிகாரியை நியமிக்கலாம் என்று கமிட்டி கூறியது. சப்டிவிஷனல் அதிகாரி அல்லது ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியிடம் அவரது பிரதேசத்தின் விஸ்தரிப்பு அதிகாரிக்கு உரிய அலுவல்களை ஒப்படைக்கவேண்டும். அவரது மாமூல் அலுவல்களைக் கவனிப்பதற்கு வேறு ஒரு விசேஷ உதவியாளரை நியமிக்கவேண்டும். வட்டார விஸ்தரிப்பு அதிகாரிக்கு உதவியாக விவசாயம், கால்நடை, கூட்டுறவு சம்பந்தமான நுணுக்க (டெக்னிக்கல்) அதிகாரிகள் இருக்கவேண்டும். இந்த அதிகாரிகள் பரஸ்பரம் கலந்தாலோசித்து, அனுபவங்களைப் பரிமாறிக்கொண்டு, ஒரே கோஷ்டியினராக வேலை செய்யவேண்டும். இந்த ஸ்தாபனம் விவசாயிகளுடன் நெருங்கிய தொடர்புகொண்டு அவர்களது நண்பனாகவும் வழிகாட்டியாகவும் உதவவேண்டும். 5,000 முதல் 8,000 வரை ஜனத்தொகை உள்ள 5 அல்லது 10 கிராமங்களின் கோஷ்டி இந்த வட்டார ஸ்தாபனத்துக்குக் கீழே இருக்கும். இந்தக் கிராமக் கோஷ்டிக்கு அடுத்தபடியில் தனிப்பட்ட கிராமங்கள் இருக்கும்.

## இயக்கத்தின் சாரம்

கிராம வாழ்க்கையின் பொருளாதார அம்சங்களை உணவு உற்பத்திப் பெருக்க விசாரணைக் கமிட்டி மிக நுணுக்கமாக ஆராய்ந்தது. கிராம வாழ்க்கையின் எல்லா அம்சங்களும் பரஸ்பர இணைப்புள்ளவை என்றும், இவற்றைத் தனித்தனியே பிரித்துக் கவனித்தால் சாசுவதப் பலன் கிடைக்காது என்றும் கமிட்டி குறிப்பிட்டது. அதன் ஆராய்ச்சியின் சாராம்சம் இதுவே. எனினும் குறிப்பிட்ட பிரச்னை

களுக்கு முதன்மை கொடுக்கக்கூடாது என்பது இதன் அர்த்தம் அல்ல. விரிவான குறிக்கோள்களைக் கொண்ட ஒரு திட்டத்தின் இணைப்பான பகுதிகளாக இப் பிரச்னைகளைக் கவனிக்கவேண்டும் என்பதுதான் அதன் பொருள். கிராம வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் கணிசமாக அபிவிருத்திசெய்து, அவ்வாழ்க்கையை முழுமையானதாக, வளம் நிறைந்ததாக ஆக்கவேண்டும் என்ற லட்சியத்தை நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டுகிறது தேசிய விஸ்தரிப்பு இயக்கம். அரசாங்க நிர்வாக ஸ்தாபனம் முழுதையும், அந்தந்தப் பிரதேசத்தின் உத்தியோக சார்பற்ற சிறந்த தலைவர்கள் அனைவரையும் ஒன்றுதிரட்ட அது முற்படுகிறது. ஒன்றுதிரட்டிய இந்த சக்தியைக் கொண்டு வெகுஜன உற்சாகத்தைத் தட்டியெழுப்பவேண்டும். தங்களது வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்ளும் பிரம்மாண்டப் பணியில் லட்சோப லட்சம் கிராமாந்தரக் குடும்பங்களைத் தீவிர சிரத்தையுடன் ஈடுபடச் செய்யவேண்டும்.

தே. வி. ச. இயக்கம் வலியுறுத்தும் அடிப்படைக் கோட்பாடுகள் வருமாறு:

(அ) அபிவிருத்திப் பணியை இயக்கும் சக்தி மக்களிடமிருந்தே வரவேண்டும். சுய உதவியே எல்லாச் சீர்திருத்தங்களுக்கும் வேர்; பண்டங்களும் ஆலோசனைகளும் கடனும் அளித்து அரசாங்கம் உதவலாம். கிராமங்களிலே உபயோகமின்றி முடங்கிக் கிடக்கும் அபரிமிதமான மனித சக்தியை ஆக்க வேலையில் ஈடுபடுத்தவேண்டும். ஒவ்வொரு குடும்பமும் தனது சொந்த வேலைக்கிரமங்களை நிறைவேற்றுவதுடன் சமுதாயப் பொது நன்மைக்காகவும் பாடுபட வேண்டும்.

(ஆ) எண்ணற்ற உருவங்கள் கொண்ட கூட்டுறவுத் தத்துவத்தைப் பிரயோகித்துக் கிராம வாழ்க்கையின் சகல பிரச்னைகளுக்கும் பரிகாரம் தேடவேண்டும்.

சுருங்கச் சொன்னால் புதிய கிராம சமுதாயம் பின்வருமாறு அமைந்திருக்கவேண்டும்: லட்சோப லட்சம் நிலக்காரர்களின் குடும்பங்கள் பலவகைக் கூட்டுறவு சங்கங்களாக அமைந்து கொள்ளவேண்டும். அவர்கள் தாமாகவே முடிபுகளை வகுக்கவேண்

டும். விஞ்ஞான விவசாய முறைகளை மிகப் பரவலாகக் கையாள வேண்டும். பலவகைக் குடிசைத் தொழில்களிலும் அவர்கள் ஓழிவு நேரத்தில் ஈடுபட்டு உப வருமானம் பெறவேண்டும். ஆராய்ச்சி, பண்ட சப்ளை, (தொழில் நுணுக்க ஆலோசனை போன்ற) சர்வீஸ்கள், கடன் வசதி முதலிய வழிகளில் அவர்களுக்கு அரசாங்கம் உதவி அளிக்கும். இவை வெறும் பொருளாதாரக் கருத்துக்கள் மாத்திரம் அல்ல. பொருளாதாரப் பலன்களுக்குச் சமமான சமூகப் பலன்களும், லோகாயதமல்லாத பலன்களும்கூட இவற்றில் அடங்கியுள்ளன.

## வேலை வசதியும் உற்பத்திப் பெருக்கமும்

இந்த இயக்கம் மக்களின் திருஷ்டியில் எத்தகைய மாறுதல்களை ஏற்படுத்த முயல்கிறது? வேலை (பிழைப்பு) வசதியை அதிகரிப்பதும் உற்பத்தியை உயர்த்துவதும் முதலாவது குறிக்கோள். கிராமங்களில் ஏராளமான பேர் வேலையே இல்லாமல், அல்லது முழு நேர வேலையில்லாமல் இருக்கிறார்கள். கிராம வாழ்க்கையின் மாபெரும் குறை இதுதான். அதோடு, வயிற்றைக் கழுவும் (லாபமற்ற) தொழிலாக, அல்லது குறைவான உற்பத்தி உள்ளதாக நமது விவசாயம் இருந்து வருகிறது. அதாவது, விஞ்ஞான முறையில் பயிரிட்டால் நமது நிலம் எவ்வளவு மகசூல் தருமோ அதில் ஒரு அற்பப் பகுதியைக்கூட இப்போது தருவதில்லை.

இந்த இரு தீமைகள் சம்பந்தமாக மக்களின் மனப்பான்மையை மாற்றுவது முதல் வேலை. இந்த இரு குறைகளுக்கும் காரணங்கள் ஒரேமாதிரியானவையே; இரண்டும் ஒரே பிரச்னையின் இரு அம்சங்கள்தாம். விவசாயிக்குப் பரம்பரைத் திறமையும் அனுபவமும் இருந்தபோதிலும் அவரது உற்பத்தித் திறன் (Productivity) குறைவாகவே உள்ளது. விஞ்ஞான முறைகளைக் கையாளாமை, இருக்கும் சாதனங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தாமை, கடன் வசதியில்லாமை, நீர்ப்பாசன வசதியின்மை முதலியவையே இந்நிலைமைக்குக் காரணங்கள். நவீன விஞ்ஞான முறைகளை விவசாயிகளின் வீடு தேடிச் சென்று போதித்து தீவிர சாகுபடிக்கு வழி செய்தால் உற்பத்தி உயர்வதுடன் பிழைப்பு வசதியும் அதிகரிக்கும்.

அதோடு, துணைத் தொழில்களும் குடிசைத் தொழில்களும் தோன்றுவதற்கு வாய்ப்புகள் ஏற்படும்.

## கூட்டுறவு

கூட்டுறவுப் பணிக்குச் சமுதாயத்தினரை ஒன்று திரட்டுவது இந்தத் திட்டத்தின் இரண்டாவது முக்கிய மார்க்கம். சமுதாயம் தன் கையே தனக்குதவி என்று முயன்றால்தான் நாம் விரும்பும் அளவுக்கு அபிவிருத்தி ஏற்பட முடியும். கூட்டுறவுக் கோட்பாடுகளைக் கையாள்வதன் மூலமே கிராமங்களின் பிரச்னைகள் அனைத்துக்கும் பரிகாரம் காண முடியும். ஒவ்வொரு கிராமத்திலும் பல-காரியக் கூட்டுறவு சங்கம் ஒன்றாவது இருக்கவேண்டும். ஒவ்வொரு விவசாயக் குடும்பமும் அதில் அங்கம் வகிக்கவேண்டும்.

கூட்டுறவுத் தத்துவத்தை இன்னின்ன துறையில்தான் கையாளலாம் என்ற வரம்பே இல்லை. உதாரணமாக, உற்பத்தியை உயர்த்துவதற்காக நல்ல வித்துக்கள், ரசாயன உரங்கள் முதலியவற்றை 'சப்ளை' செய்ய வேண்டியிருக்கிறது. இதற்குக் குறுகிய காலக் கடன் உதவி தேவை. இத்தகைய கடனுதவி இல்லாவிட்டால் ஒவ்வொரு குடும்பமும் சொந்தமாக அபிவிருத்தித் திட்டம் வகுத்துப் பாடுபட முடியாது. இந்தியாவில் சுமார் 50 ஆண்டுகளாகக் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வந்திருக்கின்றன. எனினும் கூட்டுறவு இயக்கம் வெகுவாக முன்னேறியுள்ள பிரதேசங்களில்கூட 30 சதவிகித விவசாயக் குடும்பங்கள்தாம் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து கடன் பெறத் தகுதி பெற்றுள்ளன. அதாவது விவசாய மக்களில் 30 சதவிகிதத்தினர் தாம் "பெறுமானம்" உள்ளவர்கள். ஆகவே பாக்கியுள்ள 70 சதவிகிதத்தினரைப் "பெறுமானம்" உள்ளவர்களாக ஆக்குவது எப்படி? உற்பத்தியைப் பெருக்கக் கூட்டுறவாக முயன்றால்தான் இதைச் சாதிக்க முடியும். உற்பத்தியை உயர்த்த முயல்பவர் என்று நம்பத் தகுந்த சாகுபடியாளர்களுக்கும், தகுந்த மேற்பார்வையின் கீழ், கடன் உதவி அளிக்கலாம். ஆரம்ப கட்டத்தில் இவ்வாறு செய்யலாம். அதாவது, கடன் வாங்கப் பெறுமானம் உள்ள நபர்களா என்பதைவிட, கடன் பெறத் தகுதி உள்ள காரியங்களா என்பதையே முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

கூட்டுறவுத் தத்துவத்தைக் கையாள்வதற்கு ஏற்ற பல துறை

4262



TAMIL NADU ARCHIVES LIBRARY
2 DEC 1978

களுக்கு உதாரணங்களை உணவு உற்பத்தி [illegible]க் கமிட்டி குறிப்பிட்டிருக்கிறது. அவை வருமாறு:

"முதலாவதாக, நிரந்தர அபிவிருத்திக்கான பெரிய நீர்ப்பாசனத் திட்டம் நிறைவேற்றப்படும் பகுதியில், கிராமங்களுக்கு வேண்டிய கால்வாயைக் கிராமவாசிகளே கூட்டுறவு முறையில் அமைக்க முடியும். நடுவாந்தரர்கள் லாபம் அடைவதை இதன் மூலம் தடுக்கலாம். தவிர, கூட்டுறவு இயக்கத்துக்கு ஏராளமான பணமும் கிடைக்கும்; விவசாய அபிவிருத்திக்கு இந்தப் பணத்தைப் பயன்படுத்தலாம். தரிசு நில மீட்சி, (மண் அரிப்பைத் தடுக்க) நிலங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்டுதல், சிறிய பாசன வேலைகள் முதலியவை பற்றிய திட்டங்களுக்கும் கூட்டுறவு முறை பொருந்தும். இதேபோல் கிராமத்தில் குளங்கள் வெட்டுதல், குடிதண்ணீர்க் கிணறுகள் தோண்டுதல், ரஸ்தாக்கள் போடுதல், மரங்கள் நடுதல் போன்ற சமுதாயப் பொதுக் காரியங்களையும் மக்களின் இலவச உழைப்பு மூலம் நிறைவேற்றலாம்.

"இரண்டாவதாக, வேளாண்மையின் தரத்தை உயர்த்துவதற்காகத் திருந்திய விதை உற்பத்தி, பசுந்தாள் உர உற்பத்தி, கம்போஸ்ட் தயாரித்தல் முதலியவற்றுக்கு உள்ளூரிலேயே ஏற்பாடு செய்ய வேண்டும். வெளியிலிருந்து இப் பொருட்களைக் கொண்டு வரும் சிரமத்தைக் குறைப்பதுடன் சுத்தமான விதைகள் முதலியவை கிடைப்பதற்கும் இந்த ஏற்பாடு உதவும்.

"மூன்றுவதாக, நீர் இறைக்கும் பம்புகள், விவசாய இயந்திரங்கள், களஞ்சியங்கள் ஆகியவற்றை விவசாயிகள் கூட்டு உடைமையாகப் பெறுவதற்கும், கூட்டு விவசாயம் நடத்தவும், விளை பொருட்களைக் கூட்டுறவு முறையில் விற்பதற்கும் குறுகிய காலக் கடன் வசதி தேவைப்படும். இதற்குக் கூட்டுறவு இயக்கத்தை எண்ணற்ற வழிகளில் பயன்படுத்தலாம்.

"நான்காவதாக, துணைத் தொழில்கள், குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் ஆகியவற்றைக் கூட்டுறவு முறையில் நடத்தலாம்.

"ஐந்தாவதாக, மாதர்களுக்கான வேலைக்கிரமங்களை வகுத்து நிறைவேற்றுவது மிகவும் அவசியம். ஏனெனில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பணியில் அவர்களது ஒத்துழைப்புக்கு அபார முக்கியத்துவம் உண்டு."

## சமுதாய ஆஸ்திகள்

சமுதாயப் பொது நன்மைக்கான காரியங்களை மக்களின் கூட்டு முயற்சியால் நிறைவேற்ற வேண்டும். இது தே. வி. சர்வீஸின் மூன்ருவது மார்க்கம். ரஸ்தாக்கள், ஏரிகள் போன்ற பல வசதிகள் கிராமத்துக்குத் தேவை. சொந்த முயற்சியால் இவற்றை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்பதைக் கிராமவாசிகள் உணர வேண்டும். அரசாங்கம் ஓரளவு மானியங்களும் கடன்களும் கொடுத்து உதவலாம்; அதோடு, தொழில் நுணுக்க ஆலோசனை கூறி வழி காட்டலாம். ஆனால் பிரதானமாகப் பாடுபட வேண்டியவர்கள் கிராமவாசிகளே.

பள்ளிக்கூடங்கள், ஆரோக்கிய நிலையங்கள் முதலிய நிரந்தர வசதிகளை ஏற்படுத்துவதற்கும் இதே முறை பொருந்தும். கிராமங்களில் உபயோக மின்றிக் கிடக்கும் ஏராளமான மனித சக்தியில் ஒரு பகுதியைச் சமுதாய நன்மைக்காகப் பயன்படுத்த வேண்டும். சமூக வசதிகளை ஏற்படுத்துவது, சமுதாய நிறுவனங்களைப் பராமரிப்பது முதலிய காரியங்களை இவ்வாறு நிறைவேற்ற வேண்டும். முன்பெல்லாம் கிராமக் குளத்தைத் தூர் எடுப்பது ஊராரின் கடமையாகக் கருதப்பட்டது. இப்போது அது கிராம வாழ்க்கையின் முக்கிய அம்சங்களில் ஒன்ருகக் கருதப்படுவதில்லை. நிரந்தர உபயோகமுள்ள எல்லா நிறுவனங்களையும் கூட்டாகப் பராமரித்துப் பாதுகாப்பது தங்கள் கடமை என்பதைக் கிராமவாசிகள் உணர வேண்டும்.

பின்கண்ட மூன்று துறைகளிலும் மனப்பான்மை மாறுவது அவசியம் என்றும் அதற்காகப் பாடுபட வேண்டும் என்றும் சுருக்கமாகக் கூறலாம் :

(1) வேலை வசதியையும் உற்பத்தியையும் அதிகரிப்பது :— விஞ்ஞான விவசாய முறைகளைக் கையாளுதல்; தோட்டம் துரவுகள், கால்நடைகள், மீன் நிலைகள் முதலியவற்றை அபிவிருத்தி செய்தல்; துணைத் தொழில்களையும் குடிசைத் தொழில்களையும் அமைத்தல் ஆகியவை மூலம் இது சாத்தியமாகும்.

(2) சுய உதவியையும் தன்னம்பிக்கையையும் வளர்த்தல்; சாத்தியமான துறைகளில் எல்லாம் கூட்டுறவுத் தத்துவத்தைக் கையாளுதல்.

(3) கிராமங்களில் உபயோகமின்றிக் கிடக்கும் ஏராளமான மனித சக்தியிலும் நேரத்திலும் ஒரு பகுதியைச் சமுதாய நலனுக்காகப் பயன்படுத்துதல்.

## ஸ்தாபன அமைப்பு

மேற்சொன்ன வேலைக்கிரமத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஸ்தாபன அமைப்பு குறித்தும் சிபாரிசுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. உணவு உற்பத்திப் பெருக்க விசாரணைக் கமிட்டி யாதாஸ்தின் 6-வது அத்தியாயத்திலும், முதல் ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய திட்டக் கமிஷன் யாதாஸ்தின் 7-வது அத்தியாயத்திலும் இச் சிபாரிசுகளைக் காணலாம்.

அந்த ஸ்தாபன அமைப்பு வருமாறு: ஒவ்வொரு ராஜ்யத்திலும் அபிவிருத்திக் கமிட்டி ஒன்று இருக்கிறது. முதல் மந்திரியும் அபிவிருத்தி இலாகாக்களின் மந்திரிகளும் அதன் உறுப்பினர்கள். தேசிய விஸ்தரிப்பு சர்வீஸை அமல் நடத்துவது பற்றிய பொதுக் கொள்கைகளை இக் கமிட்டி நிர்ணயிக்கிறது. ராஜ்ய அபிவிருத்திக் கமிஷனர் இந்தக் கமிட்டியின் காரியதரிசி. அதோடு, பல்வேறு அபிவிருத்தி இலாகாக்களின் தலைவர்கள் அல்லது காரியதரிசிகள் அடங்கிய குழுவுக்கும் அபிவிருத்திக் கமிஷனரே தலைவர். ராஜ்யம் முழுவதற்குமான திட்டம் குறிப்பிடுகிற பாதைகளில் எல்லா இலாகாக்களும் வேலை செய்யும் விதத்தில் அவர் இணைப்பு அதிகாரியாகப் பணி புரிகிருர். பிரத்தியேகமானதோர் அபிவிருத்தி இலாகாவின் தலைவர் அல்ல அவர். ஆனுல் இணைப்பாக வேலை நடப்பதற்காக, எல்லா அபிவிருத்தி இலாகாக்களின் தலைவர்களும் அடங்கிய குழுவுக்கு அவர் தலைமை வகிக்கிருர்.

அபிவிருத்திக் கமிஷனரிடம் கஷ்டமான பணி ஒப்படைக்கப்பட்டிருப்பதால் ராஜ்யத்தின் பெரிய 'ஸீனியர்' அதிகாரி ஒருவரே அப்பதவியை வகிக்க வேண்டியிருக்கிறது. சில ராஜ்யங்களில் பிரதம காரியதரிசியே அபிவிருத்திக் கமிஷனரின் அலுவல்களைக் கவனிக்கிருர். மற்ற ராஜ்யங்களில், அடிஷனல் பிரதம காரியதரிசியின் அந்தஸ்துள்ள பெரிய ஸீனியர் அதிகாரி ஒருவரிடம் இந்த அலுவல்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஜில்லா, சப்டிவிஷன், வட்டாரம் என்ற கிளைகளிலும் இதே போல் வேலைகள் இணைப்பாக நடக்க ஏற்

பாடு செய்ய வேண்டும். அதனால்தான், அபிவிருத்திக் கமிஷனரின் அலுவல்களைப் போன்ற அலுவல்கள் முறையே கலெக்டர், சப் டிவிஷனல் அதிகாரி, வட்டார அபிவிருத்தி அதிகாரி ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இணைப்புடன் வேலை நடப்பதற்காகப் பல் வேறு அபிவிருத்தி இலாகாக்களின் தொழில் நுணுக்க அதிகாரிகளை அந்தந்தப் பகுதிகளின் பொது நிர்வாக அதிகாரி மேற்பார்வையிட லாம். அதாவது, வட்டார மட்டத்தில் வட்டார அபிவிருத்தி அதிகாரி யும், சப் டிவிஷனில் சப்-டிவிஷனல் அதிகாரியும், ஜில்லா மட்டத்தில் ஜில்லா அதிகாரியும் மேற்பார்வை யிடலாம். இந்த நிர்வாகச் சங்கிலி யில் கடைசிக் கண்ணியாக இருப்பவர் கிராம நிலை ஊழியர் அல்லது கிராம சேவக். பல-காரிய ஊழியரான அவர் ஜில்லா நிர்வாகத்தின் ஒரு அங்கமாகவே கருதப்படுகிறார். ஆனால் தொழில் நுணுக்க விஷயங்கள் சம்பந்தப்பட்டவரை, பல்வேறு மட்டங்களில் உள்ள தொழில் நுணுக்க அதிகாரிகளின் உத்தரவுகள், ஆலோசனைகளின் படி அவர் வேலை செய்கிறார்.

அரசாங்கத்தின் சாதாரண நிர்வாக அமைப்பிலிருந்து மாறுபட்ட பிரத்தியேகமான க்ஷேமநல சிப்பந்தி வர்க்கம் ஒன்றை ஏற்படுத்து வது மேற்சொன்ன ஏற்பாடுகளின் நோக்கம் அன்று. ஏற்கனவே உள்ள பொது நிர்வாகச் சிப்பந்தி வர்க்கங்களை க்ஷேமநலச் சிப்பந்தி களாக மாற்றுவதுதான் நோக்கம். மேற்கண்ட நிர்வாக ஏற்பாடு களின் சிறப்பு இதுவே. அதாவது, ரெவின்யூ வசூலிப்பதற்கும், சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பதற்காகவும் முன்பு ஏற்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பு இப்போது க்ஷேமநல நிர்வாக அமைப்பாக மாற் றப்படுகிறது. அரசாங்க அபிவிருத்தி இலாகாக்கள் எல்லாவற்றின் சாதனங்களும் இப்போது கிராம அபிவிருத்திப் பணியில் ஒருமுக மாக, அதிகபட்சப் பலன் தரும் விதத்தில் ஈடுபடுத்தப்படுகின்றன.

எல்லாத் துறைகளிலும் கிராமாந்தரப் பிரதேசங்களை அபி விருத்தி செய்வது தேசிய விஸ்தரிப்பு சர்வீஸின் நோக்கம். சிறிய நிறுவன வேலைகளுக்காக நிதி ஒதுக்கப்படுகிறது. இந்த வேலைகளை மையமாகக் கொண்டு சிப்பந்திகள் பல்வேறு காரியங்களில் ஈடுபடு கிறார்கள். இவ்வாறு ஒதுக்கப்படும் நிதி சொற்பமானதுதான். இத்து டன் ராஜ்ய சர்க்கார் தனியாகவோ அல்லது ராஜ்ய சர்க்காரும் மத் திய சர்க்காரும் கூட்டாகவோ மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்

களுக்கான நிதியையும் சேர்க்கவேண்டும். எல்லா அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் ஒருமுகமாகத் தே. வி. ச. பகுதிகளில் அமல் நடத்தவேண்டும் என்று ராஜ்ய சர்க்கார்களிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மற்றும், கடன் உதவி அளிப்பதற்கும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து சிறிய பாசன வேலைகளுக்காக நடுத்தர காலக் கடன்களும், கிராமவாசிகளுக்கு வேண்டிய குறுகிய காலக் கடன்களும் கொடுக்கலாம். அபிவிருத்தி வட்டாரம் ஒன்றுக்கு மூன்று ஆண்டுகளுக்குச் சுமார் 7½ லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்படுகிறது. வட்டார அபிவிருத்தி அதிகாரி ஒருவர், விஸ்தரிப்பு அதிகாரிகள் மூவர் (விவசாயம், கால்நடைப் பராமரிப்பு, கூட்டுறவு-பஞ்சாயத்து ஆகியவற்றுக்கு), இரண்டு சமூகக் கல்வி அமைப்பாளர்கள் (ஒரு ஆணும் ஒரு பெண்ணும்), ஒரு ஓவர்சீயர், கிராம நிலை ஊழியர்கள் பத்துப் பேர் ஆகியோர் ஒரு வட்டாரத்தில் உள்ள சிப்பந்திகள் ஆவர். அந்தப் பிரதேசத்தில் ஏற்கனவே இருக்கும் அபிவிருத்தி இலாகாக்களின் சிப்பந்திகளும் இந்தக் கணக்கில் அடக்கம். தேவையான பயிற்சியும் மனமாற்றப் போதனையும் அளித்த பின் இச் சிப்பந்திகள் தே. வி. ச. ஸ்தாபனத்தில் சேர்த்துக் கொள்ளப் படுவர்.

## மக்களின் பிரதிநிதிகள்

இந்த நிர்வாக ஸ்தாபனத்தைக் கொண்டிருப்பதுடன், உத்தியோக சார்பற்ற சிறந்த தலைவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கும் தே. வி. ச. முற்படுகிறது. உத்தியோகஸ்தர்களும் உத்தியோக சார்பற்றவர்களும் சேர்ந்த ஸ்தாபனம் தே. வி. சர்வீஸ். இரு சாராரும் ஒத்துழைக்க வேண்டும். இதுவே தே. வி. சர்வீஸின் சாராம்சம். மக்கள், அவர்களது பிரதிநிதிகள் ஆகியோரைச் சாங்கோபாங்கமாகக் கலந்தாலோசித்தே பல்வேறு கட்டங்களிலும் அபிவிருத்தி வேலைக்கிரமங்கள் வகுக்கப்படுகின்றன. கிராமம் சம்பந்தப்பட்ட வரை, வேலைக்கிரமங்களை வகுக்கும்போதும் அமல் நடத்துவதிலும் சட்டபூர்வமான கிராமக் கவுன்சில்கள் கலந்தாலோசிக்கப்படுகின்றன. (இக் கவுன்சில்களுக்குப் பல பெயர்கள் உண்டு.) இத்தகைய ஸ்தாபனங்கள் இல்லாத, அல்லது இவை செயலற்றுக்கிடக்கும் இடங்களில் சட்டபூர்வமற்ற தற்காலிகக் கிராம அபிவிருத்திக் கவுன்சில்கள் அமைக்கப்படுகின்றன. கிராம விகாச மண்டல், கிராம மக்கள்

சமிதி, கிராம சேவா சங்கம் என்று பல பெயர்களால் இவை அழைக்கப்படுகின்றன.

இந்தக் கிராமாந்தர ஸ்தாபனங்கள் வகுக்கும் திட்டங்களை வட்டார ஆலோசனைக் கமிட்டிகள் ஆராய்கின்றன. கிராமக் கமிட்டிகளின் பிரதிநிதிகள், ராஜ்ய சட்டசபை உறுப்பினர்கள், பார்லிமெண்ட் உறுப்பினர்கள், கூட்டுறவு சங்கப் பிரதிநிதிகள், முற்போக்கு விவசாயிகள் முதலியோர் வட்டாரக் கமிட்டியில் அங்கம் வகிக்கிறார்கள். வட்டார ஆலோசனைக் கமிட்டிகள் வகுக்கும் வட்டார அபிவிருத்தித் திட்டங்கள் பின்னர் ஜில்லாத் திட்டமாக இணைக்கப்படுகின்றன. ஜில்லா அபிவிருத்திக் கமிட்டி இவ்வாறு இணைக்கிறது. உத்தியோக சார்பற்ற பிரமுகர்களும், பல்வேறு தொழில்நுணுக்க இலாகாக்களின் ஜில்லாத் தலைமை யதிகாரிகளும் இக் கமிட்டியில் அங்கம் வகிக்கிறார்கள்.

இவ்வாறு, திட்டம் வகுப்பதிலும். அதை நிறைவேற்றுவதிலும் உத்தியோக ஸ்தாபனம், உத்தியோக சார்பற்ற ஸ்தாபனம் என்ற இரண்டும் ஒவ்வொரு கட்டத்திலும் இணைந்து வேலை செய்கின்றன. சுய உதவியே தே. வி. இயக்கத்தின் ஆதாரம். மக்களின் தீவிர ஆர்வத்தையும் ஆதரவையும் திரட்டியே மக்களின் நிலையை உயர்த்த முயற்சிக்கிறோம். புதிய மாறுதல்களைப் பரப்புவதற்காக ராஜ்ய சர்க்கார்களுக்கு மத்திய சர்க்கார் நிதியுதவி அளிக்கிறது. விஸ்தரிப்புச் சிப்பந்திகளை நியமிப்பது சம்பந்தமான அதிகப்படிச் செலவில் பாதியை மத்திய அரசாங்கம் மானியமாக வழங்குகிறது. அதோடு, முதல் திட்ட கால இறுதிக்குள், வருஷத்துக்கு ரூ. 100 கோடி வீதம் குறுகிய காலக் கடனும், வருஷத்துக்கு ரூ. 25 கோடி வீதம் நடுத்தரக் காலக் கடனும், ரூ. 5 கோடி வீதம் நீண்ட காலக் கடனும் கிடைப்பதற்கு மத்திய சர்க்கார் உதவுகிறது. கூட்டுறவு இயக்கத்தின் வாயிலாகவும் மற்ற ஸ்தாபனங்கள் மூலமும் இவை வழங்கப்படும்.

## சிப்பந்திகள் பயிற்சி

விஸ்தரிப்புப் பணி நிரந்தரமானது. பிரச்னைகளைக் கிராமவாசிகளுக்கு உணர்த்தி, அவற்றைப் பரிகரிப்பதற்கு வழிகாட்டுவது இந்த இயக்கத்தின் நோக்கம். பிரச்னைகளையும் பரிகாரங்களையும் கிராமவாசிகளுக்குப் புலப்படுத்தினால் மாத்திரம் போதாது. பரிகாரம்

காண்பதற்குஉருப்படியாக உழைக்கவும் அவர்களைத் தூண்ட வேண்டும். ஆகவே இப்பணிக்குச் சரியான சிப்பந்திகளைத் தெரிந்தெடுப்பது மிக முக்கியமான விஷயம். ஊக்கம், உத்வேகத்துடன் பணி புரிவோராக அவர்கள் இருக்க வேண்டும். அறிவு தேடும் திறன் மாத்திரம் அவர்களிடம் இருந்தால் போதாது. கிராம மக்களுக்குத் தொண்டு புரிய அவர்கள் தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். கிராமப் பிரச்னைகளுக்குப் பரிகாரம் தேடும் உறுதியும் அவசியம். மனித நலன் சம்பந்தமான திட்டம் இது. கிராமவாசியுடன் எவ்வாறு தொடர்பு கொள்ள வேண்டும் என்பதே இதன் அடிப்படைப் பிரச்னை.

விஸ்தரிப்பு ஊழியர்களுக்குச் சரியான பயிற்சி அளிக்க வேண்டும் என்று திட்டக் கமிஷன் யாதாஸ்து வலியுறுத்தியது. கிராம நிலை ஊழியர்களைப் பயில்விக்கத் தற்போது நாட்டில் 34 நிலையங்கள் உள்ளன. இவ்வேலைக்கு மிகுந்த கவனத்துடன் ஆட்கள் பொறுக்கியெடுக்கப்படுகின்றனர். அவர்களுக்குக் கிராம வாழ்க்கையில் அனுபவமும் சிரத்தையும் இருக்க வேண்டும்—இது முக்கியமான யோக்கியதாம்சம். தவிர, அவர்கள் மெட்ரிகுலேஷன் படித்திருக்க வேண்டும். குறைந்த பட்சம் ஓராண்டுக் காலமாவது அவர்களுக்கு அடிப்படை விவசாய விஷயங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பிறகு விவசாயம் கால்நடைப் பராமரிப்பு, சுகாதாரம், துப்புரவு, சமூகக் கல்வி, குடிசைத் தொழில்கள் முதலிய பல்வேறு துறைகள் சம்பந்தமான ‘ விஸ்தரிப்பு ’ முறைகள் ஆறு மாத காலம் போதிக்கப்படுகின்றன.

குறிப்பிட்ட துறைகளில் தேர்ச்சியுள்ள விசேஷச் சிப்பந்திகள், நிர்வாக அதிகாரிகள் ஆகியோருக்கு விஸ்தரிப்புப் பயிற்சியும் மனமாற்றப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. தமது துறையில் போதிய மனப் பக்குவம் பெருதவர் எவரும், கூடுமானவரை விஸ்தரிப்பு வேலைக்கு நியமிக்கப்படுவதில்லை.

கிராம அபிவிருத்தி என்பது மனிதப் பிரச்னையே என்பதை எவ்வளவு வலியுறுத்தினாலும் தகும். பின் வரும் விஷயங்களில் மக்களின் கண்ணோட்டம் எந்த அளவுக்கு மாறுகிறது என்பதைப் பொறுத்தே இத் திட்டத்தின் வெற்றியை அளவிட வேண்டும்:

இப் பணியின் வெற்றிக்கு அடிப்படை வருமாறு :—ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் ஒரு அபிவிருத்தித் திட்டம் இருக்கிறதா? அதை

நிறைவேற்றுவதற்கு அவர்கள் தீவிரமாய்ப் பாடுபடுகிறார்களா? சிறந்த விவசாய முறைகள், விதைகள், இயற்கை உரங்கள், ரசாயன உரங்கள் ஆகியவற்றை அவர்கள் கையாளுகின்றனரா? விவசாய வேலை இல்லாத சமயங்களில் வேறு துணைத் தொழில்களில் ஈடுபடுகிறார்களா? கடன் வாங்கும் 'பெறுமானம்' அக்குடும்பத்துக்கு உண்டா? சொந்தத் தகுதி பேரில் அது ஒரு கூட்டுறவு சங்கத்திலாவது சேர்ந்திருக்கிறதா? சமுதாயப் பொதுப் பணிகளுக்கு அக்குடும்பத்தினர் பணம் அல்லது உழைப்பு அல்லது இரண்டும் கொடுத்திருக்கிறார்களா? இந்த இயக்கத்தில் கிராம மாதர்களுக்கும் இளைஞர்களுக்கும் எந்த அளவுக்குச் சிரத்தை ஏற்பட்டிருக்கிறது? இந்தக் காரியங்கள் எல்லாம் தற்காலிக நிகழ்ச்சிகளாக இல்லாமல் கிராம வாழ்க்கையில் நிரந்தர இடம் பெற்று விட்டனவா?

ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள தேசிய விஸ்தரிப்பு சர்வீஸின் முக்கிய அம்சங்களை இதுவரை குறிப்பிட்டேன். தனி மனித கௌரவத்தையும் மதிப்பையும் ஆதாரமாகக் கொண்ட பணி இது. லட்சோப லட்சம் கிராமாந்தரக் குடும்பங்களின் கண்ணோட்டத்தை மாற்றி, புது வாழ்வு பெறுவதற்கான அவர்களது முயற்சிக்கு உதவுவதுதான் இத் திட்டத்தின் அடிப்படைக் கருத்து.

வேறு சில நாடுகளிலும் இத்தகைய சமுதாய அபிவிருத்தி வேலை நடக்கிறது. ஆனால் நம் நாட்டைப் போல ஏராளமான கிராமவாசிகளைக் கொண்டதும், பொருளாதார ரீதியில் பின்தங்கியதும், கட்டுக் கடங்காத பல பிரச்னைகள் நிறைந்ததுமான வேறு எந்த நாட்டிலும் இத்தகைய பரீட்சை நடந்ததில்லை. மொத்தத்தில், இதுவரை கிடைத்துள்ள பலன்கள் ஊக்கம் தருகின்றன. நிர்வாகிகளும் கிராமத் தலைவர்களும் மற்ற ஸ்தாபனங்களும் அனுபவம் பெறப் பெற இந்த இயக்கமும் சூடு பிடிக்கும். எண்ணற்ற ரூபங்கள் கொண்ட கூட்டுறவுத் தத்துவத்தை ஆதாரமாகக் கொண்ட இயக்கம் இது. உண்மையான மக்கள் இயக்கம் என்ற முறையில் அது தனது விறுவிறுப்பையும், ஜீவசக்தியையும் எச்சமயமும் இழக்கக் கூடாது. புதிய தேவைகளுக்கும், புதிய நிலைமைகளுக்கும் ஏற்ப அது மாறிக் கொள்ள வேண்டும். இதுவே இயக்கத்துக்கு ஜீவாதாரமானது.

# 2. திட்டமும் கிராம அபிவிருத்தியும்*

''ஐந்தாண்டுத் திட்டமும் கிராம அபிவிருத்தியும்'' என்பது குறித்து—அதாவது, இந்தியக் கிராமவாசிகளுக்கு எத்தகைய வாழ்க்கை முறையையும் முன்னேற்றத் தரங்களையும் ஐந்தாண்டுத் திட்டம் வகுத்திருக்கிறது என்பது பற்றி—பேசப் போகிறேன்,

வேலையே யில்லாதவர்களும் குறை நேர வேலையுள்ளவர்களும் விவசாயத் துறையில் ஏராளமாக இருக்கிறார்கள். நமது விவசாயத்தின் உற்பத்தித் திறன் (Productivity) மிக மிகக் குறைவாக உள்ளது. இந்த இரண்டும்தான் இந்தியக் கிராமங்களின் அடிப் படைப் பிரச்னைகள். இவற்றின் காரணங்கள் எல்லோருக்கும் தெரிந்தவையே. 1951-ஆம் வருஷ ஜனகணிதி யாதாஸ்து இக் காரணங்களைத் தொகுத்துக் கூறுகிறது. அவை வருமாறு :

### விவசாயத்தில் ஜன நெரிசல்

1921-முதல் 1951-வரை ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டே வந்திருக்கிறது. இதன் விளைவாக ஜனத்தொகையில் சராசரி ஒவ்வொரு நபருக்கும் உரிய பயிர் நிலத்தின் அளவு மேன்மேலும் குறைந்திருக்கிறது. 1921-ல் சராசரி ஒவ்வொருவருக்கும் 111 சென்டாக இருந்த நிலத்தின் அளவு 1951-ல் 84 சென்டாகக் குறைந்திருக்கிறது. நபர் வாரியாக, இருபோக நிலத்தின் அளவு 13 சென்டிலிருந்து 10 சென்டாகக் குறைந்திருக்கிறது. நபர் வாரியாக, பாசன வசதி பெற்ற நிலத்தின் அளவு 18 சென்டிலிருந்து 14 சென்டாகக் குறைந்திருக்கிறது. துல்லியமான நில ரிக்கார்டுகள் இருக்கும் ஜில்லாக்களை விசேஷமாக ஆராய்ந்ததன் பேரில் கிடைத்த புள்ளிவிவரங்கள் இவை. எனினும், நாடு முழுவதன் நிலைமையையும் இவை பிரதிபலிப்பதாகக் கொள்ளலாம். ''1921-முதல் எல்லா விதங்களிலும், எல்லா இடங்களிலும் இடையறாத சரிவு ஏற்பட்டிருக்கிறது,'' என்று ஜனகணிதி யாதாஸ்து கூறுகிறது.

---

* விவசாயப் பொருளாதாரம் பற்றிய இந்தியக் கழகம் 1953, டிசம்பரில் ஜெய்ப்பூரில் நடத்திய 14-வது மகாநாட்டில் தலைமை உரை.

தேச ஜனத்தொகையில் 69.8 சதவிகிதத்தினர் (அதாவது 2,490 லட்சம் பேர்) விவசாய மக்கள். இவர்களில் 710 லட்சம் பேர் சுயமாகப் பிழைக்க வல்லர்கள்; 310 லட்சம் பேர் ஓரளவு சம்பாத்தியத்துடன் பிறர் சகாயத்திஞல் பிழைப்பவர்கள் ; 1,470 லட்சம் பேர் சுய சம்பாத்தியமே இல்லாமல் பிறரை நம்பி வாழ்பவர்கள். சுயமான பிழைப்பு உள்ள 710 லட்சம் பேரைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம் :

| | |
|---|---|
| சொந்த நிலச் சாகுபடியாளர்கள் | 457 லட்சம் |
| வார, குத்தகைச் சாகுபடியாளர்கள் | 88 லட்சம் |
| சாகுபடி செய்யும் தொழிலாளர்கள் | 149 லட்சம் |
| மேல்வாரம் பெறும் சுவான்தார்கள் | 16 லட்சம் |

நமது ஜனத்தொகையில் அளவுக்கு அதிகமான பேர் விவசாயத்தை நம்பியிருக்கிருர்கள். அதோடு, விவசாயத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் விகிதம் மற்றவர்களைவிடக் குறைவு. மேற்கண்ட புள்ளிவிவரங்களிலிருந்து இவை புலனுகின்றன. ஒரு குடும்பத்தினர் சாகுபடி செய்யும் நிலம் ஒரே பரப்பாக இல்லாமல் கிராமத்தின் பல பகுதிகளில் சிதறிக் கிடக்கிறது. இதையும் நாம் நினைவில் வைக்க வேண்டும்.

புள்ளிவிவரங்கள் காட்டும் நிலைமை இதுதான் : சுமார் 25 கோடி ஏக்கர் நிலத்தை (இதில் ஐந்தில் ஒரு பங்கு நிலம்தான் இருபோக அல்லது நீர்ப்பாசன வசதியுள்ள நிலம்) 7 கோடிக்கு மேற்பட்ட குடும்பங்கள் பயிர் செய்கின்றன. இந் நிலங்கள் துண்டு துணுக்குகளாகச் சிதறிக் கிடக்கின்றன. சுய சம்பாத்தியமே இல்லாத ஏராளமான நபர்களை இந் நிலங்கள் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. இந்த நபர்களில் பலருக்கு வேறு போக்கிடம் இல்லாததால் அவர்கள் நிலத்தையே நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. இவர்கள் விவசாயத்தில் பெயரளவுக்குத்தான் பாடுபடுகிருர்கள்.

## நம்ப முடியாத மழை

இது மாத்திரம் அன்று. முக்கால் பங்குக்கு மேற்பட்ட நிலப் பரப்பில் பருவ மழையை நம்பித்தான் பயிர்த் தொழில் நடக்கிறது. பருவம் தவருமல் மழை பெய்தால்கூட வருஷத்தில் மூன்று நான்கு

மாதங்களுக்கு மேல் பெய்வதில்லை. நாட்டில் 30 சதவிகிதத்துக்கு மேற்பட்ட நிலப் பகுதிகளில் மழை நிலவரம் நிச்சய மற்றது. அதாவது இப் பகுதிகளில் வருஷத்துக்கு 30 அங்குலம் முதல் 10 அங்குலம் வரைதான் பெய்கிறது. இவை வறண்ட பகுதிகள். அதிக மழை பெய்யும் பிரதேசங்களில்கூட, சில வருஷங்களில் கதிர் முதிரும் பருவத்தில் மழை தவறுவதால் தீய்வு ஏற்படுகிறது. தவிர, செப்டம்பர் 30௳ முதல் ஜூன் 1௳ வரை உள்ள எட்டு மாதங்களில், நாட்டின் ஒரு சிறு பகுதியைத் தவிர மற்றப் பிரதேசங்களில் எல்லாம் அநேகமாய் மழையே பெய்வதில்லை. இந்தச் சிறிய பகுதி மாத்திரம் பருவ மழையால் பயனடைகிறது. இந்த எட்டு மாதங்களில் குஜராத்தில் 1·5 அங்குலமும், ஹைதராபாத்தில் 4·4 அங்குலமும், கிழக்கு மத்தியப் பிரதேசத்தில் 7·9 அங்குலமும்தான் மழை பெய்கிறது. ஆண்டு முழுதும் இப் பிரதேசங்களில் பெய்யும் மழையின் அளவு முறையே 32·9 அங்குலம், 33·7 அங்குலம், 56 அங்குலம் ஆகும். இவ்வாறு, ஒரு மகசூலுக்கும் இன்னொன்றுக்கும் இடையே நீண்ட காலத்துக்கு—எட்டு மாத காலத்துக்கு—மழை பெய்வதில்லை. கிராமப் பொருளாதாரத்தை இது வெகுவாகச் சீர்குலைக்கிறது.

ஆகவே மிகச் சாதகமான நிலைமையில் கூட, முக்கால் பங்குக்கு மேற்பட்ட பயிர் நிலங்களில் வருஷத்தில் நான்கு ஐந்து மாதங்கள் தான் வேளாண்மை நடத்த முடியும். எஞ்சிய நிலத்தில், அதாவது பாசன வசதியுள்ள பகுதியில் இதைப்போல் இருமடங்கு காலத்துக்குப் பயிர் செய்யலாம். இது போக வருஷத்தில் எஞ்சியுள்ள பகுதியில் கோடானுகோடிக் கிராமவாசிகளுக்குப் போதிய வேலை வாய்ப்புகள் இல்லை. தொழிலாளர் அமைச்சகம் சேகரித்துள்ள விரிவான புள்ளிவிவரங்களும் இந் நிலைமையை ஊர்ஜிதம் செய்கின்றன.

போதாக்குறைக்கு, ஆண்டு தோறும் 30 லட்சம் பேர் வீதம் ஜனத்தொகை அதிகரித்து வருகிறது. இவர்களையும் நிலமே காப்பாற்ற வேண்டியிருக்கிறது. இவ்வாறு, அநேகமாய் நாடு முழுதிலுமே விவசாயம், வயிற்றைக் கழுவும் தொழிலாக நடக்கிறதே தவிர லாபகரமாக இல்லை. உணவு உற்பத்திப் பெருக்க இயக்கத்தின் மூலம் பல ஆண்டுகள் தீவிர முயற்சி செய்த பிறகும் கூட, 2 முதல் 4 சதவிகிதப் பயிர் நிலத்தில்தான் விஞ்ஞான விவசாய முறைகளைப் பரப்ப முடிந்திருக்கிறது.

## நோயும் மருந்தும்

இந்தியக் கிராமங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் தலை விரித்து ஆடுகிறது என்பதை மேற்கண்ட புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. ஏராளமான பேருக்கு வேலையே இல்லை, அல்லது முழு நேர வேலை இல்லை. இதன் விளைவாக, வாழ்க்கைத் தரம் மிக மிகத் தாழ்வாக உள்ளது. இது பெரிய பொருளாதார நஷ்டம் என்பது மாத்திரம் அல்ல; மனித விரயம் அதைவிடவும் அதிகமாகும். நமது பொருளாதாரத்தின் நாள்பட்ட நோய் இது. பின்கண்ட இரு வழிகளில் இதற்குப் பரிகாரம் காண ஐந்தாண்டுத் திட்டம் முற்படுகிறது:

(1). முக்கியமான ஆராய்ச்சி முடிபுகளை விவசாயத்தில் மிகப் பரவலாகக் கையாள்வதற்கு யோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. கால்நடைப் பராமரிப்பு, மீன் வள அபிவிருத்தி முதலிய துறைகளிலும் இவற்றைக் கையாளலாம். கூட்டுறவு முயற்சியால் தீவிர சாகுபடிக்கு ஊக்கமளிப்பது, பல-முனைப் பொருளாதாரத்தை (விவசாயம் மாத்திர மன்றி மற்றப் பிரவிருத்திகளையும்) வளர்ப்பது ஆகியவை இதன் நோக்கங்கள். இதற்கு உதவியாக, இதுவரை கண்டறியாத அளவுக்கு அதிகமான பாசன-மின்சார வசதிகள் ஏற்படுத்தப்படும். விவசாயத் துறையில் அதிகமான காலகட்டத்துக்கு வேலை கொடுப்பதற்கும் தட்சணமே உதவக்கூடிய வசதிகள் இவை.

(2) விவசாயத்தில் உபரியாக உள்ள தொழிலாளர்களுக்கு வேறு தொழில்களில் பிழைப்பு அளிக்க ஐந்தாண்டுத் திட்டம் முற்படுகிறது. அதாவது, விவசாயத்துக்குத் துணையாக உள்ள தொழில்கள், குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள், பெருந் தொழில்கள்; வியாபாரம், உத்தியோகம் போன்ற மூன்ருந்தரப் பிரவிருத்திகள் (Tertiary occupations) ஆகியவற்றை வளர்க்கவேண்டும். விவசாயத்தில் உபரியாக உள்ளவர்களின் தொகை பலவிதமாக மதிப்பிடப்படுகிறது. நிதிக் கமிஷன் யாதாஸ்தில் நான் ஒருவிதமாக மதிப்பிட்டிருக்கிறேன். விவசாயம் எந்த அளவுக்குச் சீரமைக்கப்படுகிறது என்பதைப் பொறுத்து இந்த உபரித் தொகை அமையும். இந்தச் சீரமைப்பு பரவப் பரவ விவசாயத்தில் உபரியாக உள்ளவர்களின் தொகையும் அதிகரித்துக்கொண்டே போகும். இந்த இரண்டும் பரஸ்பர இணைப்பு உள்ளவை. "உலகத்தில் உள்ள ஒவ்வொரு பெரிய பிரதேசத்திலும், விவசாயத்தில் வேலை நாடுவோரின் தொகை

மற்றத் துறைகளைவிடக் குறைவாக இருந்தால் அங்கு வாழ்க்கைத் தரங்கள் உயர்வாக இருக்கும்,'' என்று மொத்தத்தில் கூறலாம்.

## அடிப்படைக் கருத்துக்கள்

எல்லா வேலைக்கிரமங்கள் சம்பந்தமாகவும் மூன்று அடிப்படைக் கருத்துக்களை ஐந்தாண்டுத் திட்டம் வலியுறுத்துகிறது. அவை வருமாறு:

(1) கிராம வாழ்க்கையின் எல்லாப் பிரச்னைகளையும் தீர்ப்பதற்காக, எண்ணற்ற ரூபங்கள் கொண்ட கூட்டுறவுத் தத்துவத்தைக் கையாளவேண்டும்.

(2) அபிவிருத்திப் பணியை நடத்தும் சக்தி மக்களிடமிருந்தே வரவேண்டும். சுய உதவியே எல்லாச் சீர்திருத்தங்களுக்கும் வேர். பண்டங்கள், சர்வீஸ்கள், கடன் உதவி ஆகியவற்றை அளிப்பது தான் அரசாங்கத்தின் பொறுப்பு. கிராமங்களில் முடங்கிக் கிடக்கும் ஏராளமான மனித பலத்தை ஆக்க வேலையில் ஈடுபடுத்தவேண்டும். ஒவ்வொரு குடும்பமும் தனது சொந்த வேலைக்கிரமங்களை நிறைவேற்றுவதுடன் சமுதாய நன்மைக்காகவும் பாடுபடவேண்டும்.

(3) மக்களுக்கு அதிகபட்ச சமூக நீதி கிடைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்:

எத்தகைய கிராம சமுதாய அமைப்பை ஏற்படுத்த ஐந்தாண்டுத் திட்டம் உத்தேசிக்கிறது என்பதை இக் கருத்துக்கள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. அதாவது, புதிய அமைப்பு பின்வருமாறு இருக்கும்: சாகுபடி செய்யும் நிலக்காரர்களின் குடும்பங்கள் பலவகைக் கூட்டுறவு சங்கங்களை அமைத்துக்கொள்ளும். கூடிய வரை அதிக அளவுக்கு விஞ்ஞான விவசாய முறைகளை அவர்கள் கையாள்வர். பரவல் முறையில் அமைந்த பலவகைக் குடிசைத் தொழில்களையும் சிறு தொழில்களையும் துணைப் பிழைப்புக்களாகக் கொண்டிருப்பர். ஆராய்ச்சி, பண்ட சப்ளை, சர்வீஸ்கள், கடன் வசதி ஆகிய உதவிகளை அரசாங்கம் அளிக்கும்.

## மக்களின் விழிப்பு

குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் ஆகியவற்றின் அமைப்பையும் செய்முறைகளையும் சீர்திருத்தவேண்டும் என்று திட்டம் வலியுறுத்துகிறது: இடைவிடாத ஆராய்ச்சியாலும் இதர

வழிகளிலும் இதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இவை தவிர, விவசாயத்தில் உபரியாக இருப்பவர்களுக்குப் பெருந்தொழில்களிலும் சிறு தொழில்களிலும் பிழைப்புக் கொடுக்க உத்தேசிக்கப்படுகிறது. இந்திய அரசியல் சட்டத்தின் வழிகாட்டித் தத்துவங்களுக்குப் பொருத்தமான சமுதாய அமைப்பு எப்படி யிருக்கவேண்டும் என்ற கேள்விக்கு விடையாகத் திட்டக் கமிஷன் குறிப்பிட்டுள்ள அமைப்பையே நிதிக் கமிஷனும் குறிப்பிட்டிருக்கிறது.

இந்தியாவில் பொறுப்பாட்சியை ஸ்தாபிப்பது சம்பந்தமாக விவாதம் நடந்த காலத்தில் "வெகுஜனங்களின் நிச்சிந்தையான, பரிதாபகரமான திருப்தி மனப்பான்மை" பற்றிப் பெரிதும் பேசப்பட்டது. ஆனால் இப்போது அந்நிலைமை மாறிவிட்டது. 1930 தசாப்தத்தில் (1930-40-ல்) மூண்ட பொருளாதார நெருக்கடி, இரண்டாவது உலக யுத்தம், தேச சுதந்திரம், வயதுவந்தோர் வோட்டுரிமையுடன் நடந்த பொதுத் தேர்தல்கள் ஆகியவற்றின் விளைவாக விறுவிறுப்பான நிலைமை எழுந்திருக்கிறது. எங்கு பார்த்தாலும் புதிய நம்பிக்கைகள், புதிய ஆசைகள். புது வாழ்வு பெறுவதற்குக் கிராம இந்தியா முற்பட்டிருக்கிறது.

திட்டக் கமிஷன் வகுத்துள்ள கிராம சமுதாய அமைப்பு எவ்வளவு புரட்சிகரமானது என்பதை நான் சொல்லவேண்டியதில்லை. இது சாத்தியமாவதற்காக மக்களின் மனத்திருஷ்டி மாறவேண்டும்; வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ளும் ஆர்வத்தையும் அதற்காகப் பாடுபடும் உறுதியையும் அவர்களுக்கு ஊட்டவேண்டும்.

அரசியல் சட்டத்தின் ஆக்கினைப்படி இந்தியா துரிதமாக க்ஷேம நல அரசாங்கமாகவேண்டும். அப்போதுதான் கிராம வாழ்க்கையை அடியோடு மாற்றியமைக்க முடியும் என்று திட்ட கமிஷன் கருதுகிறது. இதற்கு வசதியாக நமது உணர்ச்சியும் மனத்திருஷ்டியும் மாறுவதுடன் நிர்வாகக் கட்டுக்கோப்பும் மாறவேண்டும். ஜில்லா உட்பட எல்லாக் கூட்டங்களிலும் நிர்வாக ஸ்தாபனமானது கிராம அபிவிருத்தி ஸ்தாபனமாக, "விஸ்தரிப்பு" ஸ்தாபனமாக, கிராம க்ஷேமநல ஸ்தாபனமாக மாறவேண்டும். இதற்கான பிரேரணைகளைத் திட்டக் கமிஷன் தெரிவித்திருக்கிறது.

நிர்வாக அமைப்புடன்கூட, ஒவ்வொரு கட்டத்திலும் உத்தியோக சார்பற்ற, சிறந்த தலைவர்களின் ஒத்துழைப்பைப் பெறவும் பிரேரணைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. உத்தியோக ஸ்தாபனமும்

உத்தியோக சார்பற்ற ஸ்தாபனமும் சேர்ந்ததுதான் தேசிய விஸ்தரிப்பு ஸ்தாபனம்; இரண்டும் இணைந்து இயங்கவேண்டும்—தே. வி. ச. ஸ்தாபனத்தின் சாராம்சம் இதுவே. விவசாயிகளுடன் விரிவாக விவாதித்த பிறகே அபிவிருத்தித் திட்டங்களை வகுக்கவேண்டும். தாங்களே அவற்றின் கர்த்தாக்கள் என்று விவசாயிகள் உணர வேண்டும். இந்த அமைப்பின் ஒரு முக்கிய அங்கமாக விளங்குகிறார் கிராம நிலை ஊழியர். கிராமவாசிக்கும் அபிவிருத்தி இலாகாக்களுக்கும் இடையே அவர்தான் இணைப்புச் சங்கிலி. திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஆலோசனை, பண்ட சப்ளைகள், சர்வீஸ்கள் ஆகியவற்றைக் கிராமவாசிக்குப் பெற்றுத் தருபவர் அவர்தான். சுய உதவியே இந்த இயக்கத்தின் அடிப்படை என்பதை இங்கு மீண்டும் வலியுறுத்துகிறேன். மக்களது தீவிர சிரத்தையையும் ஆதரவையும் திரட்டியே மக்களின் நிலையை உயர்த்த வேண்டும்.

1955-56 இறுதிக்குள் 1,20,000 கிராமங்களில் (அதாவது நாட்டின் மொத்தக் கிராமங்களில் சுமார் மூன்றில் ஒரு பங்கில்) தேசிய விஸ்தரிப்பு ஸ்தாபனம் பரவிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சமுதாய அபிவிருத்தி—தே. வி. சர்வீஸுக்காக முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 100 கோடிக்குமேல் ஒதுக்கப்பட்டிருக்கிறது. "உணவு உற்பத்திப் பெருக்க" இயக்கத்துக்கான நிதி இதில் சேரவில்லை. முதல் திட்ட காலத்தில், கடந்த காலத்தைவிட எட்டு அல்லது 10 மடங்கு அதிகமான பிரதேசத்தில் கிராம வாழ்க்கையின் எல்லா அம்சங்களும் தீவிரமாக அபிவிருத்தி செய்யப்படும்.

## பாசன வசதி

தே. வி. ச. இயக்கம் பரவுவதற்குச் சமமாகப் பாசன-மின்சார வசதிகளையும் அதிகரிக்க உத்தேசிக்கப்படுகிறது. பாசனத்துக்கும் மின்சார உற்பத்திக்குமாகப் பல-காரிய அணைத் திட்டங்கள், பெரிய பாசனத் திட்டங்கள், நடுத்தரத் திட்டங்கள், சிறு பாசன ஏற்பாடுகள் ஆகியவை வகுக்கப்பட்டுள்ளன. பெரிய, நடுத்தர அணைத் திட்டங்களுக்குச் சுமார் ரூ. 560 கோடி செலவிடப்படும். தேசப் பிரிவினை காலத்தில் இந்தியாவிலிருந்த எல்லாப் பெரிய நீர்ப்பாசனச் சாதனங்களின் அசல் மதிப்பு ரூ. 110 கோடிதான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. வறண்ட பிரதேசங்களுக்கு நிரந்தரப் பாது

காப்பு அளிக்கக்கூடிய நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்காகச் சமீபத்தில் ரூ. 40 கோடி அதிகப்படியாக ஒதுக்கப்பட்டிருக்கிறது இவ்வாறு முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பெரிய, நடுத்தரத் திட்டங்களுக்கான செலவு ரூ. 600 கோடி ஆகிறது. சிறு பாசனத் திட்டங்களுக்காக ரூ. 110 கோடிக்குமேல் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவை தவிர குழாய்க் கிணறுகள் வேறு அமைக்கப்படும். ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கிய சமயத்தில் 2,500 குழாய்க் கிணறுகள் இருந்தன. முதல் திட்ட காலத்தில் மேற்கொண்டு 5,000 குழாய்க் கிணறுகள் நிறுவப்படும். இவை 15 லட்சம் ஏக்கர் நிலத்துக்குப் பாசன வசதி அளிக்கும்.

முதல் திட்டத்தில் உள்ள பல்வேறு பாசன ஏற்பாடுகளின் பலனாக 1955-56 இறுதி வாக்கில் 170 முதல் 180 லட்சம் ஏக்கர் வரை புதிதாகப் பாசன வசதி பெறும். இந்தப் பாசனச் சாதனங்கள் முழு அளவுக்குப் பலன் தரும்போது மேற்கொண்டு 90 லட்சம் அல்லது ஒரு கோடி ஏக்கர் பாசன வசதி பெறும். 15 வருஷ காலத்தில் பாசன வசதியுள்ள நிலப் பரப்பை இரட்டிக்க வேண்டும் என்றும், மின்சார உற்பத்தியைச் சுமார் 5 மடங்கு அதிகரிக்க வேண்டும் என்றும் திட்டக் கமிஷன் சிபாரிசு செய்திருப்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

தேசிய விஸ்தரிப்பு ஸ்தாபனம் பரவப் பரவ ஆராய்ச்சி வசதிகளும் அதிகமாகத் தேவைப்படும். இதற்காகத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. தேவையானபோது வெளிநாட்டு நிபுணர்களின் உதவியைப் பெறுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. புன்செய்ச் சாகுபடி ஆராய்ச்சியும் மண் வளப் பாதுகாப்பும் விசேஷமாகக் கவனிக்கப்படுகின்றன. நம் நாட்டில் நீர்ப்பாசன வசதி எவ்வளவுதான் பரவினாலும், பிறகுகூட கணிசமான பிரதேசங்களில் புன்செய்ச் சாகுபடியே நடக்கவேண்டியிருக்கும். ஆகவே, இந்தச் சாகுபடி சம்பந்தமான செய்முறைகளைச் சீர்திருத்துவது அவசியம். இதே போல், நாட்டின் பல பகுதிகளில் மண் அரிப்பு ஒரு கடுமையான பிரச்னையாக இருந்து வருகிறது. இந்தப் பிரச்னைகளையெல்லாம் ஆராய்வதற்காக நிபுணர் ஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்த உத்தேசிக்கப்படுகிறது. பரிகாரங்களை வகுத்து நிறைவேற்றுவதற்கான ஊழியர்களை இந்த ஸ்தாபனம் பயில்விக்கும்.

## துணைத் தொழில்கள்

குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். இவை சம்பந்தமாகக் கொள்கை-மாறுதல்களை ஐந்தாண்டுத் திட்டம் சிபாரிசு செய்திருக்கிறது. குடிசைத் தொழில்களுக்கு ஆதரவு அளிப்பதற்காக, அவை தயாரிப்பது போன்ற பண்டங்களை உற்பத்தி செய்யும் பெருந் தொழிலுக்கு 'ஸெஸ்' கட்டணம் விதிக்கும் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. சில உற்பத்தித் துறைகளைக் குடிசைத் தொழில்களுக்கு ஒதுக்கி வைப்பதன் மூலமும் மற்ற வழிகளிலும் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதுவும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. செய்முறைகளையும் அமைப்பையும் சீர்திருத்திக் கொண்டு, பெருந் தொழில்களுடன் போட்டியிடும் நிலையை அடையும் வரை இத் தொழில்களை இவ்வாறு பாதுகாக்க வேண்டும். இவற்றை வளர்ப்பதற்காகச் சுயேச்சையுள்ள பிரத்தியேக போர்டுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அந்த போர்டுகள் திறமையுடன் வேலை செய்ய வசதியாகப் போதிய நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சிறு தொழில்களில் தேர்ச்சியும் சிரத்தையும் வாய்ந்த அந்நிய நிபுணர்களின் கோஷ்டி ஒன்று நம் நாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளது. நான்கு பிராந்தியங்களில் இத் தொழில்களை இவர்கள் நுணுக்கமாக ஆராய்ந்து, அபிவிருத்திக்கான யோசனைகளைத் தெரிவிப்பர். தகுதி வாய்ந்த இந்தியர்களும் இக் கோஷ்டியினருடன் சேர்ந்து வேலை செய்கிறார்கள்.

## நிலச் சீர்திருத்தம்

சமூக நீதியை நிலைநிறுத்துவதற்காக நிலச் சீர்திருத்தங்கள் அவசியமாகின்றன. இது சம்பந்தமாகத் திட்டக் கமிஷன் முக்கிய சிபாரிசுகளைத் தெரிவித்திருக்கிறது. நிலத்தில் நடுவாந்தரர்களின் உரிமைகளை ஒழிப்பது; நியாயமான மேல்வாரத்துக்கும் நிலையான குடிவாரத்துக்கும் உத்தரவாதம் அளித்து வாரக் குத்தகை முறைகளைச் சீர்திருத்துதல்; பல வருஷத் தவணைகளில் மிதமான நஷ்ட ஈடு கொடுத்து விட்டுச் சாகுபடியாளர்களே நில உடமஸ்தர்கள் ஆவதற்கு வழி செய்தல் முதலியவை இவற்றுள் அடக்கம். நில உடைமைகளுக்கு உச்ச வரம்பு நிர்ணயிப்பதற்கும் சிபாரிசுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தியாவில் பிரமாதமான நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. முக்கியமான மாறுதல்களை அவை ஏற்படுத்துவதாலும், ஏராளமான பிரதேசங்களையும் மக்களையும் அவை பாதிப்பதாலும், அவை நிறைவேற்றப்பட்டுள்ள முறை, காலம் ஆகியவை காரணமாகவும் இச் சீர்திருத்தங்கள் பிரமாதமானவை. எனினும் பல்வேறு காரணங்களால், இச் சட்டங்களை எல்லாப் பிரதேசங்களிலும் நாம் விரும்பும் அளவு விரைவாக அமல் நடத்த இயலவில்லை. ஆயினும் எல்லா இடங்களிலும் அமல் முயற்சிகள் ஆரம்பமாகிவிட்டன. இந்தச் சீர்திருத்தங்களின் சமூக, பொருளாதார விளைவுகளைச் சர்வகலாசாலைகள் மூலமும் மற்ற ஆராய்ச்சி ஸ்தாபனங்கள் மூலமும் விருப்பு வெறுப்பின்றி ஆராய்வதற்குத் திட்டக் கமிஷன் ஏற்பாடு செய்திருக்கிறது.

## மகசூலுக்கு விலை

விவசாயப் பண்டங்களுக்கு நியாய விலைகள் கிடைப்பது பற்றிய பிரச்னை வேறு இருக்கிறது. இதற்கும் நிலச் சீர்திருத்தப் பிரச்னைக்கும் சம்பந்தம் உண்டு. விரிவான அளவில் விஞ்ஞான ரீதியாக விவசாயம் செய்ய வேண்டும் என்றும், ஒவ்வொரு குடும்பமும் தனக்கென ஒரு அபிவிருத்தித் திட்டம் வகுத்துக் கொள்ள வேண்டும் என்றும் உத்தேசிக்கப்படுகிறது. விலைவாசிகள் லாபகரமாக இல்லாவிடில் இதை யெல்லாம் செய்ய முடியாது. விவசாய உற்பத்திச் செலவுகளைக் குறைக்க முடியாது என்றோ, உற்பத்தித் திறனை அதிகரிக்க முடியாது என்றோ இதற்கு அர்த்தம் இல்லை. செலவைக் குறைப்பதும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதும் அத்தியாவசியமானவைதாம். அதே சமயம், விவசாயத் துறையில் நியாயமான வருமானம் கிடைத்து வரவேண்டும் என்பதையும் மறக்கக் கூடாது. ஏனெனில், விவசாயிக்கு மாத்திரம் அன்றி, நம் நாட்டின் பொருளாதாரம் முழுவதற்குமே விவசாயம்தான் ஜீவாதாரமாக இருந்து வருகிறது. நியாயமான அல்லது கட்டுப்படியாகக்கூடிய விலைவாசி எது என்பதை நுணுக்கமாகப் பரிசீலித்தே தீர்மானிக்க முடியும். விவசாயிக்குக் கிடைக்க வேண்டிய ஊதியத்தை மாத்திர மன்றி, கருவிகளுக்கும் சாதனங்களுக்கும் அவர் செலவிடும் பணத்தையும், அவருக்குத் தேவைப்படும் நுகர் பொருட்களையும் கருத்தில் கொண்டே இதை நிர்ணயிக்க வேண்டும்.

எல்லாப் பண்டங்களின் விலைவாசியையும் ஸ்திரப்படுத்தாமல் விவசாய விலைவாசியை மாத்திரம் தனியாக ஸ்திரப்படுத்த முடியாது. தவிர ஒரு குறிப்பிட்ட விவசாயப் பண்டத்தின் விலைக்கும் மற்ற விவசாயப் பண்டங்களின் விலைக்கும் இடையே சரியான தொடர்பு இருக்க வேண்டும். ஆகவே விவசாயப் பண்டங்களுக்கும் தொழிற்சாலைப் பண்டங்களுக்கும் இடையே விலைவாசியைச் சமநிலைப் படுத்துவதுடன், பல்வேறு விவசாயப் பண்டங்களுக்கு இடையேயும் சமநிலைப்படுத்த வேண்டியிருக்கும். இவ்விஷயம் பற்றி இப்போதை விட மிக அதிகமான புள்ளிவிவரங்களைச் சேகரிப்பது அவசியம். முதல் நடவடிக்கையாக விவசாய உற்பத்திச் செலவுகளையும், பண்ணை நிர்வாகத்தையும் ஆராய்வது அவசியம். 'ஆராய்ச்சி வேலைக்கிரமக் கமிட்டி'யின் சார்பில் இந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்படுகிறது.

## ஜனத்தொகைக் கட்டுப்பாடு

பலவிதங்களில் மிகச் சிரமமானதும், மிகுந்த கவலை தருவதுமான இன்னொரு பிரச்னையை இனி கவனிப்போம். கடந்த 30 ஆண்டுகளாக ஜனத்தொகை பெருகி வந்திருக்கிறது. இதன் காரணமாக நமது ஆதார சாதனங்கள் மீது பளு அதிகரித்திருக்கிறது. அதனால் குடும்ப அளவையும் ஜனத்தொகையையும் துரிதமாகக் கட்டுப்படுத்துவது அவசியமாகிறது. இதையெல்லாம் திட்டக் கமிஷன் சுட்டிக் காட்டியிருக்கிறது. இதற்கான யோசனைகளையும் கமிஷன் தெரிவித்திருக்கிறது: உணவு உற்பத்தி நிலவரத்தைக் கருத்தில் கொண்டு ஜனத்தொகைப் பிரச்னையை 1951-ஆம் வருஷ ஜனகணிதி யாதாஸ்து ஆராய்ந்திருக்கிறது. அதில் உள்ள முடிவுகளில் சில வருமாறு :

"சுமார் 15 வருஷ காலத்தில் சரியான நடவடிக்கைகள் எடுத்தால் உணவுப் பற்றுக் குறையை நிரந்தரமாக நீக்குவது சாத்தியமே. இதற்காக, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் உள்ளதை விடவும் அதிக அளவில் விவசாய உற்பத்தித் திறனை உயர்த்துவது அவசியம். இது மாத்திரம் போதாது. இதோடு கூட, இறப்போரின் தொகைக்கு ஏறக்குறையச் சமமாக இருக்கும்படி பிறப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்குத் தீவிர நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஜனத்தொகை

கணிசமான அளவுக்கு ஸ்திரமாக இருப்பதற்கு இதன் மூலம் வழி செய்ய வேண்டும்.

"எல்லாத் தம்பதிகளும், அல்லது பெரும்பாலான தம்பதிகள் 'ஊதாரிக் கர்ப்ப'த்தைத் தவிர்த்தால், ஏறக்குறைய மரணங்களுக்குச் சமமாக ஜனனங்களின் தொகை கட்டுப்பட்டு விடும். (ஏற்கனவே மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளைப் பெற்று, அவர்களில் ஒரு குழந்தையாவது உயிரோடு இருக்கும் போது, தாய்மார்கள் மறுபடி கருத்தரிப்பதே 'ஊதாரிக் கர்ப்பம்' என்று குறிப்பிடப்படுகிறது.)

"இப் பிரச்சனைக்கு இணைப்பான பரிகாரம் தேடுவதற்காகப் பின்கண்ட குறியளவுகளை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்:(1) தற்போது வருஷத்துக்கு 700 லட்சம் டன்னுக இருக்கும் விவசாய உற்பத்தித் திறனை சுமார் 940 லட்சம் டன்னுக உயர்த்த வேண்டும். (2) தற்போது 40 சதவிகிதத்துக்கு அதிகமாக இருக்கும் ஊதாரிக் கர்ப்பங்களை 5 சதவிகிதத்துக்கும் கீழாகக் குறைக்க வேண்டும். இந்த இரண்டு குறியளவுகளுக்கும் சம முக்கியத்துவம் அளிக்க வேண்டும். மற்ற எல்லா அபிவிருத்திக் குறியளவுகளையும் விட இவற்றுக்கு முதன்மை கொடுக்கவேண்டும். நமது ஜனத்தொகை 45கோடியைத் தாண்டுவதற்கு முன்னுல் இந்த இரு குறியளவுகளையும் நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு செய்தால் நமது ஜனத்தொகை அநேகமாய் சுமார் 45 கோடியாகவே ஸ்திரப்பட்டு விடும்."

நமது இப்போதைய வாழ்க்கைத் தரங்கள் அபாயகரமான அளவுக்குத் தாழ்வாக உள்ளன. ஜனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தாமல் இவற்றை உயர்த்த முடியாது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வர் என்று நம்புகிறேன். மேற்கண்ட புள்ளிவிவரங்களையும், 'ஊதாரிக் கர்ப்பம்' பற்றிய விளக்கத்தையும் அப்படியே ஏற்காதவர்களும் இதை ஒப்புக்கொள்வர். இவ்விஷயம் பற்றி உத்தியோக சார்பற்ற ஸ்தாபனங்கள் ஆராய்ச்சி நடத்தி, பிரசாரம் செய்து, பொது ஜன அபிப்பிராயத்தை உருவாக்க வேண்டும்.

## நிர்வாகச் சீரமைப்பு

நிர்வாக ஸ்தாபனத்தின் திறமை அதிகரிக்க வேண்டும், புதிய அலுவல்களுக்கு ஏற்ப அது மாறிக்கொள்ள வேண்டும். ஐந்தாண்டுத் திட்டம் வெற்றி பெற இது அத்தியாவசியமானது. பொதுஜன

சேவை என்ற புதிய கருத்தும், புதிய திருஷ்டியும் உருவாக வேண்டும். அதோடு புதிய அலுவல்களுக்கு ஏற்ப நிர்வாக ஸ்தாபனத்தைப் பலப்படுத்தவும் வேண்டும். மற்றும், ராஜ்ய, மத்திய அரசாங்க அபிவிருத்தி நடவடிக்கைகள் இடையே இணைப்பு ஏற்படுத்துவதும் அவசியம். தெட்டத் தெளிவான பொதுக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வேலைகளை நடத்த வேண்டும்.

இந்தியக் கிராமங்கள் சம்பந்தமாக ஐந்தாண்டுத் திட்டத்தில் உள்ள பிரேரணைகளை இதுவரை சுருக்கமாகக் குறிப்பிட்டேன். திட்டத்தைப் பல்வேறு அபிவிருத்தி வேலைகளின் கோவை என்று நினைத்துவிடக் கூடாது. திட்டக் கமிஷன் யாதாஸ்தைப் பார்லிமெண்டில் சமர்ப்பித்தபோது பிரதம மந்திரி கூறியது போல, "(பல அபிவிருத்தி வேலைகளின் கோவை என்பதை விடவும்) மிக விரிவானது அது (திட்டம்)...... ஒரு நாடு தன்னைத் தானே நிர்மாணித்துக் கொள்ளும் மாபெரும் காட்சி அது. நவ இந்தியாவை உருவாக்குவதற்காக நாம் அனைவரும் கூடி உழைக்கும் காட்சி அது." அது ஒரு ஜனநாயகத் திட்டம். தனி மனிதரின் கௌரவத்தையும் மதிப்பையும் ஆதாரமாகக் கொண்ட திட்டம் அது. கிராமங்களிலே வாழும் லட்சோப லட்சம் குடும்பங்களின் கண்ணோட்டத்தை மாற்றி, புது வாழ்வு பெற அவர்கள் செய்யும் முயற்சிக்கு உதவியளிக்க வேண்டும் என்பது இத் திட்டத்தின் அடிப்படைக் கருத்து. நாடெங்கும் விரைந்து பரவப்போகும் தேசிய விஸ்தரிப்பு ஸ்தாபனத்திற்கு இப்போது அஸ்திவாரம் போடப்படுகிறது. புதிய சமூக-பொருளாதார அமைப்பு ஒன்றை வகுத்திருக்கிறோம். அதைத் தோற்றுவிப்பதே க்ஷேம நல அரசாங்கத்தின் குறிக்கோள்.

இம் முயற்சியில் நாம் தோற்கவே கூடாது. தோற்றால் நம் அருமைப் பண்புகள் அழிந்து விடும். இதுவரை கிடைத்துள்ள பலன்கள் மொத்தத்தில் ஊக்கமளிக்கின்றன.

## விவசாயப் பொருளாதார சாஸ்திரம்

இந்தியாவில் விவசாயப் பொருளாதார சாஸ்திரம் இன்னமும் குழந்தைப் பருவத்திலேயே இருந்து வருகிறது. இக்கலையை போதிக்கவும், இது பற்றி ஆராய்ச்சி நடத்தவும் சமீபத்தில்தான் சர்வகலாசாலைகளில் வசதி செய்யப்பட்டிருக்கிறது. விவசாயப் பொருளாதாரப் பிரச்னைகள் பலதரப்பட்டவை, கஷ்டமானவை.

ஏனெனில், இந்தத் துறையில் உள்ள பொதுப்படையான உறவு நிலைகளை மாத்திரம் அன்றி, இந்த உறவு நிலைகளைத் தன்னகத்தே கொண்ட ஸ்தாபன அமைப்பு முழுதையும் ஆராய வேண்டியிருக்கிறது. பல அம்சங்கள் சம்பந்தமாகப் புள்ளிவிவரங்கள் இல்லை. பயிர் நிலங்களின் அளவு, உற்பத்தி, விலைவாசி சம்பந்தமான புள்ளி விவரங்களை மாத்திரம் நான் குறிப்பிடவில்லை. மனப் போக்குகள், ஊக்கமளிக்கும் நிலைமைகள், ஊக்கத்தைக் குறைக்கும் நிலைமைகள் முதலிய புள்ளிவிவரங்களையும் சேர்த்துத்தான் குறிப்பிடுகிறேன்.

இந்தத் துறையில் தனிப்பட்ட பொருளாதார நிபுணர்களும் ஆராய்ச்சி நிலையங்களும் ஏற்கனவே நடத்தியுள்ள நுணுக்கமான ஆராய்ச்சிகளை நான் புறக்கணிப்பதாக அர்த்தம் இல்லை. ஆனால் இவை யெல்லாம் ஏதோ ஒருசில பிரச்னைகள் பற்றி, பரஸ்பரத் தொடர்பின்றி நடந்த ஆராய்ச்சிகளே. எனினும் சென்ற சில வருஷங்களாகச் சர்க்கார் சார்பிலும், சர்க்கார் உதவியுடனும் திட்டவட்டமான ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன, நடத்தப்படுகின்றன. விவசாயப் பிரச்னைகள் பற்றிய நமது அறிவை இவ்வாராய்ச்சி முடிவுகள் வளர்க்கும். தேசிய வருமான யூனிட்டு விசாரணை, தேசிய சாம்பிள் சர்வே, விவசாயத் தொழிலாளர் நிலைமை பற்றியும் ஊதிய நிலவரங்கள் சம்பந்தமாகவும் தொழிலாளர் அமைச்சகம் நடத்திய சர்வே, விவசாய நிதிப் பிரச்னையின் சகல அம்சங்கள் பற்றியும் ரிசர்வு பாங்கு நடத்திய சர்வே முதலியவற்றையே இங்கு குறிப்பிட்டுள்ளேன்.

இந்த விசாரணைகளில் சேகரிக்கப்பட்ட தகவல்கள் அட்டவணைப் படுத்தப்படுகின்றன. இவற்றை விளக்கும் யாதாஸ்துகள் வெளியான பின் விவசாயப் பொருளாதார சாஸ்திரத்துக்கு மிக முக்கியமான புள்ளி விவரங்கள் கிடைக்கும். இவற்றை ஆதாரமாகக் கொண்டு கொள்கைகளை வகுத்துச் செயலாற்றலாம். நிதி வசதியும், ஆராய்ச்சிச் சிப்பந்திகளும் குறைவாக இருந்த போதிலும் உங்கள் கழகம் (விவசாயப் பொருளாதாரம் பற்றிய இந்தியக் கழகம்) சிறந்த பணியாற்றி வந்திருக்கிறது. ஆனால் இன்னும் எவ்வளவோ ஆராய்ச்சி நடத்த இடம் உண்டு. அடிப்படை விஷயங்கள் சம்பந்தமாகச் சரியான முடிவுகளை வகுப்பதற்கு உதவக்கூடிய நம்பகமான தகவல்கள் இல்லை. தனது வேலை நெடுகிலும் திட்டக் கமிஷன் இக் கஷ்டத்தை அனுபவித்திருக்கிறது.

அதனுல்தான் பிரபல பொருளாதார நிபுணர்கள் அடங்கிய ஆராய்ச்சி வேலைக்கிரமக் கமிட்டி ஒன்றை நிறுவக் கமிஷன் தீர் மானித்தது. அபிவிருத்திக் கொள்கைகளை வகுக்க உதவும் ஆராய்ச்சி ஏற்பாடுகள் சம்பந்தமாகக் கமிஷனுக்கு ஆலோசனை கூறுவது; கவனமாக வகுத்த திட்டங்களின் பிரகாரம் சர்வகலாசாலைகளும் ஆராய்ச்சி ஸ்தாபனங்களும் இந்த ஆராய்ச்சிகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்வது; ஆராய்ச்சி முடிபுகளைச் சேகரித்துப் பரிசீலிப்பது ஆகியவை இந்தக் கமிட்டியின் அலுவல்கள். சமீபத்தில் கமிட்டி கூடி ஆலோசித்ததன் பேரில் மூன்று வகை விஷயங்கள் குறித்து இந்தியா முழுவதிலும் ஆராய்ச்சிகளைத் தொடங்கத் தீர்மானிக்கப் பட்டது: (1) நிலச்சீர்திருத்தமும் கூட்டுறவும்; (2) பிழைப்பு வசதி, சேமிப்பு, முதலீடு. (3) பிராந்தியவாரி அபிவிருத்தி. விருப்பு வெறுப் பின்றியும், சாங்கோபாங்கமாகவும் இவ்வாராய்ச்சிகள் நடைபெறும் என்று திட்டக் கமிஷன் உறுதியாக நம்புகிறது. காலப்போக்கில் மேலும் பல விஷயங்கள் ஆராயப்படும் என்றும் நம்புகிறோம். இதன் பலனுக, விவசாயப் பொருளாதாரத் துறையினருக்குத் துல்லியமான புள்ளி விவரங்கள் கிடைக்கும்.

## சாதனையை அளவிடுதல்

சமுதாயத் தொகுதிகள், தேசிய விஸ்தரிப்புப் பிரதேசங்கள் ஆகியவற்றின் வேலைக்கிரமங்களையும் செயல்முறைகளையும் ஆராய் வதற்காகப் பேராசிரியர் கார்வே தலைமையில் 'அமல் மதிப்பீடு ஸ்தா பனம்' ஒன்று சமீபத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸ்தா பனமும் கிராமாந்தரப் பிரச்னைகள் சம்பந்தமாக அடிப்படைஆராய்ச்சி நடத்தத் தொடங்கியிருக்கிறது. இதன் விளைவாக, மிகுந்த பய னுள்ள முடிபுகள் கிடைக்கும். இந்தத் துறைகளில் எல்லாம் நல்ல முறையில் ஆராய்ச்சியைத் தொடங்கியுள்ளோம். பெருவாரியான ஆராய்ச்சி ஊழியர்கள் நமக்குத் தேவை. இவ் விஷயத்தில் நமது சர்வகலாசாலைகளையும் மற்ற ஆராய்ச்சி ஸ்தாபனங்களையும் பலப் படுத்தி அவற்றின் அலுவலை விஸ்தரிக்க உதவி செய்யவேண்டும்.

பின்தங்கிய தேசம் ஒன்று ஆராய்ச்சித் துறையிலும் பின்தங்கி யிருப்பது இயற்கையே. விவசாயத்தைப் போலவே விவசாயப் பொருளாதார சாஸ்திரமும் வெகு காலமாகப் போஷிக்கப்படவில்லை. இப்போது பலப்பல துறைகளில் துரிதமாக முன்னேறுவதற்கு நம்

நாடு முற்பட்டிருப்பதால் மேற்கண்ட நிலைமையும் துரிதமாக மாறு வது அவசியம். ஏனெனில், நாம் ஞானம் பெறுமல் தேசத்தை உறு தியாக நிர்மாணிக்க முடியாது. பலன் கொடுக்கும் விஞ்ஞானம் என்று பொருளாதார சாஸ்திரத்தை ஒரு பிரபல பொருளாதார நிபுணர் வர்ணிக்கிருர். விவசாயப் பொருளாதார சாஸ்திரத்துக்கு இந்த அடைமொழி அதிகமாகப் பொருந்த வேண்டும். உங்கள் கழகம் மேன்மேலும் வளரும் என்றும், அபிவிருத்திப் பிரச்னைகள் சம்பந்த மாகப் புதிய அறிவுக் களஞ்சியத்தைத் திரட்டுவதற்கு அது உதவும் என்றும் நம்புகிறேன். மகசூல்களையோ உற்பத்தித் திறனையோ அதிகரிக்கும் வழிமுறைகளைத் தேடுவது மாத்திரம் நமது நோக்கம் அல்ல. இப்போதை விடச் சிறந்த பொருளாதார-சமுக அமைப்பு உரு வாக வேண்டும் என்பதும், நமது கிராமங்களில் வாழும் கோடானு கோடி மக்களுக்கு நியாயமான உரிமைகள் கிடைக்க வேண்டும் என்பதுவும்தான் நமது அவா.

# 3. வெற்றிக்கு உரைகல்*

தேசிய விஸ்தரிப்பு ஸ்தாபனம், சமுதாயத் திட்டம் ஆகியவற்றின் குறிக்கோள்களைச் சுருக்கமாக விளக்குமாறு என்னைக் கேட்டிருக்கிறார்கள். இரண்டும் ஒரேவிதமான கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டவைதாம். அவற்றின் செயல்முறைகளும் நோக்கங்களும் ஒரேமாதிரியானவையே; எனினும் அவற்றிடையே இரு வித்தியாசங்கள் உண்டு. முதலாவதாக, சமுதாயத் திட்டப் பகுதிகளுக்கு தே. வி. ச. பகுதிகளைவிட அதிக நிதி ஒதுக்கப்படுகிறது; அவற்றில் அதிக அளவு அபிவிருத்தி வேலைகளும் நடக்கின்றன. இரண்டாவதாக, சமுதாய அபிவிருத்தி வேலைகள் தற்காலிகமானவை, மூன்று ஆண்டுகளே நடக்கின்றன; தேசிய விஸ்தரிப்பு ஸ்தாபனமோ நிரந்தரமானது.

கிராமவாசிகளின் திருஷ்டியை ச. அ. தொகுதிகள் எந்த அளவுக்கு மாற்றியிருக்கின்றன என்பதைப் பொறுத்தே அவற்றின் வெற்றியை நிர்ணயிக்க முடியும். இத்தனை கம்போஸ்ட் குழிகள் தோண்டப்பட்டன, இத்தனை மணங்கு விதைகள் விநியோகிக்கப்பட்டன என்று மாத்திரம் குறிப்பிட்டால் போதாது. (சாதனையை மதிப்பிடும் வழிகள் 1-வது கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளன.)

### மூன்று வருஷ அலுவல்கள்

ஒரு பிரதேசத்தில் மூன்றாண்டு காலத்துக்குச் சமுதாயத் திட்டப் பணியை நடத்துவதில் என்னென்ன பலன்களை எதிர்பார்க்கிறோம்? சமுதாயத் திட்ட ஸ்தாபனத்தைவிடக் குறைவான சிப்பந்திகளும் நிதி வசதியும் கொண்ட தேசிய விஸ்தரிப்பு ஸ்தாபனம் மூன்றாண்டுகளுக்குப் பின் இப் பணியை மேற்கொள்ளும்போது சமுதாயத் திட்டக் கிராமம் ஒவ்வொன்றிலும் என்னென்ன பலன்கள் தென்பட வேண்டும்?

---

* 1953, ஏப்ரல் மாதம் அபிவிருத்திக் கமிஷனர்களின் இரண்டாவது மகாநாடு டில்லியில் நடந்தபோது நிகழ்த்திய உரை.

முதலாவதாக, ஏற்கனவே சொன்னதுபோல், கிராமவாசிகளின் மனத்திருஷ்டி மாறவேண்டும். ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு அபிவிருத்தித் திட்டம் இருக்கவேண்டும். சுய உதவி, கூட்டுறவு, சமுதாய முயற்சி என்ற பண்புகளை ஒவ்வொரு குடும்பமும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

அதோடு, ஒவ்வொரு கிராமத்திலும் அல்லது கிராமங்களின் கோஷ்டியிலும் ராஜ்ய விவசாய இலாகா சிலாகிக்கும் விதை ரகங்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு நிரந்தர ஏற்பாடுகள் இருக்க வேண்டும். இவ்விதைகளை வினியோகிப்பதற்கும் நிரந்தர ஏற்பாடு செய்யவேண்டும்.

நாடு முழுதுக்கும் தேவைப்படும் ரசாயன உரம் பூராவையும் நம்மால் உற்பத்திசெய்ய முடியவில்லை. அதனால் கம்போஸ்ட், பசுந்தாள் உரம் போன்ற உள்ளூர் உர வசதிகளை அதிகரிப்பதற்கு முறையான ஏற்பாடு செய்யவேண்டும். நமக்கு 20 லட்சம் முதல் 30 லட்சம் டன் வரை ரசாயன உரங்கள் தேவை. ஆனால் 3½ லட்சம் முதல் 4 லட்சம் டன் வரைதான் உற்பத்தி செய்யப்படுகிறது. அதனால் உள்ளூர் உர வசதிகளை விருத்திசெய்வது மிகமிக அவசியம்.

கிராமத்தில் உணவு தானியங்களைச் சேமித்து வைப்பதற்கும் நிரந்தர ஏற்பாடு செய்யவேண்டும். மோசமான சேமிப்பு முறையினால் கிராம சமுதாயத்துக்கு நஷ்டம் ஏற்படுவதை இதன் மூலம் தடுக்கலாம்.

கிராம ஏரியின் மீன் வளம் போன்ற மற்ற வளங்களையும் சரியானபடி விருத்தி செய்யவேண்டும். மீன் நிலைகள் போன்ற சாதனங்களை அபிவிருத்தி செய்வதால் கிடைக்கும் அதிகப்படி வருமானத்தைப் பொதுக் காரியங்களுக்காகக் கிராம சமுதாயமே வைத்துக்கொள்வதற்கு ராஜ்ய சர்க்கார்கள் அனுமதிப்பர் என்று நம்புகிறேன்.

கால்நடைக் கொள்ளை நோய்கள், பயிர் நோய்கள் ஆகியவற்றைச் சமாளிப்பதற்கு வேண்டிய கருவிகளும் மற்ற வசதிகளும் கிடைப்பதற்கு சாசுவத ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

மற்றும், ஒவ்வொரு கிராமத்திலும் பல-காரியக் கூட்டுறவு சங்கம் ஒன்று இருக்கவேண்டும். எல்லா விவசாயக் குடும்பங்களும் அதில் அங்கம் வகிக்கவேண்டும். உறுப்பினர்கள் சார்பில் விவ

சாயக் கருவிகளையும் மற்றச் சாதனங்களையும் அந்தச் சங்கம் வாங்கவும், விற்கவும், வாடகைக்குக் கொடுக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

உற்பத்தித் திட்டங்களையும் மற்றத் திட்டங்களையும் நிறைவேற்ற உதவி செய்வதற்காகக் கிராமக் கவுன்சில் ஒன்று இருப்பதுவும் முக்கியமானது. தொழில் நுணுக்கவாதிகள் கூறும் சீர்திருத்தங்களைக் கிராமவாசிக்கு இக் கவுன்சில் உணர்த்தவேண்டும். இந்த யோசனைகளைக் கடைப்பிடிக்கும்போது எழும் சங்கடங்களைத் தொழில் நுணுக்கவாதிகளுக்குத் தெரிவிப்பதும் அதன் அலுவல் பல ஊர்களில் கிராமப் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. இத்தகைய ஊர்களில் இப் பஞ்சாயத்துக்களை மையமாகக் கொண்டு கிராமக் கவுன்சில்களை அமைக்கவேண்டும்; பல-காரியக் கூட்டுறவு சங்கம் இருக்கும் ஊரில் அச் சங்கத்தை மையமாகக் கொண்டு கிராமக் கவுன்சிலை அமைக்கவேண்டும். புதிய ஸ்தாபனங்களை ஏற்படுத்துவதைவிட ஏற்கனவே உள்ள ஸ்தாபனங்களையே பயன்படுத்த வேண்டும். சீர்திருத்தங்களில் ஆர்வம் கொண்டுள்ள விவசாயிகளைக் கவுன்சிலில் சேர்த்துக்கொள்ள வேண்டும். அவர்களது உதாரணத்தால் மற்றவர்களும் நல்ல பயன் அடைவர்.

தவிர, ஒவ்வொரு கிராமத்துக்கும் கட்டுமான வேலைத் திட்டம் ஒன்று இருக்கவேண்டும். அதன்படி கிராமவாசிகளே பள்ளிக் கூடங்கள், சுகாதார நிலையங்கள், ஏரிகள், ரஸ்தாக்கள் முதலியவற்றை அமைத்துக்கொள்ளவேண்டும். இந்தியா முழுவதிலும் கிராமவாசிகள் இத்தகைய வேலைகளில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளனர். இவற்றுக்காக எல்லா இடங்களிலும் அவர்கள் பணமும் உழைப்புத் தானமும் கொடுக்கிறார்கள். செம்மையாகவும் சிக்கனமாகவும் இந்தக் கட்டுமான வேலைகள் நிறைவேற்றப்படும் என்றும், அவற்றைப் பராமரிக்கச் சாசுவத ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் நம்புகிறேன். சிறு பாசனச் சாதனங்களைப் பராமரிப்பது சம்பந்தமாக உணவு உற்பத்திப் பெருக்க விசாரணைக் கமிட்டி சில சிபாரிசுகளைத் தெரிவித்திருக்கிறது. ஏரிக்கரைகள் பழுதடையாமல் பாதுகாப்பது, அவற்றில் மரங்களை வளர்ப்பது, ஏரிகளைத் தூர் எடுப்பது ஆகியவற்றுக்குக் கிராமவாசிகளே பொறுப்பு ஏற்கவேண்டும்.

மற்றும் சமுதாயத் திட்டக் கிராமம் ஒவ்வொன்றிலும் மேய்ச்சல் தரைகளை விருத்தி செய்ய வேண்டும்; விறகுக்காகக் 'கிராமக் காடு'

ஒன்றை வளர்க்க வேண்டும். கால்நடைச் சாணத்தை வறட்டியாக எரிக்காமல் உரமாகப் பயன்படுத்த இது உதவும்.

## முதலில் மனப் புரட்சி

மூன்று வருஷ காலத்தில் இத்தனை காரியங்களை நிறைவேற்ற இயலாது என்று நீங்கள் கருதக்கூடும். நான் அவ்வாறு கருத வில்லை. ஒவ்வொரு கிராம நிலை ஊழியரும் சுமார் 400 அல்லது 500 குடும்பங்களையே கவனித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. எல்லாக் குடும்பங்களுடனும் அவர் நேரடித் தொடர்பு கொள்ள முடியும். நேரடித் தொடர்பு மூலமும் சரியான வழிமுறை மூலமும் தான் கிராமவாசிகளின் திருஷ்டியை மாற்ற முடியும். இந்த வேலை களுக்கெல்லாம் கிராம நிலை ஊழியர்தான் அச்சாணி. கிராமவாசியின் வழிகாட்டியாகவும் நண்பராகவும் செயல் புரிவதற்கு அவரைப் பயில் விக்க வேண்டும். விவசாயம், கால்நடைப் பராமரிப்பு, கூட்டுறவு ஆகிய துறைகளில் அவர் ஓராண்டுக் காலமாவது அடிப்படைப் பயிற்சி பெற வேண்டும். அதற்கு மேல் ஆறு மாத காலத்துக்கு விஸ்தரிப்பு முறைகளில் பயிற்சியளிக்க வேண்டும். இதற்கான பயிற்சி வசதிகளை ஏற்படுத்தும்படி ராஜ்ய சர்க்கார்களுக்குத் தெரி வித்திருக்கிறோம்.

கிராம மக்களின் மனத் திருஷ்டியை மாற்றுவது பற்றிப் பிரஸ் தாபித்தேன். இதைப் போலவே முக்கியமான வேறொரு விஷயம் இருக்கிறது. அதாவது, நம்முடைய (அதிகாரிகளின்) மனத் திருஷ்டி யும் மாற வேண்டும். 'க்ஷேம நல அரசாங்கம்' என்ற புதிய கருத் துக்கு ஏற்ப நாம் மாறிக்கொள்ள வேண்டும். ஒரு புதிய மனோபாவத் துடன் நாம் பணி புரிய வேண்டும். நமது திட்டங்களையும் வேலைக் கிரமங்களையும் கிராமவாசிகள் மீது திணிப்பது என்ற எண்ணத்தை விட்டொழிக்க வேண்டும். தங்கள் விருப்பம் என்ன என்பதைத் தெரிவிக்க வேண்டியவர்கள் கிராமவாசிகளே. அவர்களுக்கு உதவி செய்வதுதான் நம் பொறுப்பு. அவர்களுக்கு நாம் ஆலோசனை கூறலாம்; அவர்களது முயற்சிகளைப் பலப்படுத்தலாம்; தேவையான நிதி உதவியை அளிக்கலாம். ஆனால் திட்டங்களைக் கிராமவாசிகள் தாம் முன்னின்று வகுக்க வேண்டும். கிராம நிலை ஊழியர்களும் விஸ்தரிப்புச் சிப்பந்திகளும் அவர்களது நண்பர்களாகவும் வழிகாட் டிகளாகவும் உதவவேண்டும். கிராமவாசிகளுக்குப் போதிப்பதை

விட அவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயம் அதிகம் என்பதை நமது வேலை முன்னேறும்போது நாமே உணர்ந்து கொள்வோம். ஆகவே இரு சாராரின் மனத் திருஷ்டியும் மாறவேண்டும். 'சட்டத்தையும் ஒழுங்கையும்' நிலைநிறுத்தும் அரசாங்கமானது இப்போது இந்தியாவில் ஒரு க்ஷேமநல அரசாங்கமாக மாறி வருகிறது. புரட்சிகரமான மாறுதல் இது. இதற்கு ஏற்ப அரசாங்க நிர்வாகிகளின் மனத் திருஷ்டியும் புரட்சிகரமாக மாறவேண்டும். கிராமவாசிகளின் மனத் திருஷ்டியும் நிர்வாகிகளின் மனத்திருஷ்டியும் ஒன்றுபோல மாறவேண்டும். ஒன்று மாருமல் இன்னென்று மாறினால் போதாது.

தேசிய விஸ்தரிப்பு ஸ்தாபனம், சமுதாயத் திட்டங்கள் ஆகியவற்றின் மூன்று முக்கிய குறிக்கோள்கள் வருமாறு: வேலை (பிழைப்பு) வசதியையும் உற்பத்தியையும் அதிகரித்தல்; கூட்டுறவை வளர்த்தல்; சமுதாயப் பொது நன்மைக்கான காரியங்களைச் சமுதாய முயற்சியால் மேன்மேலும் நிறைவேற்றுதல். இந்த மூன்று இனங்களிலும் பலப்பல வேலைக்கிரமங்கள் அடங்கியுள்ளன. இந்த வேலைக்கிரமங்களை நிறைவேற்ற நீங்கள் முயலவேண்டும்; இவற்றில் கிராமவாசிகளுக்குச் சிரத்தை ஏற்படுமாறு செய்யவேண்டும். கிராமவாசிகளின் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் உசுப்பிவிட்டு உச்ச நிலையில் வைத்திருந்தால்தான் சமுதாய அபிவிருத்திப் பணி வெற்றி பெறமுடியும். கிராம வாழ்க்கையில் உள்ள தேக்கம் நீங்கவேண்டும். எங்கணும் புது வாழ்வும், புதுத் தெம்பும் பூக்கவேண்டும்; உயர்ந்த வாழ்க்கைநிலைக்காகவும் புதிய வாழ்க்கை முறைகளுக்காகவும் பாடுபடும் உறுதி ஓங்கவேண்டும்.

# 4. இணைப்பான பணி*

சமுதாய அபிவிருத்தித் திட்டமும் தேசிய விஸ்தரிப்பு சர்வீஸூம் பரிபூரணமானவை என்றோ, சில்லரை மாறுதல்கூடச் செய்யாமல் அவற்றை அப்படியே அமல் நடத்தவேண்டும் என்றோ திட்டக் கமிஷன் கூறவில்லை. திறந்த மனத்துடன் திட்டத்தைக் கையாண்டு, சிரமங்களைக் கண்டறிந்து, தேவைப்படும் மாறுதல்களைத் தெரிவிக்க வேண்டியவர்கள் நீங்கள்தாம்.

ச. அ. திட்டத்தின் விவரங்கள் சம்பந்தமாகப் பல்வேறு ராஜ்யங்களுக்கு இடையேயும், ஒரு ராஜ்யத்தின் பல்வேறு பிராந்தியங்களுக்கு இடையேயும் வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும். மக்கள், உத்தியோக சார்பற்ற சிறந்த தலைவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் பல்வேறு பிரதேசங்களுக்கு ஏற்றதோர் முறையை வகுப்பது நம் கடமை. லட்சோப லட்சம் கிராமாந்தரக் குடும்பங்கள் அனைத்துக்கும் பொருந்தக்கூடிய திட்டம் எதையும் முன்கூட்டியே தயாரிக்க முடியாது.

## மற்ற இயக்கங்கள்

சமுதாய அபிவிருத்தி, தேசிய விஸ்தரிப்பு சர்வீஸ் என்ற இரு இயக்கங்களின் நோக்கங்களும் வழிமுறைகளும் ஒரே மாதிரியானவையே. இதுமாத்திரம் அல்ல. சமுதாய அபிவிருத்தி இயக்கத்தில் அடங்கியவை என்று கருதக்கூடிய வேறு பல இயக்கங்களும் நாட்டில் உள்ளன. அவற்றையும் ச. அ. இயக்கத்துடன் இணைக்க வேண்டும். உதாரணமாக, இந்தியா முழுவதிலும் உணவு உற்பத்திப் பெருக்க இயக்கம், ஸ்தல அபிவிருத்தி வேலைகள் (Local development programmes) முதலியவை அமல் நடுத்தப்படுகின்றன. தே. வி. ச. இயக்கத்தைப் புகுத்துவதற்கு நாட்டைப் பண்படுத்தும் இயக்கங்கள் இவை.

---

*1954—மே மாதம், உதகமண்டலத்தில், அபிவிருத்திக் கமிஷனர்களின் 3-வது மகாநாட்டில் பேசியது.

ஐந்தாண்டுத் திட்டத்தின் வேறு எந்த வேலையும் அமல் நடக்காத கிராமங்களில் ஸ்தல அபிவிருத்தி வேலைகளை நிறைவேற்ற வேண்டும் என்று சர்க்காருக்குத் திட்டக் கமிஷன் யோசனை கூறியது. தே. வி. சர்வீஸை ஏற்றுக்கொள்ள இப் பிரதேசங்களைப் பக்குவப்படுத்துவதுதான் இதன் நோக்கம். இதே போல் தீவிர அபிவிருத்திப் பிரதேசங்களில் உணவு உற்பத்திப் பெருக்க ஏற்பாடுகளை அமல் நடத்தவேண்டும் என்று உணவு உற்பத்திப் பெருக்க விசாரணைக் கமிட்டி சிபாரிசு செய்தது உங்களுக்கு நினைவிருக்கலாம். காலப்போக்கில் தே. வி. ச. வட்டாரங்களாக மாறுவதற்கு இப் பிரதேசங்களைப் பக்குவப்படுத்த வேண்டும் என்பதுதான் இந்தச் சிபாரிசின் நோக்கமும்.

இதுபோலவே ராஜ்ய சர்க்கார்களின் மாமூல் அபிவிருத்தி வேலைகளையும் உணவு உற்பத்தி நடவடிக்கைகள், ஸ்தல அபிவிருத்தி வேலைகள் ஆகியவற்றுடன் நெருக்கமாக இணைக்கவேண்டும். விவசாயம், கூட்டுறவு, கால்நடைப் பராமரிப்பு முதலியவை சம்பந்தமான அபிவிருத்தி வேலைகள் ஒவ்வொரு ராஜ்யத்திலும் பல வருஷங்களாக நடந்து வந்திருக்கின்றன. இவ்வேலைகளுக்கு ஆக்கம் அளிப்பதே உணவு உற்பத்திப் பெருக்க நடவடிக்கைகளின் நோக்கம். ஆகவே உணவு உற்பத்திப் பெருக்க ஏற்பாடுகளை ராஜ்ய சர்க்கார்களின் மற்ற அபிவிருத்தித் திட்டங்களுடன் இணைக்கவேண்டும். இதுபோலவே, ஜில்லா போர்டுகளின் அல்லது சாதாரண ரெவினியூ ஸ்தாபனங்களின் அபிவிருத்தி வேலைக்கிரமங்களுடன் ஸ்தல அபிவிருத்தி வேலைகளை இணைக்கவேண்டும். எல்லா இடங்களிலும் வாழ்க்கைத்தரங்களை உயர்த்துவதற்காக மக்களும் சர்க்காரும் இணைப்பான முறையில் செயலாற்றவேண்டும். இத்தகைய இணைப்பு இல்லாவிட்டால் ஐந்தாண்டுத் திட்டத்தின் முழுப்பலனை நாம் பெற முடியாது.

இத்தகைய இணைப்பை ஏற்படுத்துவதற்கான ஸ்தாபன அமைப்பை ஒவ்வொரு ராஜ்யமும் தனித்தனியே வகுத்துக்கொள்ள வேண்டும். இந்த இணைப்பு வேலை மிக முக்கியமானது என்று பிரதம மந்திரி கருதுவது உங்களுக்குத் தெரியும். ஜில்லா நிலையிலும், அதற்குக் கீழே கிராம நிலையிலும் இத்தகைய இணைப்பை ஏற்படுத்த வேண்டும். இது சாத்தியமானால் நிர்வாகத்தினர், மக்கள் ஆகியோ

ரின் உள்ளத்தில் ஐந்தாண்டுத் திட்டத்துக்கு ஒரு புதிய முக்கியத்துவம் ஏற்படும் என்பது உறுதி.

இதை விளக்க ஒரு உதாரணம்: கலெக்டர் அல்லது டெப்டி கமிஷனருடன் ஜில்லா அபிவிருத்தி அதிகாரிகளின் கோஷ்டி இணைப்பாக வேலை செய்யவேண்டும் என்பதை எல்லா ராஜ்யங்களும் ஒப்புக்கொள்கின்றன. ஆனால், சமுதாயத் திட்ட, தே. வி. ச. வட்டாரங்களில் சேராத பிரதேசங்களிலும் இத்தகைய இணைப்பு வேண்டும் என்பது உணரப்படுவதில்லை. இந்த இருவகைப் பிரதேசங்கள் இடையே கொள்கையளவில் வேறுபாடு எதுவும் கிடையாது. ஒரு வகைப் பிரதேசங்களில் இயக்கம் ஏற்கனவே அமல் நடந்துவருகிறது; இன்னொருவகைப் பிரதேசங்கள் இந்த இயக்கத்துக்கு ஆயத்தம் செய்யப்படுகின்றன. எல்லாப் பிரதேசங்களிலும் அதிகாரிகள் கோஷ்டி-உணர்வுடன் வேலை செய்தால் நான் வலியுறுத்தும் நோக்கம் கைகூடிவிடும்.

இதேபோல் (கிராமம் போன்ற) கீழ் நிலைகளிலும் இத்தகைய இணைப்பை ஏற்படுத்த ராஜ்ய சர்க்கார்கள் முயலவேண்டும். உதாரணமாக, ராஜ்ய அரசாங்க நடவடிக்கைகள், தே. வி. ச. நடவடிக்கைகள், ஸ்தல அபிவிருத்தி வேலைகள், ஸ்தல ஸ்தாபனங்களின் நடவடிக்கைகள் ஆகியவை அனைத்துக்கும் கிராம நிலை ஊழியரை ஏஜண்டாக ஆக்க முடியாதா? ஐந்தாண்டுத் திட்டத்தை ஜில்லாத் திட்டங்களாகப் பிரிக்கவேண்டும் என்று திட்டக் கமிஷன் கூறியதன் நோக்கம் இதுவே. சில ராஜ்யங்களில் ஏற்கனவே இது செய்யப்பட்டிருக்கிறது; பல ராஜ்யங்களில் இனிமேல்தான் செய்யவேண்டும். தே. வி. ச. வேலைக்கிரமங்களைக் கிராமவாசிகளுக்கு முன்கூட்டியே தெரிவிப்பது ராஜ்ய சர்க்கார்களுக்கு நல்லது. இவ்வாறு தெரிவித்தால், சுமார் ஒரு வருஷத்துக்குப் பிறகு தே. வி. ச. வட்டாரத்தில் சேரப்போகும் மக்கள் முன் கூட்டியே அதற்குத் தயாராகிக்கொள்ளலாம்.

## செயற்கைப் பிரிவினை

தீவிர அபிவிருத்திப் பிரதேசங்கள் (சமுதாயத் திட்ட, தேசிய விஸ்தரிப்பு சர்வீஸ் பிரதேசங்கள்), மற்றப் பிரதேசங்கள் ஆகியவற்றுக்கு இடையேயுள்ள வித்தியாசத்தைப் பெரிதுபடுத்தக்கூடாது. இதுதான் முக்கிய விஷயம். பேராசிரியர் கார்வே தயாரித்த 'அமல்

மதிப்பீடு யாதாஸ்து' என்ற சிறந்த தஸ்தாவேஜி சமீபத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அது ஒரு விஷயத்தைப் பிரதானமாகக் குறிப்பிட்டிருக்கிறது. சமுதாயத் திட்டப் பகுதிகளில் மாத்திரம் அன்றி மற்றப் பிரதேசங்களிலும் ஜன எழுச்சி காணப்படுகிறது என்பதே அவ்விஷயம். கனல் பொறிகள் போன்றவை கருத்துக்கள்; அவை பாய்ந்து பரவுகின்றன. சமுதாயத் திட்டம் வியாபிக்காத பிரதேசங்களில்கூட கணிசமான எழுச்சி ஏற்பட்டிருக்கிறது, பல உருவங்களில் அந்த எழுச்சி வெளிப்பட்டும் வருகிறது.

சில காலத்துக்கு முன் மத்தியப் பிரதேசத்துக்கு நான் போயிருந்தபோது டெப்டிக் கமிஷனர் ஒருவர் ஒரு விஷயத்தைத் தெரிவித்தார். ஐந்தாண்டுத் திட்ட வேலைகளிலும் தே. வி. ச. வட்டாரத்திலும் சேராத ஒரு பிரதேசத்தில் நடந்துள்ள அபிவிருத்தி பற்றியது அது. அங்கு பிரமாதமான பலன் கிடைத்திருக்கிறது. அரசாங்க உதவி இல்லாமலே அப்பிரதேச மக்கள் ஒரு வேலைத் திட்டத்தை நிறைவேற்றினர். தே. வி. ச. வட்டாரத்தில் நடந்திருந்தால்கூட பெருமைப்பட வேண்டிய காரியங்கள் இவை.

ஆகவே ஜில்லா முழுதிலும் நமது அதிகாரிகள் ஒரே கோஷ்டியாக வேலை செய்யவேண்டும். கிராம வாழ்க்கை என்பது கூறு போட முடியாத ஒரே உறுப்பு என்பதையும், சுய உதவியே எல்லா அபிவிருத்திக்கும் வேர் என்பதையும் கிராமவாசிகளுக்கு அவர்கள் உணர்த்தவேண்டும். இந்த அடிப்படைக் கருத்துக்கள் வேர் ஊன்றிய இடங்களில் எல்லாம் எதிர்பார்த்ததைவிட அதிகமான பலன் கிடைத்திருக்கிறது. அமல் மதிப்பீடு யாதாஸ்தும் இதை ஊர்ஜிதம் செய்கிறது.

இதுவரை வலியுறுத்திய இரு விஷயங்களை மீண்டும் கூறுகிறேன். முதலாவதாக, ஜில்லாக்களை நம் இஷ்டம்போல் பல்வேறு வட்டாரங்களாகப் பிரிக்க முடியாது. அதாவது, உணவு உற்பத்திப் பெருக்க வேலைகள் நடக்கும் வட்டாரங்கள், ஸ்தல அபிவிருத்தி வேலைகள் நடக்கும் வட்டாரங்கள் என்றெல்லாம் பிரிக்க முடியாது. பிரத்தியட்ச நிலைமைக்குப் பொருந்தாத பிரிவினை இது. எல்லாப் பிரதேசங்களிலும் ஏக காலத்தில் தே. வி. ச. வட்டாரம் ஏற்பட முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் ஜனங்கள் கேட்கிறார்கள்: "இவ்வருஷம் எங்களுக்கு தே. வி. ச. வட்டாரம் கிடைக்கவில்லை. ஆயினும் அடுத்த வருஷமோ, இரண்டு மூன்று

ஆண்டுகள் கழித்தோ தே. வி. ச. வட்டாரத்தைப் பெறுவதற்கு அதிகாரிகள் எங்களைத் தயார் செய்கிறார்களா ?'' இவ்வாறு அவர்களைத் தயாரிப்பது அவசியம். இரண்டாவதாக, உத்தியோக ஸ்தாபனம் ஒருமனத்துடன் வேலை செய்யவேண்டும். அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோக ஸ்தாபனம் முழுவதும் ஒருமனத்துடனும் ஒருமுகமாகவும் செயல்புரிந்து உயர்ந்தபட்சப் பலன் காட்டவேண்டும். அனுஷ்டான ரீதியான யோசனைதான் இது, பரிபூரண நிலையை அடைவதற்கான யோசனை அல்ல.

## உரைகல்

இப் பிரச்னையின் மனித அம்சத்தை நாம் சதா மனத்தில் கொள்ளவேண்டும். ஒரு பிரதேசத்தில் எத்தனை குடும்பங்கள் தமக்கென அபிவிருத்தித் திட்டங்களை வகுத்துக்கொண்டு அவற்றை நிறைவேற்றப் பாடுபடுகின்றன ? கூட்டுறவு சங்கங்களில் எத்தனை குடும்பங்கள் சொந்தத் தகுதியுடன் அங்கம் வகிக்கும் தகுதியைப் பெற்றுள்ளன ? முன்னைவிட வேலை வசதி அதிகரிக்கும் விதத்தில், குடிசைத் தொழில்களிலும் சிறு தொழில்களிலும் எத்தனை குடும்பங்கள் ஒழிவு நேரத்தில் ஈடுபட்டிருக்கின்றன ? தங்கள் நேரத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சமுதாய நலனுக்கான வேலைகளில் எத்தனை குடும்பங்கள் செலவிடுகின்றன ? ஒரேஒரு முறை உருவாக்கப்படும் ரஸ்தாக்கள் போன்றவைகளை மாத்திரம் சமுதாய நலனுக்கான வேலைகள் என்று நான் குறிப்பிடவில்லை. ஆண்டுதோறும் செய்ய வேண்டியவையும் நிரந்தரப் பலன் தருபவையுமான வேலைகளையும் சேர்த்தே குறிப்பிடுகிறேன்.

இந்தியக் கிராமங்களில் புது வாழ்வை நிர்மாணிப்பதற்கான நமது முயற்சிகள் வெற்றி தருகின்றனவா என்பதை அறிய இவையே பரீட்சைகள் :—சமுதாயத் திட்டம், தே. வி. ச. ஆகியவற்றில் எத்தனை குடும்பங்கள் அடங்கியுள்ளன என்ற தகவலை நமது அறிக்கைகள் குறிப்பிடவேண்டும். எத்தனை விவசாயிகள் முன்னைவிடத் திறமை பெற்றுள்ளனர், கூட்டுறவு சங்கங்களில் எத்தனை பேர் சேர்ந்துள்ளனர் என்பதையும் குறிப்பிடவேண்டும். மக்களின் மனத் திருஷ்டியில் என்னென்ன மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன என்பதே உரைகல். ஸ்தூலமான பலன்களும் முக்கியமானவையே. ஆனால் உற்சாகத்தை உசுப்பிடுவதுதான் பிரதான காரியம். நாட்டு

மக்கள் எழுச்சி யுற்று, செயலாற்ற உறுதி பூண்டு விட்டால், பிறகு அவர்கள் புரியக் கூடிய சாதனைக்கு அளவே இருக்காது.

அடிப்படைக் கருத்துக்கள் பற்றி நாம் தெளிவு பெற வேண்டும் என்பதற்காகவே இதை யெல்லாம் கூறினேன். அதோடு, கிராம நிலை ஊழியர்களின் தரம் மிக முக்கியமானது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். கிராம நிலை ஊழியர்களை மிகுந்த கவனத்துடன் பொறுக்கி யெடுக்க வேண்டும். அலுவல்களை நிறைவேற்றுவதற்குப் போதுமானபடி அவர்களுக்குப் பயிற்சி யளிக்க வேண்டும். இதைத் தங்கள் ராஜ்ய சர்க்கார்களிடம் அபிவிருத்திக் கமிஷனர்கள் வலி யுறுத்த வேண்டும். இவ்வூழியர்களைப் பொறுத்தே கிராமங்களில் நடக்கும் பணியின் தரம் அமையும்.

ஜில்லாக்களில் உள்ள விவசாய அதிகாரி, கூட்டுறவு அதிகாரி போன்ற மேற்பார்வைச் சிப்பந்திகளுக்கும் சம அளவு முக்கியத்து வம் உண்டு. வருங்காலத்தில் இச்சிப்பந்திகள் அதிகமான பளுவைத் தாங்க வேண்டியிருக்கும். இவர்களுக்கும் தகுந்த பயிற்சி யளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

# 5. சாதனையும் வருங்காலமும்*

சமுதாய அபிவிருத்தி, தேசிய விஸ்தரிப்பு சர்வீஸ் ஆகியவற்றின் சாதனைகளை விருப்பு வெறுப்பு இன்றி எடைபோட வேண்டிய வேளை வந்துவிட்டது. இதற்கான காரணங்களை விவரிக்க வேண்டியதில்லை. சுமார் 90,000 கிராமங்களில் இந்த இயக்கம் ஏற்கனவே பரவியிருக்கிறது என்பது முதல் காரணம். அடுத்த ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நாடு முழுதிலும் அதைப் பரப்ப உத்தேசிக்கப்படுகிறது. (இந்தக் காலக்கெடு பின்னர் மாற்றப்பட்டிருக்கிறது—மொ.ர்) தேசிய விஸ்தரிப்பு சர்வீஸும் சமுதாயத் திட்டமும் வெவ்வேறு திட்டங்கள் அல்ல; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இணைப்பான உறுப்புகளாகவே அவை அமையும். நாட்டைக் கணிசமாகத் தொழில் மயமாக்குவதற்கான ஏற்பாடுகள் இரண்டாவது திட்டத்தில் இருக்கும். சரியான அஸ்திவாரம் இல்லாவிடில் நாம் உத்தேசித்துள்ள தொழில் கட்டுக்கோப்பை நம் தேசத்தால் தாங்க இயலாது. இந்த அஸ்திவாரத்தை அமைத்துக் கொடுப்பது தேசிய விஸ்தரிப்பு, சமுதாயத் திட்டங்களின் பொறுப்பாகும்.

கடந்த இரு வருஷங்களுக்கு மேலாக தே. வி. சர்வீஸ், சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் அமல் நடந்துள்ள விதத்தை "வேலைக் கிரம அமல் மதிப்பீடு ஸ்தாபனம்" பாரபட்ச மின்றி ஆராய்ந்தது. அதன் யாதாஸ்து சமீபத்தில் பிரசுரமாகி யிருக்கிறது. யாதாஸ்தில் உள்ள பல அம்சங்கள் ஊக்கமளிக்கின்றன. அவ்வளவாக ஊக்கம் தராத அம்சங்களும் அதில் உள்ளன; இவற்றுக்குப் பரிகாரம் தேட வேண்டும். இந்த முக்கியமான தஸ்தாவேஜியை மகாநாடு மிகக் கவனமாக ஆராய வேண்டும். முக்கிய படிப்பினைகள் அதில் அடங்கியுள்ளன. இயக்கத்தின் அமலை அபிவிருத்திக் கமிஷனர்கள் மதிப்பிடும் முறை மெச்சத் தகுந்தது என்பதை நான் அறிவேன். அவர்களுக்கு மெத்தனமோ, வீண் நம்பிக்கையோ இல்லை. ஒவ்வொரு

---

* 1955, மே மாதம் சிம்லாவில் அபிவிருத்திக் கமிஷனர்களின் 4-வது மகாநாட்டில் பேசியது.

TAMIL NADU ARCHIVES 9 DEC MADRAS

வரும் விருப்பு வெறுப்பின்றியே ஆராய்கிறார்; குறைகள் இருந்தால் ஒப்புக் கொண்டு அவற்றை நிவர்த்திக்கத் தயாராய் இருக்கிறார். உயிர்த் துடிப்புள்ள இயக்கமே தேசிய விஸ்தரிப்பு சர்வீஸ். இது சம்பந்தமாக ஒவ்வொருவரும் இறங்கு மனதுடன் இருக்க வேண்டும். பலன்களை இடைவிடாமல் எடைபோட வேண்டும்; அனுபவ வாயிலாகப் பரிகாரங்கள் செய்ய வேண்டும்.

கிராமங்களில் எழுச்சியையும், சமூக மாறுதல்களையும் ஏற்படுத்தி, வளமான பூரண வாழ்வு மலரச் செய்வதுதான் தேசிய விஸ்தரிப்பு-சமுதாயத் திட்ட இயக்கத்தின் நோக்கம் என்பதை மீண்டும் நினைவூட்டுகிறேன். எந்த அளவுக்குச் சமூக மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பொறுத்தே இந்த இயக்கத்தின் வெற்றியை மதிப்பிட வேண்டும். பத்தாண்டுக் காலத்தில் கிராமப் பொருளாதாரத் துறையின் தேசிய வருமானத்தை இரட்டிக்க வேண்டும். இக்குறிக்கோளை நாட்டினர் முன் திட்டக் கமிஷன் சமர்ப்பித்திருக்கிறது. கிராம மக்களின் வாழ்க்கைத் தரம் படுபாதாளத்தில் இருப்பதால் இந்தக் குறிக்கோளை அடைவது அவசியமே. தேச ஜனத்தொகையில் சுமார் 80 சதவிகிதத்தினர் கிராமவாசிகள். ஆனால் தேசிய வருமானத்தில் 50 சதவிகிதத்தையே அவர்கள் உற்பத்தி செய்கிறார்கள். தவிர, வேறு பல வேலைக்கிரமங்களை நிறைவேற்ற நாடு உறுதி பூண்டிருக்கிறது; கிராமங்களில் மேற்சொன்ன அளவு முன்னேற்றம் (தேசிய வருமானத்தை இரட்டிப்பது) கைகூடினால்தான் அந்த வேலைக்கிரமங்களை நிறைவேற்ற முடியும். சமுதாயத் திட்ட-தேசிய விஸ்தரிப்பு இயக்கத்தின் குறியளவுகளை நிர்ணயிக்கும் போது இந்தக் குறிக்கோளை நினைவில் கொள்ள வேண்டும்.

பிரதானமாக, மக்களின் இயக்கமே தேசிய விஸ்தரிப்பு இயக்கம். அரசாங்கத் திட்டங்களின் கோவை என்ற நிலைக்கு அந்த இயக்கம் இறங்கி விடக்கூடாது. தங்கள் நிலையைத் தாங்களே உயர்த்திக் கொள்ள முயலும் மக்களின் இயக்கமாக, விறுவிறுப்பான இயக்கமாக அது நடந்து வரவேண்டும். உத்தியோகஸ்தர்கள் செய்ய வேண்டியது வருமாறு: மக்களுக்கு வழிகாட்டுவது, உற்பத்தியை உயர்த்துவதற்கான தொழில் நுணுக்க விஷயங்கள் குறித்தும் மற்ற நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனை கூறுதல்; வேலைக்கிரமங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய நிதி வசதி, பண்ட சப்ளை,

சர்வீஸ்கள் ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்தல். எல்லா விஷயங்கள் குறித்தும் வெகுஜனங்களைப் பரவலாகக் கலந்தாலோசித்து, அவர் களது உண்மையான சிரத்தையை உசுப்பி விடவேண்டும்.

முதலாவதாக, இயக்கத்தின் உத்தியோகப் பிரிவை எடுத்துக் கொள்வோம். இது சம்பந்தமாகச் சில முக்கிய பிரச்னைகள் எழு கின்றன: நிர்வாக ஸ்தாபனங்களை ஏற்படுத்துவது முதலாவது பிரச்னை. ஜமீன்தாரி போன்ற முறைகள் அமலில் இருந்த வங் காளம், பீஹார் முதலிய ராஜ்யங்களில் ரெவின்யூ நிர்வாக அமைப்பு முழுவதையுமே அடியில் தொடங்கி அமைக்க வேண்டியிருக்கிறது. நிர்வாக அமைப்புகளை ஏற்படுத்தும்போது ரெவின்யூ சிப்பந்தி வர்க் கங்களுக்கும் அபிவிருத்திச் சிப்பந்தி வர்க்கங்களுக்கும் இடையே பூரண பிணைப்பு இருக்குமாறு கவனித்துக் கொள்ள வேண்டும். தேசிய விஸ்தரிப்பு சர்வீஸ், சமுதாயத் திட்டம் ஆகியவை அமல் நடக்கும் பிரதேசங்களில் இவ்விஷயத்தை விசேஷமாகக் கவனிக்க வேண்டும்; மற்றப் பிரதேசங்களிலும் கூட இது முக்கியமானது தான்.

## கிராமம், வட்டம், வட்டாரம்

இந்தியா முழுவதிலும் கிராமங்களின் எல்லைகளை மறு பரிசீலனை செய்வது அவசியம். விறுவிறுப்பான பஞ்சாயத்துக்களை அல்லது கிராமக் கவுன்சில்களைக் கொண்டவையும், வேலை திறமையாக நடப் பதற்கு ஏற்றவையுமான கிராம யூனிட்டுகளை (அமைப்புகளை) ஏற் படுத்த வேண்டும். உதாரணமாக, தலா 500 அல்லது அதற்குக் குறைவான ஜனத்தொகையைக் கொண்ட கிராமங்கள் 3,80,020க்கு மேல் இந்தியாவில் உள்ளன. மொத்தக் கிராம ஜனத்தொகையில் சுமார் 27 சதவிகிதத்தினர் (780 லட்சம் பேர்) இத்தகைய கிராமங் களில் வசிக்கிறார்கள். இவை தவிர, 500 முதல் 1,000 வரை ஜனத் தொகை கொண்ட 1,04,268 கிராமங்கள் இருக்கின்றன. சுமார் 730 லட்சம் ஜனங்கள் (மொத்த ஜனத்தொகையில் சுமார் 25 சதவிகிதத் தினர்) இத்தகைய கிராமங்களில் வாழ்கிறார்கள். இவ்விதம், மொத்தக் கிராமாந்தர ஜனத்தொகையில் 52 சதவிகிதத்தினர் தலா ஆயிரத் துக்குக் குறைவான ஜனத்தொகை உள்ள கிராமங்களில் வசிக்கிறார் கள். இந்த கிராமங்களில் சில, குறைவான ஜன நெருக்கம் உள்ள

மலைப் பிராந்தியங்களில் இருக்கின்றன; பல கிராமங்கள் சம வெளி களில் உள்ளன. குறைந்த பட்சம் 1,000 ஜனங்களைக் கொண்ட 'யூனிட்டு'களாக இந்தக் கிராமங்களை இணைப்பது பற்றிப் பரிசீலிக்க வேண்டும். உத்தரப் பிரதேசத்திலும் வேறு சில ராஜ்யங்களிலும் இது சம்பந்தமாக 'சர்வே' நடத்தப்படுகிறது.

கிராமத்துக்கு அடுத்தபடியாக உள்ள 'யூனிட்டு' (பல கிராமங் களின் தொகுதி) சம்பந்தப்பட்டவரை கிராம நிலை ஊழியருக்கு முக்கி யத்துவம் உண்டு. நிர்வாக அமைப்பின் அச்சாணி அவர். ஆகவே கிராம நிலை ஊழியர்களை மிகக் கவனமாகத் தெரிந்தெடுக்கவும், ஒவ் வொரு ஊழியருக்கும் குறைந்த பட்சப் பயிற்சியாவது அளிப்பதற் கும் ஏற்பாடு செய்யவேண்டும். அதோடு, நன்றாகப் பணிபுரியும் கிராம நிலை ஊழியருக்கு நல்ல சம்மானம் கிடைக்கவேண்டும். இந்தத் தேவைகள் போதிய அளவில் கவனிக்கப்படவில்லை என்று தோன்றுகிறது. பொறுப்பான அலுவல்களை நிறைவேற்றுவதற்குப் போதுமான தகுதி பெறாத கிராமநிலை ஊழியர்களை நியமிப்பதைவிட ஆபத்தான காரியம் வேறு இல்லை.

அரை குறைப் பயிற்சிபெற்ற கிராம நிலை ஊழியர்களை நியமிப் பதைவிட இயக்கம் மெதுவாகப் பரவுவதையே நான் சிலாகிக்கிறேன். சிப்பந்திகள் பயிற்சிப் பிரச்னை முழுவதையும் ஆராய்வதற்கு உயர் தரக் கமிட்டி ஒன்றை நியமிக்குமாறு 'அமல் மதிப்பீடு யாதாஸ்து' யோசனை கூறியிருக்கிறது. இதை இந்த மகாநாடு பரிசீலிக்கவேண் டும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு வேண்டிய கிராம நிலை ஊழியர்களுக்குப் பயிற்சி நிலையங்களை ஏற்படுத்த ராஜ்ய சர்க் கார்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. இவை கூடிய சீக்கிரம் ஏற்படுத்தப்படும் என்று நம்புகிறேன். விஸ்தரிப்புப் பயிற்சி நிலையங்களுக்கும் அடிப்படைப் பயிற்சி நிலையங்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தி, அவற்றைக் கூடிய விரைவில் இணைக்கவேண்டும்.

கிராம நிலை ஊழியருக்கு அடுத்தபடியாக வட்டார அபிவிருத்தி அதிகாரி மிக முக்கியமான பொறுப்பு வகிக்கிறார். இவர் வட்டார நிலையில் பணி புரிகிறார். இவரது பயிற்சிக்கும் சம முக்கியத்துவம் உண்டு. சப் டிவிஷன், ஜில்லா நிலைகள் சம்பந்தப்பட்டவரை அலு வல்கள் இணைப்பாக நடக்க வழி செய்வதுதான் முக்கிய பிரச்னை.

இது சம்பந்தமாகவும் 'அமல் மதிப்பீடு யாதாஸ்து' பிரஸ்தாபித்திருக்கிறது.

## வேலை யிணைப்பு

வேலையிணைப்புப் பிரச்னையை விசேஷமாகக் கவனிக்கவேண்டும். இதன் அவசியம் எல்லாப் பகுதிகளிலும் உணரப்படவில்லை. சப் டிவிஷன், ஜில்லா அதிகாரிகள் ஒரே நோக்குடன், ஒரே கோஷ்டியாக வேலை செய்யவேண்டும். அபிவிருத்தி வட்டாரங்களுக்கு மாத்திரம் அன்றி எல்லாப் பிரதேசங்களுக்கும் இது பொருந்தும். அரசாங்கத் திட்டங்கள் மாத்திரம் அன்றி, ஸ்தல ஸ்தாபனங்கள் போன்றவைகளின் அபிவிருத்தி வேலைகளும் இதேபோல் இணைப்பாக நடைபெறவேண்டும். இது சம்பந்தமாகத் தங்கள் ராஜ்ய நிலைமையை அபிவிருத்திக் கமிஷனர்கள் ஆராய்ந்து, பூரண இணைப்பு ஏற்படுத்தும் யோசனைகளைத் தங்கள் சர்க்கார்களிடம் தெரிவிக்கவேண்டும். தே. வி. சர்வீஸ்-சமுதாயத் திட்டப் பகுதிகளில் மாத்திரம் அன்றி, மற்றப் பகுதிகளிலும் இத்தகைய இணைப்பு ஏற்படவேண்டும்.

வேலை யிணைப்பு சம்பந்தப்பட்டவரை, விஸ்தரிப்பு இயக்கத்தின் நான்கு கட்டங்களை இங்கு விளக்க விரும்புகிறேன். (இப்போது இவை இரண்டு கட்டங்களாக மாற்றப்பட்டுள்ளன—மொ.ர்.) :—

(1) விஸ்தரிப்புக்கு முந்திய கட்டம்: இந்தக் கட்டத்தில் ஸ்தல ஸ்தாபன வேலைக்கிரமங்கள் உள்பட ஸ்தல அபிவிருத்தி வேலைகளை நிறைவேற்றவேண்டும். இதன் மூலம் தேசிய விஸ்தரிப்பு சர்வீஸுக்கு மக்களைப் பண்படுத்தவேண்டும். ஜனங்களைக் கலந்தாலோசித்தே இந்த வேலைக்கிரமங்களை வகுக்கவேண்டும். இவற்றைத் தமது சொந்த வேலைக்கிரமங்கள் என்று மக்கள் கருதி, உழைப்பு அல்லது பணம் அல்லது இரண்டும் கொடுத்து உதவவேண்டும்.

(2) விஸ்தரிப்புக் கட்டம்: இந்தக் கட்டத்தில், அந்தப் பிரதேசத்தில் தேசிய விஸ்தரிப்பு சர்வீஸ் நிரந்தர ஏற்பாடாக அமலுக்கு வருகிறது.

(3) தீவிர கட்டம்: சமுதாயத் தொகுதி வேலைக்கிரமம் (Community project programme) என்று அழைக்கப்படும் தீவிர அபிவிருத்தி வேலை இந்தக் கட்டத்தில் அமலுக்கு வருகிறது. மூன்று அல்லது நான்கு வருஷக் கட்டம் இது.

(4) தீவிரத்துக்குப் பிந்திய கட்டம்: குறிப்பிட்ட கால தீவிர அபிவிருத்திக்குப் பிறகு அந்தப் பிரதேசம் மறுபடியும் தேசிய விஸ்தரிப்பு சர்வீஸ் கட்டத்துக்குத் திரும்புகிறது.

ஒன்றோடொன்று இணைப்புள்ள கட்டங்கள் இவை. இதை உணர்ந்து, கிராமங்களில் ஆரம்ப முதலே இணைப்பாக வேலைகளை நடத்தவேண்டும்.

## மக்கள் பங்கு

இந்த இயக்கத்தின் உத்தியோக சார்பற்ற பிரிவு சம்பந்தமாக அமல் மதிப்பீடு யாதாஸ்து' சில அரிய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறது. முதலாவதாகக் கிராமக் கவுன்சில். சில ராஜ்யங்களில், சட்ட பூர்வமான பஞ்சாயத்துக்கள் இருக்கும் கிராமங்களில் கூட தற்காலிகக் கிராம சபைகள் வேறு அமைக்கப்பட்டுள்ளன. இது விரும்பத்தக்கதுதானா? திறமை வாய்ந்த கிராம அபிவிருத்திக் கவுன்சில்களாக விளங்கும் விதத்தில் சட்டபூர்வமான பஞ்சாயத்துகளைப் பலப்படுத்தவேண்டும். இதற்கான ஏற்பாடுகளை இம் மகாநாடு பரிசீலிக்கவேண்டும். கிராமத்துக்கு மேலே உள்ள நிலைகளிலும், உத்தியோக சார்பற்ற ஸ்தாபனங்கள் இயங்கும் விதத்தை மறு பரிசீலனை செய்யவேண்டும். அவற்றுக்கும் உத்தியோக ஸ்தாபனங்களுக்கும் இடையே நெருங்கிய ஒத்துழைப்பு ஏற்படுத்தவேண்டும். மக்களை உர்சாகப்படுத்தி, சமூக மாறுதலை உண்டாக்குவதில் உத்தியோக சார்பற்ற ஸ்தாபனங்களுக்கு மிக முக்கியமான பங்கு உண்டு. இத்தகைய உற்சாகமும் மாறுதலும்தான் முன்னேற்றத்தின் மூலவேர்.

சமுதாயத் திட்டப் பிரதேசங்களில், அபிவிருத்தி வேலைகளில் மக்களின் பங்கு சம்பந்தமான புள்ளிவிவரம் வருமாறு:

| | சர்க்கார் செலவு | | மக்கள் பங்கு | |
|---|---|---|---|---|
| | ரூ. மதிப்பு லட்சங்கள் | விகிதாச்சாரக் குறியளவில் சதவிகிதம் | ரூ. மதிப்பு லட்சங்கள் | விகிதாச்சாரக் குறியளவில் சதவிகிதம் |
| 1952–53 சமுதாயத் திட்டத் தொகுதிகள், வட்டாரங்கள் (1952, அக்டோபர் முதல் 54 டிசம்பர் வரை) | 1,102·28 | 45 | 477·08 | 41 |
| 1953–54 சமுதாய அபிவிருத்தி வட்டாரங்கள் (1953 அக்டோ. முதல் 54 டிசம்பர் வரை) | 100·30 | 30 | 69·44 | 68 |
| 1953–54 தே. வி. ச. வட்டாரங்கள் ('53 அக். முதல் '54 டிச. வரை) | 186·02 | 39 | 271·54 | 150 |
| | 1,388·97 | 43 | 818·06 | 56 |

1952-53-ல் சமுதாயத் தொகுதிகளில் மக்களின் பங்கானது அரசாங்கச் செலவில் 41 சதவிகிதம்; 1953-54-ல் சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களில் 68 சதவிகிதம்; 1953-54-ல் தே. வி. ச. வட்டாரங்களில் 150 சதவிகிதம். மேலே உள்ள அட்டவணையிலிருந்து இது புலனாகிறது. அரசாங்கச் செலவை நீக்கிப் பார்த்தால் இந்தப் பிரதேசங்களில் மக்களின் பங்கு, ஆயிரம் பேருக்கு இவ்வளவு என்ற கணக்கில், வருமாறு;

| | ரூபாய் |
|---|---|
| 1952-53 சமுதாயத் தொகுதிகள்/வட்டாரங்கள் (7 கால்-வருஷங்களில் ஐந்தின் சராசரி) | 1,581 |
| 1953–54 சமுதாய அபிவிருத்தி வட்டாரங்கள் (5 கால்—வருஷங்கள்) | 1,580 |
| 1953–54 தே. வி. ச. வட்டாரங்கள் (5 கால்—வருஷங்கள்) | 1,378 |

சமுதாயத் தொகுதிகளில் தே. வி. ச. பிரதேசங்களை விடக் கடன் வசதிக்கும் அபிவிருத்திச் செலவுகளுக்கும் அதிகப்படி நிதி ஒதுக்கியும்கூட, தே. வி. ச. பிரதேசங்களுக்குச் சமமாகவே அவற்றில் (சமுதாயத் தொகுதிகளில்) மக்களின் பங்கு அமைந்திருக்கிறது. பரிசீலனைக்கு உரிய விஷயம் இது. சமுதாயத் தொகுதிகளில் தீவிர அபிவிருத்தி வேலைகள் நடப்பதால் அங்கு மக்களின் பங்கு தே. வி. ச. பகுதிகளைவிட மிக அதிகமாக இருக்கவேண்டும். ஒதுக்கப்பட்ட நிதிக்குச் செலவு காட்டுவதுதான் முக்கியம் என்று சமுதாயத் தொகுதிகளில் கருதப்படுவதாக 'அமல் மதிப்பீடு யாதாஸ்து' குறிப்பிடுகிறது. வேலைகளை இவ்வாறு அளவிட்டால் அதிகமான பலன் காட்டுவதற்காகக் கண்டிராக்டர்கள் மூலமும் மற்றவர்கள் மூலமும் அதிகாரிகள் அதிகமாகப் பணம் செலவிட நேரிடுகிறது. இயக்கத்தின் தரத்தைக் கெடுக்கும் போக்கு இது.

## நில இணைப்பு, பாசனம்

சமுதாயத் திட்டத் தொகுதிகளின் தீவிர அபிவிருத்தி வேலை பற்றிய நமது கருத்துக்களை மாற்றிக் கொள்ளவேண்டிய காலம் வந்துவிட்டது. அது நிரந்தர அபிவிருத்தி வேலையாக இருக்கவேண்டும். சமுதாயத் திட்ட கட்டத்தைக் கடந்துவிட்ட தே. வி. ச. வட்டாரத்தில் கிராமப் பொருளாதாரம் நிரந்தரமாய் அபிவிருத்தியடைந்திருப்பதற்குக் கண்கூடான அத்தாட்சி தென்படவேண்டும். இல்லாவிடில் சமுதாயத் திட்ட கட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் கைகூடமாட்டா. சமுதாயத் திட்டப் பிரதேசங்களில் வேலை முறை சம்பந்தமாகப் பின்கண்ட யோசனைகளைக் கூற விரும்புகிறேன் ;

(1) துண்டு நிலவுடமைகளை இணைப்பது முதல் வேலை. இதற்காக வட்டாரம் முழுவதையும் யூனிட்டாக (ஆதார அமைப்பாக) கொள்ளவேண்டும். தனிப்பட்ட கிராமங்கள் அல்லது கிராமங்களின் கோஷ்டிகளைக் கிளை யூனிட்டுகளாகக் கொள்ளவேண்டும்; வட்டாரம் முழுவதும் சம்பந்தப்பட்டவரை, ரஸ்தா அமைப்பை முதலில் ஒழுங்குபடுத்தவேண்டும். அதாவது, பிரதான ரஸ்தாக்கள் அல்லது முக்கிய ரயில்வே ஸ்டேஷன்களுடன் அந்தப் பிரதேசத்தை இணைக்கப் புது ரஸ்தாக்கள் போடவேண்டும். இந்தத் தொடர்பு ரஸ்தாக்களோடு ஒவ்வொரு கிராமத்தையும் இணைக்கும் சிறு ரஸ்தாக்களையும்

அமைக்கவேண்டும். இந்த இருவகை ரஸ்தாக்களுக்கும் தேவைப் படும் நிலங்களைக் கிராமங்களே கொடுக்கவேண்டும். துண்டு நில இணைப்பு வேலையின் ஒரு பகுதியாகவே இதையும் கருதவேண்டும். இதேபோல் கிராமப் பள்ளிகள், நடுத்தரப் பள்ளிகள், உயர்தரப் பள்ளிகள், வைத்தியசாலைகள் முதலியவற்றுக்கு—ஏற்கனவே உள்ளவற்றுக்கும் வருங்காலத் தேவைகளுக்கும்—வேண்டிய நிலங்களையும் கிராமங்களே ஒதுக்கி வைக்கவேண்டும். இவ்வாறு நில இணைப்பு வேலையையும், ரஸ்தா அமைத்தல், ஸ்தாபனங்கள் நிறுவுதல் என்ற வேலைகளையும் பிணைப்பதில் ஒரு நன்மை உண்டு. அதாவது, ஒவ்வொரு நபரிடமும் உள்ள மொத்த நிலத்துக்கு ஏற்ற விகிதத்தில்தான், அவரது சொத்துக்கு ஏற்ற விகிதத்தில்தான், இக் காரியங்களுக்கு அவர் நிலம் கொடுக்க வேண்டியிருக்கும். துண்டு நில இணைப்பு முயற்சி பல ராஜ்யங்களில் நடந்துவருவது எனக்குத் தெரியும். ஆனால் மேற்கூறிய அடிப்படையில் இவ் வேலை நடக்கவேண்டும் என்பது எனது யோசனை. இவ்வாறு திட்ட பூர்வமான வேலை சில ராஜ்யங்களில் வெற்றிகரமாக நடந்து வருவதைப் பார்த்திருக்கிறேன். எல்லா இடங்களிலும் இதே பாணியைக் கையாளவேண்டும்.

(2) வறண்ட பிரதேசங்களில் நீர்ப்பாசன வசதியை அபிவிருத்தி செய்யவும், (மண் வளப் பாதுகாப்புக்காக) நிலங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்டவும் முறையான ஏற்பாடு செய்ய வேண்டும். இப்பணிக்கு உயர்ந்த பட்சப் பொதுஜன ஒத்துழைப்பைத் திரட்ட வேண்டும், இந்த வேலையைத் தொடங்கு முன் கவனமாக 'சர்வே' நடத்த வேண்டும். பம்பாய் ராஜ்யம், ஷோலாப்பூர் பிரதேசத்தில் இது சம்பந்தமாக நடந்திருக்கும் வேலையும், அதற்கு ஆதாரமாக உள்ள நிதி தொழில் நுணுக்க ஏற்பாடுகளும் குறிப்பிடத் தக்கவை. ஏற்கனவே பாசன வசதியுள்ள பிரதேசங்களில், நீர்ப்பாசனத்துக்காக ஒதுக்கியுள்ள நிதியைக் கிராமத்தில் மின்சாரம் போடுவதற்குப் பயன்படுத்தலாம். கிணறு தோண்டுவதற்கான கூட்டுறவு சங்கங்களை அமைப்பதுவும் மிக முக்கியமானது. குறிப்பாக, நீர் இறைப்புக்கு மின்சார வசதி இருக்கும் பிரதேசங்களில் இச் சங்கங்களை நிறுவுவது அவசியம்.

(3) ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு வேலைத் திட்டம் இருக்க வேண்டும். அதை நிறைவேற்ற அக்குடும்பத்துக்கு உதவியளிக்க வேண்டும். பிழைப்பு வசதியையும், பண்ட உற்பத்தியையும் அதி

கரிப்பதுதான் இதன் பிரதான நோக்கம். குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள்சம்பந்தமாகக் கவனமான சர்வே நடத்த வேண்டும். ஒவ்வொரு குடும்பமும் ஏதாவது துணைத் தொழிலில் ஈடுபடுவதற்கு வசதி செய்ய வேண்டும். நகரங்களை அடுத்துள்ள வட்டாரங்களில் காய் கறிகள், பால், முட்டை, கோழிகள் முதலியவற்றை உற்பத்தி செய்யவும், விவசாயப் பண்டங்களைப் பக்குவப்படுத்தவும் (Processing)கவனமாக ஏற்பாடு செய்ய வேண்டும். அண்டை நகரங்களில் அட்டியின்றி விலைப்போகக் கூடிய பண்டங்கள் இவை.

## கூட்டுறவு முறை

(4) கூட்டுறவு சங்கங்களை அமைப்பது நான்காவது யோசனை. தற்போது கூட்டுறவு இயக்கம் அதிகமாகப் பரவியுள்ள பிரதேசங்களில்கூட 30 முதல் 40 சதவிகிதக் குடும்பங்கள்தாம் அந்த இயக்கத்தின் பலனை அனுபவிக்கின்றன. இக்குடும்பங்கள்தாம் கூட்டுறவு சங்க நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கின்றன. ஒவ்வொரு குடும்பத்தையும் 'பெறுமானம்' (கடன் பெறும் தகுதி) உள்ளதாக ஆக்குவதே ஆரம்பக் கூட்டுறவு சங்கத்தின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். இச் சங்கம் கிராமக் கவுன்சிலுடன் நெருக்கமாக ஒத்துழைக்க வேண்டும். கடன் பெறுமானம் சம்பந்தமான கூட்டுறவு இயக்க நிபந்தனைகள் நீடித்திருக்கலாம். ஆனால் இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய முடியாத குடும்பங்களும் நல்ல விதைகள், ரசாயன உரங்கள் முதலிய பண்டக் கடன்களைப் பெறுவதற்கு வசதியிருக்க வேண்டும். இதன் மூலம் அக்குடும்பங்களின் நிதி நிலைமையை உயர்த்த வேண்டும். இவ்விதம், இரண்டு முதல் ஐந்து ஆண்டுகளுக்குள், கூட்டுறவு சங்கங்களில் சுயபலத்துடன் அங்கம் வகிக்கும் தகுதியை அக் குடும்பங்கள் பெற்றுவிடும்.

கூட்டுறவு இயக்கம் ஆரம்பமான போது, "கிராமவாசியின் நேர்மையே மூலதனம்" என்பது அதன் நோக்கமாக இருந்தது. வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கக் கூடியவர்கள், ஆனால் சாதாரண பாங்கி கேட்கிறபடி ஜாமீன் காட்ட முடியாதவர்கள் என்ற நிலையில் உள்ளவர்களுக்கு உதவி புரியவே கூட்டுறவு சங்கம் இருக்கிறது. இவர்களுக்குப் பண்ட ரூபமான கடன்களைக் கிராமக் கவுன்சில் கொடுக்க வேண்டும். கோரிய காரியங்களுக்கு இக் கடன்கள்

பயன்படுத்தப்படுகின்றனவா என்பதை அது கண்காணிக்க வேண்டும். கடன்களேயும் வட்டியையும், கூட்டுறவு சங்க உறுப்பினராவதற்கு வேண்டிய பங்குப் பணத்தில் ஒரு பகுதியையும், அறுவடை காலத்தில் அந்தக் கவுன்சில் வசூலிக்க வேண்டும். எளிய மக்கள் தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ள இதர வழிகளிலும் கவுன்சில் உதவ வேண்டும். இவ்வாறு செய்தால்தான், தற்போது கூட்டுறவு இயக்க வசதிகளைப் பயன்படுத்த இயலாமல் இருக்கும் 60 அல்லது 70 சதவிகிதக் கிராமாந்தரக் குடும்பங்களுக்குத் தேசிய விஸ்தரிப்பு-சமுதாயத் திட்ட இயக்கம் நன்மை புரிய முடியும்.

கிராமக் கூட்டுறவு சங்கம் எவ்வளவு பெரியதாக இருந்தால் நல்லது என்பது பற்றி வாதப் பிரதிவாதங்கள் நடக்கின்றன. இது சம்பந்தமாகக் கண்டிப்பான விதி எதையும் நிர்ணயிக்க முடியாது. ஸ்தல நிலைமைகளுக்கு ஏற்ப கிராமச் சங்கத்தின் அளவு மாறுபடும். அகில இந்தியக் கிராமக் கடன் சர்வேக் குழுவின் சிபாரிசு வருமாறு: ஆரம்ப சங்கத்தின் அளவை நிர்ணயிக்கும்போது மூன்று விஷயங்களை நினைவில் கொள்ள வேண்டும்: (அ) சுயமாக இயங்கும் அளவுக்குப் பெரிய யூனிட்டாகவும், திறமையான நிர்வாகக் குழுவை ஏற்படுத்திக் கொள்ளும் சக்தி வாய்ந்ததாகவும் அது இருக்க வேண்டும். (ஆ) தனிப்பட்ட குடும்பங்களுடன் தொடர்பு கொண்டு, மேலே நான் குறிப்பிட்டவாறு, அக் குடும்பங்களின் நிலையை உயர்த்தக் கூடிய சக்தி அந்த நிர்வாகக் குழுவுக்கு இருக்க வேண்டும். (இ) சமுதாயத் திட்டப் பிரதேசங்களில் துண்டு நிலங்களை இணைக்கும் வேலை, மற்ற வேலைக்கிரமங்கள் ஆகியவற்றுக்கு உதவியளிக்கக் கூடியதாக அச் சங்கம் இருக்க வேண்டும்.

(5) சமுதாயத் திட்டப் பிரதேசங்களில் கிராமம் அல்லது சமுதாயத்துக்கு நன்மை தரும் வேலைகளுக்கு மக்களிடமிருந்து இப்போதைவிட அதிக உழைப்பு, நிதி அல்லது இரண்டும் கிடைக்க வேண்டும்.

(6) மாதர், இளைஞர் இயக்கங்கள் இப்போதை விட அதிக விறுவிறுப்புப் பெற வேண்டும்.

இம்மாதிரி வேலைக்கிரமங்களைச் சமுதாயத் திட்டப் பிரதேசங்களில் நிறைவேற்ற வேண்டும் என்பது என் திடமான கருத்து. தே. வி. ச. வட்டாரத்தில் கிராமங்களைச் சேர்க்கும்போதே இவ்வேலைக்

கிரமங்களுக்குப் பூர்வாங்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். துண்டு நில இணைப்பு உள்பட, கூட்டுறவுத் துறையில் கிராம நில ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். பொறுக்கி யெடுத்த சில வட்டாரங்களில் மேற்சொன்ன வேலைக்கிரமங்களை எல்லாம் தீவிரமாக அமல் நடத்தி, அவற்றை உதாரண வட்டாரங்கள் ஆக்க வேண்டும். ஒவ்வொரு அபிவிருத்திக் கமிஷனரும் இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மற்றப் பிரதேசங்களைச் சேர்ந்த ஊழியர்கள் இந்த வட்டாரங்களுக்கு வந்து, சமுதாயத் திட்டத்தின் தீவிர அபிவிருத்தி முறைகள் சம்பந்தமாகப் பயிற்சி பெறலாம்.

மனித இயக்கமே, மக்களின் இயக்கமே, தே. வி. சர்வீஸ் என்பதை மறுபடி வலியுறுத்த விரும்புகிறேன். அதன் தெம்பும் விறுவிறுப்பும் தளரவே கூடாது. பரிசோதனைகள் நடத்தவும், புதிய கருத்துக்களைப் பரீட்சிக்கவும் நாம் அஞ்சக் கூடாது. இந்த இயக்கத்தில் ஆழ்ந்த சிரத்தை கொண்டவன் நான். கிராமப் பிரச்னைகள் அனைத்துக்கும் இதிலிருந்து பரிகாரம் கிடைக்கும் என்று நம்புகிறேன். கிராமாந்தர வருமானத்தை இரட்டிப்பது தேச முன்னேற்றத்துக்கு ஜீவாதாரமானது என்பதை உணர்வது சிரமமல்ல. மேலே நான் குறிப்பிட்ட மாதிரி தீவிர வேலை நடத்தி, கிராமப் பொருளாதாரத்தில் புதிய பிரிவுகளைச் சேர்க்க வேண்டும். இவ்விதம் நிலத்திலிருந்தும் மக்களிடமிருந்தும் உயர்ந்தபட்சப் பலன் எடுக்க வேண்டும். இவ்வாறு செய்தால் கிராமத் துறையில் வருமானம் இரட்டித்துவிடும்.

# 6. நிர்வாக அமைப்பு*

ஆசிய-தூர கிழக்கு நாடுகளுக்கு ஜீவாதாரமானது கிராம அபி விருத்திப் பணி. பொதுவாக இந்நாடுகளின் நிலைமை பலவிதங்களில் ஒரே மாதிரியாக இருக்கிறது. எல்லா நாடுகளிலும் விவசாயத்தில் ஜன நெரிசல் அதிகம். அளவுக்கு அதிகமான பேரை நிலம் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. விவசாயத்தில் லட்சோப லட்சம் பேர் ஈடுபட்டிருப்பது, அத்தொழிலுக்கு அவர்கள் அவசியம் என்பதால் அல்ல. வேறு பிழைப்பு இல்லாமையால்தான் அவர்கள் அதில் ஈடுபட்டிருக்கிறார்கள். துண்டு துணுக்குகளாகச் சிதறிக் கிடக்கும் நிலங்களில் எண்ணற்ற சுவான்தார்களும் சாகுபடியாளரும் விவசாயத் தொழிலாளர்களும் வேலை செய்து வருகின்றனர். பழைய விவசாய முறைகளையே அவர்கள் கையாளுகின்றனர். சொற்ப நிலங்களுக்குத்தான் பாசன வசதி இருக்கிறது. மற்ற நிலங்களில் எல்லாம் விவசாயம் பருவ காலத் தொழில்தான். அதாவது, வருஷத்தில் சில மாதங்களே வேளாண்மை நடக்கிறது. இந்த நிலைமைகள் காரணமாகப் பெருவாரியான நபர்களுக்கு வேலையே இல்லை, அல்லது முழு நேர வேலை இல்லை. அவர்களது வாழ்க்கைத் தரம் மகா மட்டம். நிலத்தை நம்பி வாழும் ஜனங்கள் இவ்வளவு அதிகமாக இல்லாத நாடுகளில் கூட இயற்கை வரையறைகளும், மற்றச் சங்கடங்களும் காணப்படுகின்றன. இவ்வாறு அந்நாடுகளிலும் விவசாயம் கஷ்டமான தொழில்தான்.

ஆகவே, இந்த (ஆசிய, தூர கிழக்கு) நாடுகளில் தீவிர அபிவிருத்தி வேலைகள் நல்ல முறையில் தொடங்கி யிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. சூழ்நிலை பாதகமாக இருந்தும் இவை ஆரம்பமாகி யிருப்பது குறிப்பிடத் தக்கது. இவ்வேலைகளை அமல் நடத்துவ

---

* ஐ. நா. உணவு-விவசாய ஸ்தாபனத்தின், ஆசிய-தூர கிழக்கு நாடுகளுக்கான விவசாய விஸ்தரிப்பு அபிவிருத்திக் கேந்திரத்தை 1955 டிசம்பர் மாதம் போபாலில் ஆரம்பித்து வைத்துப் பேசியது.

தில் நாம் பெற்றுள்ள அனுபவத்தைப் பரஸ்பரம் பரிமாறிக் கொள் வது எல்லா நாட்டினருக்கும் பயன் தரவல்லது என்பதில் சந்தேகம் இல்லை.

'விஸ்தரிப்பு' என்ற கருத்து இந்தியாவுக்குப் புதியது அல்ல. மஹாத்மா காந்தி, கவிஞர் டாகூர் முதலிய தலைவர்களின் ஆதர்சத்தி ஞல் இந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல ஆண்டுகளாக 'விஸ் தரிப்பு' முறை பரீட்சிக்கப்பட்டதுண்டு. 1951-52-ஆம் வருஷங் களில் திட்டக் கமிஷனும் இந்திய சர்க்காரும் இம் முயற்சிகளை ஆராய்ந்தன. உணவு உற்பத்திப் பெருக்க விசாரணைக் கமிட்டியும் கலந்தாலோசிக்கப்பட்டது.

## அடிப்படைக் கருத்துக்கள்

இந்தப் பரிசீலனைகளின் விளைவாகத் தோன்றிய அடிப்படைக் கருத்துக்கள் வருமாறு:—

(1) கிராம வாழ்க்கையின் எல்லா அம்சங்களும் பரஸ்பரத் தொடர்பு உள்ளவை; ஒவ்வொரு அம்சத்தையும் தனித்தனியாகக் கவனித்தால் சாசுவதப் பலன்கள் கிடைக்கமாட்டா. குறிப்பிட்ட பிரச்னைகளுக்கு முதன்மை அளிக்கக்கூடாது என்று இதற்கு அர்த் தம் இல்லை. ஆனல் இப்பிரச்னைகளுக்கு வகுக்கும் திட்டங்கள் விரி வான ஒரு திட்டத்தின் பகுதிகளாக, இணைப்பான அங்கங்களாக இருக்கவேண்டும். உதாரணமாக, திருந்திய செய்முறைகளைக் கையாளத் திட்டமிட்டால் கடன் வசதி (நீண்டகால, நடுத்தர, குறு கிய காலக்கடன்கள்) பற்றிய பிரச்னையையும் சமாளிக்க வேண்டி யிருக்கிறது. அத்துடன் குடிவார உரிமையும் மற்ற உரிமைகளும் பிணைந்திருக்கின்றன. மற்றும், முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடும் நிலப் பிரபுத்துவ முறைகள் வேறு உள்ளன. போதாக் குறைக்கு, பத்தாம் பசலிச் சமூகக் கருத்துக்கள், மற்றக் கருத்துக் கள், வாரிசுரிமை முறைகள் முதலிய தடைகள் இருக்கின்றன. இவ் வாறு பொருளாதார அம்சங்களும் சமூக அம்சங்களும் பின்னிப் பிணைந்துள்ளன. சமூக மாறுதல் இன்றிப் பொருளாதார வளர்ச்சி சாத்தியம் அல்ல.

(2) ஜனநாயக சமுதாயத்தில் மக்களேதாம் சமூக மாறுதலை உருவாக்கவேண்டும். புது வாழ்வு படைத்துக்கொள்ள அவர்களே

முன்வரவேண்டும். புதிய சமுதாய அமைப்பை உருவாக்க முயலும் அவர்களுக்கு (அரசாங்கம்) உதவி அளிக்கவேண்டும்.

(3) கிராம அபிவிருத்தி என்பது வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் பற்றி நிற்கும் நிரந்தரப் பிரச்னை. இப் பணியையே தனது பிரதான அலுவலாக ஒரு க்ஷேமநல அரசாங்கம் கருதவேண்டியிருக்கிறது. இப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு வசதியாக அரசாங்க நிர்வாக ஸ்தாபனம் முழுவதையும் திருத்தி அமைக்கவேண்டும். அத்துடன், உத்தியோக சார்பற்ற சிறந்த தலைவர்களின் ஒத்துழைப்பை ஒவ்வொரு கட்டத்திலும் திரட்டவேண்டும். புது வாழ்வு பெற முயலும் மக்களுக்கு வழிகாட்ட இவர்கள் அவசியம்.

தீவிர கிராமப் பணிக்கு ஒரு ஸ்தாபனம் தேவை என்பதை இக் கருத்துக்கள் எடுத்துக் காட்டின. ஒவ்வொரு விவசாயியுடனும் தொடர்புகொண்டு, கிராம வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் இணைப்பாக மேம்படுத்தும் ஸ்தாபனமாக அது இருக்கவேண்டும். இவ்வாறுதான் தேசிய விஸ்தரிப்பு சர்வீஸ் பிறந்தது. மூன்று ஆண்டுகளுக்குமுன் அது ஆரம்பமாயிற்று. இந்த இயக்கத்தில் இரு கட்டங்கள் உண்டு. முதலில் ஒரு பிரதேசத்தில் தே. வி. சர்வீஸ் அமலுக்கு வருகிறது. நிரந்தர அடிப்படையில் மத்திய அரசாங்க உதவியைப் பெறும் நிரந்தர இயக்கம் இது. இரண்டாவது கட்டத்தில் சமுதாயத் திட்டம் அமலுக்கு வருகிறது. அதாவது வேலைக்கிரமங்களுக்கு மக்கள் அளிக்கும் ஒத்துழைப்பைப் பொறுத்து, அதனால் விளையும் நற்பலன்களைப் பொறுத்து தே. வி. ச. வட்டாரங்கள் சமுதாயத் திட்ட வட்டாரங்களாக மாற்றப்படுகின்றன. சமுதாயத் திட்ட வட்டாரங்களில், சாதாரணமாக மூன்று வருஷ காலத்துக்கு தே. வி. சர்வீஸைவிட அதிக அளவில் அபிவிருத்தி வேலைகள் நடத்தப்படுகின்றன. கிராமப் பிரச்னைகளைச் சமாளிப்பதற்கான சிறந்த, புதிய வழிமுறைகளை உத்தியோக சார்புள்ள ஊழியர்களும் உத்தியோக சார்பற்றவர்களும் இவ் வட்டாரங்களில் கையாண்டு அனுபவம் பெறுகிறார்கள். எல்லா தே. வி. ச. வட்டாரங்களுக்கும் வழிகாட்டியாக இவை அமைகின்றன. இந்த இரண்டாவது கட்டத்துக்குப் பிறகு, இப் பிரதேசங்கள் நிரந்தர அமைப்புக்கு, அதாவது தேசிய விஸ்தரிப்பு சர்வீஸுக்கு, மறுபடி திரும்புகின்றன. இவை இரண்டும் பரஸ்பர இணைப்புள்ள கட்டங்கள்; ஒரே இயக்கத்தின் இரு பகுதிகள்.

சமூக மாறுதலை ஏற்படுத்துவது, புதிய சமூக அமைப்பை உரு வாக்க உதவுவது, கிராமாந்தரக் குடும்பங்களின் மனத் திருஷ்டியை மாற்றுவது ஆகியவைதாம் தேசிய விஸ்தரிப்பு இயக்கத்தின் அடிப் படைக் குறிக்கோள். சுய உதவியையும் கூட்டுறவையும் ஆதார மாகக் கொண்ட வெகுஜன இயக்கம் அது.

## மூன்று கோட்பாடுகள்

மூன்று கோட்பாடுகளைக் கருத்தில் கொண்டு இந்த இயக்கத் தின் நிர்வாக அமைப்பு வகுக்கப்பட்டிருக்கிறது. முதலாவதாக, எல்லாக் கட்டங்களிலும், எல்லா அபிவிருத்தி இலாகாக்களின் அலு வல்கள் இடையேயும் நெருங்கிய ஒத்துழைப்பு இருக்கவேண்டும். இரண்டாவதாக, ஒவ்வொரு கட்டத்திலும் உத்தியோக சார்பற்ற சிறந்த தலைவர்களுடன் உத்தியோக ஸ்தாபனங்கள் சேர்ந்து வேலை செய்யவேண்டும். மூன்றுவதாக, கிராமத்துடன் நேரடித் தொடர்பு கொள்ளும் கட்டத்தில் பல-காரியக் கிராம நிலை ஊழியர் ஒருவர் இருக்கிறார். பயிற்சிபெற்ற இவர் எல்லா அபிவிருத்தி இலாகாக் களுக்கும் பொதுப் பிரதிநிதியாகச் செயல் புரிகிறார். கிராமவாசி களுக்கு நண்பராகவும் வழிகாட்டியாகவும் அவர் விளங்குகிறார்.

நமது சமஷ்டி அரசியல் அமைப்பின் பிரகாரம் கிராம அபி விருத்தி பற்றிய காரியங்கள் அனைத்தும் அநேகமாய் ராஜ்ய சர்க் கார்களின் அதிகாரத்துக்கு உள்பட்டவை. ஆகவே, ராஜ்ய நிர்வாக ஸ்தாபனத்தின் இயல்பான அங்கமாக தேசிய விஸ்தரிப்பு ஸ்தாபனம் இருக்கவேண்டும். ஒவ்வொரு ராஜ்யமும் பல ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. எல்லாக் காரியங்களுக்கும் ஜில்லாவே ஆதார நிர்வாக 'யூனிட்டாக' இருக்கிறது. ஜில்லா சம்பந்தமான எல்லா நடவடிக்கைகளையும் இணைக்கும் விதத்தில் ஜில்லாத் தலைமை யதிகாரி செயல் புரிகிறார். பல தசாப்தங்களாக அவர் இந்த அந் தஸ்தை வகித்து வருகிறார். புதிய திட்டத்திலும் அவருக்கு இதே அந்தஸ்து உண்டு. ஒவ்வொரு ஜில்லாவும் பல தொகுதிகளாக (Projects) பிரிக்கப்படுகிறது. ஒவ்வொரு தொகுதியிலும் மூன்று அபிவிருத்தி வட்டாரங்கள் (Blocks) உள்ளன. ஒவ்வொரு வட்டா ரத்திலும் சுமார் 66,000 மக்களைக்கொண்ட சுமார் 100 கிராமங்கள் அடங்கியிருக்கின்றன. கூடுமானவரை, ஏற்கனவே உள்ள பிரதேச

எல்லைகளை அனுசரித்து வட்டாரங்களும் தொகுதிகளும் அமைக்கப் படுகின்றன.

இந்தப் புதிய அமைப்பைப் புகுத்துவதற்காக ராஜ்ய சர்க்கார் களுக்கு மத்திய சர்க்கார் மானிய உதவி அளிக்கிறது. விஸ்தரிப்புச் சிப்பந்திகளை நியமிப்பது சம்பந்தமாக ஏற்படும் அதிகப்படிச் செல வில் பாதி இவ்வாறு கொடுக்கப்படுகிறது. அதோடு, முதல் ஐந்தாண் டுத் திட்ட இறுதிக்குள் வருஷத்துக்கு ரூ. 5 கோடி குறுகிய காலக் கடன் கிடைப்பதற்கும் மத்திய சர்க்கார் ஏற்பாடு செய்கிறது. கூட்டுறவு இயக்கத்தின் மூலமும் வேறு ஸ்தாபனங்கள் மூலமும் இந்த உதவி அளிக்கப்படுகிறது.

கிராமங்களின் அபிவிருத்திக்கான நிதி முழுதையும் தே. வி. சர்வீஸ் ஸ்தாபனத்தின் மூலமே செலவிடவேண்டும் என்பது தெளிவு. ஐந்தாண்டுத் திட்ட வேலைகளுக்காகப் பட்ஜெட்டுகளில் ஒதுக்கப் படும் நிதிகளை இவ்வாறு செலவிடவேண்டும். ஆனல், ஆரம்ப கட்டத்தில் தே. வி. ச. இயக்கத்துக்கு விசேஷ நிதி வேறு தேவைப் படும். அதனுல் தே. வி. ச. அல்லது சமுதாயத் திட்ட வட்டாரம் ஒவ்வொன்றுக்கும் மூன்று வருஷ காலத்துக்குப் பிரத்தியேக நிதி உதவி அளிக்கப்படுகிறது. கிராமத் திட்டங்களுக்காகப் பட்ஜெட்டு களில் ஒதுக்கும் பணத்துக்கு அதிகப்படியானது இந்த உதவி.

தே. வி. ச., சமுதாயத் திட்ட வட்டாரம் ஒவ்வொன்றுக்கும் பிரத்தி யேகப் பட்ஜெட் மானியம் கிடைக்கிறது. கிராம அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதிகள் இதில் சேரவில்லை. தே. வி. ச. வட்டாரத்துக்கு, மூன்று ஆண்டு காலத்துக்கு ஆரம்ப உதவியாக ரூ. 7 லட்சம் ஒதுக்கப்படுகிறது. குறுகிய காலக்கடன் வசதிக்கான ரூ. 3 லட்சமும் இதில் அடக்கம். சமுதாயத் திட்ட வட்டாரத்துக்கு மூன்ருண்டுகளுக்கு ரூ. 15 லட்சம் ஒதுக்கப்படுகிறது. சிறிய நீர்ப் பாசன வேலைகளுக்கான ரூ. 5 லட்சமும்; சுகாதார யூனிட்டு, சமூகக் கல்வி, ஆதாரக் கல்வி ஆகியவற்றுக்கான நிதியும் இதில் அடக்கம். இந்த இரு வகை வட்டாரங்களிலும் அரசாங்க உதவி தவிர கிராமவாசி களும் உழைப்பு அல்லது பணம் அல்லது இரண்டும் கொடுக் கிருர்கள்.

## இருவகை வேலைகள்

தேசிய விஸ்தரிப்பு, சமுதாயத் திட்டப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் முக்கிய வேலைக்கிரமங்கள் இரு வகைப்படும். (1) கிராமம் முழுவதற்குமான நிரந்தர அல்லது நீண்டகால வேலைக் கிரமம். (2) கிராமத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்துக்குமான வேலைக்கிரமங்கள்—உற்பத்தியையும் வேலை வசதியையும் இவை அதிகரிக்கும்.

துண்டு நில இணைப்பு, நீர்ப்பாசன வசதிகளை அதிகரித்தல், நிலங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்டுதல், நிலச் சீர்திருத்த அமல், விஞ்ஞான விவசாய முறைகளைக் கையாளுதல் முதலியவை முதல் வகையைச் சேர்ந்தவை. பிழைப்பு வசதியையும் பண்ட உற்பத்தியையும் அதிகரிப்பது ஒவ்வொரு குடும்பத்துக்கும் குறிக்கோளாக இருக்கவேண்டும் என்று இரண்டாவது வகை வேலைக்கிரமங்கள் சுட்டிக் காட்டுகின்றன; எல்லா வகைக் கூட்டுறவு நடவடிக்கைகளுக்கும் இவை ஊக்கமளிக்கின்றன. வேலைக்கிரமங்களை வகுக்கும் முறையைப் பொதுப்படையாக மேலே குறிப்பிட்டேன். இதில் ஒரு விஷயம் ஜீவாதாரமானது. அதாவது, கிராமத்தில் உள்ள எல்லாக் குடும்பங்களுக்கும் இந்த வேலைக்கிரமங்களால் பலன் கிடைக்க வேண்டும்; ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு அபிவிருத்தித் திட்டம் வகுத்து அதை நிறைவேற்ற உதவி அளிக்கவேண்டும். இவ் விஷயத்தை விசேஷமாகக் கவனிப்பது அவசியம். இந்த இயக்கத்தின் நன்மைகள் சமுதாயத்தின் சில சிறு பிரிவினர்களுக்கு மாத்திரமே கிடைப்பதாகவும் சலுகை குறைந்த பிரிவினர்களுக்கு அவை கிடைப்பதில்லை என்றும் கருதுவதற்கு இடம் கொடுத்தால் இயக்கத்துக்கு அதைவிடப் பெரிய தீமை வேறுகிடையாது. சிறு நிலச்சுவான்கள், சாகுபடியாளர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோர் சலுகை குறைந்த பிரிவினர்கள் ஆவர். பிந்திய பிரிவினர் தங்கள் நிலையை மேன்மேலும் உயர்த்திக்கொள்ள உதவும் விதத்தில் அபிவிருத்தி வேலைகளை வகுத்து நிறைவேற்றவேண்டும். இதன் மூலம் சமூக ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்து, ஒரு மாபெரும் பணியில் ஒற்றுமையாகவும் கூட்டாளி உணர்ச்சியுடனும் மக்கள் ஈடுபட வழி செய்யவேண்டும்.

## வெற்றி தோல்விகள்

இயக்கத்தின் வழிமுறைகளையும் சாதனைகளையும் மதிப்பிடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று உணவு உற்பத்திப் பெருக்கக் கமிட்டி சிபாரிசு செய்தது. அவ்வப்போது இயக்கத்தின் வெற்றியை அளவிடவும், பொருத்தமற்ற வேலைக்கிரமங்களைத் திருத்துவதற்கும் இது அத்தியாவசியமானது. இந்தச் சிபாரிசின்படி 'அமல் மதிப்பீடு ஸ்தாபனம்' ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. திட்டக் கமிஷன் மேற்பார்வையில் இயங்கும் சுயேச்சையான குழு இது. இந்த ஸ்தாபனம் அவ்வப்போது பிரசுரித்துள்ள யாதாஸ்துகளில் தே. வி. ச. அமல் சம்பந்தமான அரிய தகவல்கள் அடங்கியுள்ளன.

இயக்கத்தின் நோக்கங்களையும் நமது குறிக்கோள்களையும் இது வரை விளக்கினேன். குறிக்கோள்களில் ஒரு சிறு பகுதியைக் கூட சாதித்து விட்டதாக நாங்கள் சொல்ல வரவில்லை. பெரும்பாலான இடங்களில் 'நிரந்தர' வேலைக்கிரமம் இப்போதுதான் ஆரம்பமாகி வருகிறது. எனினும் மக்களிடையே எழுச்சி ஏற்பட்டிருக்கிறது. அவர்களது ஒத்துழைப்பு மிகுந்த ஊக்கம் அளிக்கிறது. இது மகிழ்ச்சிக் குரிய விஷயம். பாசன ஏரிகள், வாய்க்கால்கள், ரஸ்தாக்கள், பள்ளிக் கட்டடங்கள் போன்ற கட்டுமான வேலைகளுக்கு மக்கள் மிகுந்த ஆதரவு அளித்துள்ளனர். தே. வி. ச., சமுதாயத் திட்ட வட்டாரங்கள் எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால், மொத்தச் செலவில் பாதிவரைகூட ஊர்க்காரர்கள் நன்கொடையாகக் கொடுத்திருக்கிறார்கள். திருந்திய விவசாய முறைகளை அவர்கள் அட்டியின்றிக் கைக் கொள்கின்றனர். கூட்டுறவு இயக்கமும் ஓரளவு மெதுவாகப் பரவி வருகிறது. ஆனால் குடிசைத் தொழில்களும் சிறு தொழில்களும் கணிசமாக முன்னேறவில்லை. இவை சம்பந்தமாகச் சில பரீட்சார்த்த ஏற்பாடுகளை இப்போது ஆரம்பித்து வருகிறோம். இதன்படி, விசேஷப் பயிற்சிப் பெற்ற சிப்பந்திகளைக் கொண்டு தீவிர முயற்சி செய்யப்படும்.

நீண்ட காலமாக இப்பணி நடந்து வரும் பகுதிகளில்கூட ஒவ்வொரு குடும்பத்துடனும் நாங்கள் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டிருப்பதாகச் சொல்ல முடியாது. அதற்குப் போதிய அவகாசம் கிடைக்க வில்லை. கிராம சமுதாயத்தில் உள்ள நலிந்த பிரிவினர்

களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்திலும், அவர்களது பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறும் விதத்திலும் வேலைக் கிரமங்களை அமல் நடத்த வேண்டும். நாங்கள் மேற்கொண்டு அனுப வம் பெற்றால்தான் இதற்கான வழிமுறைகளை வகுக்க முடியும். நாங் கள் கற்க வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. பரிசோதனைகள் நடத்தி நடத்தித்தான் படிக்க முடியும். அதனால், நிர்வாக அமைப்பு அல்லது வேலைக்கிரமங்கள் சம்பந்தமாக நெளிவு சுளிவற்ற முறை எதையும் ராஜ்யங்களுக்கு நாங்கள் நிர்ணயிக்கவில்லை; புதுப் பாதை கள் வகுக்கவும் புதிய கருத்துக்களைப் பரீட்சிக்கவும் ராஜ்யங்களுக்கு ஊக்கம் அளிக்கிறோம்.

இயக்கத்தின் விறுவிறுப்பு மேன்மேலும் அதிகரிக்கவேண்டும் என்று பெரிதும் விரும்புகிறோம்: *கிராம சமுதாயத்தில் உள்ள* எல்லோரது நலன்களும் பரஸ்பரம் பிணைந்து கிடக்கின்றன. எல்லாக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவது, சமுதா யம் முழுவதன் கூட்டுப் பொறுப்பு ஆகும். கிராம சமுதாயத்தினர் இதை உணராவிட்டால் முன்னேறமுடியாது. இது மக்களின் இயக்க மாகவே நடந்து வரவேண்டும் என்பது எல்லாவற்றையும்விட மிக முக்கியமான விஷயம். ஜன ஆதரவே இயக்கத்தின் வலிமை. மக்கள் புதுவாழ்வு பெற இவ்வியக்கம் வழிகாட்டி ஆதர்சம் அளிக்க வேண்டும்.

# 7. கிராம சுயாட்சி

## (1) *

சமுதாய அபிவிருத்தி இயக்கத்தின் முழுப் பொறுப்பையும் மக்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கொள்கையை நான் பூரணமாக ஆதரிக்கிறேன்; 40 ஆண்டுகளுக்கு முன்னுல் நமக்குச் சிறிது பொறுப்பாட்சி வழங்க உத்தேசிக்கப்பட்ட சமயத்தில் மாண்டேகு – செம்ஸ்போர்டு யாதாஸ்து பின்வருமாறு குறிப்பிட்டது; "விவசாயியின் அறிவைத் தட்டி யெழுப்பி, அவரைச் சுயேச்சையும் சுய நிர்ணயமும் உள்ளவராக ஆக்குவதற்கு உதவுகின்ற ஒவ்வொரு காரியமும் சுயாட்சி சீக்கிரமே வருவதற்கு உதவும்." பூரண சுயாட்சி பெற்றுள்ள இந்தியாவில் இக் கருத்தை யாராலும் மறுக்கவே முடியாது. சுயாட்சிக்கு இதுதான் அடிப்படை. உண்மையான சுயாட்சி வேண்டும் என்ருல் கிராமவாசியின் அறிவைத் தட்டியெழுப்பி அவரைச் சுயேச்சையும் சுயநிர்ணயமும் உள்ளமனிதராக ஆக்க வேண்டும். அதாவது, தமது விவகாரங்களைத் தாமே நிர்வகித்துக் கொள்ளும் சக்தியை அவர் பெறவேண்டும்.

இந்தியாவில் எத்தகைய ஜனநாயகக் கட்டுக்கோப்பை அமைப்பதாளுலும் கிராமத்தில்தான் அதற்கு அஸ்திவாரம் போட வேண்டும். ஆதிகாலம் முதல் இந்திய அரசியல் அமைப்பில்கிராமங்கள் வகித்துவரும் ஸ்தானத்தை நீங்கள் நன்கு அறிவீர்கள். பல நூற்ருண்டுகளாக இந் நாட்டில் நிலைத்திருக்கும் மிகப் பழைய யூனிட்டு (அமைப்பு) கிராமம்தான். பத்து நூற்ருண்டுகளுக்கு முன்னுல் கிராமங்களும் கிராம சபைகளும் வகித்துவந்த அந்தஸ்து, அனுபவித்துவந்த கணிசமான சுயாட்சி ஆகியவற்றை சுக்கிராச்சாரியாரின் 'நீதிசாரம்' விவரிக்கிறது. இதை ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு

---

* 1958, *பிப்ரவரி மாதம், "கிராம சுய ஆட்சி அமைப்பு" சம்பந்தமாகப் 'பொது நிர்வாகம் பற்றிய இந்தியக் கழகம்' டில்லியில் நடத்திய கருத்து - அரங்கில் பேசியது.*

"நான் கண்ட இந்தியா" (Discovery of India) என்ற நூலில் மேற்கோள் காட்டியுள்ளார். சுக்கிராச்சாரியாருக்கு வெகுகாலத்துக்குப் பின்னுல் ஸர் சார்ல்ஸ் மெட்காப் என்பவர் பின்வருமாறு எழுதினர்: "அநேகமாய்த் தங்களுக்கு வேண்டியவைகளை எல்லாம் தம்மகத்தே கொண்ட சிறிய குடியரசுகள் அவை. அவைகளுக்கு வெளி உறவே இல்லை என்று சொல்லலாம். வேறு எதுவுமே நிலைக்காத நிலைமையில் அவை (கிராமங்கள்) மாத்திரமே நிலைத்திருப்பதாகத் தோன்றுகிறது. ஒவ்வொரு கிராம சமுதாயமும் ஒரு தனியான குட்டி அரசாங்கம். இத்தகைய கிராம சமுதாயங்களின் கூட்டு அமைப்புத்தான் அவற்றின் இன்பத்துக்கும், சுதந்திரத்துக்கும் பெரிதும் உகந்தது."

போன காலத்தைப் பொற் காலம் என்று நான் போற்றவில்லை. கோஷ்டிப் பூசல்கள், சாதிக் கொடுங்கோன்மை, தேக்க நிலைமை போன்ற குறைகளும் அதில் இருக்கத்தான் செய்தன. எனினும், கிராம சமுதாயங்களின் வாழ்க்கை முறை, சுயாட்சி ஆகியவை காரணமாகவே நாம் சமுதாய இணைப்பும் ஸ்திரத் தன்மையும் பெற்ருேம். நமது பரம்பரைக் கலாசாரப் பண்புகளைப் பல நூற்ருண்டுகளாகப் பாதுகாக்க முடிந்ததற்கும் இதுவே காரணம். நாம் நீண்ட காலம் அந்நிய ஆட்சிக்கு உட்பட்டிருந்தபோது, கிராம சமுதாய அமைப்பு நீடித்து இருந்ததால்தான் நம் கலாசாரப் பண்புகள் அழியாமல் தப்ப முடிந்தது. ஆகவே நவீன ஜனநாயக அரசாங்கத்துக்குக் கிராம ஜனநாயகமே உறுதியான அஸ்திவாரமாக இருக்க முடியும் என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். நான் இவ்வாறு கூறுவதைத் தப்பர்த்தம் செய்துகொள்ள வேண்டாம். பழைய நிலைமையை மீண்டும் ஏற்படுத்துவது என் கருத்து அன்று. நவீன நிலைமைக்கு ஏற்ப, கிராமத்தைத் திருத்தி அமைப்பதையே நாம் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும்.

நவீன தொழில் நுணுக்க,-விஞ்ஞான நாகரிகத்துக்குப் பொருத்தமான முறையில் கிராம வாழ்க்கையை நாம் நிர்மாணிக்க வேண்டும். சமுதாய அபிவிருத்தித் தத்துவத்தையும் வேலைக்கிரமத்தையும் அமல் நடத்தும் ஆரம்ப 'யூனிட்டாகக்' கிராமம் விளங்க வேண்டும். அதற்கு ஏற்ற முறையில் கிராம சுயாட்சியைத் திருத்தி அமைக்க வேண்டும். இந்த இயக்கத்தின் அடிப்படைக்

கருத்துக்கள் உங்களுக்குத் தெரிந்திருக்கும். சமூக மாறுதலை உருவாக்குவதே இதன் குறிக்கோள். 'நல் வாழ்வு வாழ வேண்டும் என்ற உறுதியை' மக்களுக்கு ஊட்ட விரும்புகிறோம். சுய முயற்சியினாலும், அண்டை அயலாரின் பூரண ஒத்துழைப்புடனும் தங்கள் வாழ்க்கைத் தரத்தைத் தாங்களே உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற பேராவலை அவர்களுக்குப் புகட்ட விரும்புகிறோம். தங்களுக்குத் தாங்களே உதவிக்கொள்வதன்மூலமும், கூட்டுறவு முறையை மிகப் பரவலாகக் கையாள்வதன் மூலமும் மக்கள் முன்னேற வேண்டும். சுய உதவி, கூட்டுறவு என்ற இரு கோட்பாடுகளையும் அழுத்தமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

## கூட்டுறவு

கடன் வசதி மாத்திரம் அன்றி, கிராம வாழ்க்கையின் எல்லாப் பிரிவுகளிலும் கூட்டுறவு முறை பரவவேண்டும். சமூக மாறுதலுக்கு ஒரு சாதனம் அது. கிராமத்துக்கு வேண்டிய திருந்திய விதைகளை உற்பத்திசெய்தல், ரசாயன உரங்களை வாங்கிச் சேமித்துவைத்தல், பசுந்தாள் உரத்தையும் மற்றக் கரிம உரங்களையும் உற்பத்தி செய்தல், இவற்றையெல்லாம் வினியோகித்தல் ஆகியவற்றுக்குக் கிராமக் கூட்டுறவு சங்கம் ஏற்பாடு செய்யவேண்டும். ரொக்கக் கடன்களையும் அது வழங்கவேண்டும். ஒவ்வொரு கிராமக் கூட்டுறவு சங்கமும் இக் காரியங்களையெல்லாம் கவனிக்கவேண்டும். சங்கத்தின் அலுவல்கள் மேன்மேலும் விரிந்துகொண்டே போகவேண்டும்.

கூட்டுறவு விவசாயம் பற்றிப் பேசுகிறோம். அதை வெளியேயிருந்து விவசாயிகள்மீது திணிக்கும் நோக்கம் நமக்கு இல்லை. எந்தெந்த ரூபங்களில் கூட்டுறவு முறையைக் கையாளலாம் என்பதைக் கிராம சமுதாயமே நிர்ணயித்துக் கொள்ளவேண்டும். உதாரணமாக, கிணறு தோண்டுதல், கிராமத்துக்கு மின்சாரம் போடுதல் முதலிய காரியங்களையும் கிராம சங்கம் மேற்கொள்ளலாம். கூட்டுறவு சங்கங்களுக்குத் திட்டவட்டமானதோர் குறிக்கோள் இருக்க வேண்டும். அதாவது, தங்களுக்கு வேண்டிய நிதிகளையும், ஐந்தாண்டுத் திட்ட வேலைகளுக்கு வேண்டிய நிதி வசதிகளையும் மக்களின் சொந்தச்சேமிப்பிலிருந்தே அவைதிரட்டவேண்டும். பொருளாதார ரீதி

யில் பின்தங்கியதோர் நாட்டிலே சமுதாய ஆஸ்திகளை மக்களின் ஐக்கிய முயற்சியால்தான் உருவாக்கவேண்டும். இந்தத் தத்துவத்தை எல்லோரும் உணர்வது அவசியம். கிராமங்களிலே உபயோகமின்றிக் கிடக்கும் மனித சக்தியைத் திரட்டி, சமுதாயத்துக்கு நிரந்தரப் பலன் அளிக்கும் ஆஸ்திகளைச் சிருஷ்டிக்கவேண்டும். மற்றும், ஆண்கள் மாத்திரம் அன்றி மாதர்கள், இளைஞர்களும் இந்த இயக்கத்தில் முழுப் பங்கு எடுக்கவேண்டும்.

இந்தத் தேவைகளையெல்லாம் பூர்த்திசெய்யும் விதத்தில் நமது கிராமங்களைச் சீரமைப்பது எங்ஙனம் என்பது இந்த அரங்கின் பரிசீலனைக்கு உரியது. இக் குறிக்கோள் நிறைவேறவேண்டுமானால் ஒவ்வொரு கிராமத்திலும் மூன்று ஸ்தாபனங்களை நிறுவவேண்டும் என்பது என் கருத்து. தங்கள் சொந்த ஸ்தாபனங்களாகக் கிராம வாசிகள் கருதும் விதத்தில் இவை அமையவேண்டும். முதலாவது ஸ்தாபனம் கிராமப் பஞ்சாயத்து. இதைப்போலவே, அல்லது இதை விடவும், முக்கியமானது கிராமக் கூட்டுறவு சங்கம். மூன்றுவது ஸ்தாபனம் கிராமப் பள்ளிக்கூடம். துண்டுபட்ட நமது நிர்வாக அமைப்பு காரணமாக இந்த ஸ்தாபனங்கள் இடையே பரஸ்பரத் தொடர்பு இல்லை என்பது வருந்தத்தக்கது. கிராமத்தில் எல்லா நடவடிக்கைகளுக்கும் இந்த மூன்று ஸ்தாபனங்களும் கேந்திரமாக இருக்கவேண்டும். இவற்றின் வாயிலாகவே கிராமத்தில் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தை அமல் நடத்தவேண்டும். நிர்வாகத்தையும் ஒழுங்குமுறை வேலைகளையும் பஞ்சாயத்து கவனிக்கும். சமூக-பொருளாதார அபிவிருத்தி, கூட்டுறவு சங்கத்தின் குறிக்கோளாக இருக்கவேண்டும். இந்தக் காரியங்களுக்கு ஆதரவாகச் சமுதாயத்தினர் அனைவரையும், குறிப்பாக மாதர்களையும் இளைஞர்களையும், பள்ளிக்கூடம் ஒன்று திரட்டும். இந்த ஸ்தாபனங்களை அச்சாகக் கொண்டு கிராம வாழ்க்கைச் சக்கரம் சுழலவேண்டும். இவற்றை மையமாகக்கொண்டு சுய முயற்சியால் கிராமம் வளரவேண்டும்.

## ஆதார அமைப்பு

கிராமம் என்ற ஆரம்ப அமைப்பு (யூனிட்டு) எவ்வளவு பெரியதாக இருக்கவேண்டும் என்பது ஒரு பிரச்னை. பேராசிரியர் கார்வேயும் மற்றவர்களும் தங்கள் கட்டுரைகளில் இதைப் பிரஸ்தாபித்

துள்ளனர். இயக்கத்தின் வெற்றியையே நிர்ணயிக்கக்கூடிய முக்கிய பிரச்னை இது. பல சந்தர்ப்பங்களில் இது சம்பந்தமான எனது கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறேன். அண்மை வாசம், பொதுத் தேவைகள், பொதுச் சிரத்தைகள், ஒட்டுறவு என்ற பண்புகளுடன் ஒரு பெரிய குடும்பம்போலக் கிராம சமுதாயம் அமையவேண்டும் இதுவே நமது அடிப்படைக் கருத்து. இது ஜீவாதாரமானது என்று கூடக் கூறுவேன். கிராம வாழ்க்கை இப்படித்தான் நடக்கவேண்டும் என்று பல நூற்றுண்டுகளாக நாம் கருதி வந்திருக்கிறோம். வலிமையும் தெம்பும் வாய்ந்த அமைப்பாக இது இருக்கும்.

யு. எஸ். ஏ. யிலும் (அமெரிக்கா) மற்ற நாடுகளிலும் நடந்துள்ள ஆராய்ச்சிகள் இதே கருத்தை உறுதிப்படுத்துகின்றன. தேசிய வாழ்க்கையில் சிறு சமுதாயங்களின் பங்கு சம்பந்தமான ஆராய்ச்சிகள் அவை. இதுபற்றி ஸ்ரீ ஆர்தர் இ. மார்கன் சமீபத்தில் இரு புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறார். "சிறு சமுதாயம்—ஜனநாயக வாழ்வின் அஸ்திவாரம்" (The Small Community—Foundation of Democratic Life) என்பதும் "வருங்காலச் சமுதாயம்" (The Community of the Future) என்பதுவுமே அவை. ஸ்ரீ. மார்கன் ஒரு பிரபல என்ஜினீயர், டென்னஸி அணைத் திட்ட நிர்வாகத்தின் முதல் தலைவராக இருந்தவர். "சிறிய, முகமறிந்த சமுதாயமானது மனித வாழ்க்கைக்கு ஜீவாதாரமானது, மனித வாழ்க்கையை அது பெரிதும் கட்டுப்படுத்துகிறது என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும்," என்று அவர் தமது நூல்களில் குறிப்பிடுகிறார். அவர் மேலும் கூறுகிறார்: நெருங்கிய பழக்கம், பரஸ்பர நம்பிக்கை, மரியாதை, பொறுப்பு, வாழ்க்கையின் ஆபத்துக்களிலும் வாய்ப்புக்களிலும் பங்கு பற்றுதல், ஒருமை உணர்ச்சி ஆகியவற்றுடன் ஊடாடி வாழ்வதால் மனிதர்கள் இடையே பரஸ்பரத் தொடர்புகள் தோன்றுகின்றன. தனி நபர்களின் கோஷ்டியை ஒரு சமுதாய உருவமாக இவை மாற்றுகின்றன. இவர்களிடம் தனித்தனிப் பண்புகளும் மனங்களும் இருப்பதுடன், கோஷ்டிப் பண்பு ஒன்றும் கோஷ்டி மனம் ஒன்றும் உருவாகின்றன. இந்தச் சமூக லட்சணங்களின் பிணைப்பு, சமூக சொரூபம் ஆகியவற்றை நாம் மனத்தில் கொண்டே (சிறு) சமுதாயத்தை (பெரிய) சமூகத்தின் ஒரு பண்பு என்று சொல்லுகிறோம்."

பஞ்சாயத்தில் மாத்திரம் அன்றி கூட்டுறவு சங்கத்திலும் இத்தகைய நெருங்கிய உறவு நிலவவேண்டும். கூட்டுறவு சங்கங்கள் சம்பந்தமாக டாக்டர் பௌக்கத்தின் கருத்தை இங்கு மேற்கோள் காட்ட விரும்புகிறேன். சமீப காலம்வரை ஐ. எல். ஓ. (சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம்) கூட்டுறவு சர்வீஸின் தலைவராக இருந்தவர் அவர். நவீன இயந்திர யுக சமூகத்தில், எல்லோருக்கும் வேலை வசதி இருக்கும் சமூகத்தில், கூட்டுறவு முறையின் ஸ்தானம் பற்றி அவர் தமது புத்தகத்தில் பின்வருமாறு எழுதுகிறார் :

> "எண்ணற்ற வீடுகளில் நடக்கும் தொழில்கள், விவசாயத் தொழில், கைநுட்பத் தொழில்கள் ஆகியவற்றையெல்லாம் ஒன்றுசேர்த்து ஆரம்பக் கூட்டுறவு சங்கங்களை அமைக்கவேண்டும். அண்மை வாழ்க்கை, பொதுத் தேவைகள் என்ற பந்தங்களை ஆதாரமாகக் கொண்டு இவ்வாறு இணைக்கவேண்டும். ' கூட்டுறவு இயக்கத்தின் சிறப்புப் பணி இது; அந்த இயக்கத்தால்தான் இதைச் செய்ய முடியும். இதற்கு அடுத்தபடியாக, ஆரம்பச் சங்கங்களை இரண்டாவது நிலை, மூன்றாவது நிலைச் சங்கங்களாக இணைக்கவேண்டும். ஆரம்பச் சங்கங்களின் பொதுத் தேவைகளை இச் சம்மேளனங்கள் பூர்த்திசெய்யும். இதன் பிறகு, குவியல் முறைப் பொருளாதார அமைப்பின் (Centralised economy) உச்சாணிக் கிளைகளுடன் கூட்டுறவுப் பொருளாதார அமைப்பை (Co-operative economy) பிணைக்கும் பிரச்னையைக் கவனிக்கவேண்டும். கூட்டுறவு முறைக்கு எதிர்த்திசையில் வளர்ந்தவை அக் கிளைகள்.
>
> "ஆகவே, சமூக சரீரத்தின் எண்ணற்ற சிறு கண்ணறைகள்மீது அரசாங்கம் தனது கட்டுப்பாடுகளை விஸ்தரிப்பதற்கு ஆசைப்படுவது பயன் அளிக்காது. பொருளாதார அமைப்பை உருவாக்க அரசாங்கம் முற்படும்போது, தனது தகுதிக்கும் அதிகாரத்துக்கும் வரையறைகள் இருப்பதை அது உடனடியாக உணர வேண்டியிருக்

கிறது. கண்கூடான பற்பல பரிசோதனைகள் இதையே புலப்படுத்துகின்றன.''

மேற்கு ஐரோப்பிய ஜனநாயக நாடுகளில் உள்ள சிறிய சமுதாயங்களின் தெம்பும் கூட்டுறவு சங்கங்களின் வலிமையும் எப்போதுமே என் கவனத்தைக் கவர்ந்துவந்துள்ளன. அந்தக் கூட்டுறவு சங்கங்கள், அதாவது அடிப்படைச் சங்கங்கள், உருவில் சிறியவை. குறைவான உறுப்பினர்களைக் கொண்ட இச் சங்கங்கள் பலவகை அலுவல்களைக் கவனிக்கின்றன. இத்தகைய சங்கங்களின் ஆகிருதி சம்பந்தமாக சமீபத்தில் கிடைத்த தகவல்களை ஸர் மால்கம் டார்லிங் பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடுகிறார் :

''1955 நிலைமைப்படி மேற்கு ஜெர்மனியில் உள்ள 11,000 கிராமப் பாங்கிகளின் சராசரி உறுப்பினர் தொகை 155. ஸ்விட்ஜர்லாந்தில் உள்ள ஆயிரம் பாங்கிகளின் சராசரி உறுப்பினர் தொகை 110 தான். பார்க்கப்போனால் ஸ்விட்ஜர்லாந்தில் மூன்றில் இரண்டு பங்கி பாங்குகளின் உறுப்பினர் தொகை இதை விடவும் குறைவே. 50 முதல் 100 வரைதான் மிகச் சிறந்த தொகை என்று 'ஸ்விஸ் ரைபீஸன் இயக்க' டைரெக்டர் என்னிடம் ஒரு முறை கூறினார். 100 முதல் 200 பேர் வரை இருப்பது சிறந்தது என்று சமீபத்தில் பிரபல இத்தாலியக் கூட்டுறவாளர் ஒருவர் குறிப்பிட்டார். ஒன்றுக்கு மேற்பட்ட கம்யூனை ஒரு சங்கத்தில் சேர்ப்பது தவறு என்று ஸ்விஸ் டைரெக்டர் அபிப்பிராயப்பட்டார். (ஒரு கிராமத்தைப் போன்றதுதான் கம்யூன்). இந்தியாவைப்போலவே ஸ்விட்ஜர்லாந்திலும் ஒரு சாதாரணக் கிராமத்தின் ஜனத்தொகை 500.''

இதைப்போன்ற சுதந்திரமும் சுய முயற்சியும் நிறைந்த உள்ளூர் வாழ்க்கையை இந்தியாவிலும் ஏற்படுத்த நாம் முயற்சிக்கவேண்டும். இந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இத்தகைய முறை ஏற்கனவே இருந்து வருகிறது. அதை நாம் எல்லா இடங்களிலும் வளர்க்க வேண்டும். இந்தப் பணிக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொள்வதற்கு உத்தியோக சார்பற்ற அறிவாளிகள் பலர், ஆண்களும்

பெண்களும், முன்வருவார்கள். அவர்களது ஆதரவை நாம் நாடிப் பெற வேண்டும்.

அடிப்படை அமைப்பு (primary unit) சம்பந்தமாக இரு மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. "நெருங்கிய பந்தங்கள் நிலவும் சிறிய சமுதாயத்தின் மூலம்தான் மனித சமூகங்கள் மகோன்னத நிறைவு பெறுகின்றன. கூட்டு முயற்சிக்கு ஊக்கம் அளிக்க வல்லது சிறிய சமுதாயம்தான்," என்பது முதல் வகைக் கருத்து. இதன் படி, பரஸ்பர பரிச்சயமும் பொதுச் சிரத்தைகளும் கொண்ட குடும்பங்கள் வாழ்கின்ற ஒரு கிராமம்தான் இயற்கையான அடிப்படை அமைப்பு. மற்ற நிலைமைகள் சாதகமாக இருந்தால், நான் மேலே குறிப்பிட்ட வேலைக்கிரமங்களை இத்தகைய அமைப்பில் உள்ள பஞ்சாயத்தும் கூட்டுறவு சங்கங்களும் சுய முயற்சியால் நிறைவேற்ற முடியும். சரியான கிராமத் தலைவர்களை அவை உருவாக்க முடியும். சாதாரணக் காரியாலய வேலைகளில் உதவக்கூடிய இளைஞர்களைத் தங்கள் பிரதேசத்திலேயே இந்த ஸ்தாபனங்களால் கண்டெடுக்க முடியும். ஆரம்ப கட்டத்தில் மாத்திரமே கிராமத்துக்கு, மேலுள்ள நிலைகளில், சமுதாய அபிவிருத்தி ஸ்தாபனம் ஆலோசனையும் சர்வீஸும் பண்டங்களும் கொடுத்து உதவ வேண்டியிருக்கும்.

நகர அபிமானம் உள்ள பெரிய நிலச்சுவான்களின் சிரத்தைகளுக்கும் மற்றவர்களின் சிரத்தைகளுக்கும் இடையே முரண்பாடுகள் உண்டு என்று இரண்டாவதுவகைக் கருத்தினர் கூறுகின்றனர். அதனால், சம்பளச் சிப்பந்திகளைக் கொண்ட பெரிய அமைப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்று அவர்கள் கருதுகின்றனர். நான் இக் கருத்தை அடியோடு எதிர்க்கிறேன். முதல் வகைக் கருத்தை அடிப்படையாகக் கொண்ட உண்மையான ஜனநாயகக் கூட்டுறவு சங்கத்தை அமைக்க முடியும். இதுவரைநாம் பெற்றுள்ள அனுபவம் இந் நம்பிக்கையைப் பெரிதும் உறுதிப்படுத்துகிறது. சென்ற சில ஆண்டுகளில் சமூக நீதி என்ற கருத்து வலுவடைந்து வந்திருக்கிறது. ஓரளவு தீவிரமான நிலச் சீர்திருத்தங்கள் கூட எதிர்ப்பின்றி ஏற்கப்பட்டுள்ளன. அதோடு, கிராமாந்தரப் பிரதேசங்களில் அபிவிருத்தி வேலைகளுக்காக ஏராளமான நிதி செலவிடப்படுகிறது. வறுமையை ஒழிப்பதற்கான பொதுப் போராட்டத்தில் கிராம சமுதாயங்களை இது ஒன்றுபடுத்துகிறது. மாறுபட்ட சிரத்தைகளும்

கோஷ்டிப் பூசல்களும் தேக்கமுற்ற சமுதாயத்தின் லட்சணங்கள்; ஒன்றுபட்ட முயற்சிகள் மூலமே இவற்றுக்கு நாம் பரிகாரம் தேட வேண்டும்.

## கிராமத்துக்கு அப்பால்

இன்னொரு ஜீவாதார விஷயம்: *கிராம சுயாட்சி மாத்திரம்* இருந்தால் போதாது; *கிராமத்தின் திருஷ்டியையும் விசாலப்படுத்த* வேண்டும். *கிராம சமுதாயத்தை விட மிக விரிவானதோர் சமூகத்தின் உறுப்பினர்* தாங்கள் என்பதை கிராமத்தில் உள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் உணர வேண்டும். தமது உடனடியான சிரத்தைகளை விட விரிவான உரிமை-கடமைகள் தமக்கு உண்டு என்பதை அவர் உணர வேண்டும். கிராமப் பஞ்சாயத்தையும் கூட்டுறவு சங்கத்தையும், அவற்றை விடப் பெரிய அமைப்புகளுடன் இணைக்க வேண்டும். இவ்விதம் அவற்றை ராஜ்யம் முழுதுடனும், இந்தியா தேசம் முழுதுடனும் பிணைக்க வேண்டும்.

பஞ்சாயத்து சம்பந்தப் பட்டவரை கிராமத்துக்கு மேல் நிலையில் உள்ள வட்டாரத்தின் வசம் அலுவல்களை ஒப்படைக்க வேண்டும் என்று 'பல்வந்த்ராய் மேத்தா கமிட்டி' *சிபாரிசு செய்திருக்கிறது. ஜில்லா அமைப்பினர் வசம் இந்த அலுவல்களை ஒப்படைப்பதே இதை விடப் பொருத்தமானது என்று மற்றவர்கள் கருதுகிறார்கள். பிந்திய கருத்தையே பேராசிரியர் கார்வே சிலாகிக்கிறார்: இது சம்பந்தமாகச் சித்தாந்த வாதம் வேண்டியதில்லை. ஒவ்வொரு பிரதேசமும் தனது சொந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். எனினும் பொதுப்படையான சில விஷயங்களைக் குறிப்பிடலாம். முதலாவதாக, இந்த (பஞ்சாயத்து) இயக்கத்தில் வருங்காலச் சட்ட சபையினரைச் சேர்க்க விரும்புகிறோம். ஏனெனில், ராஜ்ய அரங்கிலும் மத்திய அரங்கிலும் பொதுப் பணி புரிவதற்கு ஸ்தலசுயாட்சி ஸ்தாபனமே சிறந்த பயிற்சி நிலையம். தவிர கலெக்டர், ஸப்கலெக்டர், தொழில் நுணுக்க அதிகாரிகள் போன்ற ஜில்லா அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு

---

* *சமுதாய அபிவிருத்தித் திட்ட அமலை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட கமிட்டி.*

செயலாற்றக் கூடிய உத்தியோக சார்பற்றவர்களை நாம் பெறவேண்டும். எல்லாக் கட்டங்களிலும் 'சிவில் சர்விஸுடன்' சரியான உறவு முறையை ஏற்படுத்துவது ஜனநாயகத்தின் மிகப் பெரிய பிரச்னையாக இருந்து வருகிறது.

கூட்டுறவு சங்கங்கள் சம்பந்தப் பட்டவரை, "இரண்டாவது நிலை, மூன்ருவது நிலை சமஷ்டி ஸ்தாபனங்கள்" பற்றி டாக்டர் பௌக்கத் கூறியதை நான் ஏற்கனவே மேற்கோள் காட்டியிருக்கிறேன். ஆரம்பக் கூட்டுறவு சங்கங்கள் ஒன்றுசேர்ந்து 'யூனியன்'களாக அமைய வேண்டும். மார்க்கட்டிங் (மகசூல் விற்பனை) சங்கம் போன்ற விசேஷ சங்கங்களுடன் அவை தொடர்பு கொள்ள வேண்டும். இவை மூலமாக மத்திய பாங்கி, 'உச்ச' (Apex) பாங்கிகளுடனும், நாடு முழுவதிலும் உள்ள பாங்கி அமைப்புடனும் அவை பிணைக்கப்பட வேண்டும்.

இஷ்டபூர்வமாகவும், பரிசோதனை ரீதியாகவுமே பஞ்சாயத்துகளோ கூட்டுறவு சங்கங்களோ இவ்வாறு பிணைப்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நெளிவு சுளிவற்ற அமைப்பாக இதைத் திணிக்கக் கூடாது. உண்மையாகவே மக்களின் ஸ்தாபனமாக, உறுதியான அஸ்திவாரத்தின் மீது, ஆரம்ப அமைப்பு நிறுவப்பட்டாலொழிய ஜனநாயக ரீதியாக அதிகாரத்தைப் பரவலாக வினியோகிக்க முடியாது.

## நான்கு குறைகள்

கிராமப் பஞ்சாயத்துகளையும் கூட்டுறவு சங்கங்களையும் நிறுவுவதில் குறைவான கவனமே செலுத்தப்படுகிறது. சமுதாய அபிவிருத்தி இயக்கத்தில் கவலைக்குரிய விஷயம் இது. இதை இம்மகாநாடு பரிசீலிப்பது நலம். சமுதாய அபிவிருத்திக் கட்டம் முடிந்து தே. வி. ச. கட்டத்துக்கு மறுபடி திரும்பியுள்ள வட்டாரங்களில் கூட 30 சதவிகிதக் கிராமங்களில்தான் பஞ்சாயத்துகளும் கூட்டுறவு சங்கங்களும் உள்ளன. தே. வி. ச. வட்டாரத்தை ஆரம்பிக்கும் போதே எல்லா இடங்களிலும் இந்தக் கிராம ஸ்தாபனங்களை அமைக்கும் வேலையும் ஆரம்பமாக வேண்டும். இவ்வாறு அமைக்கப்படும் ஸ்தாபனங்களை நாள்தோறும் விருத்தி செய்வதில் கிராம நிலை ஊழி

யர் கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு கிராம நிலை ஊழியரும் இத்தகைய ஸ்தாபனங்கள் நான்கு அல்லது ஐந்தைத்தான் கவனிக்க வேண்டியிருக்கும். அதனால் ஐந்து ஆண்டு காலத்துக்குள்ளாக ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு விரிவான வேலைக்கிரமத்தை வகுப்பது அவருக்குச் சாத்தியமாகத்தான் இருக்க வேண்டும்.

தனிப்பட்ட அபிவிருத்தி வேலைப் பிரிவுகள் சம்பந்தமாகக் கீழ் நிலைகளில் சிப்பந்திகளின் தொகையைப் பெருக்குவது கவலைக்குரிய இரண்டாவது விஷயம். எல்லா அபிவிருத்தி வேலைகளுக்கும் பொதுப் பிரதிநிதியாகக் கிராம நிலை ஊழியரே இருக்க வேண்டும் என்பது ஒப்புக் கொள்ளப்படுகின்றது. அப்படியிருந்தும் பஞ்சாயத்து அதிகாரி, கூட்டுறவு அதிகாரி எனப் பல வகை அதிகாரிகள் நியமிக்கப் படுகிறனர். இவ்வாறு கீழ்நிலைச் சிப்பந்திகளின் தொகையைப் பெருக்குவது இயக்கத்துக்கு ஆபத்தாகும். இதன் விளைவாக மக்களின் சுயமுயற்சி குறைந்து இயக்கத்தின் விறுவிறுப்பும் மறையும்.

வாங்கிய கடன்களைத் திருப்பிக்கொடுப்பது மூன்ருவது பிரச்னை. தற்போது ஏராளமான தக்காவி, ரசாயன உர, கூட்டுறவுக் கடன்கள் நிலுவை கிடக்கின்றன. கிராம அபிவிருத்தி இயக்கத்துக்கு இது ஒரு பெரிய அபாயம். வாய்தாப்படி கடன்களைத் திருப்பிக் கொடுப்பது, சிக்கனமாக வாழ்வது என்ற பண்புகளை ஆரம்பமுதலே புகட்டாவிட்டால் சமுதாய அபிவிருத்தி வேலைக்கிரமங்கள் முழுவதுமே பாதகமடைவது நிச்சயம். ஜாவாவில் பல ஆண்டுகளாகப் பணி புரிந்து வரும் கூட்டுறவாளர் ஒருவரைச் சந்தித்தேன். கடன்களை ஒழுங்காகத் திருப்பிக் கொடுப்பது ஒரு புனிதக் கடமை என்று கிராமவாசி கருதுவதுதான் ஜாவாவில் இயக்கத்தின் வெற்றிக்கு முக்கிய காரணம் என்று அவர் தெரிவித்தார். குறித்த கெடுவில் கடனை அடைப்பது, செலவைச் சிக்கனப்படுத்துவது என்ற குணங்களை நமது மக்களுக்கு ஊட்ட வேண்டும்.

கடைசியாக, கற்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே கிராமாந்தரப் பகுதிகளில் காணப்படும் பிளவை நீக்க வேண்டும். இவ் விஷயத்தில், கற்றவர்கள் இப்போதை விட அதிகமாக முயற்சிக்க வேண்டும். கிராம அபிவிருத்திப் பிரச்னைகளை அனுதாப சிரத்தையுடன் புரிந்து கொள்வதற்கு இது அவசியம். எல்லா அதிகாரிகளும் வருஷத்தில் பெரும் பகுதி, கிராமங்களில் கிராமவாசி

களுடன் சேர்ந்து வாழ வேண்டும். அவர்களது நம்பிக்கையைப் பெறுவதற்கு இதுதான் ஒரே வழி. நூறு ஆண்டுகளுக்கு முன்னால் அமெரிக்கர்களைப்பற்றி ஜே. எஸ். மில் (பிரிட்டிஷ் அறிஞர்) பின்வருமாறு எழுதினார் :

> " அரசாங்கம் இல்லாத நிலைமையில் அமெரிக்கர்களை விட்டு விட்டால், தற்காலிக அரசாங்கம் ஒன்றை அமைத்துக் கொண்டு நிர்வாகத்தையோ வேறு எந்தக் காரியத்தையுமோ போதிய அறிவுடனும் ஒழுங்குடனும் நிர்ணயத்துடனும் நடத்தும் திறமை ஒவ்வொரு அமெரிக்கனுக்கும் உண்டு. எல்லாச் சுதந்திர மக்களும் இப்படித்தான் இருக்கவேண்டும் ; இந்தச் சக்தி உள்ள எந்த மக்களும் சுதந்திரம் பெறுவது உறுதி."

கிராமாந்தரப் பிரதேசங்களில் சுயாட்சியை ஏற்படுத்தும்போது 'சுதந்திர மக்கள்' பற்றிய இந்த இலட்சியத்தை நம் மனத்தில் இருத்த வேண்டும். சமூக, பொருளாதார அபிவிருத்திக்கான வேலைக் கிரமங்களில் மக்கள் எவ்வளவு அதிகமாகப் பங்கெடுத்துக் கொள்கிறார்களோ அவ்வளவு அதிகமாகப் பலன்களும் கிடைக்கும். மக்கள் தரும் விறுவிறுப்புடன், மக்களின் இயக்கமாக எப்போதும் நடந்து வந்தால்தான் சமுதாய அபிவிருத்தி இயக்கத்துக்குப் பயன் இருக்கும்.

## (2) *

இந்தியாவின் வரலாறு நெடுகிலும் கிராமம் ஒரு முக்கிய நிர்வாக அமைப்பாக (யூனிட்டாக) இருந்து வந்திருக்கிறது. அது எப்போதுமே கணிசமான சுயாட்சியை அனுபவித்து வந்திருக்கிறது. ஒரு பெரிய நாட்டை நிர்வகிக்கும் போது, அதிலும் விவசாயமே 80 சதவிகித மக்களின் ஜீவனோபாயமாக இருக்கும் தேசத்தை நிர்வகிக்கும் போது, கிராமம் இத்தகைய அந்தஸ்தை வகிப்பது இயற்கையே. பின்னர் 19-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் கிராம வாழ்க்கை சீர்குலைய ஆரம்பித்தது. இதன் காரணங்களை யாவரும் அறிவர். தற்

* *அ. இ. கா. க. " எக்கனமிக் ரிவ்யூ " சஞ்சிகையில் எழுதிய கட்டுரை—* 1957, *ஜனவரி.*

போதைய நிலைமைக்கும் நவீன காலச் சூழ்நிலைக்கும் ஏற்ற முறையில் கிராம சுயாட்சியை மீண்டும் ஏற்படுத்துவது எப்படி என்பது தான் இப்போது நம் நாட்டின் பிரச்னை.

சுய உதவி, கூட்டுறவு என்ற இரண்டையும் அடிப்படையாகக் கொண்டே இந்தியாவின் கிராமப் பிரச்னையைத் தீர்க்க முடியும் என்பது தெளிவு. வேறு எந்த வழியிலும் தீர்க்க முடியாது. அபிவிருத்தி வேலைக்குக் கிராம மக்கள் பொறுப்பு ஏற்றால்தான் கிராமப் புனரமைப்புத் திட்டம் எதுவும் வெற்றி பெறமுடியும். உணவு உற்பத்திப் பெருக்க விசாரணைக் கமிட்டி கூறியிருப்பதைப்போல, "ஒரு திட்டம் வெற்றிபெற வேண்டுமானால் நாட்டிலுள்ள லட்சோப லட்சம் சிறு விவசாயிகள் அத்திட்டத்தின் குறிக்கோள்களை ஏற்கவேண்டும், அதைத் தயாரிப்பதில் பங்குகொள்ள வேண்டும், அதைத் தங்கள் சொந்தத் திட்டமாகக் கருதவேண்டும், அதை நிறைவேற்றுவதற்குத் தியாகம் புரியத் தயாராய் இருக்கவேண்டும். இவ்வாறு இல்லாத திட்டம் எதுவும் வெற்றிபெற முடியாது."

தேசிய விஸ்தரிப்பு இயக்கத்தில் அடங்கியுள்ள வேலைக்கிரமத்தை இப்போது யாவரும் அறிவர். ஒவ்வொரு கிராமத்திலுள்ள மக்களும் இதைக் குறிக்கோளாகக் கொண்டு பாடுபட்டால்தான் இவ் வேலைக் கிரமத்தை நிறைவேற்ற முடியும்.

சுயேச்சையான, விறுவிறுப்பான கிராம வாழ்க்கைக்கு வழி செய்வது அவசியம். கிராமப் பஞ்சாயத்து, பல-காரியக் கூட்டுறவு சங்கம் ஆகியவற்றின் வாயிலாக உற்பத்தி வேலைகளுடன் கிராம வாழ்க்கையைப் பிணைக்கவேண்டும். நிர்வாக ஒழுங்குமுறை அலுவல்களைப் பஞ்சாயத்தும், சமூக - பொருளாதார அலுவல்களைக் கூட்டுறவு சங்கமும் கவனிக்கவேண்டும் என்று பொதுப்படையாகக் கூறலாம். இந்த இருவகை அலுவல்களும் நெருங்கிய தொடர்பு உள்ளவை ; ஒன்று இல்லாமல் இன்னொன்று பயன் தராது.

## பஞ்சாயத்துகளின் பொறுப்பு

கிராமத் திட்டங்களை வகுத்து நிறைவேற்றுவது சம்பந்தமாகக் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு உள்ள அலுவல்களை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (அத்தியாயம் 7) குறிப்பிட்டிருக்கிறது. அவை வருமாறு :

"(1) கிராமத்துக்கு உரிய உற்பத்தி வேலைக்கிரமங்களை வகுப்பது;

(2) இந்த வேலைக்கிரமங்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான பண்டங்கள், நிதி வசதி ஆகியவற்றுக்காகக் கூட்டுறவு சங்கங்களுடன் சேர்ந்து பட்ஜெட் தயாரித்தல்;

(3) அரசாங்க உதவியில் மேன்மேலும் அதிகமான பங்கு தன் (பஞ்சாயத்தின்) மூலமாகக் கிராமத்துக்குக் கிடைக்க வழி செய்தல்;

(4) தரிசு நிலங்கள், காடுகள், 'அபாடி' மனைகள், ஏரிப் பரப்புகள் முதலிய பொது நிலங்களை அபிவிருத்தி செய்தல்—மண் வளப் பாதுகாப்பு ஏற்பாடுகளும் இதில் அடக்கம்;

(5) கிராமத்தில் உள்ள பொதுக் கட்டடங்கள், பொதுக் கிணறுகள், ஏரிகள், ரஸ்தாக்கள் முதலியவற்றை அமைத்தலும் மராமத்துச் செய்தலும் பராமரித்தலும்;

(6) எல்லாத் துறைகளிலும் பரஸ்பர உதவிக்கும், கூட்டு முயற்சிக்கும் ஏற்பாடு செய்தல்;

(7) கூட்டுறவு சங்கங்களை வளர்த்தல்;

(8) சமுதாயப் பொதுப் பணிகளுக்குத் தொண்டர்களைத் திரட்டுதல்;

(9) சிறு சேமிப்புகளுக்கு ஊக்கமளித்தல்;

(10) கால்நடை அபிவிருத்தி."

கிராமப் பஞ்சாயத்துக்களை அமைப்பதில் பெரும்பாலான ராஜ்யங்கள் கணிசமாக முன்னேறியிருப்பது மகிழ்ச்சிக்கு உரிய விஷயம். நாட்டில் உள்ள 5 லட்சம் கிராமங்களில், 1955 மார்ச் மாதம் வரை, 3,64,000 கிராமங்களில் பஞ்சாயத்துகள் நிறுவப்பட்டுள்ளன. பல ராஜ்யங்களில் எல்லாக் கிராமங்களிலுமே பஞ்சாயத்துகள் ஏற்பட்டு விட்டன. மற்ற ராஜ்யங்களும் இத்திசையில் முன்னேறி வருகின்றன. பல்வேறு ராஜ்யங்கள் இயற்றியுள்ள சட்டங்கள் பஞ்சாயத்துகளுக்கு விரிவான அதிகாரங்களை வழங்குகின்றன. ஆனால் கூட்டுறவுத் துறையில் போதிய முன்னேற்றம் ஏற்படவில்லை. கிராமத்துக்கு ஒன்று வீதம் பல-காரியச் சங்கங்களை அமைக்க வேண்டும் என்ற லட்சியம் இன்னும் வெகு தூரத்தில் நிற்கிறது.

உறுதியானதும், நல்ல பயிற்சி பெற்றதுமான உத்தியோக ஸ்தாபனத்தை தே. வி. ச. இயக்கம் ஏற்படுத்தியிருக்கிறது. பஞ்சாயத்தையும் கூட்டுறவு சங்கத்தையும் உண்மையிலேயே பயனுள்ளவை யாக்குவதற்கு இந்த ஸ்தாபனம் வழிகாட்டும். ஐந்து அல்லது பத்துக் கிராமங்கள் கொண்ட ஒவ்வொரு வட்டத்துக்கும் பல - காரியக் கிராம நிலை ஊழியர் ஒருவர் இருக்கிறார். ஒவ்வொரு வட்டாரத்திலும் நிபுணர்களின் கோஷ்டிகள் உள்ளன. ஒவ்வொரு கிராமத்துக்கும், கிராம ஸ்தாபனத்தின் மூலம் ஒவ்வொரு குடும்பத்துக்கும், நுணுக்கயோசனை கூறுவது இந்த நிபுணர்களின் கடமை. வட்டாரத்துக்கு மேலுள்ள நிலையிலும் பயிற்சி பெற்ற நுணுக்கச் சிப்பந்திகள் இருக்கிறார்கள். கிராம சுயாட்சிக்கு அஸ்திவாரம் போடும் இவ்வேலையில் வழிகாட்டுவதற்காக எல்லா நிலைகளிலும் அதிகாரிகளும் உத்தியோக சார்பற்ற ஊழியர்களும் இருக்கின்றனர்.

கிராமங்களின் இப்போதைய எல்லைகளை மாற்றக்கூடாது என்று நான் கருதுவதாக நினைக்கவேண்டாம். நவீனகாலச் சூழ்நிலைப்படி பார்த்தால் நமது கிராமங்களில் பல மிகச் சிறியவை. ஆயிரத்துக்குக் குறைவான ஜனத்தொகையுள்ள சிறிய கிராமங்களைச் சௌகரியமான பெரிய அமைப்புகளாக (யூனிட்டுகளாக) இணைக்க வேண்டும் என்பது என் கருத்து. அதாவது 1,000 முதல் 1,500 வரை ஜனத்தொகையுள்ள, அல்லது 200 முதல் 300 குடும்பங்களைக் கொண்ட, அமைப்புகளாக இணைக்கவேண்டும். இந்த அமைப்புகள் சரியான தலைவர்களையும் அபிவிருத்தி வேலைக்கு வேண்டிய நிதி வசதியையும் தரவல்லவை. அத்துடன் இத்தகைய கிராமங்களில் ஐக்கிய உணர்ச்சியும் நிலவும்; ஏனெனில் எல்லாக் குடும்பங்களும் பரஸ்பர அறிமுகம் உள்ளவை.

இவ்வாறு இணைக்கப்படும் கிராமங்களைச் சுயாட்சியின் அஸ்திவாரமாகக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பஞ்சாயத்தும் ஒரு கூட்டுறவு சங்கமும் இருக்கவேண்டும். அதோடு, இந்தக் கிராம அமைப்புகள் அண்டைக் கிராம அமைப்புகளுடனும், மேல் நிலையில் உள்ள வட்டார அமைப்புடனும் நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டும். தாலுகா அல்லது தேசில் பஞ்சாயத்துகளுடன் கிராமப் பஞ்சாயத்துகளைப் பிணைக்கவேண்டும். கிராமக் கூட்டுறவு சங்கங்களை, மேல் நிலையில் உள்ள கூட்டுறவு யூனியனுடனும், பண்

டங்களைப் பக்குவப்படுத்தி விற்கும் சங்கங்களுடனும் பிணைக்க வேண்டும். இவ்வாறு பிணைத்தால்தான் கிராம யூனிட்டுகள் திறமையாகச் செயல் புரியவும் விரிவான சமுதாய வாழ்க்கை அமைப்பில் பொருந்திக்கொள்ளவும் முடியும்.

தீவிரக் கிராம அபிவிருத்தித் திட்டம் சம்பந்தமாகப் பஞ்சாயத்து உறுப்பினர்கள், கூட்டுறவு சங்க டைரெக்டர்கள் ஆகியோருக்கு உள்ள கடமைகளையும் அலுவல்களையும் தெளிவாக உணர்த்த வேண்டும். கணிசமான போதனை நடத்த வேண்டியிருக்கும். விவசாய வேலை இல்லாத பருவங்களில் அவர்களுக்கு இவ்வாறு போதனை அளிப்பதற்காகத் தே. வி. வட்டாரம் ஒவ்வொன்றிலும் நிரந்தர ஏற்பாடுகள் செய்யவேண்டும். பஞ்சாயத்து, கூட்டுறவு ஸ்தாபனங்களின் நிர்வாக, ஒழுங்குமுறை அலுவல்கள் பற்றி மாத்திரம் போதனையளித்தால் போதாது. அபிவிருத்தி சம்பந்தமான சகல விஷயங்களையும் போதிக்கவேண்டும். விவசாய உற்பத்தியைப் பெருக்குதல், ரசாயன உரங்களையும் இயற்கை எருக்களையும் உபயோகித்தல், கம்போஸ்ட் தயாரித்தல் முதலியவை எல்லாம் இதில் அடக்கம். வட்டாரத்தில் உள்ள உத்தியோக சார்பற்ற சிறந்த தலைவர்களின் ஆதரவைக் கிராம அபிவிருத்திப் பணிக்குப் பெற வேண்டும். வேலைக்கிரமங்களை இத்தலைவர்களுக்குப் போதுமானபடி விளக்க வேண்டும்.

## கோஷ்டிப் பூசல்கள்

கிராமப் பஞ்சாயத்துக்கள், கூட்டுறவு சங்கங்கள் பற்றிய பேச்சை எடுக்கும்போதெல்லாம் கிராமங்களில் பகைக் கோஷ்டிகள் இருக்கும் விஷயம் பிரஸ்தாபிக்கப்படுகிறது. இந்த ஸ்தாபனங்கள் நல்ல முறையில் வளர்வதை இந்தக் கோஷ்டி நிலைமை தடுத்துவிடும் என்று கூறப்படுகிறது. கோஷ்டிகள் இருப்பது உண்மையே. இந்தத் தீய சக்திகளை ஒழிப்பதற்குச் சகல விதங்களிலும் முயலவேண்டும் என்பதிலும் சந்தேகம் இல்லை. விவசாயத் துறையில் நீண்ட காலம் வேலையில்லாத நிலைமை காணப்படுவதுதான் இன்றைய கிராம வாழ்க்கையின் பெரும்பாலான தீமைகளுக்குக் காரணம் என்பது என்னுடைய சொந்த அபிப்பிராயம். பருவ காலங்களுக்கு இடையே பல மாதங்களில் விவசாய வேலை எதையும் நடத்த முடிவதில்லை.

வேலை வசதியையும் உற்பத்தியையும் அதிகரிப்பதற்காக ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனியாகத் திட்டம் வகுப்பதுதான் இதற்குப் பரிகாரம். வறுமைப் பேயை ஒருமுகமாகத் தாக்குவதற்கும், சுய முயற்சியால் வாழ்க்கைத் தரத்தைக் கணிசமாக உயர்த்துவதற்கும் கிராமவாசிகள் அனைவரையும் ஒன்று சேர்த்தால், கிராம வாழ்வில் காணப்படும் தீமைகளில் பல மறைந்துவிடும். தே. வி. ச. இயக்கத்தின் அடிப்படைக் கருத்து இதுவே.

ஐந்தாண்டுத் திட்டத்தின் தேவைகளுக்கு ஏற்ப கிராம சுயாட்சியை எவ்வாறு திருத்தி அமைக்கலாம் என்பதைப் பொதுப் படையாக விளக்கினேன். நெளிவு சுளிவற்ற ஒரே முறையை எல்லா இடங்களிலும் கையாளக் கூடாது. ஒவ்வொரு ராஜ்யமும், ராஜ்யத்தில் அடங்கிய பல்வேறு பிரதேசங்களும் கூட, தங்கள் சொந்த நிலவரங்களுக்கு ஏற்ற அமைப்புகளை வகுத்துக்கொள்ள வேண்டும். கிராமவாசிகள் சுயமாகச் செயலாற்றுவதற்கு எல்லா இடங்களிலும் வழி செய்யவேண்டும் என்பதுதான் முக்கியமானது. கூட்டுறவு சங்கங்களில் அவர்கள் சுய பலத்துடன் உறுப்பினர்கள் ஆகவேண்டும்; சமுதாய நல வேலைகளுக்கு அவர்கள் தாராளமாக உழைப்புத் தானம் தரவேண்டும். இவ் வழியில்தான் பரந்த அளவில் அபிவிருத்தி காணமுடியும்.

## (3)*

இந்தியாவில் கால் பங்குக்கு மேற்பட்ட பரப்பில் தேசிய விஸ்தரிப்பு இயக்கத்தைப் பரப்பியதுதான் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் மிக முக்கியமான சாதனை. புரட்சிகரமான இயக்கம் என்று இதை நமது பிரதம மந்திரி குறிப்பிடுகிறார். "தற்காலத்தில் ஆசியாவில் நடக்கும் மிக முக்கியமான இயக்கம்" இது என்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபன நிபுணர் கோஷ்டி வர்ணிக்கிறது.

இந்த இயக்கத்தின் அடிப்படைக் கருத்துக்களை யாவரும் அறிவர். சமூக மாறுதலை உருவாக்குவது, புதுவாழ்வு பெறக் கிராமங்

* *"சைனிக் சமாச்சார்" சஞ்சிகையின் குடியரசு தின மலரில் எழுதிய கட்டுரை—1957, ஜனவரி.*

களுக்கு உதவி செய்வது, பழைமைப் பித்தை மாற்றவேண்டும் என்ற பேரார்வத்தை லட்சோப லட்சம் கிராமாந்தரக் குடும்பங் க்ளுக்கு ஊட்டுவது, புது அறிவிலும் புது வாழ்க்கை முறைகளிலும் அவர்களுக்கு உற்சாகம் ஏற்படுத்துவது—இவைதாம் அந்த இயக் கத்தின் குறிக்கோள்கள். கிராம மக்களின் சுய உதவியும் கூட்டுற வும், தங்கள் சிரத்தைகள் பொதுவானவை என்ற உணர்வும்தான் இயக்கத்துக்கு ஆதாரமாக இருப்பவை. மக்களின் இயக்கமாகவே அதை வளர்க்கவேண்டும். ஆலோசனை கூறுவதும், பண்ட சப்ளை, '*சர்வீஸ்*', கடன் வசதி ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்வதும்தான் அதிகாரிகளின் அலுவல்கள்.

## சுயாட்சியும் சுய முயற்சியும்

கிராம சுயாட்சியே இந்த இயக்கத்துக்கு அஸ்திவாரம் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். பின்னிப் பிணைந்த உறவுமுறைகளைக் கொண்ட "*கிராமமே*" சரித்திரம் நெடுகிலும் நம் நாட்டின் வாழ் வுக்கு ஜீவாதாரமாக இருந்து வந்திருக்கிறது. பொதுச் சிரத்தைகள், ஐக்கிய உணர்வு என்ற பந்தங்களால் பிணைக்கப்பட்டிருக்கின்றனர் கிராம மக்கள். *சுயேச்சையான*, விறுவிறுப்பான கிராம வாழ்க் கையை உருவாக்கவேண்டும். பஞ்சாயத்துகள், பல - காரியக் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றின் மூலம் உற்பத்தி வேலைகளுடன் அவ்வாழ்க்கையைப் பிணைக்க வேண்டும்.

பின்கண்ட ஏற்பாடுகள் இல்லாவிடில் கிராமக் கடன் வசதி எதுவும் வெற்றிபெற முடியாது என்பது அனுபவ பூர்வமான உண்மை: (1) உற்பத்தியை உயர்த்துவதற்கான திட்டங்களுடன் கடன் வசதியைப் பிணைக்க வேண்டும்; கிராமத்தில் உள்ள ஒவ் வொரு குடும்பமும் இத் திட்டங்களில் இடம்பெற வேண்டும். (2) குறித்த காரியத்துக்குக் கடன் பணத்தை உபயோகிக்கும்படியும், உரிய காலத்தில் கடனை அடைக்குமாறும் கிராம சமுதாயம் கவனித் துக்கொள்ள வேண்டும். (3) ஒவ்வொரு குடும்பமும் முறையாகச் சேமிக்க வேண்டும்; கூட்டுப் பொறுப்பு உணர்ச்சி வளரவேண்டும்; கடன் - சங்கத்துக்கு வேண்டிய நிதியைக் கிராமத்திலேயே மேன் மேலும் திரட்டிக்கொள்ளும் நிலைமை ஏற்படவேண்டும். கிராமம் முழுதுக்குமான உற்பத்தித் திட்டங்களுடன் கூட்டுறவு இயக்கம்

முன்பெல்லாம் பிணைக்கப்படவில்லை. அதனால்தான் பல பிரதேசங்களில் அவ்வியக்கம் வேர் ஊன்ற முடியவில்லை. இந்தக் குறை இப்போது நீக்கப்படுகிறது.

அபிவிருத்தித் திட்டங்கள்; சிறு பாசன வேலைகள் முதலியவற்றுக்காகச் சென்ற பல தசாப்தங்களைவிட மிக அதிகமான நிதி இப்போது ஆண்டுதோறும் செலவிடப்படுகிறது. வருங்காலத்தில் விடு முதலாக உபயோகிப்பதற்கு வசதியாக இச் செலவைக் கூடுமான வரை சிக்கனப்படுத்துவது அவசியம். ஒவ்வொரு குடும்பத்துடனும் தொடர்பு கொள்கின்ற கிராமக் கூட்டுறவு சங்கம்தான் இதற்கு வழி செய்ய முடியும். இச் சங்கத்துக்கு உதவிபுரியக் கிராம நிலை ஊழியர் இருக்கிறார். ஒருசில கிராமங்களே அவர் பொறுப்பில் உள்ளன.

பொதுநிலக் கட்டுமான வேலைகளை நிறைவேற்றத் தொண்டர்களைத் திரட்டுவதற்குக் கிராம சமுதாயம்தான் மிகச் சிறந்த சாதனம். திட்டமிடுவது சம்பந்தமான ஒரு அடிப்படைக் கருத்து இது. பொருளாதார ரீதியில் பின்தங்கி நிற்கிறது நம் நாடு. இத்தகைய தேசம் எதுவும் நிரந்தர ஆஸ்திகளை உருவாக்குவதற்காகத் தனது மனித சக்தியைப் பயன்படுத்துவது அவசியம். கிராமத்தில் உள்ள சாதனங்களை ஒன்றுசேர்த்தால், தனி நபர்களின் சக்திக்கு அப்பாற்பட்ட காரியங்களையும் கூட்டாக நிறைவேற்ற முடியும். உதாரணமாக, தனி நபர்கள் சொந்த நலனுக்காகச் சிறு பாசன வேலைகளை மேற்கொண்டால் சிறு விவசாயிகள் பலருக்கு அதில் பங்கு இருக்காது. தொழிலாளர்களுக்கு ரொக்க ஊதியம் கொடுப்பதானால் இத்தகைய வேலைகளுக்கு மிக அதிகமான பணம் செலவாகும். சீனாவில் விவசாயக் கூட்டுறவு சங்கத் தொழிலாளர்கள் ஸ்தல அபிவிருத்தி வேலைகளை நிறைவேற்றுகின்றனர். அச் சங்கங்களின் தனிப்பெரும் சிறப்பு இது. சிறு பாசன வேலைகள், வடிகால்கள் வெட்டுவது, மண் வளப் பாதுகாப்பு, மரம் நடுதல், பயிர் நிலத்தைத் தீவிரமாகப் பண்படுத்துதல் முதலிய வேலைகளை அவர்கள் இவ்வாறு நிறைவேற்றுகின்றனர். இவை பிரமாதமான பலன் கொடுத்திருப்பதாகப் பல்வேறு புள்ளி விவரங்களிலிருந்து தெரிகிறது. அங்கு சில பிராந்தியங்களில் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குள் பாசன நிலத்தின் பரப்பு இரட்டிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலும் இதுபோன்ற சாதனைகள் அசாத்தியமானவை அல்ல; சிறு பாசன ஏற்பாடுகள்,

மரங்களையும் தோப்புகளையும் முறையாக நட்டு வளர்த்தல், சமுதாயத்தின் வேறு பல தேவைகளைப் பூர்த்திசெய்தல் ஆகியவற்றுக்குக் கிராம மக்களின் பூரண ஒத்துழைப்புடன் திட்டம் வகுக்கவேண்டும். இக் காரணத்தினுல்தான் பஞ்சாயத்துகள், பல - காரியக் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றின் பொறுப்பை வெகுவாக வலியுறுத்தியுள்ளோம்.

## கூட்டுறவின் மகிமை

சுயாட்சி நடத்தும் கிராமப் பஞ்சாயத்துகள், பல - காரியக் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே திட்டங்களைத் தயாரிக்கவேண்டும். இதுவே ஜனநாயக முறையில் திட்டமிடுவது. பிரிட்டனில் சோஷலிஸ லட்சியங்களை நிறைவேற்றுவதில் கூட்டுறவு இயக்கத்துக்குப் பெரும் பங்கு உண்டு என்று ஸ்ரீ. கிராஸ்லண்ட் சமீபத்தில் ஒரு புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிருர். பிரிட்டனைப் போலவே இந்தியாவுக்கும் இது பொருந்தும். கிராமக் கூட்டுறவு சங்கத்தின் எல்லா உறுப்பினர்களும் சமமானவர்கள் ; சங்கத்துக்கு லாப நோக்கம் இல்லை ; தங்கள் சிரத்தைகள் பொதுவானவை என்ற உணர்வு அவர்களுக்கு உண்டு. கூட்டுறவு இயக்கம் இருக்கவேண்டும் என்பதற்கு அதன் தார்மிகப் பண்புகள்தாம் முக்கிய காரணம் ; அவையே அதன் பெருஞ் சிறப்பு.

பாதுகாப்புப் படையினருக்கும் மாஜி ராணுவத்தினருக்கும் ஒரு வார்த்தை. தேசிய விஸ்தரிப்பு இயக்கத்தின் அடிப்படைக் குறிக்கோள்களை அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். இந்த இயக்கத்தில் எவ்வாறு தொடர்பு கொள்ளலாம் என்பதை ஆலோசிக்குமாறு அவர்களை வேண்டுகிறேன். சர்வீஸில் இருப்பவர்கள், ஒழிவு நேரத்தில், குறிப்பிட்ட வேலைக்கிரமங்களை நிறைவேற்றத் தனியாகவோ கோஷ்டியாகவோ எவ்வழிகளில் உதவலாம் என்பது குறித்து உங்கள் பிரதேசங்களில் உள்ள சமுதாயத் திட்ட அதிகாரிகளைக் கலந்தாலோசிக்கலாம். உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றவர்கள், அவர்கள் எந்த அந்தஸ்து உள்ளவர்கள் ஆனுலும் சரி, தொண்டு புரிவதற்கு எல்லையற்ற வாய்ப்புகள் உண்டு. அவர்களில் பலர் இந்த இயக்கத்தில் சேர்வர் என்று நம்புகிறேன்.

# 8. இரண்டாவது திட்டத்தில் விவசாயம்*

அபிவிருத்திக் கமிஷனர்களின் இந்த மகாநாட்டுக்கு ஒரு விசேஷ முக்கியத்துவம் உண்டு. அதாவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பார்லிமெண்டு அங்கீகாரம் செய்த பிறகு நடக்கும் முதலாவது மகாநாடு இதுவே. அதனால், இந்தியாவின் பொருளாதார அபிவிருத்தியில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வகிக்கும் கேந்திர ஸ்தானத்தை முதலில் விளக்க விரும்புகிறேன். அதோடு, இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேசிய விஸ்தரிப்பு இயக்கம் எவ்வழிகளில் உதவவேண்டும் என்பதையும் விளக்க விரும்புகிறேன். பொருளாதார, சமூக முன்னேற்றம் சம்பந்தமாக நமது ஐந்தாண்டுத் திட்டத்தில் உள்ள கொள்கைகளையும் வேலைக் கிரமங்களையும் இந்த இயக்கம் நிறைவேற்றவேண்டும். இவற்றை நிறைவேற்றுவதற்கான தேசிய முயற்சியில் தே. வி. ச. இயக்கம் உயர்ந்த பட்சப் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும்.

தேசிய விஸ்தரிப்பு இயக்கம், தே. வி. ச. கட்டம், சமுதாயத் திட்டக் கட்டம் முதலியவை ஏதோ தற்காலிக நோக்கங்களுக்கான விசேஷ வேலைக்கிரமங்கள் அல்ல என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ளவேண்டும். பழைய மனத்திருஷ்டிகள், சிந்தனைப் போக்குகள் ஆகியவற்றிலிருந்து அடியோடு மாறுபட்ட இயக்கமாக அது ஒரு பிரதேசத்தில் பிரவேசிக்கிறது. இந்த அளவுக்குத்தான் அதை ஒரு ‘இயக்கம்’ என்று குறிப்பிடலாம். மற்றப்படி அது க்ஷேமநல அரசாங்கத்தின் நிரந்தர அமைப்பே. சமூக மாறுதலுக்காக அது பாடுபடுகிறது. கிராம அபிவிருத்தி என்பது கிராம வாழ்க்கையின் எல்லாப் பிரிவுகளிலும் வியாபிக்கின்ற நிரந்தரப் பணி என்று அது கருதுகிறது. மேலேயிருந்து ஜில்லா, கிராமம்வரை உள்ள ஒவ்வொரு நிர்வாகப் பிரிவும் கிராம அபிவிருத்தியைத் தனது

---

* முசூரியில் அபிவிருத்திக் கமிஷனர்களின் 6-வது மகாநாட்டில் பேசியது–1957, ஏப்ரல்.

பிரதான அலுவலாகக் கொள்ளவேண்டும் என்று அந்த இயக்கம் கருதுகிறது. இந்த நிர்வாகத்தினர் ஒவ்வொரு கட்டத்திலும் உத்தியோக சார்பற்ற சிறந்த தலைவர்களின் உதவியை நாடிப் பெறவேண்டும். இந்த இயக்கத்தை அமல் நடத்தும் பொறுப்பு முழுதும் ராஜ்ய சர்க்கார்களின் மாமூல் ஸ்தாபனங்களைச் சார்ந்ததே. ராஜ்ய அரசாங்க அமைப்பின் இணைப்பான அங்கம் அது, அந்த அமைப்புக்குப் புறம்பானது அல்ல.

## மிக முக்கியமான கட்டம்

தேசிய வாழ்க்கையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு உள்ள கேந்திர ஸ்தானம் பற்றி மேலே குறிப்பிட்டேன். நாட்டைத் துரிதமாகத் தொழில்மயமாக்கும் காரியத்தைத் தொடக்கி வைக்க இத் திட்டம் முற்படுகிறது. இதில் கனரக இயந்திரத் தொழில்களுக்கு விசேஷ முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. வருங்கால ஐந்தாண்டுத் திட்டங்கள் இக் காரியத்தைத் தொடர்ந்து நிறைவேற்றும். நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் இப்போதைய கட்டம்தான் மிகவும் முக்கியமானது. ஸ்ரீ. டபிள்யு. ஆர். ரோஸ்டாவ் சமீபத்தில் எழுதிய கட்டுரையில் உள்ள பின்கண்ட வாசம் இதை எடுத்துக் காட்டுகிறது :

> "இரண்டு அல்லது மூன்று தசாப்தங்கள் வரை உள்ள குறுகிய காலகட்டம்தான் பொருளாதார வளர்ச்சிக்கு நடுநாயகமானது என்று கருதலாம். பிற்காலத்தில், ஏறத்தாழ சுயமாகவே பொருளாதாரம் வளரும் விதத்தில், இந்தக் காலகட்டத்தில் (இரண்டு மூன்று தசாப்தங்களில்) பொருளாதாரம் தன்னை மாற்றிக்கொள்கிறது; பொருளாதாரத்தைத் தன்னகத்தே கொண்ட சமூகமும் மாறிக் கொள்கிறது. இந்த முக்கியமான மாறுதலையே புறப்பாட்டு வேகம் (The take-off) என்று குறிப்பிடுகிறோம்."

இந்த "முக்கியமான மாறுதலை" ஆரம்பித்து வைக்க இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முற்படுகிறது. அடுத்த மூன்று, நான்கு திட்டங்கள் இக் காரியத்தைத் தொடர்ந்து நிறைவேற்றிவைக்கும்

இந்தத் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறிய பிறகு, "சுய பலத்துடன்" அல்லது "ஏறத்தாழ சுயமாகவே" வளர்ச்சியடைவது சாத்தியமாகும். "மாறுதல் ஏற்படுகின்ற" இந்த ஆண்டுகளில் தான் (இடைக்காலத்தில்) நாம் கஷ்டமான பல பிரச்னைகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும். இந்த ஆண்டுகளில்தான் தேச வியாபகமாகப் பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டியிருக்கும். அடுத்த இருபது வருஷங்களில் எத்தகைய வேகத்தில் அபிவிருத்தி அடைய வேண்டும் என்பதைப் பின்க்ண்ட அட்டவணையில் காணலாம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய திட்டக் கமிஷன் யாதாஸ்தில் இது இருக்கிறது :

**வருமானம், முதலீடு ஆகியவற்றின் வளர்ச்சி—1951-56 முதல் 1971-76 வரை (1952-53 விலைவாசிப்படி)**

| இனம் | முதல் திட்டம் 1951-56 | 2-வது திட்டம் 1956-61 | 3-வது திட்டம் 1961-66 | 4-வது திட்டம் 1966-71 | 5-வது திட்டம் 1971-76 |
|---|---|---|---|---|---|
| 1. *திட்ட கால இறுதியில் தேசிய வருமானம் (ரூ. கோடிகள்)* | 10,800 | 13,480 | 17,260 | 21,680 | 27,270 |
| 2. *மொத்த நிகர முதலீடு (ரூ. கோடிகள்)* | 3,100 | 6,200 | 9,900 | 14,800 | 20,700 |
| 3. *திட்ட கால இறுதியில் தேசிய வருமானத்தில் முதலீட்டின் சத விகிதம்* | 7·3 | 10·7 | 13·7 | 16·0 | 17·0 |
| 4. *திட்ட கால இறுதியில் நபர்வாரி சராசரி வருமானம்* | 281 | 331 | 396 | 466 | 546 |

பெரிய அளவில் அபிவிருத்தி அடைய விரும்பும் ஒவ்வொரு நாடும் "புறப்பாட்டு வேகம்" என்ற இந்தக் கட்டத்தைத் தவிர்க்க முடியாது, என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். தேசிய வருமானத்தில் 10 சத விகிதமாக இருக்கும் வருஷாந்தர முதலீட்டு விகிதத்தை, இருபது வருஷ காலத்தில் 17 சத விகிதமாக உயர்த்த விரும்புகிறோம். இதில் நாம் வெற்றிபெற்றால் ஐந்தாவது ஐந்தாண்

டுத் திட்ட இறுதியில், அதாவது 19 வருஷங்களுக்குப் பிறகு, நபர் வாரி வருமானம் ஏறத்தாழ இரட்டிக்கும். இது ஒரு மிதமான குறிக் கோள்தான். 19 ஆண்டுகளுக்குப் பிறகு நபர்வாரி வருமானம் ரூ. 546 ஆக இருக்கவேண்டும் என்று விரும்புகிறோம். இப்போதுகூட இதை விட (ரூ. 546-ஐ விட) குறைவான நபர்வாரி வருமானம் உள்ள நாடு கள் ஒரு சிலதான் உண்டு.

ஜனநாயக ஸ்தாபனங்கள் திறம்பட இயங்கவேண்டுமானால், மற்ற வசதிகள் இருப்பதுடன், குறைந்தபட்சச் சமூக-பொருளாதார முன்னேற்ற நிலையும் இருப்பது அவசியம் என்று ஸ்ரீ. ஜான் ஸ்டிராச்சி சுட்டிக்காட்டுகிறார். சமீபத்தில் வெளியான "தற்கால சோஷலிசம்" (Contemporary Socialism) என்ற புத்தகத்தில் அவர் மேலும் எழுதுகிறார்: "பிரதிநிதித்துவ ஸ்தாபனங்கள் திறம் பட இயங்கவேண்டுமானால், பொருளாதார-சமூக நிலையானது இப் போது வட இத்தாலியில் உள்ளதைவிடச் சற்றுத் தாழ்வாகவும், தென் இத்தாலியில் உள்ளதைவிட உயர்வாகவும் இருக்கவேண்டும். உதாரணமாக இதைக் குறிப்பிடலாம். அந்த இன்றியமையாத நிலையை எட்டியுள்ள, அல்லது நெருங்கியுள்ள நடுவாந்தர நாடு ஒன்றை இத்தாலி பிரதிபலிக்கிறது." தென் இத்தாலியில் $112\frac{1}{2}$ பவுனும் (1 பவுன் = ரூ. 13·33) வட இத்தாலியில் $202\frac{1}{2}$ பவுனும் வருஷ வாரி, நபர்வாரி வருமானம் என்று அவர் குறிப்பிடுகிறார்.

1976-ல் நாம் எட்டிப்பிடிக்க விரும்பும் 546 ரூபாயுடன் இதை ஒப்பிட்டுப் பாருங்கள். அடுத்த 15 அல்லது 20 வருஷ காலத்தில் நாம் என்ன சாதிக்கிறோமோ அதுதான் நாட்டின் வருங்காலத்தை நிர்ணயிக்கப்போகிறது என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது. நமது பொருளாதாரமும் வாழ்க்கை முறையும் நிலைக்குமா என்பது இந்தச் சாதனையையே பொறுத்திருக்கிறது. ஆகவே நாட்டு மக்கள் தாங்கள் வரித்துக் கொண்டுள்ள குறிக்கோள்களை அடைவதற்காக ஒன்றுபட்டு உழைக்க முன்வர வேண்டும்.

## விவசாயத்தின் பங்கு

தொழில்களை வளர்ப்பதற்கு வேண்டிய நிதியில் எவ்வளவு பங்கை விவசாயம் கொடுக்க வேண்டும் என்பது ஒரு பிரச்னை. பெரிய அளவில் அபிவிருத்தி அடைய முற்படும் எல்லா நாடுகளிலும்

எழும் பிரச்னைதான் இது. இவ்விஷயத்தில் கிடைத்துள்ள அனுபவத்தைப் பேராசிரியர் ஆர்தர் லூயிஸ் விளக்கியிருக்கிறார். "பொருளாதார வளர்ச்சிச் சித்தாந்தம்" (The Theory of Economic Growth) என்ற புத்தகத்தில் அவர் எழுதுகிறார்:—

"விவசாயத் துறையில் உற்பத்தித் திறன் அதிகரித்துள்ள பல நாடுகளில் விவசாயிகளின் வரிப் பளுவும் கடுமையாக அதிகரித்திருக்கிறது. மற்றத் துறைகளுக்கு வேண்டிய விடுமுதலாக இது (வரிப்பணம்) உபயோகிக்கப் படுகிறது. இந்நாடுகளில் மற்றத் துறைகளிலிருந்து விவசாயத் துறைக்கு விடுமுதல் கிடைப்பதற்குப் பதிலாக, தொழில் புரட்சிக்கு வேண்டிய நிதியை விவசாயிகளே நிர்ப்பந்தமாகக் கொடுத்திருக்கிறார்கள். இதற்கு ஜப்பான் ஒரு உதாரணம். அந்நாட்டில் 1885—1915 வருஷங்களுக்கு இடையே விவசாயத் துறையில் சராசரி நபர்வாரி உற்பத்தித் திறன் இரட்டித்தது. ஆனால் இந்த அதிகரிப்பில் பெரும் பகுதி, அதிக மேல்வாரமாகவோ வரிகளாகவோ விவசாயிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டு, மற்றப் பொருளாதாரத் துறைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது. யு. எஸ். எஸ். ஆர். (ரஷியா) மற்றொரு உதாரணம். அங்கு, இரு உலக யுத்தங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் விவசாயம் இயந்திர மயமாக்கப்பட்டது; ஏராளமான விவசாயத் தொழிலாளர்கள் நகரங்களுக்கு அனுப்பப்பட்டனர். இதன் பிறகும் அங்கு விவசாயத்தில் நபர்வாரி வருமானம் குறைவாகவே இருக்கும்படி கட்டுப்படுத்தப்பட்டது. விவசாயப் பண்டங்களைவிட ஆலைப் பண்டங்களின் விலைகளை அதிகமாக உயர்த்தியதன் மூலமும், கூட்டுப் பண்ணைகள் (கலெக்டிவ் பார்ம்) மீது கடுமையான வரிகளை விதித்ததன் மூலமும் விவசாயியின் வருமானம் குறைந்த நிலையில் வைக்கப்பட்டது. மற்றும் கோல்டு கோஸ்ட், பர்மா, யுகாண்டா நாடுகளைச் சமீப உதாரணங்களாகக் குறிப்பிடலாம். 1954 முதல் விவசாயப் பண்டங்களின் விலை உயர்ந்தபோது, அந்த விலை உயர்வில் மிகக் கணிசமான பகுதி விவசாயி

களின் கைக்கு எட்டாதபடி இம்மூன்று நாடுகளின் சர்க்கார்கள் தடுத்துள்ளன. இவ்வழியில் கிடைக்கும் நிதியில் ஒரு பகுதியைப் பொருளாதாரத்தின் மற்றத் துறைகளை அபிவிருத்தி செய்வதற்காக அவை பயன்படுத்துகின்றன.''

சீனாவின் உதாரணத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். அந்நாட்டின் நிலவரங்கள் நம் நாட்டைப் போன்றவையே. இரு நாடுகளிலும் பல நூற்றாண்டுகளாகப் பயிரிடப்பட்டுவரும் நிலத்தை நம்பி ஏராளமான ஜனங்கள் வாழ்கின்றனர். பெரிய அளவில் தொழில்களை வளர்ப்பதற்கு இரு தேசங்களும் முற்பட்டிருக்கின்றன. சீனாவில் பயிர் நிலத்தின் அளவு அநேகமாய் நம் நாட்டைப் போன்றதுதான்; ஆனால் அங்கு இரு மடங்கு மகசூல் கிடைக்கிறது. சீனாவில் விவசாயத் துறையிலிருந்து ஆண்டுதோறும் ரூ. 500 முதல் ரூ. 600 கோடி வரை வரிகளாக வசூலிக்கப்படுகிறது; நம் நாட்டில் ரூ. 80 முதல் 90 கோடி வரைதான் கிடைக்கிறது. நம் நாட்டிலும் இதே அளவு வரி விதிப்பது சாத்தியம் என்றோ, விரும்பத்தக்கது என்றோ நான் சொல்லவரவில்லை.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தையும் அடுத்துவரும் ஐந்தாண்டுத் திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு விவசாயம் கொடுக்க வேண்டிய பங்கு என்ன? இந்தத் திட்டங்களுக்கு வேண்டிய நிதியில் விவசாயத்திலிருந்து எவ்வளவு பங்கு கிடைக்கவேண்டும்? இந்தப் பிரச்னைக்கு நாம் நமது சொந்த வழிகளில் பரிகாரம் தேட வேண்டும்.

விவசாயத்தின் தரத்தை உயர்த்துவது, கூட்டுறவு முறையைப் பரப்புவது, பெரிய அளவில் நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்துவது, மற்ற வழிகளிலும் விவசாயத்தை நவீனப்படுத்துவது ஆகியவை சம்பந்தமாக முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு முன்னால் சர்க்கார் முறையான முயற்சி எதுவும் செய்யவில்லை. இரண்டாவது உலக யுத்தத்துக்கு முந்திய வருஷங்களில் விவசாய அபிவிருத்திக்காகவும் கூட்டுறவு இயக்கத்துக்காகவும் விவசாய மக்களில் நபருக்குச் சுமார் 8 அணா விழுக்காட்டில் ராஜ்ய, மத்திய சர்க்கார்கள் பணம் செலவிட்டதாக மதிப்பிடப்படுகிறது. 1947 - 48 முதல் 1951 - 52 வரை உணவு உற்பத்திப் பெருக்க இயக்கம் அமல் நடத்

தப்பட்டது. அந்த ஆண்டுகளில் நடந்தது போன்ற தீவிர முயற்சி அவ்வளவு பெரிய அளவில், முன்பு நடந்ததேயில்லை. எனினும், மொத்தப் பயிர் நிலத்தில் ஒரு சொற்பப் பகுதியில்தான்—2 முதல் 4 சதவிகிதம்தான்—உ. உ. பெ. நடவடிக்கைகள் வியாபித்திருந்தன.

கிராம வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் புரட்சிகரமான வேலைக்கிரமங்களை ஆரம்பித்து வைத்தது; அவற்றை நிறைவேற்றுவதற்கு வேண்டிய நிதியையும் ஒதுக்கியது. இவ்வளவு அதிகமான நிதி வசதியை முன்பு யாரும் நினைத்திருக்கக்கூட மாட்டார்கள். தேசிய விஸ்தரிப்பு வட்டாரங்கள், சமுதாயத் திட்டத் தொகுதிகள் பல - காரிய அணைத் திட்டங்கள், பெரிய-நடுத்தர-சிறிய பாசனத் திட்டங்கள், விவசாயத்தில் புதிய செய்முறைகளைப் பரவலாகக் கையாள்வது (கால்நடைப் பராமரிப்பு, மீன் நிலைகள், காடு வளர்த்தல், மண் வளப் பாதுகாப்பு ஆகியவையும் இவற்றுள் அடக்கம்); கிராமப் பொருளாதாரத்தில் புதிய பிரிவுகளை ஏற்படுத்துதல் முதலியவை இந்த வேலைக்கிரமங்கள் ஆகும்.

தேசப் பிரிவினை காலத்தில் இந்தியாவின் பங்குக்குக் கிடைத்த பெரிய நீர்ப்பாசனச் சாதனங்களின் அசல் மதிப்பு சுமார் ரூ. 110 கோடிதான். ஆனால் இத்தகைய சாதனங்களை அதிகரிப்பதற்காக 1950 - 51 முதல் 1955 - 56 வரை மாத்திரம் செலவிடப்பட்ட பணம் சுமார் ரூ. 400 கோடியாகும். இந்த ஐந்தாண்டுகளில் சிறிய நீர்ப் பாசன வசதிகள், குழாய்க் கிணறுகள் ஆகியவற்றுக்காக ரூ. 110 கோடி செலவிடப்பட்டது. முதல் திட்டம் தொடங்கியபோது 2,500 குழாய்க் கிணறுகள்தாம் இருந்தன. அந்தத் திட்ட காலத்தில் 3,350 குழாய்க் கிணறுகள் புதிதாக நிறுவப்பட்டன. குழாய்க் கிணறுகள் நீங்கலாக, மற்றச் சிறு பாசன வேலைகளுக்காக மாத்திரம், முந்திய தசாப்தங்கள் எல்லாவற்றையும்விட அதிகமான நிதியை இந்த ஐந்தாண்டு காலத்தில் செலவிட்டோம்.

## உற்பத்தி ஏன் உயரவேண்டும்?

கிராம அபிவிருத்தி வேலைகள் எல்லாவற்றுக்குமாக முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தம் ரூ. 770 கோடி ஒதுக்கப்பட்டது. இரண்டாவது திட்டத்தில் இவற்றுக்காக மொத்தம் ரூ. 1,026 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதாவது, வருஷத்துக்கு ரூ. 205 கோடி

வீதம் செலவிட வசதி செய்யப்பட்டிருக்கிறது. கிராமங்களில் மின் சாரம் போடுதல், குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள், கிராமாந் தர சர்க்கரை ஆலைகள், கிராம ஜல சப்ளைத் திட்டங்கள் முதலியவற் றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதிகள் இந்தக் கணக்கில் சேரவில்லை. வருங்காலத் திட்டங்களிலும் கிராம அபிவிருத்தி வேலைகளுக்காக மேன்மேலும் அதிகமான நிதி ஒதுக்கப்படும் என்பது உறுதி. ஏனெனில், பொருளாதார அமைப்பின் எல்லாத் துறைகளையும் சம சீராக அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதே நமது கொள்கை. விவசாய உற்பத்தியைப் பெருவாரியாக அதிகரிக்கத் திட்டமிடா விடில் தொழில்களை வளர்ப்பதற்கான திட்டம் எதுவும் வெற்றி பெற முடியாது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் வருங்காலத் திட்டங்களிலும் தொழில்களைப் பிரம்மாண்ட அளவில் வளர்ப்பதன் விளைவாக விவசாயப் பண்டங்களுக்கான தேவை வேகமாக அதிகரிக் கும். இதைப் பூர்த்தி செய்வதற்காக விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டியிருக்கும். அதோடு அந்நியச் செலாவணி சம்பா திப்பதற்காக ஏற்றுமதி செய்வதற்கும் விவசாயப் பண்டங்கள் மிஞ்ச வேண்டும். நமது ஐந்தாண்டுத் திட்டங்கள் அமல் நடக்கும்போது அந்நியச் செலாவணித் தேவையும் அதிகரிக்கும். தவிர, விவசாய உற்பத்தியைப் பெருக்கினுல்தான் பற்றுக்குறை நிதி முறையின் மூலம் ஏற்படுகின்ற பணவீக்க நிர்ப்பந்தங்களைக் கட்டுப்படுத்த முடியும். (பட்ஜெட்டில் துண்டுவிழும் தொகையைச் சரிக்கட்டுவதற் காக அதிகச்செலாவணியை அச்சிடுவது 'பற்றுக்குறை நிதிமுறை' ஆகும்—மொ. ர்.).

விவசாய உற்பத்தியை ஏன் அதிகரிக்க வேணடும் என்பதற்கு இவற்றையெல்லாம்விட முக்கியமான ஒரு காரணம் உண்டு. கிராம மக்களின் சராசரி வருமானத்தை உயர்த்த வேண்டியிருக்கிறது என்பதுதான் அக்காரணம். விவசாய உற்பத்தி உயர்வதாலும் வேலை வாய்ப்புகள் அதிகரிப்பதாலும் கிராம சமுதாயத்தினர் செல வைச் சிக்கனப்படுத்திப் பணம் சேமிப்பதற்கு வசதி ஏற்படும். இதன் விளைவாக அவர்களது பொருளாதார பந்தோபஸ்து உணர்ச்சி பல மடையும். இதற்கு வழி செய்யாவிடில், நகர வருமானங்களுக்கும் கிராம வருமானங்களுக்கும் இடையே வித்தியாசம் அதிகரிப்பதன் விளைவாக, உள்நாட்டுக் குமுறல்கள் ஏற்பட்டு சமூக உறுதி நிலைக்கு

ஆபத்து உண்டாகும். எனினும், நகரங்களில் நிறைவேற்றப்படும் பெரிய தொழில் திட்டங்கள், அபிவிருத்தி வேலைகள் ஆகியவற்ருல் கிராமப் பிரதேசங்களும் பலன் அடைகின்றன என்பதை மறக்கக் கூடாது. புதிதாக உருவாகும் தொழில் நகரங்களின் வாழ்க்கையை அண்டைக் கிராமங்களுடன் பிணைப்பதன் விளைவாகக் கிராம வாசிகளின் வருமானங்கள் அதிகரிக்கும். பொதுவாகவே நகர வாழ்க்கையையும் கிராம வாழ்க்கையையும் பிணைப்பதனுலும் இதே பலன் கிடைக்கும். இவ்வாறு பிணைப்பது தே. வி. ச. இயக்கத்தின் நோக்கங்களுள் ஒன்று.

ஆகவே, பின்கண்ட இரு கேள்விகளுக்கு நாம் விடை காண வேண்டும் :

(1) அடுத்த 15 அல்லது 20 வருஷங்களில் விவசாய உற்பத்தியை எந்த அளவுக்கு அதிகரிப்பது நம் குறிக்கோள்? அதாவது, குறிப்பிட்ட அளவுக்கு 'மொத்த' தேசிய வருமானம் அதிகரிக்க வேண்டும் என்ருல், விவசாயத்திலிருந்தும் அதைச் சார்ந்த துறைகளிலிருந்தும் எவ்வளவு அதிகமான தேசிய வருமானம் கிடைக்க வேண்டும்?

(2) முதலீடு செய்வதற்காகத் தேசிய வருமானத்தில் 10 முதல் 17 சத விகிதத்தை வருங்காலத்தில் சேமிக்க வேண்டியிருக்கும். கிராம அபிவிருத்திக்கு ஏராளமான நிதி செலவிடுவதன் விளைவாகக் கிடைக்கின்ற அதிகப்படி வருமானங்களில் எவ்வளவு பங்கை இவ்வாறு சேமித்து இரண்டாவது திட்டத்துக்கும், பிற்கால ஐந்தாண்டுத் திட்டங்களுக்கும் பயன்படுத்த வேண்டும்?

நம் நாடு தனக்குத்தானே நிர்ணயித்துக் கொண்டுள்ள குறிக்கோள்களையும், கிராமப் பொருளாதார அபிவிருத்திக்காகப் பயனுள்ள முறையில் ஆண்டுதோறும் ஏராளமாகச் செலவிடப்படும் நிதியையும் கருத்தில் கொண்டு இக் கேள்விகளுக்கு விடை தேட வேண்டும். அதோடு, சமீப காலத்தில் விலைவாசிகள் ஏறியிருப்பதையும் அந்நியச் செலாவணிக் கையிருப்பு சுருங்கியிருப்பதையும் கருத்

தில் கொள்ளவேண்டும். இந்த இரண்டும் தற்காலிகப் பிரச்னைகளே என்பது என் கருத்து. விவசாய உற்பத்தியை உடனடியாகப் பெருக்குவதுதான் இப்பிரச்னைகளுக்கும் சிறந்த பரிகாரம் ஆகும்.

உற்பத்தியைப் பெருக்கவும் சேமிப்புக்கு ஊக்கம் அளிக்கவும் கூடிய வேலைக்கிரமங்களைக் கையாள்வது ராஜ்ய சர்க்கார்களின் பொறுப்பு. தே. வி. ச. மூலமும் சமுதாயத் திட்ட ஸ்தாபனத்தின் மூலமும் இதை அவர்கள் சாதிக்க வேண்டும். எல்லாக் கட்டங்களிலும் உத்தியோகஸ்தர்கள், உத்தியோக சார்பற்றோர் என்ற இரு சாராரும் சேர்ந்து அமைந்த ஸ்தாபனம் இது. இந்த ஸ்தாபனத்தை ஏற்படுத்துவதற்காக ராஜ்யங்களுக்கு மத்திய சர்க்கார் நிரந்தர மானிய உதவி அளிக்கிறது. எனினும் இது முற்றிலும் ராஜ்ய சர்க்காரின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஸ்தாபனம்தான்.

நாடு முழுவதிலும் தே. வி. ச. இயக்கம் பரவிய பிறகு மத்திய சர்க்கார் வருஷத்துக்கு ரூ. 6 கோடி வரை இத்தகைய மானியமாகக் கொடுக்க வேண்டியிருக்கும் என்று 1952-ல் மதிப்பிடப்பட்டது. சிப்பந்திகள் சம்பந்தமான அதிகப்படிச் செலவில் பாதி இவ்வாறு கொடுக்கப்படுகிறது. மேற்சொன்ன மதிப்பீட்டை விடவும் அதிகமாக அதாவது, வருஷத்துக்கு ரூ. 8 கோடி வரை, மானியமாகக் கொடுக்க வேண்டியிருக்கும் என்று இப்போது தெரிகிறது. 1960-61 வாக்கில் ராஜ்ய சர்க்கார்கள் இதற்குச் சமமான தொகையைச் செலவிட வேண்டியிருக்கும்; இவ்வாறு, நாடு முழுதிலும் தேசிய விஸ்தரிப்பு ஸ்தாபனத்தை நிறுவும்போது சிப்பந்திகள் சம்பந்தமான அதிகப்படிச் செலவு வருஷத்துக்குச் சுமார் ரூ. 16 கோடியாக இருக்கும்; இச்செலவை ராஜ்ய சர்க்கார்களும் மத்திய சர்க்காரும் சம அளவில் ஏற்றுக் கொள்வர்.

இந்த இயக்கத்தின் தத்துவத்தை—அடிப்படைக் கோட்பாடுகளையும் குறிக்கோள்களையும்—முந்திய மகாநாடுகளில் விளக்கியிருக்கிறேன். ஆனல் தே. வி. ச. ஸ்தாபனத்தின் அச்சாணிகளாக உள்ள இரு விஷயங்களை இங்கு வலியுறுத்த விரும்புகிறேன். முதலாவதாக, இந்த இயக்கத்துக்குக் கிராம சுயாட்சியே பரந்த அஸ்திவாரமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பஞ்சாயத்து, பல-காரியக் கூட்டுறவு சங்கம் ஒன்று, ஒரு பள்ளிக்கூடம்

ஆகியவை இருக்க வேண்டும். கிராமத்தின் சமூக, பொருளாதார நடவடிக்கைகளுக்கு எல்லாம் நிலைக்களன்களாக இவை விளங்க வேண்டும். தீவிர விவசாய உற்பத்திக்கும் பணச் சேமிப்புக்கும் உதவும் விதத்தில் இம்மூன்று ஸ்தாபனங்களையும் அமைக்க வேண்டும். இரண்டாவதாக, பயிற்சி பெற்ற கிராம நிலை ஊழியரின் பொறுப்பு முக்கியமானது. கிராமத்துடன் சர்க்கார் நேரடித்தொடர்பு கொள்ளும் இடத்தில் சர்க்காரின் எல்லா அபிவிருத்தி இலாகாக்களுக்கும் அவரே பொதுப் பிரதிநிதியாக விளங்குகிருர். கிராமங்களுக்கும், வட்டார, ஜில்லா நிலைகளில் உள்ள அபிவிருத்திச் சிப்பந்தி கோஷ்டிகளுக்கும் இடையே தொடர்பு ஏற்படுத்துபவர் அவரே. இவ்வாறு, வேலைகள் இணைப்பாக நடப்பதற்கு அவர் வழி செய்கிருர்.

இயக்கம் மேன்மேலும் விறுவிறுப்பு அடையும், மக்களின் ஆதரவைப் பெறும், அவர்களது சிருஷ்டி சக்தியை வளர்க்கும் என்று மனப்பூர்வமாய் நம்புகிறேன். அப்போதுதான் நமது தேசிய வாழ்வில் அளிக்கப்பட்டுள்ள முக்கிய ஸ்தானத்தை வகிக்க அந்த இயக்கத்துக்கு அருகதை இருக்கும்.

## உற்பத்திக் குறியளவு

ஆரம்பத்தில் இரு கேள்விகளைக் குறிப்பிட்டேன் அல்லவா ? அவற்றுள் முதல் கேள்வியை இப்போது ஆராய்வோம். அதாவது, அடுத்த 15 அல்லது 20 ஆண்டுகளில் விவசாய உற்பத்தியை எந்த அளவுக்கு அதிகரிப்பது ராஜ்யங்களின் குறிக்கோளாக இருக்க வேண்டும்?

சமீபகால விவசாய உற்பத்தி, விலைவாசிகள் ஆகியவை உங்களுக்குத் தெரியும். அடிப்படை வருஷத்தில் 540 லட்சம் டன்னுக இருந்த உணவு உற்பத்தி, 1952-53-ல் 583 லட்சம் டன்னுக அதிகரித்தது ; 1953-54-ல் 687 லட்சம் டன்னுக உயர்ந்தது. ஆனுல் 1954-55-ல் உற்பத்தி 658 லட்சம் டன்னுகக் குறைந்து விட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி வருஷத்தில் அது 635 லட்சம் டன்னுக மேலும் குறைந்தது; இடைவிடாமல், தொடர்ச்சியாக விவசாய உற்பத்தி பெருகக்கூடிய நிலைமை இன்னும் வெகு தூரத்தில் இருக்கிறது என்பது தெளிவு. 1956 பிப்ரவரி முதல் 1957 பிப்ரவரி

7764
N62



வரை உள்ள காலத்தில் உணவுப் பொருள்களின் விலைவாசி சுமார் 18 சதவிகிதம் அதிகரித்திருப்பது இதையே எடுத்துக் காட்டுகிறது.

பத்தாண்டுக் காலத்தில் விவசாய உற்பத்தியை இரட்டிப்பதற்கு முயல வேண்டும் என்று திட்டக் கமிஷன் 1955 பிப்ரவரி 22உ ராஜ்ய சர்க்கார்களுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் உற்பத்தியை 40 சதவிகிதம் அதிகரிக்க வேண்டும் என்று கமிஷன் யோசனை கூறியது. ராஜ்ய சர்க்கார்கள் கமிஷனைக் கலந்து பேசிய பிறகு, 28 சதவிகிதம் உயர்த்துவதற்கு இசைந்துள்ளன. முக்கிய இனங்கள் வருமாறு:

| பண்டம் | ஆதார அளவு | இரண்டாவது திட்டத்தின் அடிப்படை உற்பத்தி அளவு | இரண்டாவது திட்டத்தின் மதிப்பிட்ட உற்பத்திக் குறியளவுகள் |
|---|---|---|---|
| உணவுத் தானியங்கள் | லட்சம் டன்கள் | 650 | 804 |
| எண்ணெய் வித்துக்கள் | ,, | 55 | 76 |
| கரும்பு (வெல்லம்) | ,, | 58 | 78 |
| பருத்தி | லட்சம் பேல்கள் | 42 | 65 |
| சணல் | ,, | 40 | 55 |

ARCHIVES LIBRARY MADRAS 4862

நீர்ப்பாசன ஏற்பாடுகள் சம்பந்தமாக 15 அல்லது 20 வருஷ வேலைக்கிரமம் ஒன்றை வகுப்பதற்குத் திட்டக் கமிஷன் நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்தக் காலகட்டத்தில் விவசாய உற்பத்தி எவ்வாறு உயரும் என்ற மதிப்பீடுகளும் தயாரிக்கப்படுகின்றன.

இந்தியாவில் விவசாய உற்பத்திப் பெருக்கத்துக்கான சாத்தியக் கூறுகளை, இங்கு வந்த உலக பாங்குத் தூதுகோஷ்டி 1956, ஆகஸ்டில் வெளியிட்ட தனது யாதாஸ்தில் குறிப்பிட்டிருக்கிறது. யாதாஸ்தின் சாரம் வருமாறு:

"ஏற்கனவே புலனாகியுள்ள செய்முறைகளைச் சரியானபடி கையாளுதல், நீர்ப்பாசன வசதியையும் பயிர் நிலப் பரப்பையும் விஸ்தரித்தல் ஆகியவற்றின் மூலம் இங்

தியாவின் விவசாய உற்பத்தியை நான்கு அல்லது ஐந்து மடங்கு அதிகரிக்க முடியும். இவ்வாறு அதிகரித்த பின் புதிய செய்முறைகள் கண்டுபிடிக்கப்படும்; மேற்கொண்டும் (உற்பத்தியை) அதிகரிப்பதற்கு வழிதுலங்கும். உணவு உற்பத்திப் பெருக்க இயக்கம் சம்பந்தமான மகசூல் போட்டிகளில், சராசரி ஸ்தல விளைச்சல்களைவிடச் சுமார் 7 மடங்கு அதிகமான மகசூல்கள் கிடைத்துள்ளன. தற்போது உலகிலேயே மிகக் குறைவான விளைச்சல்களைக் கொண்ட நாடுகளுள் ஒன்றாக இந்தியா இருக்கிறது. ஆனால் இங்குள்ள ஆள்பலத்தைக் கணக்கில் கொண்டால் உலகிலேயே மிக அதிகமான விளைச்சல்கள் கிடைக்கும் நாடுகளுள் ஒன்றாக இந்தியா ஆக முடியும். ஆகவே முன்னேறுவதற்கு எவ்வளவோ வாய்ப்பு இருக்கிறது. தொழில் நுணுக்க ரீதியில் இது சுலபமானது; வறுமை, அறியாமை காரணமாகவே முன்னேற்றம் தடைப்படுகிறது. பிற்காலத்தில் தொழில் நுணுக்கக் காரணங்களால் முன்னேறுவது சிரமப்படும் போது, கல்விச் சாதனங்களின் சக்தி அதிகரிப்பதன் பலனாக, முந்திய விகிதத்திலேயே தொடர்ந்து முன்னேற முடியும். கல்விச் சாதனங்களின் சக்தி சற்று மெதுவாகவே அதிகரிக்கும்.''

## பாசனமும் மற்ற வசதிகளும்

ராஜ்ய சர்க்கார்கள் பின்கண்ட ஏற்பாடுகளில் விசேஷ கவனம் செலுத்த வேண்டும்:—

முதலாவதாக, முதல் ஐந்தாண்டுத் திட்டச் செலவுகளின் பலனாக உருவாகியுள்ள நீர்ப்பாசன வசதிகளை முழு அளவுக்குப் பயன்படுத்த வேண்டும். முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பெரிய, நடுத்தர நீர்ப்பாசனச் சாதனங்கள் எவ்வளவு நிலப் பரப்புக்குப் பயன்பட முடியும் என்பதையும்; ராஜ்யத் திட்டங்களின்படி 1955-56 வாக்கில் எவ்வளவு நிலப் பரப்புக்குப் பாசன வசதி கிடைத்திருக்க வேண்டும் என்பதையும்; நடைமுறையில் வேளாண்மைக்குப் பயன்படுத்தப்பட்ட நிலத்தின் அளவு எவ்வளவு என்பதை

யும் விளக்குகின்ற ராஜ்யவாரி அட்டவணை ஒன்றைத் தயாரித்திருக்கிறேன்.

அந்த அட்டவணைப்படி, ராஜ்ய சர்க்கார்கள் 63 லட்சம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளித்திருக்க வேண்டும். ஆனால் நடைமுறையில் சுமார் 40 லட்சம் ஏக்கர்தான் பாசன வசதி பெற்றுள்ளது. இவ்வாறு, தேசிய ஆஸ்திகள் விரயம் செய்யப்பட்டுள்ளன; ஏராளமான செலவின் பேரில் தேக்கப்பெற்ற தண்ணீர் உபயோகிக்கப்படவில்லை. இத்தகைய பிரதேசங்களில் தேசிய விஸ்தரிப்பு அல்லது சமுதாயத் திட்ட வட்டாரங்களை ராஜ்ய சர்க்கார்கள் ஏற்படுத்த வேண்டும். தங்கள் எல்லைக்கு உட்பட்ட நிலங்களையெல்லாம் மிகக் குறுகிய காலத்துக்குள் பயன்படுத்துவது இந்த வட்டாரங்களின் முதல் கடமைகளுள் ஒன்று.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேலும் 120 லட்சம் ஏக்கருக்குப் பாசன வசதி கிடைக்கக் கூடும். இந்தப் பிரதேசங்களிலும் தேசிய அபிவிருத்தி அல்லது சமுதாயத் திட்ட வட்டாரங்களை உடனடியாக ஏற்படுத்த வேண்டும். வாய்க்கால்கள் வெட்டுவது, சாகுபடிக்கு நிலத்தைப் பண்படுத்துவது, தண்ணீர் கிடைக்கும்போது அதை உடனடியாக உபயோகிப்பது ஆகியவற்றுக்கு இவ்வட்டார ஸ்தாபனங்கள் உதவி செய்ய முடியும். இவ்விஷயத்தை மேலும் விளக்க விரும்புகிறேன்: முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட பெரிய நீர்ப்பாசன வேலைகளில் பல, திட்டக் கமிஷன் தோன்றுவதற்கு முன்பே ஆரம்பமாகி விட்டன என்பது உங்களுக்கு நினைவிருக்கலாம். இவற்றுள் சில திட்டங்கள் சம்பந்தப்பட்டவரை வசதியான கட்டங்களாக அவற்றை நிறைவேற்றுவதற்குச் சரியான ஏற்பாடு செய்யப்படவில்லை. இது காரணமாகப் பல லட்சம் ஏக்கர் நிலங்களுக்குப் போதுமான தண்ணீரை ஏராளமான பணச் செலவின் பேரில் தேக்கிய போது, அந்தத் தண்ணீரை வயல்களுக்குக் கொண்டு செல்வதற்கான வாய்க்கால்கள் தயாராய் இல்லை. நான் மேலே தெரிவித்த கணக்கில் இத்தகைய திட்டங்களைச் சேர்க்கவில்லை. இவை தவிர, ஏற்கனவே உள்ள சில பாசன வசதிகளைப் பயன்படுத்துவது சம்பந்தமாக ராஜ்ய சர்க்கார்கள் தயாரித்துள்ள கால அட்டவணைகள் மந்தகதியில் அமைந்துள்ளன. இத்தகைய

திட்டங்களையும் மேல்சொன்ன கணக்கில் நான் சேர்க்கவில்லை. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரித்த சமயத்தில், நீர்ப் பாசன விஸ்தரிப்பு சம்பந்தமாக ராஜ்ய சர்க்கார்கள் காரிய சாத்திய மானவை என்று கருதிய வேலைக்கிரமங்களை மாத்திரமே அந்தக் கணக்கில் சேர்த்திருக்கிறேன். ஆனால் பல இடங்களில் இந்தக் குறியளவுகள்கூட நடைமுறையில் கைகூடவில்லை. நீர்ப்பாசன வசதி கிடைப்பதற்கும், அதை உபயோகிப்பதற்கும் இடையேயுள்ள கால விரயத்தைத் தடுப்பதில் ராஜ்யங்கள் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும்.

திருந்திய கோதுமை, நெல், சோள வித்துக்கள் கிடைப்பது சாத்தியமாக இருக்கும் பிரதேசங்களில் தேசிய விஸ்தரிப்பு அல்லது சமுதாயத்திட்ட வட்டாரங்களை உடனடியாக ஏற்படுத்தவேண்டும். அதாவது, ஏற்கனவே இவ் வட்டாரங்கள் அங்கு இல்லாவிடில் அவற்றை உடனடியாக அமைக்கவேண்டும். இத்தகைய கிராமங் களில் எல்லாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்துக்குள் திருந்திய வித் துக்கள் கிடைப்பதற்கும், அவற்றை நடைமுறையில் ஒவ்வொரு குடும்பமும் உபயோகிப்பதற்கும் தே. வி. ச. இயக்கம் ஏற்பாடு செய்யவேண்டும். திருந்திய வித்துக்களுடன் ஒவ்வொரு ஏக்கர் நிலத்திலும் ரசாயன உரங்கள், கரிம உரங்கள், பசுந்தாள் உரங்கள் ஆகியவற்றைச் சரியான விகிதங்களில் உபயோகிக்கவேண்டும். கிராமப் பஞ்சாயத்துகள், கிராமக் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற் றின்மூலம் தே. வி. ச. இயக்கம் பின்கண்ட காரியங்களை நிறை வேற்றவேண்டும்: (1) தேவையான, சிறந்த ரக வித்துக்களை ஒவ் வொரு கிராமத்திலும் உற்பத்தி செய்வதற்கு நிரந்தர ஏற்பாடுகள்; (2) சிறந்த விவசாயத்துக்கு அவசியமான கரிம உரங்களையும் பசுந் தாள் உரங்களையும் தயாரிப்பதற்கு ஒவ்வொரு கிராமத்திலும் நிரந்தர ஏற்பாடுகள்; (3) ஒவ்வொரு கிராமத்துக்கும் தேவைப்படும் ரசாயன உரங்கள் உரிய காலத்தில் கிடைக்கவேண்டும். மற்றும் ஜப்பானிய நெல் சாகுபடி முறையையும், திருந்திய கோதுமைச் சாகுபடி முறை களையும் நிலப்பரப்பு முழுதிலும் விஸ்தரிக்கவேண்டும்.

மூன்றாவதாக, நிலங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்டவும், மண் வளப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கும் இரண்டாவது ஐந்தாண்டுத்

திட்டத்தில் ரூ. 27 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதியைக் கொண்டு இவ் வேலைகளை எவ்வளவு பிரதேசங்களில் நிறைவேற்ற முடியுமோ அதை விடவும் அதிகமான பிரதேசங்களில் நிறைவேற்ற வேண்டும். இதற்காக ஸ்தலவாசிகளின் அதிகபட்ச ஒத்துழைப்பைத் திரட்டுவதற்கு ராஜ்ய சர்க்கார்கள் ஏற்பாடு செய்யவேண்டும்.

நான்காவதாக, நகர வாழ்க்கையுடன் கிராம வாழ்க்கையைப் பிணைப்பது தே. வி. ச. இயக்கத்தின் ஒரு முக்கிய நோக்கமாகும். இதற்கான வேலைக்கிரமங்கள் வகுக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே புதிய தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு, அல்லது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் புதிய தொழிற்சாலைகள் ஏற்படப்போகும் பிரதேசங்களுக்கு இவ்விஷயம் மிக முக்கியமானது. தே. வி. ச. ஸ்தாபனம், தொழில் ஸ்தலங்களின் அதிகாரிகள் ஆகியோர் ஒத்துழைத்து, கிராம - நகர வாழ்க்கையைப் பிணைப்பதற்கான ஒவ்வொரு வேலைக்கிரமத்தையும் வகுக்கவேண்டும். தவிர, பொதுவாகவே கிராம வாழ்க்கைக்கும் நகர வாழ்க்கைக்கும் இடையே நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தும் பிரச்னைகள் வேறு உள்ளன. இப் பிரச்னைகளைக் கவனமாக ஆராயவேண்டும். பெரிய நகரங்களுக்கும் டவுன்களுக்கும் வகுக்கப்பட்டுள்ள பால் சப்ளை, பால் பண்ணை ஏற்பாடுகளை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இந்த ஏற்பாடுகளுக்காக இரண்டாவது, ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 9·6 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய ஏற்பாடு ஒவ்வொன்றுக்கும் கவனமாகத் திட்டமிடவேண்டும். பால் உற்பத்திக்காக ஏராளமான கிராமங்களில் கூட்டுறவு சங்கங்களை நிறுவுதல், பாலைத் தகுந்த இடங்களில் சேகரிப்பதற்கு ஏற்பாடு செய்தல், கிருமி நீக்கி, புட்டிகளில் அடைத்து விநியோகித்தல் முதலியவற்றுக்கு அத் திட்டம் வழிசெய்ய வேண்டும். இதேபோல் 'ஒழுங்கு முறை' மார்க்கட்டுகள், கிடங்குகள் கட்டுதல் முதலிய ஏற்பாடுகளுக்காகவும் ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. கவனமாகச் சர்வே செய்த பிறகே இத் திட்டங்களையெல்லாம் தயாரிக்க வேண்டும். கிராமங்களுக்கும் டவுன்களுக்கும் அதிகபட்ச நன்மை கிடைக்கும் விதத்தில் இவற்றைத் தயாரிக்கவேண்டும்.

## துண்டு நில இணைப்பு

தே. வி. ச., சமுதாயத் திட்டப் பிரதேசங்களில் நிறைவேற்ற வேண்டிய நிரந்தர வேலைக்கிரமங்கள், வருடாந்தர வேலைகள் ஆகியவை குறித்து முந்திய கூட்டங்களில் பேசியிருக்கிறேன். தே. வி. ச., சமுதாயத் திட்டப் பகுதி ஒவ்வொன்றிலும் துண்டு நில இணைப்பு வேலையை முறையாக மேற்கொள்ளவேண்டும் என்பதை மாத்திரம் இப்போது மறுபடி வலியுறுத்த விரும்புகிறேன். இதுவரை ஒருசில ராஜ்யங்களில்தான் இவ்வேலை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. வட்டாரம் முழுதிலும் இந்த இணைப்பு வேலை நடக்கவேண்டும். சமுதாயப் பொதுக் காரியங்களுக்கு வேண்டிய நிலங்களைத் தனிப்பட்ட கிராமங்களிலும் வட்டாரம் முழுதிலும் ஒதுக்கிவைப்பதும் இந்த இணைப்பு வேலையில் அடக்கம்.

ஆதாயம் இல்லாத அளவுக்கு விவசாயப் பண்டங்களின் விலைகள் வீழ்ந்துவிடாதபடி அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கவேண்டும். இல்லையேல் விவசாய உற்பத்திப் பெருக்கத் திட்டம் எதுவும் வெற்றி பெற முடியாது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் அபிவிருத்தி வேலைகளுக்காக ஏராளமான பணம் செலவிட உத்தேசிக்கப்படுகிறது. அதனால் விவசாய உற்பத்தியை 40 சதவிகிதம் அதிகரித்தாலும்கூட விலைவாசிகள் அதிகமாகக் குறைந்துவிடமாட்டா.

விவசாய உற்பத்தித் திறன் உயரவேண்டுமானால் சர்க்காரின் தொழில் நுணுக்க ஸ்தாபனங்கள், நிர்வாக ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் திறமை உயரவேண்டும் என்பது தெளிவு. செய்முறைகள், விதைகள், ரசாயன உரங்கள் முதலியவற்றை ஸ்தல நிலைமைக்கு ஏற்றபடி கவனமாகப் பரீட்சித்துப் பார்த்த பிறகே அவற்றை விவசாயிகளுக்குச் சிபாரிசு செய்யவேண்டும். தேவையான பண்டங்களைத் தக்கசமயத்தில், கிராமங்களுக்குஅருகில் உள்ள இடங்களிலிருந்து சப்ளை செய்யவேண்டும். மற்றும், கால்நடை நோய்கள், பயிரில் பூச்சி விழுதல் முதலியவற்றை உடனடியாகச் சமாளிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இவற்றையும், இவைபோன்ற இதரப் பிரச்னைகளையும் ராஜ்ய சர்க்கார்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

## சேமிப்பும் கூட்டுறவும்

இரண்டாவது கேள்வியை இனி ஆராயலாம். அதாவது, கிராம அபிவிருத்திக்கு ஏராளமான நிதி செலவிடுவதன் பலனாக (கிராம வாசிகளுக்கு) கிடைக்கும் அதிகப்படி வருமானங்களில் எவ்வளவு பகுதியைச் சேமிப்பாக மாற்றவேண்டும்? தேசிய விஸ்தரிப்பு சர்வீஸ் ஒவ்வொரு குடும்பத்துடனும் தொடர்பு கொள்ள முற்படுகிறது. ஆகவே சிறு சேமிப்புகளை ஊக்குவிப்பதற்கு ஏற்ற ஸ்தாபனம் அதுவே. அதேபோல் ஒவ்வொரு கிராமத்திலும் இதைக் கவனிப்ப தற்கு ஏற்ற ஸ்தாபனம் கிராமப் பல - காரியக் கூட்டுறவு சங்கம் தான்.

இந்தியக் கிராமங்களிலே சமூக மாறுதலை உருவாக்குவதற்குக் கூட்டுறவு இயக்கம்தான் மிக முக்கியமான சாதனம் என்பதை வலி யுறுத்த விரும்புகிறேன். கடன் கொடுக்கும் அலுவலைப் போலவே கூட்டுறவு இயக்கத்தின் ' தார்மிக ' அம்சங்களுக்கும் சம முக்கியத்து வம் உண்டு. மக்களிடையே சிக்கனப் பழக்கத்தை வளர்த்தல், தங்கள் சிரத்தைகள் சம்பந்தமாக அவர்களிடையே ஐக்கிய உணர்ச் சியை ஏற்படுத்துதல் ஆகியவையே இந்தத் 'தார்மிக' அம்சங்கள். பரஸ்பரப் பரிச்சியமும் பொதுச் சிரத்தைகளும் உள்ளவர்களை உறுப் பினர்களாகக் கொண்ட கூட்டுறவு சங்கங்களை அமைக்க வேண்டும். பின்கண்ட அலுவல்களை இச்சங்கங்கள் கவனிக்க வேண்டும் :

(1) பண்டமாக அல்லது ரொக்கமாகக் கொடுக்கப் படும் ஒவ்வொரு கடனையும் உற்பத்திப் பெருக்கத்துக்கான திட்டத்துடன் பிணைக்க வேண்டும்.

(2) கடன்களை உற்பத்தி வேலைகளுக்குப் பயன் படுத்துவதன் மூலம் பெறுகின்ற பொருளாதார பலத்துடன் ஒவ்வொரு குடும்பமும் சுயமாகக் கூட்டுறவு இயக்கத்தில் சேர்வதற்கு உதவி புரிய வேண்டும்.

(3) உற்பத்தி உயர்வினால் கிடைக்கும் வருமானத் தில் ஒரு பகுதியை ஒவ்வொரு குடும்பமும் மிச்சப்படுத்தி அதைச் சங்கத்தில் விடுமுதலாகப் போட வேண்டும்.

உறுப்பினர்களுக்கு வேண்டிய கடன் முழுவதையும் இவ்வாறு கிராமத்திலேயே திரட்ட வேண்டும்.

(4) தேசிய சிறு சேமிப்பு இயக்கத்தில் முதலீடு செய்வதற்காக ஒவ்வொரு குடும்பமும் பணம் சேமிக்க வேண்டும்.

லேவாதேவி நடைமுறைப்படி 'ஜாமீன்' காட்ட முடியாத நிலையில் இருக்கும் சிறு நிலக்காரர்களும் சாகுபடியாளர்களும் உற்பத்தியையும் சேமிப்பையும் அதிகரித்து வளம் பெறுவதற்கு எவ்வாறு உதவி செய்வது? கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படைப் பிரச்னை இது. விதை, ரசாயன உரங்கள், கரிம உரங்கள், பசுந்தாள் உரங்கள் முதலிய பண்டங்களை இவர்களுக்குக் கடனாக வழங்க வேண்டும். இவற்றை அவர்கள் சரியானபடி பயன்படுத்துமாறும், பணம் சேமிக்கும்படியும் செய்ய வேண்டும். இதற்கெல்லாம் கிராமத் தலைமையினர் ஏற்பாடு செய்வதுதான் மேற்சொன்ன பிரச்னைக்குச் சரியான பரிகாரம் ஆகும். உற்பத்தி, சேமிப்பு, பொதுச் சிரத்தைகள் ஆகியவற்றுக்குச் சாதகமாகப் பலமான பொதுஜன அபிப்பிராயத்தைக் கிராமத்தில் உருவாக்க வேண்டும். இதுவே முக்கிய விஷயம். கூட்டுறவு இயக்கம், தேசிய விஸ்தரிப்பு இயக்கம் ஆகியவை தோன்றியதே இதற்காகத்தான்.

முதல் ஐந்தாண்டுத் திட்டம், சமுதாய அபிவிருத்தித் திட்டம் ஆகியவை வருவதற்கு முன்னால், விவசாய அபிவிருத்திக்குக் கிடைத்தது போலவே கூட்டுறவுத் துறைக்கும் குறைவான நிதி வசதிதான் கிடைத்து வந்தது. எல்லா ராஜ்யங்களிலும் கூட்டுறவு இலாகாக்களில் போதிய சிப்பந்திகள் இல்லை. தவிர, விவசாயச் சீரமைப்பு போன்ற அலுவல்களில் கூட்டுறவு இயக்கம் கவனம் செலுத்தவில்லை. கிராம வாழ்க்கையின் எல்லாப் பிரிவுகளையும்—குறிப்பாக உற்பத்தியை உயர்த்துவதற்கான பிரிவுகளை—அபிவிருத்தி செய்வதற்கான பெரிய இயக்கத்தின் ஒரு அங்கமாகக் கூட்டுறவு இயக்கம் விளங்க வேண்டும். அப்போதுதான் அது (கூட்டுறவு) திருப்திகரமாக முன்னேற முடியும் என்பதை உணவு உற்பத்திப் பெருக்கக் கமிட்டியும் திட்டக் கமிஷனும் சுட்டிக் காட்டியுள்ளன.

கூட்டுறவு இயக்கத்தின் 'தார்மிக' அம்சங்களில் கொண்ட ஈடு பாடு காரணமாக, உத்தியோக சார்பற்றவர்களும் திறமை மிகுந்த வர்களுமான தலைவர்கள் பலர் அவ்வியக்கத்தில் சேர்ந்தனர். இடை யூறுகளை அவர்கள் பொருட்படுத்தவில்லை. இயக்கத்தைப் பரப்பு வதையே தங்கள் வாழ்க்கைப் பணியாக அவர்கள் கருதினர். ஒரு முகமான சிரத்தையுடன் இப் பணிக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர். கப்பும் கவருமாக வளர்ந்துள்ள கூட்டுறவுக் கட்டுக் கோப்பை அவர்கள் இவ்விதம் நிர்மாணித்தனர். பெருமிதப்படத் தக்க சாதனை இது. உத்தியோகஸ்தர்களின் ஆலோசனையை மாத் திரம் பெற்று, அவர்களது கட்டுப்பாட்டுக்கு இடங்கொடுக்காமல், உண்மையான மக்கள் இயக்கமாகக் கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பதற்கு அத்தலைவர்கள் பாடுபட்டனர்.

விவசாயக் கடன் வசதியை மாத்திரம் எடுத்துக்கொள்வோம். இதுபற்றிய பின்கண்ட புள்ளி விவரங்கள் கவனத்துக்கு உரியவை:

### விவசாயக் கடன் சங்கங்கள்

| | 1952-53 இறுதிவரை | 1953-54-ல் | 1954-55-ல் | 1955-56-ல்* |
|---|---|---|---|---|
| | | (ரு. லட்சக் கணக்கில்) | | |
| சங்கங்களின் எண்ணிக்கை | 1,11,628 | 1,26,954 | 1,43,320 | 1,59,939 |
| உறுப்பினர் தொகை | 51,26,002 | 58,49,380 | 65,65,416 | 77,90,850 |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | 990 | 1,143 | 1,326 | 1,680 |
| நடப்பு மூலதனம் | 4,918 | 5,441 | 6,293 | 7,910 |

* நகல் மதிப்பீடு

உத்தியோக சார்பற்றவர்களின் தலைமையுடனும் உத்தியோகஸ் தர்களின் ஆலோசனையுடனும் நிறுவி நடத்தப்பட்ட சங்கங்கள் நல்ல பலனளிக்கவில்லை என்று கருதமுடியாது. மேற்கண்ட அட்டவணை இதைக் காட்டுகிறது. 1952-53 இறுதியில் இருந்தபடி, சங்கங்களின்

தொகையும் உறுப்பினர் தொகையும் நடப்பு மூலதனமும் ஆஸ்தி களும் இந்த இயக்கத்தின் தெம்பை எடுத்துக் காட்டுகின்றன. நாட்டின் சில பகுதிகளைவிட வேறு சில பகுதிகளில் இயக்கத்துக்கு அதிக வலிமை இருந்தது என்பது உண்மைதான். ஆனால் அக்காலத்தில் கடுமையான வில்லங்கங்கள் இருந்தன என்பதையும் கவனிக்க வேண்டும். அதோடு, அவ்வியக்கத்துக்கு ஆக்கம் அளிக்கும் விதத்தில் தேச வியாபகமான சமூக - பொருளாதார அபிவிருத்தித் திட்டம் எதுவும் அப்போது அமல் நடக்கவில்லை.

தே. வி. ச. இயக்கம், ஏராளமான அபிவிருத்திச் செலவுகள் ஆகியவை காரணமாகக் கூட்டுறவு இயக்கம் எவ்வளவு முன்னேறி யிருக்கிறது என்பதையும் அந்தப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. எல்லாக் கட்டங்களிலும் உத்தியோக சார்பற்ற தலைவர்களுக்குத் தே. வி. ச. இயக்கம் வாய்ப்பு அளிக்கிறது. கிராம நிலையிலும், வட்டார - ஜில்லா நிலைகளிலும் உத்தியோகஸ்தர்கள் வழிகாட்டுவதற்கும் அது வழி செய்திருக்கிறது. சுமார் 800 முதல் 1,000 குடும்பங்களைக் கொண்ட 5 அல்லது 10 கிராமங்களுக்கு ஒருவர் வீதம் பல - காரியக் கிராம நிலை ஊழியர்கள் உள்ளனர். கூட்டுறவுத் துறையில் விசேஷ பயிற்சிபெற்ற உயர்தர அதிகாரிகள், வட்டாரம், ஜில்லா முதலிய கட்டங்களில் இருக்கின்றனர்.

1953-54 முதல் 1955-56 வரை உள்ள மூன்று ஆண்டுகளில் சங்கங்களின் எண்ணிக்கை 1,11,628-லிருந்து 1,59,939 ஆக (43%) அதிகரித்தது என்று இப் புள்ளி விவரங்களிலிருந்து தெரிகிறது. உறுப்பினர் தொகை 513 லட்சத்திலிருந்து 779 லட்சமாக (25%) அதிகரித்தது; நடப்பு மூலதனம் ரூ. 49·18 கோடியிலிருந்து ரூ. 79·1 கோடியாக (61%) அதிகரித்தது; செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 9·9 கோடியிலிருந்து ரூ. 16·8 கோடியாக (70%) அதிகரித்தது. உறுப்பினர் தொகை உயர்ந்ததைவிட அதிக விகிதத்தில் பங்கு மூலதனமும் நடப்பு மூலதனமும் பெருகின என்பது கவனிக்கத்தக்கது. 1953-54 முதல் 1955-56 வரை சங்கங்களின் தொகை, உறுப்பினர் தொகை முதலியவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பில் கணிசமான பங்கு தே. வி. ச. வட்டாரங்களையும் சமுதாயத் திட்டப் பகுதிகளையும் சாரும். 1955 அக்டோபர்வரை 83,300 கிராமங்களில்தான் தே. வி. ச.

இயக்கம் பரவியிருந்தது. தவிர, விவசாய உற்பத்தியிலும் கூட்டுறவுத் துறையிலும் இப்போது தே. வி. ச. இயக்கம் செலுத்தும் அளவுக்கு ஆரம்ப வருஷங்களில் கவனம் செலுத்தவில்லை. அப்படியிருந்தும் இவ்வளவு முன்னேற்றம் சாத்தியமாயிற்று என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நாடு முழுதிலும் தே. வி. ச. பரவக்கூடும்; அபிவிருத்திச் செலவுகளும் கணிசமாக அதிகரிக்கும். ஆகவே கூட்டுறவுத் துறையில் உள்ள உத்தியோகஸ்தர்களும் உத்தியோக சார்பற்றவர்களுமான கூட்டுறவாளர்கள் இப்போதைய சங்கங்களை விஸ்தரிக்கவும், புதிய சங்கங்களை நிறுவவும் திட்டம் தயாரிக்கவேண்டும். (1963 அக்டோபர் வாக்கில்தான் நாடு முழுதிலும் தே. வி. ச. பரவமுடியும் என்று பின்னர் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது—மொ.ர்.)

## கடன் வசதிக்கு வழிகள்

கிராமக் கடன் இயக்கத்துக்கு எவ்வாறு தெம்பு ஊட்டுவது என்ற பிரச்னைக்குத் தயார்ப் பரிகாரம் எதுவும் இல்லை. வெவ்வேறு பிரதேசங்களுக்கும் வெவ்வேறு வகைச் சங்கங்களுக்கும் ஏற்ப பரிகாரமும் வேறுபடும். இத்தகைய பரிகாரத்தில் பின்கண்ட அம்சங்கள் இருப்பது அத்தியாவசியம்: (1) வேலை வசதியையும் உற்பத்தியையும் உயர்த்துவதற்காக, ஸ்தலவாசிகளின் ஒத்துழைப்புடன், ராஜ்ய சர்க்கார்கள் மேற்கொள்ளும் அபிவிருத்திச் செலவுகள்; (2) இத்தகைய செலவுகளின் பலனாகக் கிராமத்தில் உற்பத்தி உயர்தல்; (3) உற்பத்தி உயர்வின் பலனாகப் பணம் சேமித்தல், (4) இந்தச் சேமிப்புகள் கூட்டுறவு இயக்கத்துக்கு மறுபடி வந்து சேருதல். வளம் குறைந்த பிரதேசத்தைவிட வளம் நிறைந்த பிரதேசங்களில் இச் சங்கங்களுக்குச் சுலபமாகத் தெம்பு ஊட்டமுடியும் என்பது தெளிவு. வளம் குறைந்த பிரதேசங்களில் நடுத்தரப் பாசனத் திட்டங்கள், சிறு பாசன வேலைகள், நிலங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்டுதல், காடு வளர்த்தல் முதலிய அபிவிருத்தி வேலைகளை ராஜ்ய சர்க்கார்கள் மேற்கொள்ளவேண்டும். இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்காக மக்களும் உழைத்து உதவவேண்டும். இவற்றின் பல

ளுகக் கிடைக்கும் அதிகப்படி உற்பத்தியிலிருந்து கூட்டுறவு இயக்கத்துக்கு வேண்டிய நிதிகளைக் கிராமங்கள் கொடுக்கவேண்டும். தனது திட்டங்களில் ஒதுக்கப்பட்டுள்ள நிதிகளைப் பயன்படுத்தி இப் பிரதேசங்களுக்கு ஏற்ற வேலைக்கிரமங்களை தே. வி. ச. ஸ்தாபனம்—அதாவது, எல்லா கட்டங்களிலும் உள்ள ராஜ்ய அரசாங்க ஸ்தாபனங்கள்—வகுக்கவேண்டும். பொது ஜனங்களின் உயர்ந்தபட்ச ஒத்துழைப்புக்கு உகந்தவையாகவும், சேமிப்பு - முதலீடுகளை அதிகரிக்கக் கூடியவையாகவும் இந்த வேலைக்கிரமங்கள் இருக்கவேண்டும். இதைத் தவிர வேறு பரிகாரம் இல்லை.

திட்டக் கமிஷன் கூறியுள்ளபடி இப்போதைய கிராம எல்லைகளைத் திருத்தி அமைத்தபிறகு பின்கண்ட நிலைமை காணப்படலாம்: அதாவது காலப்போக்கில் நாடெங்கும் சுமார் 2,50,000 பல - காரிய ஆரம்பக் கூட்டுறவு சங்கங்கள் இருக்கும்; அதே தொகையில் பஞ்சாயத்துகளும் இருக்கும். இந்த இரு ஸ்தாபனங்களின் பிரதேச எல்லைகளும் ஒரேமாதிரி இருக்கும். கிராமச் சங்கம் ஒவ்வொன்றிலும் சராசரி 200 முதல் 300 உறுப்பினர்கள்வரை இருப்பர். ஒவ்வொரு சங்கமும் ரூ. 20,000 முதல் ரூ. 30,000 வரை லேவாதேவி நடத்தும்; பஞ்சாயத்துகளும் ஆரம்பக் கூட்டுறவு சங்கங்களும் மேல் மட்ட ஸ்தாபனங்களுடன் பிணைக்கப்படும். கூட்டுறவு யூனியன்களுடனும், அவைமூலம் 'புராஸஸிங்' (பண்டங்களைப் பக்குவப்படுத்தும்) சங்கங்கள், 'மார்க்கட்டிங்' சங்கங்கள் முதலியவற்றுடனும், மற்றும் மத்திய பாங்கிகள், உச்ச பாங்கிகள் ஆகியவற்றுடனும் ஆரம்பச் சங்கங்கள் பிணைக்கப்படும். இதேபோல் தாலுகா, அல்லது தேசில் பஞ்சாயத்துகளுடனோ, ஜில்லாப் பஞ்சாயத்துகளுடனோ, அல்லது அவை இரண்டுமுடனோ கிராமப் பஞ்சாயத்துகள் பிணைக்கப்படும். இதன் மூலம் ராஜ்யத்தின் நிர்வாகக் கட்டுக்கோப்பு முழுவதுடனும் கிராமப் பஞ்சாயத்துக்குத் தொடர்பு ஏற்படும்.

கூட்டுறவு இயக்கத்துக்கு இரு குறிக்கோள்கள் இருக்கவேண்டும்: (1) தங்கள் பிரதேசத்தில் உள்ள எல்லாக் குடும்பங்களையும் சேர்த்துக் கொள்ளும் விதத்திலும், குறுகிய கால விடுமுதல் முழுதையும் சுயமாகத் திரட்டும் விதத்திலும், குறிப்பிட்ட காலத்துக்குள், ஆரம்பக் கூட்டுறவு சங்கங்கள் அதிகமான உறுப்பினர்களைச்

சேர்க்கவேண்டும்; (2) குறிப்பிட்ட அளவு பணத்தைத் தேசிய சேமிப்பு இயக்கத்தில் போடுவதற்கு ஒவ்வொரு கிராம சங்கமும் ஏற்பாடு செய்யவேண்டும்—இதற்காக எல்லாக் கூட்டுறவு சங்கங்களும் தேசிய சேமிப்பு இயக்கத்தின் 'அங்கீகாரம் பெற்ற ஏஜண்டு' களாக ஆகவேண்டும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்துக்குப் பின்கண்ட குறியளவுகளை நிர்ணயித்துக் கொள்ளலாம்: கிராமாந்தரக் குடும்பங்களில் பாதியைக் கூட்டுறவு இயக்கத்தில் சேர்க்கவேண்டும்; குறுகிய காலக் கடனுக 1960-61-க்குள் கூட்டுறவு இயக்கம் ரூ. 150 கோடி கொடுக்கவேண்டும்; நடப்பு வருஷத்தில் ரூ. 40 கோடியில் ஆரம்பித்து, 1960-61 வாக்கில் ரூ. 60 கோடியாக உயரும் விதத்தில் தேசிய சேமிப்பு இயக்கத்துக்குக் கூட்டுறவு சங்கங்கள் பணம் கொடுக்கவேண்டும். சேமிப்பு இயக்கத்துக்கு அவை ஏற்கனவே கொடுத்துவரும் பணத்துக்கு அதிகப்படியானது இது. சமீபத்தில் அமைக்கப்பட்ட சங்கங்கள், பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள சங்கங்கள் ஆகியவற்றைவிட ஏற்கனவே சில வருஷங்களாக இயங்கி வந்துள்ள சங்கங்கள் அதிகம் சாதிக்கமுடியும் என்பது தெளிவு. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட கால அபிவிருத்திச் செலவுகளின் பலனுக தேசிய செல்வத்தில் ஏற்படக்கூடிய அதிகரிப்புடன் ஒப்பிட்டால் மேற்சொன்ன குறியளவுகள் சொற்பமானவையே. அவை கைகூட முடியும் என்றே கருதுகிறேன்.

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் எல்லாக் குடும்பங்களையும் சேர்த்துக் கொள்ளும் விதத்தில் கிராம சங்கத்தின் உறுப்பினர் தொகை உயரும் என்று எதிர்பார்க்கிருேம். தேவையான குறுகிய காலக் கடன் முழுதையும்—இது 1965-66 வாக்கில் சுமார் ரூ. 500 கோடியாக இருக்கும்—அவை சொந்தமாகத் திரட்டிக் கொள்ளும் என்றும்; வருஷம் ரூ. 100 கோடி வீதம் தேசிய சேமிப்பு இயக்கத்துக்கு அவை கொடுக்கும் என்று நம்புகிருேம். இரண்டாவது, மூன்ருவது திட்டங்களின் அபிவிருத்திச் செலவுகளால் கிராமாந்தர தேசிய வருமானத்தில் ஏற்படக்கூடிய அதிகரிப்பைக் கணக்கில் கொண்டால் இந்தக் குறியளவுகளும் சிரமமானவையல்ல.

இந்தச் சேமிப்புக் குறியளவுகள் எல்லாம் கைகூடினுல் கூட, இரண்டாவது திட்டத்திலும் பிந்திய திட்டங்களிலும் கிராமாந்தர அபி

விருத்திக்குத் தேவைப்படும் பணத்தில் ஒரு சொற்பப் பகுதிதான் விவசாயத் துறையிலிருந்து கிடைக்கும். நீர்ப்பாசனத் திட்டங்கள், மின்சாரத் திட்டங்கள், நீண்ட காலப் பொருளாதார அபிவிருத்திக்கான மற்றத் திட்டங்கள் ஆகியவற்றுக்குத் தேவைப்படும் விடுமுதல் கிராமாந்தரத் துறைக்கு வெளியே யிருந்துதான் வரவேண்டியிருக்கும்.

கூட்டுறவு சம்பந்தமான இந்த வேலைக்கிரமங்களை நிறைவேற்றுவதற்காக மிகச் சிறந்த பயிற்சி பெற்ற ரிஜிஸ்திரார்களும் டெப்டி-ரிஜிஸ்திரார்களும் ராஜ்ய சர்க்கார்களுக்குத் தேவைப்படுவர். இந்தியாவிலும் மற்ற நாடுகளிலும் நடந்து வரும் கூட்டுறவு இயக்கங்களை இவர்கள் விரிவாக அறிந்திருக்க வேண்டும். மற்றும், கிராம வாழ்க்கையுடனும் கிராமப் பிரச்னையுடனும் அவர்களுக்கு நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும். அதோடு, எல்லாக் கட்டங்களிலும் உத்தியோக சார்பற்ற ஊழியர்கள் கூட்டுறவு இயக்கத்துக்கு ஏராளமாகக் கிடைப்பது அவசியம். அனுதாபமும் சேவை வெறியும் கொண்டவர்களாக இவர்கள் இருக்க வேண்டும். கூட்டுறவு இயக்கத்தின் தார்மிக அம்சங்களைக் கருத்தில் கொண்டால்தான், அது விறுவிறுப்பான இயக்கமாகவும் மக்களின் இயக்கமாகவும் இருந்தால்தான், இத்தகைய ஊழியர்களைக் கவர முடியும்.

## சிரம தானம்

இனி மூன்றுவது விஷயத்தைக் கவனிப்போம். வேலையே இல்லாமையும் முழு நேர வேலையில்லாமையும் தலை விரித்தாடுகின்ற பின்தங்கிய நாடுகள் சம்பந்தப்பட்டவரை, கிராமங்களில் சோம்பிக் கிடக்கும் ஏராளமான மனித சக்தியைப் பயன்படுத்துவது மிக முக்கியமான விஷயம். சமுதாயத்துக்குப் பயன்படக்கூடிய கட்டுமான வேலைகளை நிறைவேற்றுவதற்கு இந்தச் சக்தியைப் பயன்படுத்த வேண்டும். தே. வி. ச., சமுதாயத் திட்டப் பிரதேசங்களில் இத்தகைய வேலைகள் ஏற்கனவே கணிசமாக நடந்து வருகின்றன. 'சிரம தான' (உழைப்பு தான) வாரங்கள் எங்கும் பரவிவருகின்றன.

கிராமங்களில் நிரந்தர ஆஸ்திகளை உருவாக்கும் விதத்தில் இந்த வேலைகளை இனிமேல் நிறைவேற்ற வேண்டும். சிறிய நீர்ப்பாசனச்

சாதனங்கள், காடு வளர்த்தல்; மண் வளப் பாதுகாப்பு, விறகு மரங்கள் வளர்த்தல், மேய்ச்சல் தரைகளை அபிவிருத்தி செய்தல் முதலியவை இத்தகைய ஆஸ்திகளில் அடங்கும். ஒவ்வொரு தே. வி. ச. வட்டாரத்துக்கும் 5 வருஷ வேலைக்கிரமம் ஒன்றை வகுக்க வேண்டும். அதாவது தனிப்பட்ட கிராமங்கள், கிராமங்களின் கோஷ்டிகள், முழு வட்டாரம் ஆகியவற்றுக்கான வேலைகளை இணைப்பான முறையில் வகுக்க வேண்டும். இந்த விரிவான வேலைக்கிரமத்தில் தனது பங்கை ஒவ்வொரு கிராம நிர்வாக ஸ்தாபனமும் நிறைவேற்ற வேண்டும்.

நாம் தேச வியாபகமாகப் போதனைப் பிரசாரம் நடத்தினால்தான், மேற்சொன்ன பொறுப்புகளைத் தேசிய விஸ்தரிப்பு இயக்கத்தினால் நிறைவேற்ற முடியும். ஐந்தாண்டுத் திட்டங்களுடன் தே. வி. ச. இயக்கத்துக்கு உள்ள தொடர்பையும், அத்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் தமக்குள்ள பொறுப்புகளையும் தே. வி. ச. வில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். இந்தப் பொது விஷயங்களை உயர்தர அதிகாரிகள் உணர்வதற்காகப் பிராந்தியக் கருத்து-அரங்குகள் நடத்த வேண்டும். வட்டார அபிவிருத்தி அதிகாரிகள், கிராம நிலை ஊழியர்கள் ஆகியோரின் பயிற்சியில் இவ்விஷயங்கள் பற்றிய உரைகளையும் சேர்க்க வேண்டும். மற்றும், ஒவ்வொரு தே. வி. ச. வட்டாரத்திலும் பருவகால வேலைக் கெடுபிடிகள் இல்லாத மூன்று அல்லது நான்கு மாதங்களில் இத்தகைய போதனைகளை முறையாக அளிக்க வேண்டும். இவற்றை இரண்டு விதங்களில் நடத்தலாம்: (1) கிராம நிலை ஊழியர்களுக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் மறு பயிற்சி வகுப்புகள் நடத்துதல்—பஞ்சாயத்துக்கள், கூட்டுறவு சங்கங்களின் காரியதரிசிக்குரிய அலுவல்கள் சம்பந்தமாகக் கிராம உபாத்தியாயர்களுக்கு அல்லது கிராம இளைஞர்களுக்கு, அல்லது அவர்கள் இரு சாராருக்கும் பயிற்சி அளிப்பதும் இதில் அடக்கம். (2) உத்தியோக சார்பற்ற கிராம ஊழியர்களுக்காகக் குறுகிய காலக் கருத்து-அரங்குகள் நடத்துதல்—நமது ஐந்தாண்டுத் திட்டங்களின் முக்கிய அம்சங்களை அவர்களுக்குப் போதிக்க வேண்டும்; உற்பத்தியையும் சேமிப்பையும் உயர்த்துதல், இதற்கு ஏற்ற முறையில் பஞ்சாயத்துகளையும் கூட்டுறவு சங்கங்களையும் நிர்வகித்தல் ஆகியவை சம்பந்தமான பொறுப்புகளையும்

உணர்த்த வேண்டும். இத்தகைய பயிற்சிகளுக்கு வேண்டிய பாடத் திட்டங்களையும், விவாத விஷயங்களையும் தயாரித்து வினியோகிக்க வேண்டும். பயிற்சியில் இவை வழிகாட்டிகளாகப் பயன்படும். ஆனால் இக்காரியங்களில் ஈடுபட்டுள்ள உத்தியோகஸ்தர்களும் உத்தியோக சார்பற்றவர்களும் அனுபவ வாயிலாகத்தான் சிறந்த வழிமுறைகளைத் தெரிந்து கொள்ள முடியும்.

பிரசங்க ஆரம்பத்தில் எழுப்பிய வினாக்களுக்கு விடை கூற இது வரை முயன்றுள்ளேன். இவை பொதுப்படையான விடைகளே. நமது திட்டங்கள் தேச வியாபகமானவை; இடையறுமல், தேச வியாபகமாக, நீண்ட காலத்துக்குப் பாடுபட்டால்தான் அவற்றை நிறைவேற்ற முடியும் என்பதை ராஜ்ய சர்க்கார்கள் உணர்ந்து மேற் சொன்ன யோசனைகளைக் கையாள வேண்டும். உற்பத்தி, சேமிப்பு, சமூக நீதி ஆகியவற்றுக்காக, இவ்வாறு தேச வியாபகமாய்ப் பெரு முயற்சி செய்தால்தான் தேசிய ஐக்கியம் கைகூடும்; நமது ஜனநாயக ஸ்தாபனங்களும் ஜனநாயக வாழ்க்கை முறையும் நிலைத்திருக்கும்.

# 9. க்ஷேம நல அரசாங்க நிர்வாகம்*

நிர்வாகத்தைப் பல கோணங்களிலிருந்து கவனிக்கலாம். உதாரணமாக, சரித்திரக் கண்ணோட்டத்துடன் அதைக் கவனிக்கலாம். 'பிரிட்டிஷார்' இந்தியாவுக்கு வருமுன் நிர்வாகம் எவ்வாறு இருந்தது; பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் எவ்வாறு இருந்தது; நாடு சுதந்திரம் பெற்ற பின் எவ்வாறு இருக்கிறது என்றெல்லாம் ஆராயலாம். இந்த மூன்ருவது கட்டத்தில்தான் உங்களுக்கு உடனடியான சிரத்தை இருக்கும். எனினும் நிர்வாகத்தின் வரலாற்றை நீங்கள் ஆராய்வது, சுதந்திரத்துக்குப் பிந்தியநிர்வாகப்பிரச்னைகளைத்தெரிந்து கொள்ளப் பெரிதும் உதவியாக இருக்கும். நிர்வாகத்தின் வளர்ச்சி ஒரு தொடர் நிகழ்ச்சி; அதன் சென்ற கால வரலாற்றை அடியோடு புறக்கணிக்க முடியாது. ஜில்லாக்களில் நீங்கள் பொறுப்பு ஏற்கும் போது உங்களை எதிர்நோக்கக் கூடிய நிர்வாகப் பிரச்னைகள் குறித்து பொதுப்படையான சில விஷயங்களை இன்று கூற விரும்புகிறேன்.

இந்தியா சுதந்திரம் பெற்ற பின் அரசியல் நிர்ணய சபை நிறைவேற்றிய அரசியல் சட்டத்திலே மிகப் புரட்சிகரமான இரண்டு மாறுதல்கள் அடங்கியுள்ளன. வெளியார் கட்டுப்பாடு இல்லாததும் இந்திய மக்களின் பிரதிநிதியான பார்லிமெண்டுக்கு மேலாதிக்கம் இருப்பதுமான பூரண பொறுப்பாட்சிச் சர்க்காரை ஏற்படுத்தியது முதலாவது மாறுதல். க்ஷேம நல அரசாங்கத்தை நிறுவுவது இரண்டாவது மாறுதல். உயர் மட்டத்தில் உள்ள சர்க்காரின்—அதாவது, "அரசியல் கட்டுக்கோப்பின்"—தன்மையைப் பொறுத்தே "நிர்வாக அமைப்பின்" தன்மையும் அலுவல்களும் அமைகின்றன. மிகுந்த பொருளாதார அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகளில் இந்த இரண்டு மாறுதல்களும்—அதாவது பூரண பொறுப்பாட்சியும், க்ஷேம நல அரசாங்கமும்—நீண்ட இடைக்காலத்துடன், ஒன்றன் பின் ஒன்ருக ஏற்பட்டன. உங்களில் சரித்திரம் படித்தவர்களுக்கு இது தெரியும்.

---

* 1957 நவம்பரில் புது டில்லியில் ஐ. ஏ. எஸ். பயிற்சியாளர்களுக்கு நிகழ்த்திய உரை.

உதாரணமாக, பிரிட்டனில் "தொழிற் புரட்சி"யும் மந்திரி சபை ஆட்சி முறையும் ஏற்பட்டு வெகு காலத்துக்குப் பிறகே, தொழிலாளர் க்ஷேம நலச் சட்டங்கள் இயற்றப்பட்டன. யு. எஸ். ஸில். பிரம்மாண்ட அளவில் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்ட பிறகே "புதிய ஏற்பாடு" (New Deal) அமலுக்கு வந்தது. க்ஷேம நல அரசாங்கத்தின் ஆரம்பக் கட்டம் என்று இந்தப் "புதிய ஏற்பாட்டை"க் கருதலாம். ஆனால் இந்தியாவில் இந்த இரு காரியங்களும் ஏக காலத்தில் நடக்க வேண்டியிருக்கிறது. இதற்கு முக்கியமான காரணங்கள் உண்டு. சுதந்திரப் போராட்ட காலத்தில், அரசியல் சுதந்திரம் மாத்திரம் போதும் என்ற எண்ணத்துடன் அதை (அரசியல் சுதந்திரத்தை) இந்தியா போற்றவில்லை; சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு அது வழி செய்யும் என்பதற்காகவே அதைப் போற்றியது. நாட்டில் வாழும் கோடானு கோடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் சமூக நீதியை நிலை நிறுத்துவதும்தான் எப்போதுமே முக்கிய குறிக்கோள்களாக இருந்து வந்தன. சென்ற நூற்றாண்டின் இறுதியிலிருந்து மேன்மேலும் அதிகரித்து வந்துள்ள சமூக ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதுதான் இங்கு சமூக நீதி என்று குறிக்கப்படுகிறது.

## அரசியல் சட்ட விளக்கம்

எத்தகைய க்ஷேம நல அரசாங்கம் நமது நாட்டின் குறிக்கோள் என்பதை அரசியல் சட்ட ஷரத்துக்கள் விளக்குகின்றன. அவற்றை நீங்கள் படிக்க வேண்டும். முதலாவதாக அரசியல் சட்டப் "பீடிகை"ப் பகுதியை எடுத்துக் கொள்ளுங்கள். "சமூக-பொருளாதார-அரசியல் நீதி", "சம அந்தஸ்தும் சம சந்தர்ப்பமும்," "தனி மனிதனின் கௌரவமும் தேசிய ஐக்கியமும்" என்பன போன்ற சொற்றொடர்களை அந்தப் பீடிகையில் காணலாம். மற்றும், "ராஜாங்கக் கொள்கை பற்றிய வழிகாட்டித் தத்துவங்கள்" என்ற தலைப்பில் 36 முதல் 51 வரை உள்ள பிரிவுகளின் விவரமான ஷரத்துக்களைக் காணலாம். நாம் நினைவில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்கள் வருமாறு: முதலாவதாக, மக்களின் க்ஷேமநலத்துக்கு உகந்த சமுதாய அமைப்பை அரசாங்கம் உருவாக்க வேண்டும். "தேசிய வாழ்வின் எல்லா ஸ்தாபனங்களுக்கும் சமூக-பொருளாதார-அரசியல் நீதி

ஆதர்சமாக விளங்கும் விதத்தில்'' அந்தச் சமுதாய அமைப்பு இருக்க வேண்டும். இரண்டாவதாக, விவசாயம் உள்பட வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் விஞ்ஞானத்தைக் கையாள்வதன் மூலம் வாழ்க்கைத் தரங்களை அதிக பட்ச அளவுக்கு உயர்த்த வேண்டும். மூன்றாவதாக, சுயாட்சி உறுப்புக்களான பஞ்சாயத்துகளையும், கூட்டுறவுத் துறையையும் ஆதாரமாகக் கொண்ட பரவல் பொருளாதார அமைப்பை ஏற்படுத்த வேண்டும். நான்காவதாக, எல்லாக் குழந்தைகளுக்கும், 14 வயது பூர்த்தியாகும்வரை கட்டாய, இலவசக் கல்வி அளிப்பதற்கு அரசாங்கம் முயல வேண்டும்; அரசியல் சட்டம் அமலுக்கு வந்ததிலிருந்து பத்து ஆண்டுகளுக்குள் இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தப் பிரிவுகளை எல்லாம் சேர்த்துப் பார்த்தால் அரசியல் சட்டத்தின் பிரகாரம் உருவாக வேண்டிய புதிய சமுதாய அமைப்பின் அடிப்படை அம்சங்கள் உங்களுக்குத் தெளிவாகப் புலனாகும். சுருங்கச் சொன்னால் அரசியல் சட்டத்தின் குறிக்கோள் இதுதான்: சுயாட்சி நிலவ வேண்டும்; அத்துடன் ஒரு க்ஷேம நல அரசாங்கத்தை நாட்டினர் ஏற்படுத்த வேண்டும்—ஒரு புதிய சமுதாய அமைப்பை உருவாக்க வேண்டும். வேலை வாய்ப்பையும் உற்பத்தியையும் அதிகரிப்பதன் மூலம் வாழ்க்கைத் தரங்களை அதிக பட்சம் உயர்த்துவதற்கும், உயர்ந்த பட்ச சமூக நீதியை நிலைநிறுத்தி ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதற்கும் அந்தச் சமுதாயத்தில் இடையறாத முயற்சி நடக்க வேண்டும்.

தேச மக்களுக்கும் நிர்வாக ஸ்தாபனங்களுக்கும் அரசியல் சட்டம் நிர்ணயித்துள்ள பணி இது. மத்திய மந்திரி சபை, ராஜ்ய மந்திரி சபைகள், உத்தியோக சர்வீஸ்கள் ஆகியவற்றையே இங்கு நிர்வாக ஸ்தாபனங்கள் என்று குறிப்பிடுகிறேன். புரட்சிகரமான இந்த இரு மாறுதல்களுக்கு ஏற்றபடி இந்தியாவின் சிவில் சர்வீஸ்கள் திருந்திக் கொள்ள வேண்டும். 'ஸ்தாபன ரீதியாகத்' திருந்தினால் போதாது. அதாவது, அரசாங்க ஸ்தாபனம் அல்லது கட்டுக் கோப்பு மாத்திரம் மாறினால் போதாது. குறிக்கோள்களும் மனப்பான்மைகளும் மாற வேண்டும். செயல் முறை முழுதுமே மாற வேண்டும். இந்த மாறுதல்கள் யாவை?

சமூக-பொருளாதார முன்னேற்றம், சமூக நீதி என்ற குறிக்கோள்களில் நிர்வாக அமைப்புக்கு நம்பிக்கை இருக்கவேண்டும்.

நிர்வாகத்தில் உள்ள ஒவ்வொருவரும் இந்த லட்சியத்தை மனத்தில் கொண்டே எந்தக் காரியத்தையும் செய்யவேண்டும். நமது திருஷ்டி யில், நம் முன் வரும் பிரச்னை ஒவ்வொன்றையும் நாம் கவனிக்கும் முறையில், தீவிர மாறுதல் ஏற்படவேண்டும் என்பது இதன் அர்த் தம். அதாவது, "சட்டம், ஒழுங்கைப்" பராமரிக்கும் அரசாங்க மானது "க்ஷேமநல அரசாங்கமாக" மாறவேண்டும் என்று பொதுப் படையாகக் கூறலாம்.

## கிராமத்தின் மகிமை

இதுவரை மனித சமுதாயம் மேற்கொண்டுள்ள பரிசோதனை களிலேயே மிகக் கஷ்டமானது "மேக்ஷநல அரசாங்கம்"தான். நாம் எல்லோரும் இதை ஞாபகத்தில் கொள்ளவேண்டும். அறிவில் சிறந்தவர்களாகவும் பெரும் பொறுப்புக்களை ஏற்போராகவும் பிரஜை கள் இருப்பது இந்தப் பரிசோதனைக்கு அவசியம். இத்தகைய பொறுப் புணர்ச்சியை ஊட்டுவது நிர்வாகத்தின் கடமை. "படித்தவர்களுக் கும்" "படிக்காதவர்களுக்கும்" இடையே உள்ள மனோபாவ வித்தி யாசம்தான், இந்தியாவின் அபிவிருத்திக்கு எப்போதுமே பெருந் தடையாக இருந்து வந்திருக்கிறது என்பது என் அபிப்பிராயம். சமீப வருஷங்களில் இந்த மனோபாவ வேற்றுமை அதிகரித்து வந்திருப்பதாகவும் எனக்குத் தோன்றுகிறது. இதன் காரணங்களை யும், இப் பிளவை அகற்றும் வழிகளையும் நீங்கள் பரஸ்பரம் விவா திக்கவேண்டும். மிக முக்கியமான ஒரு விஷயத்தை வலியுறுத்து வதற்காகவே இக் கருத்தை நான் பிரஸ்தாபித்தேன். அதாவது, இந்திய மக்களில் 70 சத விகிதத்தினர் விவசாயம், அதைச் சார்ந்த தொழில்களையே ஜீவனோபாயமாகக் கொண்டிருக்கிறார்கள்; மக்க ளில் 80 சத விகிதத்தினர் கிராமங்களில் வசிக்கிறார்கள். உங்களில் பலர் பல வருஷ காலம் கிராமாந்தரப் பிரதேசங்களின் நிர்வாகத்தில் ஈடுபட்டிருப்பீர்கள். ஆகவே கிராமத்துடனும் கிராமவாசியுடனும் தொடர்புகொள்வது சம்பந்தமாக சரியான அறிவுப் பக்குவமும் உணர்ச்சிப் பக்குவமும் உங்களுக்கு இருக்கவேண்டும். கிராம வாசியையும் அவரது கஷ்டங்களையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

நாட்டின் வாழ்க்கையில் கிராமத்துக்கு உள்ள ஸ்தானத்தை நீங்கள் ஆராய்ந்து அறியவேண்டும். இது சம்பந்தமாக பேடன் - பவலின் புத்தகங்களில் தொடங்கி எத்தனையோ நூல்கள் உள்ளன. பஞ்சாயத்து அல்லது கிராம சுயாட்சியின் ஸ்தானம் வேறு இருக்கிறது. கிராமப் பஞ்சாயத்துகளும் பூரண நீதியும் சமத்துவமும் தழைத்திருந்த பொற்காலம் முன்பு நிலவியதாக நீங்கள் நினைக்க வேண்டியதில்லை. ஆயினும், இந்தியாவில் பல சகாப்தங்களாகச் சமூக ஐக்கியமும் ஸ்திரத்தன்மையும் நிலவுவதற்கு இந்தக் கிராமப் பஞ்சாயத்துகள் உதவின என்பதில் சந்தேகம் இல்லை. இப்போது, நவீன காலச் சூழ்நிலைக்கு ஏற்ற முறையில் கிராம வாழ்வுக்கு நாம் புத்துயிர் அளித்து, அதைச் சுயாட்சியின் அஸ்திவாரமாக அமைக்கவேண்டும்: நமது மனோபாவத்தை மாற்றிக்கொள்வது தான் மற்ற எல்லாவற்றையும்விட முக்கியமானது. கிராமவாசிக்கு நாம் போதிக்கவேண்டியது கொஞ்சம் என்றால், அவரிடமிருந்து நாம் கற்கவேண்டியது அதிகம் என்பதை உணரவேண்டும். வள்ளல் மனப்பான்மையுடன் கிராமவாசிகளோடு உறவாடக்கூடாது. அவரை நாம் அறிந்துகொண்டு, சிறந்த வாழ்க்கை முறைகளை அவர் அடைவதற்கு உதவவேண்டும். இவ்வாறுதான் நிர்வாகத் துறையில் நாம் வெற்றிபெற முடியும். இந்தியாவுக்கு விஜயம் செய்த மாபெரும் நூலாசிரியையான பேர்ல் பக் நமது கிராமவாசி பற்றி எழுதிய ஒரு வாக்கியத்தை நீங்கள் படித்திருக்கக்கூடும். "நாகரிகம் என்பது இந்திய விவசாயியின் பிறவிக் குணம். நன்கு அமைந்த மனித—குடும்ப வாழ்க்கையின் முதிர்ந்த கலாசாரமும், ஆழ்ந்த தத்துவங்கள் அடங்கிய மதங்களும் அவரது உள்ளத்தையும் ஆன்மாவையும் பண்படுத்தியுள்ளன," என்று அவர் எழுதியிருக்கிறார். கிராம மக்களைப் பற்றி இன்னொரு எழுத்தாளர் கூறுகிறார்: "ஆழமாக வேர்விட்டவர்கள் அவர்கள். அவர்களது அடிப்படைத் தேவைகள் அட்டியின்றிக் கிடைத்துவிடுகின்றன; இயற்கையின் சக்திகளும், அவசரமின்றி மாறுகின்ற பருவ காலங்களும், பிரவிருத்திகளும் அவர்களது குணத்தை இடைவிடாமல் உருவாக்கியுள்ளன."

கிராம வாழ்க்கையையும் கிராமவாசியின் மனோதிருஷ்டியையும் நாம் அனுதாபத்துடன் அறிந்து உணரவேண்டும். அப்போதுதான் கிராம சுயாட்சி ஸ்தாபனங்களை அமைத்து நடத்த அவருக்கு நாம்

உதவ முடியும். கிராம சுயாட்சிதான் இந்தியாவில் ஜனநாயகத்துக்கு அடிப்படையாக இருக்கவேண்டும். இதைத் தவிர்க்கமுடியாது. கிராம வாழ்க்கையிலும் அதன் மேடு பள்ளங்களிலும் மாத்திரம் இந்திய விவசாயிகள் மூழ்கிக்கிடக்காமல், பிரஜைகள் என்ற முறையில் தங்களுக்கு உள்ள பொறுப்புக்களை உணருமாறும் செய்யவேண்டும். இதற்கு ஏற்ப அவர்களது பார்வையை விசாலப்படுத்த வேண்டும். நமக்கும் கிராமவாசிகளுக்கும் இடையே உள்ள மனோபாவ வித்தியாசம் குறித்தும், அவர்கள்பால் நமக்குள்ள கடமைகள் பற்றியும் நான் பேசியதற்குக் காரணம் உண்டு. அதாவது, இத்தகைய அனுதாப நல்லுணர்வை நாம் பெறுவதைப் பொறுத்தே நிர்வாகத்தின் வெற்றி அமையும்.

## ஜில்லா நிர்வாகம்

ஜில்லா நிர்வாக அலுவல்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். 'சட்டம் - ஒழுங்கை 'ப் பராமரிப்பது முதல் பிரச்னை. சுயாட்சி வந்து, மக்களுக்குப் பொறுப்பு வாய்ந்த சர்க்கார்கள் ராஜ்யங்களில் ஏற்பட்டபோது, சட்டம் - ஒழுங்கு பற்றிய பிரச்னைகளின் முக்கியத்துவம் குறையும் என்று கருதப்பட்டது. இது தவறான கருத்து. முன்னைப் போலவே இப்போதும் சட்டம் - ஒழுங்குப் பிரச்னைகள் முக்கியமானவைதாம். ஏனெனில், புரட்சிச் சக்திகள் இயங்கிவரும் ஒரு சமுதாயத்தில் மாறுதல்களைப் புகுத்துவது சிரமமான காரியம். இவ்வாறு செய்யும்போது சட்டம் - ஒழுங்கு பற்றிய கஷ்டமான பிரச்னைகள் எழுவது நிச்சயம். அவற்றைச் சமாளிக்க நாம் தயாராய் இருக்கவேண்டும். சிரமமான நிலைமைகள் ஏற்படாமல் தடுப்பதே நம் நோக்கமாக இருக்கவேண்டும். எந்த இடங்களில் சிரமங்கள் எழக்கூடும், அவ்விடங்களில் என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிந்து, மோதல்களைத் தவிர்ப்பதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, ரெவினியூ நிர்வாகம் பற்றிய பிரச்னைகளை நீங்கள் கவனிக்க வேண்டியிருக்கும். ரெவினியூ வசூலித்தல், நிலச் சீர்திருத்தங்களை அமல் நடத்துதல் முதலியவை இப் பிரச்னைகளில் அடங்கும். சில வருஷங்களுக்கு முன்னால் இருந்ததுபோல் நில

வரியானது இப்போது அரசாங்கத்தின் முக்கிய வருமான இனமாக இல்லை. இந்தத் துறையிலும் கஷ்டமான பிரச்னைகள் உண்டு. 15 அல்லது 20 ஆண்டுகளுக்கு முன்னால் ராஜ்யங்களின் மொத்த ரெவினியூவில் நிலவரி 50 அல்லது 60 சதவிகிதமாக இருந்தது. சில சமயங்களில் நில வரியை ராஜ்ய சர்க்கார்களும் மத்திய சர்க்காரும் பகிர்ந்துகொண்டதும் உண்டு. இப்போதோ ராஜ்ய சர்க்கார்களின் வருமானத்தில் நிலவரியின் பங்கு 20 முதல் 25 சதவிகிதம்தான். ஆயினும் நில நிர்வாகம் பற்றிய பல முக்கிய பிரச்னைகளை நீங்கள் கவனிக்க வேண்டியிருக்கும். பல ராஜ்யங்களில் முக்கியமான நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன என்பது உங்களுக்குத் தெரியும். கிராமாந்தர நிலவுடைமை - அமைப்பை அடியோடு, புரட்சிகரமாக, மாற்றுபவை இச் சட்டங்கள். இந்தச் சட்டங்களை அமல் நடத்தும்போது கஷ்டமான பிரச்னைகள் எழும். அவற்றை நீங்கள் விசேஷமாகக் கவனிக்க வேண்டியிருக்கும். மேல்வாரக் குறைப்புக்கும் நிரந்தரக் குடி வாரத்துக்கும் வழிசெய்யும் சட்டத்தினால் சாகுபடியாளர்கள் பலன் பெறுகிறார்களா? பலன் பெறவில்லை என்றால் அதன் காரணங்கள் என்ன? இச் சட்டத்தினால் அவர்கள் பலன் பெறுவதற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்? இவைபோன்ற பிரச்னைகளை நீங்கள் சமாளிக்க வேண்டியிருக்கும்.

அடுத்தபடியாக, சமூக-பொருளாதார அபிவிருத்தி பற்றிய கடமைகள் உள்ளன. இவை ஏற்கனவே முக்கிய கடமைகளாகத்தான் இருந்து வருகின்றன. காலப் போக்கில் இவற்றின் முக்கியத்துவம் மேன்மேலும் அதிகரிக்கும். முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சமுதாய அபிவிருத்தி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இது திட்டக் கமிஷனின் மிக முக்கியமான பணிகளுள் ஒன்று. தேசிய விஸ்தரிப்பு, சமுதாயத் திட்டப் பிரதேசங்களில் இந்த இயக்கம் அமல் நடந்து வருகிறது. இப்பிரதேசங்கள் சிலவற்றை நீங்கள் பார்வையிட்டிருப்பதாக அறிகிறேன். இந்த இயக்கத்தின் தத்துவம் உங்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கும். கிராமாந்தரப் பிரதேசங்களில் க்ஷேமநல அரசாங்கத்தின் செயல் வடிவமே சமுதாய அபிவிருத்தி இயக்கம். அரசியல் சட்டத்தில் உத்தேசித்துள்ள கிராம சமுதாய அமைப்பைத் தோற்றுவிப்பதுதான் இந்த இயக்கம், நிலச் சீர்திருத்

தங்கள் ஆகியவற்றின் குறிக்கோள். மனோபாவப் புரட்சியை ஏற்படுத்த இந்த இயக்கம் முற்படுகிறது. சுய முயற்சியாலும் பரஸ்பரக் கூட்டுறவு மூலமும் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற பேரார்வத்தைக் கிராமவாசிகளுக்கு அது ஊட்டுகிறது. இத்துறையில் கிராமவாசிகளின் முயற்சிகளுக்கு நிர்வாகத்தினர் உதவி புரியவேண்டும்.

## ச. அ. திட்டத்தின் சிறப்பு

ஜில்லாவில் கிராம சுயாட்சிக் கட்டுக்கோப்பு பற்றி உங்களுக்கு ஓரளவு தெரியும். கிராமங்களில் நிர்வாக அமைப்பை உருவாக்குவது நமது நோக்கம். இதைச் சுருக்கமாக விளக்க விரும்புகிறேன்: எல்லாவற்றுக்கும் அடித்தளமாகக் கிராமம் விளங்குகிறது. கிராமப் பஞ்சாயத்து, கிராமக் கூட்டுறவு சங்கம், கிராமப் பள்ளிக்கூடம் என்ற மூன்றும் கிராம வாழ்க்கையின் அஸ்திவாரங்கள். இளைஞர்களும் மற்றவர்களும் பங்குகொள்ளக்கூடிய எல்லா நடவடிக்கைகளுக்கும் நிலைக்களனாகக் கிராமப் பாடசாலை விளங்கவேண்டும். நமது நிர்வாக ஸ்தாபனங்கள் துண்டுபட்டுக் கிடக்கின்றன. பஞ்சாயத்துகளை ஒருவகை நிர்வாகத்தினர் ஏற்படுத்துகின்றனர். கூட்டுறவு சங்கங்களை இன்னொரு வகையினர் நிறுவுகின்றனர். பள்ளிக்கூடங்களை ஏற்படுத்துவோர் மற்றொரு வகையினர். இந்தக் காரியங்களை யெல்லாம் இணைப்பது சமுதாய அபிவிருத்தி நிர்வாகத்தின் பொறுப்பாகும். கிராம வாழ்க்கை ஒரே சொரூபமுள்ளது, பிரிக்க முடியாதது. அதை ஒரே சொரூபமாகக் கவனிப்பதற்கும், கிராம அபிவிருத்தி என்ற விரிவான பணியின் அங்கங்களாக இந் நடவடிக்கைகள் விளங்குவதற்கும் இத்தகைய இணைப்பு அவசியம். ஐந்து முதல் பத்துக் கிராமங்களுக்குக் கிராம நிலை ஊழியர் ஒருவர் பொறுப்பு வகிக்கிறார். கிராமவாசிக்கும், கிராமத்துக்கு அடுத்த கட்டத்தில் உள்ள—அதாவது வட்டாரத்தில் உள்ள—அபிவிருத்தித் தலைமை அதிகாரிகளுக்கும் இடையே தொடர்பு ஏற்படுத்துபவர் இவரே. கிராமநிலை ஊழியரின் ஸ்தானம் மிக முக்கியமானது. ஏனெனில் கிராமவாசிகள் சம்பந்தப்பட்டவரை, அபிவிருத்தி வேலைகள் அனைத்துக்கும் அவரே பிரதிநிதியாக விளங்குகிறார். கிராமத்தில் இவ்வேலைகளை யெல்லாம் இணைப்பவர் அவரே. வட்டார அதிகாரி

யாகவோ, விஸ்தரிப்பு அதிகாரியாகவோ நீங்கள் பொறுப்பு ஏற்கும் போது, கிராமநிலை ஊழியர் தமது கடமையை நிறைவேற்றுவதற்குத் தகுந்த பயிற்சி பெற்றிருக்கிறாரா என்பதைக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

வட்டார நிலையில் அதிகாரிகளின் கோஷ்டி ஒன்று இருக்கிறது. விஸ்தரிப்பு அதிகாரியும் அபிவிருத்தி அதிகாரிகள் பலரும் இதில் உள்ளனர். கிராம வாழ்க்கையை இணைப்பாக மேம்படுத்துவதற்காக இவர்கள் ஒரே கோஷ்டியாக ஒருமித்துச் செயல் புரியவேண்டும். இதுவே சமுதாய முயற்சியின் அடிப்படைக் கருத்து. இவர்களது நடவடிக்கைகள் பின்னிப் பிணைந்திருக்க வேண்டும். "நல்ல வித்துக்களை நீங்கள் உபயோகிக்க வேண்டும்" என்று விவசாய அதிகாரி சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. நல்ல வித்துக்கள் கிடைப்பதற்கு அவர் ஏற்பாடு செய்தாலும்கூடப் போதாது. அவர் அவ்வாறு செய்யும்போது, கூட்டுறவு அதிகாரியும் இணைப்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும். கிராமக் கூட்டுறவு சங்கத்தின் மூலம் இவ்விதைகளின் உற்பத்தியைப் பெருக்கவும், பணம் தர முடியாதவர்களுக்கு இவ்விதைகளைப் பண்டக் கடனாகக் கொடுக்கவும் அவர் ஏற்பாடு செய்யவேண்டும். இவ்வாறு விவசாய அபிவிருத்தியையும் கடன் வசதியையும் பிணைக்கவேண்டும். முன் காலத்தில் இத்தகைய நிபுணர்கள் எல்லாம் தனித்தனியே செயல் புரிந்ததால் தான் விவசாய உற்பத்தி, கூட்டுறவு இயக்க விஸ்தரிப்பு, இதர நடவடிக்கைகள் ஆகியவற்றில் உருப்படியான பலன் எதுவும் கிட்டவில்லை.

சமுதாய அபிவிருத்தி இயக்கம் வருவதற்கு முன் இருந்த நிலைமை வருமாறு: விவசாய அதிகாரி ஒரு கிராமத்துக்குச் சென்று, "நீங்கள் எல்லோரும் நல்ல வித்துக்களை உபயோகித்தால் உற்பத்தி இரட்டிக்கும்," என்று சொல்லிவிட்டுப் போவார். பிறகு கூட்டுறவு அதிகாரி ஒருவர் அங்கு சென்று கூட்டுறவுக் கடன் சங்கம் ஒன்றை ஏற்படுத்துவார். சிலருக்கு கடன் கொடுக்கப்படும், நிதி காலியாகும், தெம்பு இழந்த சங்கம் சில வருஷ காலம் இழுபறியாகச் சீவித்திருக்கும். சுகாதார இன்ஸ்பெக்டர் என்ற அதிகாரி வேறு இருப்பார். தண்ணீரைக் கொதிக்க வைத்துக் குடிக்கவேண்டும், கொசுவலைக்

குள் தூங்க வேண்டும் என்றெல்லாம் அவர் ஜனங்களுக்குப் புத்தி சொல்லுவார். இவ்வாறு இணைப்பின்றி நடந்த காரியங்களால் பலன் எதுவும் கிடைக்கவில்லை. கிராமத்திலும் வட்டாரத்திலும் ஜில்லா மட்டத்திலும் இந் நடவடிக்கைகளை யெல்லாம் இணைப்பதற்குச் சமுதாய அபிவிருத்தி இயக்கம் வழி செய்கிறது. இதுதான் அந்த இயக்கத்தின் சாராம்சம். எந்த அளவுக்கு இத்தகைய இணைப்பு கைகூடுகிறதோ அந்த அளவுக்கு இவ்வியக்கமும் வெற்றி பெறும். இந்த இணைப்பு கைகூடாவிடில் அபிவிருத்திப் பணி பாதகமடையும். வட்டார அபிவிருத்தி அதிகாரி, சப்கலெக்டர், கலெக்டர் ஆகியோர் இத்தகைய இணைப்பு உருவாகுமாறு கவனித்துக் கொள்ளவேண்டும். அவர்கள் கோஷ்டியாக வேலைசெய்து கவனிக்க வேண்டிய மனிதப் பிரச்னை இது. விவசாயம், கூட்டுறவு போன்ற அபிவிருத்தி இலாகாக்களின் அதிகாரிகளும், 'பொது அதிகாரி'யாகிய வட்டார அதிகாரியும், அவர் போன்ற ஜில்லா அதிகாரிகளும் ஒன்றுசேர்ந்து வேலை செய்யவேண்டும். தங்கள் அலுவல்கள் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை அவர்கள் உணர வேண்டும். வேலைகளை இணைப்பது சம்பந்தமான ஒரு அம்சம் இது. உத்தியோக ஸ்தாபனத்துக்கும் உத்தியோக சார்பற்ற ஸ்தாபனத்துக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும் என்பது மற்றொரு அம்சம். இந்த இரு விதங்களிலும் பூரண இணைப்பு ஏற்படவேண்டும். அப்போதுதான் அபிவிருத்திப் பணியின் முழு சக்தியும் கிராமத்தில் பிரயோகமாகும். இந்த இணைப்பை ஏற்படுத்தும் வழிமுறைகளை நீங்கள் ஆராய வேண்டும். அனுஷ்டான ரீதியாக ஆராய்ந்து, இந்த முறைகளை இடையறுமல் செம்மைப்படுத்த வேண்டும்.

ஜில்லா நிர்வாகத்தில் இத்தகைய மாறுதல்கள் ஏற்படுவதற்கு அவகாசம் பிடிக்கும். எனினும் இவற்றை எவ்வாறு ஏற்படுத்தலாம் என்பதை அன்றுடம் கவனித்து வரவேண்டும். இப்போது ஏற்பட்டு வரும் மாறுதல்கள் புரட்சிகரமானவை. நிர்வாக ஸ்தாபனத்துக்கும் தொழில் நுணுக்க சர்வீஸ்களுக்கும் இடையே இருக்கவேண்டிய உறவு முறைகளை இடைவிடாமல் ஆராயவேண்டும். (நிர்வாக ஸ்தாபனம் அல்லது பொது சர்வீஸ் என்ற சொற்றொடரில் ஐ. ஏ. எஸ்ஸூம் அடக்கம்). இத்தகைய மாறுதல்களை நீங்கள் உருவாக்க வேண்டியிருக்கும். இதற்கான வழி முறைகளை ஆராய்ந்து, எம்முறைகள்

சிறந்தவை என்று கண்டறிந்து அம்முறைகளை மேன்மேலும் செம்மைப்படுத்த வேண்டும். இந்த மாறுதல்களை ஏற்படுத்துவதற்காக ஸ்தாபன ரீதியான திருத்தங்கள் என்னென்ன தேவைப்படும் என்பதைச் சமீபத்தில் ஒரு கோஷ்டி ஆராய்ந்திருக்கிறது. ஸ்ரீ பல்வந்த்ராய் மேத்தா தலைமையில் அமைந்த இக்கோஷ்டியில் உத்தியோகஸ்தர்களும் உத்தியோக சார்பற்றவர்களும் அங்கம் வகித்தனர். இந்தக் கோஷ்டி தனது யாதாஸ்தை இப்போது சமர்ப்பித்திருக்கிறது. சமுதாய அபிவிருத்தி இயக்கம் அமல் நடக்கும் விதத்தை ஆராய்வதற்காகவும், அந்த அமலை எவ்வாறு செம்மைப் படுத்தலாம் என்று கண்டறிவதற்கும் இக் கோஷ்டி நியமிக்கப்பட்டது. உத்தியோகஸ்தர்கள் இடையேயும், உத்தியோக ஸ்தாபனங்களுக்கும் உத்தியோக சார்பற்ற ஸ்தாபனங்களுக்கும் இடையேயும் எவ்வாறு இணைப்பு ஏற்படுத்தலாம் என்பதையும் அவர்கள் குறிப்பாக ஆராய்ந்தனர்.

## மன மாறுதல்

ஸ்தாபன ரீதியாக என்னென்ன மாறுதல்கள் செய்த போதிலும் நான் பிரஸ்தாபித்துள்ள மனோபாவ மாறுதல்கள் ஏற்படுவது தான் முக்கியமானது. நிர்வாகம் என்பது மனிதப் பிரச்னையே. இதை நாம் உணர வேண்டும். எல்லாப் பிரச்னைகளையும் அவற்றின் மனித அம்சங்களைக் கருத்தில் கொண்டு கவனிக்க வேண்டும். இந்தப் பிரச்னைகளுக்கான பரிகாரங்கள் மக்களின் வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இதுவே வெற்றிக்கு அடிப்படை. மாக்டானல்டு பிரபு பல வருஷங்கள் இந்தியாவில் வேலை பார்த்தவர். மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள் பற்றிய விவாதத்தின்போது பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையில் அவர் பேசுகையில் இந்த மனித அம்சத்தை வலியுறுத்தும் வாக்கியம் ஒன்றை உபயோகித்தார். நிர்வாக அதிகாரியாகத் தாம் செயலாற்றியதைக் குறிப்பிட்டு அவர் சொன்னார்: "மனித இதயங்களைத் தந்திகளாகக் கொண்ட அந்த ஆரவார வாத்தியத்தை நான் வாசித்தேன்." ஸ்தாபன ரீதியாக என்னென்ன மாறுதல்கள் ஏற்பட்ட போதிலும் இவ்விஷயத்துக்கு எப்போதுமே முக்கியத்துவம் உண்டு. எந்தப் பிரச்னையையும் நீங்கள் சமாளிக்கும்போது, கோடானுகோடி ஆண் - பெண்களின் வாழ்க்கையைத் தேச நிர்வாகம் பாதிக்கிறது என்பதை

மறக்கக்கூடாது. மனித அம்சங்களையும் மனித உறவு முறைகளையும் அளவு கோலாகக் கொண்டு பிரச்னைகளை நீங்கள் ஆராய வேண்டும். நிர்வாகத்தில் வெற்றி பெறுவதற்கு முதல் தேவை இது.

இரண்டாவதாக, திறமையும் நேர்மையும் என்றென்றும் இருந்து வர வேண்டிய குணங்களாகும். முன்பும் அவை தேவைப்பட்டன; வருங்காலத்தில் மேலும் அதிகமாகத் தேவைப்படும். பொது வாழ்க்கையிலிருந்து நிர்வாகத் துறைக்கு வந்திருப்பவர்களுக்கு சர்வீஸ்களில் உள்ளவர்கள் இப்போது ஆலோசனை கூற வேண்டியிருக்கிறது. அதனால் எந்தப் பிரச்னையை ஆராய்ந்தாலும் அது மக்களை எவ்வாறு பாதிக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு பாரபட்சமின்றி ஆராய வேண்டும். அதோடு, அரசியல் தலைவர்களுக்குத் தைரியமாக ஆலோசனை கூற வேண்டும். ஸ்தாபனங்களில் என்னென்ன மாறுதல்கள் ஏற்பட்ட போதிலும் இந்தக் குணங்கள் என்றென்றும் தேவைப்படும்.

மூன்ருவதாக, சுயாட்சி நடத்துவதற்கு மக்களைப் பயில்விப்பது நமது கடமை. மிக முக்கியமான இவ்விஷயத்தை ஆரம்பத்திலேயே குறிப்பிட்டேன், இதையே வேறு விதமாகவும் கூறலாம். அதாவது, ரெவினியூ சட்டங்களும் கிரிமினல் சட்டங்களும் உங்களுக்குத் தந்துள்ள அதிகாரங்களைப் பிரயோகிப்பது இனிமேல் உங்களது செல்வாக்குக்கு அடிப்படையாக இருக்காது. நயமாகப் பேசுவது, சாதுரியமாக நடப்பது, மக்களின் ஆதரவைப் பெறுவது என்ற குணங்களே உங்கள் செல்வாக்குக்கு அடிப்படையாக இருக்கும். இது சம்பந்தமாக என்னுடைய உத்தியோக வாழ்க்கையிலிருந்து ஒரு உதாரணம் காட்ட விரும்புகிறேன். நான் மூன்று வருஷ காலம் ஒரு பெரிய ஜமீன்தாரிக்கு டிரஸ்டியாக இருந்தேன். என்னிடம் அதிகாரம் எதுவும் இல்லை, ஜமீன்தாரின் அந்தஸ்து மாத்திரமே பின்பலமாக இருந்தது. சுமார் 1,500 சதுர மைல் பரப்புள்ள அந்த பெரிய எஸ்டேட்டை நிர்வகித்தேன்; நூற்றுக்கணக்கான நீர்ப்பாசன சாதனங்களைப் பராமரித்தேன்; மற்றும், ஒரு கல்லூரி, ஆஸ்பத்திரிகள், ஆலயங்கள் ஆகியவற்றையும் நிர்வகித்தேன். நிர்ப்பந்த அதிகாரம் இல்லாமலேயே இதை யெல்லாம் செய்ய முடியும் என்று கண்டு கொண்டேன். என்னுடைய நீண்ட கால உத்தியோக வாழ்வில் இதையே மிகச்

சிறந்த அனுபவமாகக் கருதுகிறேன். நீங்கள் உத்தியோகத்தில் சேரும்போது இந்தப் படிப்பினையை நினைவில் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

என் மனத்தில் தோன்றிய பல்வேறு கருத்துக்களை இதுவரை பொதுப்படையாகத் தெரிவித்தேன். நீங்கள் அனைவரும் தேச சேவை புரிந்து பயனுள்ள வாழ்க்கை நடத்த வேண்டும் என்று வாழ்த்தி எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

# 10. கிராம வருமானம் இரட்டிக்க*

நமது திட்டங்கள் எல்லாவற்றின் வெற்றியையும் நிர்ணயிக்கக் கூடிய ஒரு பிரச்னை குறித்து இன்று.பேசப் போகிறேன். அதுவே விவசாய உற்பத்திப் பிரச்னை. விவசாய உற்பத்தி சம்பந்தமாக நாட்டின் பால் திட்டக் கமிஷன் சமர்ப்பித்துள்ள வேலைக்கிரமம் நிறைவேறுவதற்காக இந்தியக் கிராமங்களில் உள்ள 6 கோடிக் குடும்பங்கள் எவ்வாறு பாடுபட வேண்டியிருக்கும் என்பதை விசேஷமாகக் குறிப்பிட விரும்புகிறேன். சமுதாய அபிவிருத்தி இயக்கம், அரசாங்கத்தின் மாமூல் ஸ்தாபனமாக விளங்குகிறது. சுய உதவி, கூட்டுறவு என்ற அடிப்படையில், கிராம ஸ்தாபனங்கள் பாடுபடுவதற்கு உதவி செய்வது இந்த இயக்கத்தின் அலுவலாகும்.

நில வளத்தை மிகுந்த திறமையுடன் பயன்படுத்துதல், நவீன விஞ்ஞான ஆராய்ச்சி முறைகளைக் கையாளுதல், பல - முனைப் பொருளாதாரத்தை உருவாக்குதல் ஆகியவை நம் ஐந்தாண்டுத் திட்டங்களில் உள்ள விவசாய உற்பத்திப் பெருக்க ஏற்பாடுகளின் அடிப்படைக் குறிக்கோள்கள். அதாவது, பல்வேறு ஐந்தாண்டுத் திட்டங்களின் வாயிலாக வாழ்க்கைத் தரங்கள் உயரும்போது அதில் கிராமாந்தரக் குடும்பங்களுக்கு முழுப் பங்கு கிடைக்க வேண்டும் என்பது நம் நோக்கம்.

விவசாய சிரத்தைகள், தொழில் சிரத்தைகள் என்று பிரித்துப் பேசுவதையும், இவை இடையே ஏதோ முரண்பாடு இருப்பதாகச் சித்திரிப்பதையும் நான் எதிர்க்கிறேன். நிதிக் கமிஷன் வலியுறுத்தியிருப்பது போல, "விவசாயத்தைச் சீரமைப்பதும் தொழில் துறையில் முன்னேறுவதும் ஒரே வேலைக்கிரமத்தின் இரு பகுதிகளே என்பதுதான் உண்மை நிலை." நிதிக் கமிஷன் மேலும் கூறுகிறது :

---

* *சமுதாய அபிவிருத்தி சம்பந்தமாக 1958 மே மாதம் மவுண்ட் ஆபுவில் நடந்த மகாநாட்டில் பேசியது.*

"பொருளாதார ரீதியில் பின்தங்கிய நாடுகள் பற்றிய பின்கண்ட வாசகம் மிகப் பொருத்தமானது:-'தொழில்களை வளர்க்கும் பணியை விவசாயப் புனரமைப்பின் ஒரு பகுதியாகக் கருதலாம், அல்லது விவசாய உற்பத்திப் பெருக்கத்தை தொழில் வளர்ப்பின் ஒரு பகுதியாகக் கருதலாம். இந்த இரண்டும் ஒரே பிரச்னையின் இணைப்பான இரண்டு பாகங்கள் என்பதைத்தான் நாம் முக்கியமாக நினைவில் கொள்ள வேண்டும்'. விவசாயம் அபிவிருத்தி அடைந்தால், அதிகமான விவசாயப் பண்டங்கள் கிடைப்பதன் மூலமும், மூலப் பொருள்களின் தரம் உயர்வதன் வாயிலாகவும் தொழில்கள் நன்மை அடைகின்றன. இதே போல் தொழில்கள் வளர்வதன் விளைவாக விவசாய அபிவிருத்தியும் திறமையும் ஆக்கமடைகின்றன. அதாவது, விவசாயத்துக்கு மின்சார விசை, சிறந்த செய்முறைகள், சிறந்த விற்பனை வசதி, போக்குவரத்து, மற்ற சர்வீஸ்கள் ஆகியவை கிடைக்கின்றன. அதோடு, இந்த இரண்டின் கூட்டுப் பலனுகப் பண்டங்களுக்கும் சர்வீஸ்களுக்கும் உள்நாட்டில் மார்க்கட் உருவாகும். இதன் விளைவாக விவசாய உற்பத்தியும் தொழில் உற்பத்தியும் மேலும் ஊக்கம் பெறும்." அதாவது, சமுதாயத்தின் எல்லாப் பிரிவினர்களும் நன்மை அடையும் விதத்தில் சமசீரான அபிவிருத்தி காண்பதே நமது நோக்கம்.

குறிக்கோள்களையும் குறியளவுகளையும் ஐந்தாண்டுத் திட்டங்கள் நிர்ணயிக்கின்றன. இவற்றுக்கு ஆதாரமாக மேன்மேலும் அதிகமான நிதிகள் ஒதுக்கப்படுகின்றன. இவை யெல்லாம் மேற்சொன்ன விரிவான திட்டத்தின் பாகங்களாக அமையும். விவசாய அபிவிருத்தி இடைவிடாமல் தொடர்ந்து நடக்க வேண்டிய காரியமாகையால், கிராமத்திலும் அதற்குமேல் நிலைகளிலும் நன்கு இணைந்த ஸ்தாபனம் ஒன்றை நாம் ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு குடும்பமும் இப்போதைவிட மிக உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைச் சுய முயற்சியால் பெறுவதற்கு இந்த ஸ்தாபனம் உதவி புரிய வேண்டும். நவீன விஞ்ஞானச் செய்முறைகளைக் கையாண்டும், பல தசாப்தங்களாக உருவாகியுள்ள சமுதாயப் பொறுப்புகளில் முழு அளவுக்குப் பங்கெடுப்பதன் மூலமும் ஒவ்வொரு குடும்பமும் தனது நிலையை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

## திட்டத்தின் குறியளவுகள்

விவசாய அமைச்சகம், சமுதாய அபிவிருத்தி அமைச்சகம், திட்டக் கமிஷன் ஆகியவற்றுக்கு இடையேயும், இவற்றுக்கும் ராஜ்யங்களுக்கும் இடையேயும் 1956 செப்டம்பர்-அக்டோபரில் நடந்த விவாதங்களை உங்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் உணவு உற்பத்திக் குறியளவுகள் சம்பந்தமாக நடந்த விவாதங்கள் அவை. பத்தாண்டுக் காலத்தில் விவசாய உற்பத்தியை இரட்டிப்பதற்கான வேலைக்கிரமம் ஒன்று அவசியம் என்று அப்போது வலியுறுத்தப்பட்டது. அதுதான் "தேசப் பொருளாதார அமைப்பின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்; விவசாய வருமானங்களைக் கணிசமாக உயர்த்தும்; இவற்றுக்கும் விவசாயமல்லாத வருமானங்களுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் குறைக்கும்." அதே சமயத்தில் இரண்டாவது திட்டக் காலத்துக்கான குறியளவுகளும் நிர்ணயிக்கப்பட்டன.

உற்பத்தியை உயர்த்துவதற்குப் பின்கண்ட நடவடிக்கைகள் அவசியம் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது :

(1) இருக்கிற நீர்ப்பாசன வசதிகளை முழு அளவுக்குப் பயன்படுத்துதல்;

(2) சிறந்த விவசாயச் செய்முறைகளைக் கையாளுதல்;

(அ) மூல வித்துக்களை உற்பத்தி செய்தல்: அவற்றைக் கிராமங்களில் பெருக்குதல், ஒவ்வொரு குடும்பத்துக்கும் அவற்றை வினியோகித்தல்;

(ஆ) ஒவ்வொரு குடும்பத்துக்கும் தேவைப்படுகிற கரிம உரங்களையும் பசுந்தாள் உரங்களையும் ஒவ்வொரு கிராமத்திலும் உற்பத்தி செய்தல்;

(இ) ஜப்பானிய சாகுபடி முறை போன்ற சிறந்த முறைகளை ஒவ்வொரு குடும்பமும் கையாளுதல்.

(3) புன்செய்ச் சாகுபடி முறை, நிலங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்டுதல், மண் வளப் பாதுகாப்பு முதலிய செய்முறைகளை ஒவ்வொரு குடும்பமும் கையாளுதல்.

நிச்சயமான பாசன வசதியோ மழை வசதியோ பெற்றிருக்கும் பிரதேசங்களைக் கருத்தில் கொண்டு பின்வரும் விஷயம் விசேஷமாகக் குறிப்பிடப்பட்டது: "அடுத்த மூன்று அல்லது ஐந்து வருஷங்களில் ஒவ்வொரு ஏக்கர் நிலத்திலும் திருந்திய விதைகளை உபயோகிப்ப தற்கு ஒவ்வொரு ராஜ்யத்திலும் முயற்சி செய்யப்படும். அத்துடன் ஒவ்வொரு ஏக்கர் நிலத்துக்கும் ரசாயன உரங்கள், கரிம உரங்கள், பசுந்தாள் உரங்கள் ஆகியவற்றை வினியோகிக்க முயற்சிக்கப்படும். திருந்திய வித்துக்கள், ரசாயன உரங்கள், கரிம உரங்கள் ஆகியவை சம்பந்தமான வேலைக்கிரமங்கள் பரஸ்பரத் தொடர் பற்றவை அல்ல. இவற்றில் ஒவ்வொன்றையும் சரியான விகிதாசாரத்தில் ஒவ்வொரு ஏக்கர் நிலத்திலும் உபயோகிக்க வேண்டும். மிகச் சிறந்த விவசாய முறைகளையும் கையாள வேண்டும்.

நிர்வாகப் பிரிவு சம்பந்தமாகப் பின்கண்ட முடிபு வகுக்கப்பட்டது. "விவசாய உற்பத்தியைப் பெருக்கி வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதற்காக ஒவ்வொரு கிராமத்துடனும் ஒவ்வொரு குடும்பத் துடனும் தொடர்பு கொள்ளுதல், உள்ளூர்ச் சாதனங்களையும் உற் சாகத்தையும் ஒன்று திரட்டுதல் ஆகியவற்றுக்குத் தேசிய விஸ்தரிப்பு சர்வீஸ் வாயிலாக வழி காண வேண்டும். விவாதங்களின் போது இதுவே பிரதானமாக வலியுறுத்தப்பட்டது. திட்டத்தின் ஆரம்ப வருஷங்களில் புதிய தேசிய விஸ்தரிப்பு சர்வீஸ் வட்டாரங்களையும் சமுதாயத் திட்ட வட்டாரங்களையும் ஏற்படுத்தும்போது, விவசாய உற்பத்தியைத் துரிதமாகப் பெருக்குவதற்கு வசதியுள்ள பிரதேசங் களுக்கு முதன்மை கொடுக்கப்படும். தேசிய விஸ்தரிப்பு, சமுதாயத் திட்டப் பிரதேசங்களிலும் கிராம நிலை ஊழியர்களின் அலுவலிலும் விவசாய உற்பத்திக்கே முதல் முக்கியத்துவம் அளிக்கப்படும். விஸ் தரிப்பு ஊழியரின் பொறுப்பில் உள்ள கிராமங்களின் கோஷ்டி ஒவ் வொன்றுக்கும் திட்ட வட்டமான குறியளவுகள் நிர்ணயிக்கப்படும்.

"ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கிராமப் பஞ்சாயத்தும் பலகாரி யக் கூட்டுறவு சங்கம் ஒன்றும் இருக்க வேண்டும் என்று விவாதத் தின்போது வலியுறுத்தப்பட்டது. திருந்திய வித்துக்கள், ரசாயன உரங்கள், கரிம உரங்கள், பசுந்தாள் உரங்கள் ஆகியவற்றை உப யோகிக்க ஒவ்வொரு குடும்பமும் இணைப்பான திட்டம் ஒன்றை வகுத்துக் கொள்வதற்கு இந்த ஸ்தாபனங்கள் ஏற்பாடு செய்ய

வேண்டும். இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய குறுகிய காலக் கடன் வசதியை ரொக்கமாகவோ பண்டங்களாகவோ அவை கொடுத்து உதவ வேண்டும். விஸ்தரிப்பு இயக்கத்தின் பலன்கள் மிகக் குறுகிய காலத்துக்குள் சமுதாயத்தின் எல்லாப் பிரிவினர்களுக்கும் கிடைக்காவிடில் அந்த இயக்கத்தின் நோக்கம் நிறைவேருமலே போய்விடும் என்பது உணரப்பட்டது. எந்தக் காரியத்துக்காகக் கடன் கொடுக்கப்படுகிறதோ அதற்காக அது பயன்படுமாறும்,குறித்த காலத்தில் கடன் திரும்ப வசூலாகுமாறும் பஞ்சாயத்துகளும் கூட்டுறவு சங்கங்களும் கவனித்துக் கொள்ள வேண்டும். இந்த வழியில் ஒவ்வொரு குடும்பமும் சுய பலம் பெற்றுக கூட்டுறவு சங்கத்தில் இடம் பெறுவதற்கு வசதி செய்ய வேண்டும். அதாவது, ஒவ்வொரு குடும்பமும் 'பெறுமானம்' உள்ளதாக ஆக்கப்பட வேண்டும். கூடிய சீக்கிரத்தில் இந்தக் கிராமாந்தர ஸ்தாபனங்களை நிறுவ வேண்டும்.''

## 20 வருஷ நோக்கு

நீண்ட காலக் குறிக்கோளை உங்களுக்கு ஞாபகப்படுத்துவதற்காகவே இவ்வாசகங்களை மேற்கோள் காட்டினேன். இந்தக் குறிக்கோளின் முதல் பாகம்தான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் குறியளவுகள். 1976 வாக்கில் நபர்வாரி தேசிய வருமானத்தை இரட்டிக்க வேண்டும் என்ற குறிக்கோளை நாட்டினர் முன் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் சமர்ப்பித்திருக்கிறது. நகர வருமானங்களுக்கும் கிராமாந்தர வருமானங்களுக்கும் இடையே யுள்ள வித்தியாசம் கணிசமாக அதிகரிக்கக் கூடாது என்ருல் 1976 வாக்கில் கிராமாந்தர சராசரி வருமானம், குறைந்தபட்சம், இரட்டிக்கவாவது வேண்டும்.10 ஆண்டுகளில் விவசாய உற்பத்தியை இரட்டிக்க வேண்டும் என்ற உத்தேசத்துக்குப் பொருத்தமான குறிக்கோள் இது. 1956 செப்டம்பர்—அக்டோபர் மாதங்களில் நடந்த விவாதங்களின்போது இந்த உத்தேசம் குறிப்பிடப்பட்டது. சுமார் 20 வருஷ காலத்தில் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு எத்தகைய வேலைக்கிரமங்கள் சாத்தியமாக இருக்கும் என்பதை இனி குறிப்பிட முற்படுகிறேன். அதோடு, இந்தக் குறிக்கோள்கள் கைகூடுவதற்காகக் கிராமாந்தரக் குடும்பங்கள் எவ்வாறு ஒன்றுபட வேண்டும் என்பதையும், எத்தகைய நட

வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் பொதுப்படையாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

நீர்ப்பாசன வசதிகளைப் பூரணமாகப் பயன்படுத்தும் விஷயத்தைக் கவனிப்போம். பல-காரிய அணைத் திட்டங்கள், பெரிய திட்டங்கள், நடுத்தரத திட்டங்கள் ஆகியவற்றை முதலில் எடுத்துக் கொள்வோம். நீர்ப்பாசனம் பற்றிய நமது கொள்கையும் வேலைக் கிரமங்களும் புரட்சிகரமாக மாறியிருப்பதை அனைவரும் உணர வேண்டும். அதற்காக இவ்விஷயம் குறித்து நான் விரிவாகப் பேச வேண்டியிருக்கிறது:

தேசப் பிரிவினை காலத்தில் இந்தியாவின் பங்காக கிடைத்த நீர்ப்பாசனச் சாதனங்களின் அசல் மதிப்பு சுமார் 110 கோடி ரூபாய் ஆகும். இந்தப் பாசன சாதனங்கள் இரு வகைப்படும். நிலையான நீர்ப்பாசன வசதி அளிக்கும் சாதனங்கள் முதல் வகையைச் சேர்ந்தவை. அதாவது, அரசாங்கக் கால்வாய்கள், பெரிய ஏரிகள் ஆகிவற்றல் பலன் அடையும் பிரதேசங்கள் இதில் அடங்கும். தேசப் பிரிவினை காலத்தில் இருந்தபடி இத்தகைய பிரதேசங்களின் மொத்தப் பரப்பு 265 லட்சம் ஏக்கர். இதில் கால்வாய்ப் பாசனத்தில் இருந்தவை 180 லட்சம் ஏக்கர். ஏரிப்பாசனத்தில் இருந்தவை 85 லட்சம் ஏக்கர். இவை தவிர குளங்கள், தனிப்பட்டவர்களின் கிணறுகள் முதலிய சிறு பாசனச் சாதனங்கள் 220 லட்சம் ஏக்கர் நிலங்களைப் பாசனம் செய்தன. ஆக இந்த இருவகைச் சாதனங்களும் மொத்தம் 485 லட்சம் ஏக்கர் நிலத்துக்குப் பாசன வசதி அளித்தன. அசல் மதிப்பு ரூ110 கோடி என்பது முக்கியமாக முதல் வகைப் பாசன சாதனங்களையே குறிப்பிடுகிறது—அதாவது, 265 லட்சம் ஏக்கர் நிலங்களைப் பாசனம் செய்த சாதனங்களைக் குறிக்கிறது. 70 அல்லது 80 வருஷ காலத்தில் நிர்மாணிக்கப்பட்டவை இந்தச் சாதனங்கள். பிரமாதமான வேலைத் திட்டங்கள் எவையும் அப்போது மேற்கொள்ளப் படவில்லை. பாசன வசதி மெதுவாகத்தான் விஸ்தரிக்கப்பட்டு வந்தது. அப்போதைய செயல் முறையை யாவரும் அறிவர். அதாவது, அணை அல்லது நீர்த் தேக்கத்தையும் கால்வாய்களையும் அரசாங்க ஸ்தாபனம் அமைக்கும். மற்றப்படி மக்களே சுய முயற்சியால் வயல்புற வாய்க்கால்களை அமைத்து, பாசன வசதியைப் படிப் படியாக விருத்தி செய்து கொள்ள வேண்டியிருந்தது. பாசனத்

துக்கு மக்கள் தண்ணீர் எடுத்தபோது சர்க்கார் அதற்கு வரி விதித்தது. நீர்ப்பாசன வசதிகள் தோன்றுவதற்கும் அவற்றைப் பூரணமாகப் பயன்படுத்துவதற்கும் இடையே 10 அல்லது 15 வருஷ அவகாசம் பிடிக்கும் என்று அப்போது கருதப்பட்டது.

## புதிய கொள்கை

முதல் ஐந்தாண்டுத் திட்டம் வந்தபின் சர்க்காரின் கொள்கை அடியோடு மாறியது. நாட்டில் உள்ள ஏராளமான நீர் வளத்தைக் கூடுமானவரை துரிதமாகப் பயன்படுத்தவேண்டும் என்ற குறிக்கோள் நிர்ணயிக்கப்பட்டது. நாடு சுதந்திரம் பெற்றபின், முதல் திட்டம் வருவதற்குமுன், பல ராஜ்யங்களில் பெரிய நீர்ப்பாசன வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவை பின்னர் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. புதிதாக மூன்று வேலைக்கிரமங்கள்தாம் 195?-ல் அத் திட்டத்தில் சேர்க்கப்பட்டன. முதல் திட்டத்தில் சேர்க்கப்பட்ட பல-காரிய அணை வேலைகள், பாசனத் திட்டங்கள் ஆகியவற்றுக்கான மொத்தச் செலவு ரூ. 860 கோடி. இதில் ரூ. 80 கோடி, முதல் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்குவதற்கு முன்பே செலவாகியிருந்தது. இந்த வேலைகள் எல்லாம் பூர்த்தியான பிறகு 230 லட்சம் ஏக்கருக்கு நிலையான பாசன வசதி கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டது. ரூ. 470 கோடி செலவாகக் கூடிய புதிய பாசன வேலைகள் இரண்டாவது திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இவை 150 லட்சம் ஏக்கர் நிலத்துக்கு நிலையான பாசன வசதி அளிக்கவல்லவை. மொத்தம் சுமார் 1,330 கோடி செலவாகக்கூடிய பல-காரிய அணைத் திட்டங்கள், பெரிய திட்டங்கள், நடுத்தரத் திட்டங்கள் ஆகியவை முதலாவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் அடங்கியுள்ளன என்று சுருக்கமாகக் கூறலாம். இவை அதிகப்படியாக 380 லட்சம் ஏக்கர் நிலத்துக்குப் பாசன வசதி அளிக்கும். (தேசப் பிரிவினை காலத்தில் இத்தகைய சாதனங்களிலிருந்து பாசன வசதி பெற்ற நிலங்கள் 265 லட்சம் ஏக்கர்தான்.)

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்த நீர்ப்பாசன வேலைகள் பலவற்றுக்கு விரிவான மதிப்பீடுகள் (எஸ்டிமேட்டுகள்) சரியானபடி தயாரிக்கப்படவில்லை. அவை சம்பந்தமாக ரெவினியூ

சர்வேயோ, விவசாய சர்வேயோ நடத்தப்படவில்லை ; பணச் செலவு களும் துல்லிபமாக மதிப்பிடப்படவில்லை. முதல் திட்டத்தின் ஆரம்ப ஆண்டுகளில்தான் இத்தகைய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன. ஒவ்வொரு வேலையின் நிதி அம்சங்களும் மற்ற அம்சங்களும் அப் போது கணக்கிடப்பட்டன. உயர்ந்தபட்சப் பலன் பெறுவதற்கு வசதியாக, சாத்தியமானவரை, அவ் வேலைகளின் காலகட்டங்கள் மாற்றி யமைக்கப்பட்டன. நமது ஐந்தாண்டுத் திட்டங்களில் உள்ள பிரம்மாண்டமான பாசன வேலைகள் சம்பந்தப்பட்டவரை, நான் மேலே குறிப்பிட்ட பழங்காலச் செயல்முறைகள் முற்றிலும் பொருத்தமற்றவை. நமது திருஷ்டி அடியோடு மாறவேண்டும்: முதல் திட்டத்தில் மாத்திரம் பாசனத்துக்காக ரூ. 407 கோடி செல விடப்பட்டது; முதலாவது, இரண்டாவது திட்டங்கள் இரண்டையும் சேர்த்து மொத்தம் சுமார் ரூ. 788 கோடி செலவாகும். பழங்கால முறைப்படி இந்தப் பாசன சாதனங்களைப் பயன்படுத்துவது என்ருல் —அதாவது முழுப் பொறுப்பையும் மக்களிடம் விட்டுவிட்டு 10 அல் லது 15 வருஷங்களுக்குப்பின் பயன்படுத்துவது என்ருல்—நம் நாட் டுக்கு வருஷத்தில் 30 முதல் 40 கோடி ரூபாய்வரை வட்டிக் கணக் கில் மாத்திரம் நஷ்டம் ஏற்படும்; இதைப்போல மூன்று அல்லது நான்கு மடங்கு மதிப்புள்ள மகசூலும் நஷ்டமாகும். பழைய முறைப் படி பெரிய நீர்ப்பாசன வேலை எதையும் நிறைவேற்றுவது முற்றிலும் அசாத்தியமானது. *ஒவ்வொரு கட்டத்திலும்* உற்பத்திப் பெருக்கம் என்ற உருவத்தில் உயர்ந்தபட்சப் பலன்கிடைக்கும் விதத்தில் பாசன வேலைகளுக்குத் திட்டமிடவேண்டும். இல்லையேல் இவ்வளவு பெருந் தொகைகள் செலவிடுவதை நினைக்கக்கூட முடியாது. இதையே வேறுவிதமாகச் சொல்வதானல், பின்கண்ட நான்கு காரியங்கள், அதிகமான கால விரயம் இல்லாமல், இணைப்பாகவும் முறையாகவும் நிறைவேறவேண்டும் :

(1) தண்ணீரைத் தேக்குவதற்காக அணை கட்டுதல் ;

(2) கால்வாயையும் வினியோக சாதனங்களையும் அர சாங்க ஸ்தாபனம் நிர்மாணித்தல்—ஒவ்வொரு கிராமத்துக் கும் சௌகரியமான இடத்திலிருந்து தண்ணீர் கிடைக்கும் விதத்தில் இவற்றை அமைக்கவேண்டும் ;

(3) இரண்டாவது இனத்தில் குறிப்பிட்டுள்ள வேலைக்குப் பொருத்தமாக, குறிப்பிட்ட காலத்துக்குள் ஒவ்வொரு கிராமத்திலும் வயல்புற வாய்க்கால்களை அமைக்கவேண்டும். திட்டத்தால் பலன் அடைவோர் செய்யவேண்டிய காரியம் இது. கால்வாய்களில் தண்ணீர் வந்தவுடனே ஒவ்வொரு ஏக்கர் நிலத்தையும் பாசனம் செய்யும் விதத்தில் வயல்புற வாய்க்கால்களைத் தோண்டவேண்டும் ;

(4) உயர்ந்தபட்ச உற்பத்தி கைகூடும் விதத்தில் விவசாயச் செய்முறைகளைச் சீர்திருத்துதல்.

## வயல்புற வாய்க்கால்கள்

இந்த நான்கு கட்டங்களையும் இணைப்பாக நிறைவேற்ற வேண்டும், ஒவ்வொரு கட்டத்திலும் பொருளாதார ரீதியாக உயர்ந்த பட்சப் பலன் கிடைக்கும் விதத்தில் அவை நிறைவேற்றப்பட வேண்டும். திட்ட ரீதியாக நீர்ப்பாசன வசதியை அதிகரிப்பது என்பதன் சாரம் இதுதான். ஏற்கனவே ஆரம்பமாகி விட்ட வேலைகள் சம்பந்தப்பட்டவரை, திருத்தி யமைக்கப்பட்டுள்ள திட்டங்களில் இம்முறையைக் கையாள முயற்சிக்கப்படுகிறது. புதிய வேலைகள் சம்பந்தப்பட்டவரை இந்த முறையை ஆதாரமாகக் கொண்டே திட்டம் தயாரிக்கப்படுகிறது. முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பெரிய அணைத் திட்டங்கள் மூலம் 80 லட்சம் ஏக்கருக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்தப்பட்டது. அதாவது, இவ்வளவு நிலப் பரப்புக்கு வேண்டிய கால்வாய்களை அரசாங்க ஸ்தாபனம் அமைத்துக் கொடுத்தது. ஆனால் நடைமுறையில் 40 லட்சம் ஏக்கர்தான் பாசனம் செய்யப்பட்டது. வயல்புற வாய்க்கால்களைத் தோண்டி கிராமவாசிகள் தங்கள் கடமையை நிறைவேற்றாததுதான் இதற்கு முக்கிய காரணம். தவிர, சில இடங்களில் மோசமான 'டிசைன்' களை ஆதாரமாகக் கொண்டு கால்வாய்கள் கட்டப்பட்டன.

முதல் திட்ட காலத்தில் விடுபட்ட (40 லட்சம் ஏக்கர்) நிலப் பரப்புத் தவிர அதிகப்படியாக 120 லட்சம் ஏக்கருக்கு இரண்டாவது திட்ட காலத்தில் பாசன வசதி கிடைக்கும். அதாவது மொத்தம் சுமார் 160 லட்சம் ஏக்கர் நிலத்தில் இவ்வசதியைப் பயன்படுத்தலாம்.

பல-காரியத் திட்டங்கள், பெரிய அணைத் திட்டங்கள், நடுத்தரத் திட்டங்கள் ஆகியவை தரக்கூடிய பாசன வசதி இது. ஒவ்வொரு 10 லட்சம் ஏக்கர் பரப்புக்கும் சர்க்கார் சராசரி சுமார் 2,500 மைல் நீளக் கால்வாய்களை அமைக்க வேண்டியிருக்கும் என்று மதிப்பிடப் படுகிறது, அதைப்போல் நான்கு மடங்கு நீளத்துக்கு, அதாவது சுமார் 10,000 மைல் நீளத்துக்கு, வயல்புற வாய்க்கால்களைக் கிராம வாசிகள் தோண்ட வேண்டியிருக்கும். இதன்படி, பெரிய வேலைக் கிரமங்கள் தரும் பாசன வசதி முழுவதையும் பயன்படுத்துவது என்றால் இந்தியா வெங்கும் சுமார் 1,60,000 மைல் நீளத்துக்கு வயல்புற வாய்க்கால்களைக் கிராமவாசிகள் தோண்ட வேண்டியிருக்கும். இவற்றைத் தோண்டினால் மாத்திரம் போதாது; ஆண்டுதோறும் பராமரித்து, கசிவு பொசிவு ஏற்படாதபடி அவ்வப்போது அபிவிருத்தியும் செய்ய வேண்டும்.

முதலாவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் உள்ள பாசன வேலைகளால் பலன் பெறக்கூடிய சுமார் 180 லட்சம் ஏக்கர் நிலப் பரப்பை மூன்றுவது திட்ட காலத்திலும் அதற்குப் பின்னரும் விருத்தி செய்ய வேண்டியிருக்கும். நான் மேலே சொன்னதிலிருந்து இது புலனுகும். 1960—61 லிருந்து 15 வருஷ காலத்தில் நீர்ப்பாசன வசதி எந்த அளவுக்கு அதிகரிக்கும் என்பதை மதிப்பிடுவது நல்லது. நீர்ப்பாசன அபிவிருத்திக்காக 15 முதல் 20 வருஷ காலத்துக்குப் பொதுப்படையான திட்டம் ஒன்றை நாம் வகுத்திருப்பது உங்களுக்குத் தெரியும். பெரிய, நடுத்தரப் பாசன ஏற்பாடுகளின் மூலம் முதலாவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பாசன வசதி பெறுகின்ற 375 லட்சம் ஏக்கர் நிலம், அதற்கு முந்திய 265 லட்சம் ஏக்கர் நிலம் ஆகியவை தவிர மேற்கொண்டு சுமார் 400 முதல் 450 லட்சம் ஏக்கருக்குப் பாசன வசதி ஏற்படுத்தலாம் என்று மதிப்பிடப் படுகிறது. அதாவது இத்தகைய பாசனச் சாதனங்கள் மூலம் மொத்தம் 1,050 முதல் 1,100 லட்சம் ஏக்கர் வரை உள்ள பரப்புக்குப் பாசன வசதி கிடைக்கச் செய்யலாம். 1976 வாக்கில் பல-காரிய அணைத் திட்டங்கள், பெரிய பாசனத் திட்டங்கள், நடுத்தரத் திட்டங்கள் ஆகியவை மூலம் சுமார் 950 லட்சம் ஏக்கருக்கு நடைமுறையில் பாசன வசதி கிடைக்கக் கூடும். ஏற்கனவே சொன்ன கணக்குப் படி, இந்தப் பாசன வசதியைப் பயன்படுத்துவதற்காக, நாட்டின்

பல்வேறு பகுதிகளில் உள்ள கிராமங்களில் அடுத்த 20 வருஷ காலத்தில் சுமார் 30,000 முதல் 40,000 மைல் நீளத்துக்கு வயல்புற வாய்க்கால்களை அமைக்க வேண்டியிருக்கும்.

## சிறு பாசன வேலைகள்

இதுவரை பல-காரிய அணைத் திட்டங்கள், பெரிய திட்டங்கள் நடுத்தரத் திட்டங்கள் ஆகியவை பற்றிப் பேசினேன். இனி சிறு பாசன வேலைகளைக் கவனிக்கலாம்.

நமது ஐந்தாண்டுத் திட்டங்களில் ஏராளமான சிறு பாசன வேலைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றுக்காக முதல் திட்டத்தில் ரூ. 100 கோடி ஒதுக்கப்பட்டது. இவ்வேலைகள் சம்பந்தமாகத் திட்டவட்டமான தகவல்கள் சேகரிக்கப்படவில்லை. ஆயினும் கிடைத்துள்ள தகவல்களைச் சுருக்கமாகக் குறிப்பிடலாம்: சிறு பாசன ஏற்பாடுகள் மூலம் 112 லட்சம் ஏக்கருக்குப் பாசன வசதி அளிக்க உத்தேசிக்கப்பட்டது. நடைமுறையில் 10υ லட்சம் ஏக்கருக்குப் பாசன வசதி கிடைத்ததாக மதிப்பிடப்படுகிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இவற்றுக்காக ரூ. 120 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது; 90லட்சம் ஏக்கர் நிலத்தைப் பாசனம் செய்ய வேண்டும் என்பது குறியளவு. குழாய்க் கிணறுகளும் இவற்றில் அடக்கம். குழாய்க் கிணறுகள் பற்றிய நிலவரம் வருமாறு :—

| | முதல் ஐந்தாண்டுத் திட்டம் | 2-வது ஐந்தாண்டுத் திட்டம் |
|---|---|---|
| *உத்தேச எண்ணிக்கை* | 5,015 | 3,581 |
| *பூர்த்தியானவை (மின்சார சக்தி முதலியவற்றுடன்)* | 3,524 | 1,212 (*ஜனவரி 58 வரை*) |
| பாசனம் செய்யக்கூடிய பரப்பு | (1) *குறியளவு*: 15 லட்சம் ஏக்கர்<br>(2) *சாதனை*: 10 லட்சம் ஏக்கர் | (1) *குறியளவு*: 10 லட்சம் ஏக்கர்<br>(2) *சாதனை*: 3·6 லட்சம் ஏக்கர் |
| நடைமுறையில் பாசனம் *பெற்றது* | 8 லட்சம் ஏக்கர் | தகவல் இல்லை |

குழாய்க் கிணறுகள் மூலம் கிடைத்த பாசன வசதியைப் பயன் படுத்துவதில் கால தாமதம் காணப்பட்டது. கிராமங்களில் வயல் புற வாய்க்கால்களைத் தோண்டாமையே இதற்கு முக்கிய காரணம். கிராமப் பஞ்சாயத்துகளையும் கூட்டுறவு சங்கங்களையும் துரிதமாக அமைக்க வேண்டும் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது. வயல் புற வாய்க்கால்களை அமைத்து, திருப்திகரமாகப் பராமரிக்கும் பொறுப்பை அந்த ஸ்தாபனங்கள் ஏற்றுக் கொள்ளும். அதேபோல், கால்வாய் அமைப்பதிலும் தூர் எடுப்பதிலும் ஏற்படும் கால தாமதம் காரணமாகச் சிறு பாசனக் குளங்கள் பலவற்றின் தண்ணீர் பயன் படுத்தப்படவில்லை. இவ்வேலைகள் கிராமவாசிகளின் மாமூல் பொறுப்புகள் ஆகும். சிறு பாசனச் சாதனங்கள் மூலம் மொத்தம் சுமார் 9 கோடி முதல் 10 கோடி ஏக்கர் வரை பாசனம் செய்ய முடியும் என்று மதிப்பிடப்படுகிறது. 1976-க்குள்ளாவது இந்த இலக்கை அடைய வேண்டும்.

மேற்சொன்னதிலிருந்து, குத்துமதிப்பாக, 1976-வாக்கில் நடை முறையில் பாசன வசதி பெறக்கூடிய நிலப் பரப்பு வருமாறு:

| | |
|---|---|
| *பல-காரியத் திட்டங்கள், பெரிய திட்டங்கள், நடுத்தரத் திட்டங்கள்* | *சுமார் 9 கோடி ஏக்கர் (பாசன வசதி பெறக்கூடிய 10 கோடி அல்லது 11 கோடி ஏக்கரில்)* |
| *குழாய்க் கிணறுகள், ஏரிகள், கிணறுகள் முதலிய சிறிய பாசனச் சாதனங்கள் மூலம்* | *9 கோடி முதல் 10 கோடி ஏக்கர் வரை;* |

இவ்வாறு பயிர் நிலத்தில் கணிசமானதோர் பரப்பு—சுமார் 14 கோடி முதல் 15 கோடி ஏக்கர்—இறுதிவரை பாசன வசதியின்றியே இருக்கும். இந்தப் பரப்பில் சுற்றுச் சுவர் கட்டுதல், மண் வளப் பாது காப்பு, மற்றப் புன்செய்ச் சாகுபடி முறைகள் ஆகியவை மூலமே உற்பத்தியை உயர்த்த வேண்டியிருக்கும். இந்த ஏற்பாடுகள் சம் பந்தமான ஆராய்ச்சி, தொழில் நுணுக்கப் பயிற்சி, 'விஸ்தரிப்பு' வேலை ஆகியவை இந்தியாவில் இனிமேல்தான் பெரும்பாலும் நடக்க வேண்டியிருக்கிறது. இந்த ஏற்பாடுகளுக்காக இரண்டாவது ஐந் தாண்டுத் திட்டத்தில் சுமார் ரூ. 27 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் ஒரு அறிக்கையில் டாக்டர் கெல்லாக் பின்வரும் விஷயத் தைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்: "ஒவ்வொரு கிராமத்துக்கும், ஒவ்

வொரு பண்ணைக்கும் வேண்டிய திட்டத்தை விவசாயிகளே வகுப்பது தான் மண் வளப் பாதுகாப்புக்கான மிக முக்கிய நடவடிக்கையாகும். உற்பத்தி சம்பந்தமான எல்லா அம்சங்களையும் விவசாயி கருத்தில் கொள்ள வேண்டும். திட்டம் வகுத்து அவருக்கு உதவுகிற தொழில் நுணுக்கவாதிகளும் இந்த அம்சங்களை யெல்லாம் கவனிக்க வேண்டும். கிராமங்களிலும், அவற்றை விடப் பெரிய சுயாட்சிப் பகுதிகளிலும் மண் வளம், நீர் வளத்தைப் பாதுகாப்பதற்காக உள்ளூர்த் தலைமையையும் பொறுப்பையும் உருவாக்க வேண்டும். இதற்குச் சகல விதங்களிலும் முயற்சிக்க வேண்டும் என்று பலமாகச் சிபாரிசு செய்கிறோம்.'' பம்பாய் ராஜ்யத்தில் இத்தகைய வேலைக்கிரமங்கள் மிகுந்த பயன் அளித்து வருகின்றன. இவற்றை அரசாங்க உதவியுடன் கிராமவாசிகளே நிறைவேற்றுகின்றனர். இவ்வாறு செய்தால்தான் 14 கோடி அல்லது 15 கோடி ஏக்கர் நிலப் பரப்பில் இவ்வேலைகளை நிறைவேற்ற இயலும். இத்தகைய பிரதேசங்களில் கிராமவாசிகள் பல்லாயிரக்கணக்கான மைல் நீளத்துக்குச் சுற்றுச் சுவர்கள் அமைத்து அவற்றை ஆண்டுதோறும் பராமரித்து வர வேண்டியிருக்கும்.

## விவசாயச் செய்முறைகள்

திருந்திய விவசாய முறைகள் பற்றிய வேலைத் திட்டங்களை இனி கவனிக்கலாம்.

அங்கீகாரம் பெற்ற விதைகளைச் 'சப்ளை' செய்வது இவற்றுள் முதலாவது. 4,185 மூல வித்துப் பண்ணைகளை ஏற்படுத்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்க ஸ்தாபனம் இவற்றில் திருந்திய வித்துக்களை உற்பத்தி செய்யும்; பிறகு, பதிவு செய்யப்பட்ட விவசாயிகள் அவ்வித்துகளைப் பெருக்குவர். ஒவ்வொரு கிராமமும் தனக்கு வேண்டிய திருந்திய வித்துக்களைத் தானே உற்பத்தி செய்ய வேண்டும் என்பது இந்த வேலைத் திட்டத்தின் ஒரு அம்சமாகும். 4,185 விதைப் பண்ணைகளில் 978 விதைப் பண்ணைகள் திட்டத்தின் முதலாவது, இரண்டாவது ஆண்டுகளில் அமைக்கப்பட்டு விட்டன. 1958—59-ல் 1,560 பண்ணைகள் திறக்கப்படும். இந்த வேலைத் திட்டத்துக்கு மத்திய அரசாங்கம் தாராள உதவி அளிக்கிறது. மூல வித்துக்களைப் பெருக்கும் காரி

யம் இன்னமும் கணிசமான அளவில் ஆரம்பிக்கப்படவில்லை. ஆயினும் இரண்டாவது திட்ட இறுதிக்குள் விதைப் பண்ணைகளில் பாதி உற்பத்தி செய்யும் மூல வித்துக்கள், பதிவு செய்யப்பட்ட விவசாயிகளால் பெருக்கப்பட்டு கிராமங்களிலும் பெருக்கப்படும் என்று நம்புகிறோம். இவ்வித்துக்களை உபயோகிக்க லாயக்கான பிரதேசம் முழுவதிலும் அவை வினியோகிக்கப்படும் என்று நம்பப்படுகிறது.

ஒவ்வொரு கிராமமும் தனக்கு வேண்டிய கம்போஸ்ட் உரத்தையும் பசுந்தாள் உரத்தையும் தானே உற்பத்தி செய்துகொள்ள வேண்டும் என்பதுவும் இந்த வேலைத் திட்டத்தில் அடக்கம். இதற்கு வேண்டிய பயிற்சியும், மற்ற ஏற்பாடுகளும் நடந்து வருகின்றன.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 70 முதல் 80 லட்சம் ஏக்கர் நிலத்தில் ஜப்பானிய சாகுபடி முறை கையாளப்படும் என எதிர்பார்க்கிறோம். கோதுமை முதலிய பயிர்களுக்கும் திருந்திய செய்முறைகள் உள்ளன. மற்றும் பருத்தி, சணல், தோட்டப் பயிர், மீன் நிலைகள் முதலியவை சம்பந்தமாகவும் திட்டங்கள் வகுத்து நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த வேலைத் திட்டங்கள் எல்லாம் பரஸ்பரம் இணைப்புள்ளவை. நீர்ப்பாசன வசதி பெற்ற அல்லது நிச்சயமான மழை வசதியுள்ள ஒவ்வொரு ஏக்கர் நிலத்திலும், அங்கீகாரம் பெற்ற விதைகளை உபயோகிக்கவேண்டும். ரசாயன உரங்களையும் கரிம உரங்களையும் பசுந்தாள் உரங்களையும் சரியான விகிதத்தில் போடவேண்டும்; சிறந்த விவசாய முறைகளைக் கையாளவேண்டும்; நவீன விஞ்ஞான முறைகளின்படி நிலத்தை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். போஷாக்கு உணவுகளின் சப்ளையைப் பெருக்க வேண்டும். கால்நடைகள், மீன் நிலைகள் முதலியவை சம்பந்தமான வேலைத் திட்டங்களை விரிவுபடுத்த வேண்டும்.

நான் விவரித்துள்ள கிராம அபிவிருத்தி வேலைகளுக்காக முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆண்டுதோறும் சராசரி ரூ. 170 கோடி ஒதுக்கப்பட்டது. (சுதந்திரம் பெறுவதற்கு முந்திய வருஷங்களில் இதில் சுமார் ஐந்தில் ஒரு பகுதிதான் ஒதுக்கப்பட்டது). இரண்டாவது திட்டத்தில் வருஷத்துக்கு ரூ. 225 கோடி வீதம் ஒதுக்கப்படுகிறது. கூட்டுறவு சங்கங்கள் மூலமும் விவசாயிகளுக்குக் கொடுக்

கப்படும் குறுகிய, நடுத்தர, நீண்ட காலக் கடன்களும் தக்காவிக் கடன்களும் இதில் சேரவில்லை.

## பஞ்சாயத்தும் கூட்டுறவும்

நீண்டகால கிராம அபிவிருத்தித் திட்டம் எவ்வளவு பிரம்மாண்டமானது என்பதைச் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது, சிறிய கிராம சமுதாயங்களாக அமைந்துள்ள 'கிராம இந்தியா'வில் 6 கோடிக் குடும்பங்கள் என்னென்ன செய்ய வேண்டியிருக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒவ்வொரு கிராமத்திலும் வேலைத் திட்டங்கள் பற்றிய பொறுப்பைக் கிராமப் பஞ்சாயத்தும் பல-காரியக் கூட்டுறவு சங்கமும் ஏற்றுக்கொள்ள வேண்டும். சட்டபூர்வமாக வரி வசூல் செய்யும் அதிகாரமும், ஒழுங்கு முறை அதிகாரங்களும் கிராமப் பஞ்சாயத்துக்கு இருக்கவேண்டும். உதாரணமாக, கிராமவாசிகள் மாமூல் பொறுப்புகளை நிறைவேற்றுமாறு கண்காணிக்கும் அதிகாரம் அதற்கு இருக்கவேண்டும். ஆனால் எல்லா வேலைத் திட்டங்களையும் கூட்டுறவு சங்கத்தின் மூலமே நிறைவேற்ற வேண்டும். ஒவ்வொரு குடும்பமும் சங்கத்தில் அங்கம் வகிக்க வேண்டும். எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து முடிவுகளை வகுத்து நிறைவேற்ற வேண்டும். உடன்பாட்டின் மூலமே வேலைத் திட்டங்கள் அமல் நடத்தப்பட வேண்டும் :

> ***(1) பல-காரிய அணைத் திட்டங்கள், பெரிய திட்டங்கள், நடுத்தரத் திட்டங்கள் :*** கிடைக்கிற நீர்ப்பாசன வசதியைப் பயன்படுத்துவதற்காக வயல்புற வாய்க்கால்களை அமைத்து அவற்றை அன்றாடம் நன்கு பராமரித்தல். 20 வருஷ காலத்தில் நாட்டின் பெரும் பகுதியில் ஆண்டு தோறும் 30 முதல் 40 ஆயிரம் மைல் நீள வாய்க்கால்கள் தோண்ட வேண்டியிருக்கும்.
>
> (2) ***குழாய்க் கிணறுகள் உள்பட சிறு பாசன வேலைகள் :*** இந்தப் பாசனச் சாதனங்களைப் பராமரிக்கும் பொறுப்பும் வயல்புற வாய்க்கால்களைத் தோண்டிப் பராமரிக்கும் பொறுப்பும் கிராமத்தைச் சார்ந்தது.

(3) வறண்ட பிரதேசங்களில் சுற்றுச் சுவர் கட்டுதல், மண்வளப் பாதுகாப்பு முதலிய புன்செய்ச் சாகுபடி ஏற்பாடுகளும், கரைகள் கட்டிப் பராமரித்தலும்.—இது எவ்வளவு பெரிய பிரச்னே என்பது ஏற்கனவே குறிப்பிடப் பட்டிருக்கிறது.

*(4) விஞ்ஞான விவசாயம்* :

(அ) தேவையான விதைகள், கரிம உரங்கள், பசுந்தாள் உரங்கள் முழுதையும் கிராமத்திலேயே நிரந்தரமாக உற்பத்தி செய்தல். முன்கூட்டிப் பணம் கொடுக்க முடியாதவர்களுக்கு இப்பொருள்களைக் கடனுகக் கொடுத்து அறுவடைக்குப் பிறகு பணத்தை வசூலித்தல்.

(ஆ) ரசாயன உரங்களை வினியோகிக்க ஏற்பாடு செய்தல். அவற்றைச் சிறு நிலக்காரர்களுக்கு ஆரம்பக் கட்டத்தில் கடனுக்குக் கொடுத்தல்.

(இ) ஜப்பானிய சாகுபடி முறைக்கு ஏற்ற பிரதேசங்களில் எல்லாம் அதைக் கையாளுதல். கோதுமை, மற்றப் பயிர்கள் சம்பந்தமாகத் தொழில் நுணுக்க இலாகாக்கள் கூறுகிற முற்போக்கு முறைகளைக் கையாளுதல். விவசாயப் பொருளாதாரத்தில் புதிய பிரிவுகளை ஏற்படுத்துவதற்குப் பாடுபடுதல்.

(ஈ) கால்நடை அபிவிருத்திக்கான வேலைக்கிரமங்கள், பால் பண்ணைப் பண்டங்கள், மீன் நிலைகள் முதலியவை.

(5) **உப தொழிலுக்கு ஏற்பாடுகள்** : குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள முதலியவை.

(6) **துண்டு நில இணைப்பு**: நான் மேலே சொன்ன வேலைக் கிரமங்களைச் சரியானபடி நிறைவேற்ற வேண்டும் என்ருல் துண்டு நிலங்களை இணைப்பதற்கான வேலைத் திட்டம் வகுப்பது அத்தியாவசியமானது. குறிப்பாக, நீர்ப்பாசன வசதியுள்ள அல்லது நிச்சயமான மழை வசதியுள்ள பிரதேசங்களுக்கு இது மிகவும் அத்தியாவசியமானது.

(7) ***சமுதாய நன்மைக்கான கட்டுமான வேலைகள்:*** சமுதாயத்துக்கு உபயோகப்படுகின்ற நிரந்தர ஆஸ்திகளை உருவாக்குவதற்காக ஒவ்வொரு குடும்பமும் தனது நேரத்தில் ஒரு பகுதியை ஈடுபடுத்த வேண்டும்.

(8) இந்த நடவடிக்கைகளில் ***கிராம மாதர்களும் இளைஞர்களும்*** முழு அளவுக்குப் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். இக் காரியங்களுக்கு நிலைக்களனாகக் கிராமப் பாடசாலை விளங்கவேண்டும்.

மேற்சொன்ன இனங்கள் அடங்கிய ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றை ஒவ்வொரு கிராமத்திலும் கிராமப் பஞ்சாயத்தும் கூட்டுறவு சங்கமும் வகுத்துக்கொள்ள வேண்டும். இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குக் கிராமம் முழுவதும் தயாராய் இருக்க வேண்டும். பல்வேறு குடும்பங்களின் வேலைத் திட்டங்களைச் சேர்த்து இந்தக் கிராமத் திட்டத்தை வகுக்க வேண்டும்.) ஜில்லா அல்லது வட்டாரத் திட்டங்களுடனும், அவை மூலமாக ராஜ்யத் திட்டங்களுடனும் இந்தக் கிராமத் திட்டங்களைப் பிணைக்க வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு அபிவிருத்தித் திட்டம் இருக்கும்; அதை நிறைவேற்றுவதற்கு அக் குடும்பம் அரும்பாடு படவேண்டும்.

நமது ஐந்தாண்டுத் திட்டங்களில் கூட்டுறவு இயக்கத்துக்கு உரிய பங்கு பற்றிச் சென்ற வருஷம் மசூரியில் விரிவாகப் பேசினேன். உற்பத்தியைப் பெருக்குவது, கிராமாந்தர சேமிப்புகளை அதிகரிப்பது என்ற இரு துறைகளிலும் அந்த இயக்கத்தின் பொறுப்பை விவரித்தேன். அக்கருத்துக்களை இப்போது மீண்டும் சொல்ல விரும்பவில்லை. கூட்டுறவு சங்கம் சம்பந்தமாக அந்த மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் பூரணமாக அமல் நடத்தப்படும் என்றும், சேமிப்பு சம்பந்தமாக அப்போது பிரஸ்தாபித்த குறியளவுகள் கைகூடும் என்றும் நம்புகிறேன்.

## நிலச் சீர்திருத்தங்கள்

கிராமக் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக சமுதாய அபிவிருத்தி ஸ்தாபனம் அரும் பணி புரிய வேண்டிய முக்கியமான துறை ஒன்று இருக்கிறது. அதாவது, நிலச் சீர்திருத்தங்களும் சமுதாய அபி

விருத்தியும் பரஸ்பர இணைப்பு உள்ளவை. சமூக மாறுதலை உருவாக்கும் சாதனங்கள் அவை இரண்டும். அவற்றில் ஒன்றை விட்டுவிட்டு இன்னொன்றை மாத்திரம் அமல் நடத்த முடியாது. கிராமக் கூட்டுறவு சங்கத்தில் 30 முதல் 40 சதவிகித உறுப்பினர்கள்தாம் லேவாதேவி நடைமுறைப்படி 'பெறுமானம்' உள்ளவர்களாக இருக்கிறார்கள். எஞ்சியுள்ள 60 அல்லது 70 சதவிகித உறுப்பினர்கள் பெறுமானமுள்ள காரியங்களுக்காக ரொக்க அல்லது பண்டக் கடனை நாடினால் அவர்களுக்கு இக்கடனை வழங்கவும், குறித்த காரியங்களுக்கு அதை உபயோகிக்குமாறு செய்யவும், குறித்த கெடுவில் திருப்பிக் கொடுக்கச் செய்யவும் இந்தப் 'பெறுமானம்' உள்ள உறுப்பினர்கள் பொறுப்பு ஏற்க வேண்டும். குடிவாரச் சட்டங்கள், மற்றச் சட்டங்கள்—ஸ்திரமான குடிவார உரிமை, நியாய வாரங்கள் முதலியவற்றுக்கு வழி செய்யும் சட்டங்கள்—ஆகியவற்றின் நன்மைகள் யாருக்குச் சேர வேண்டுமோ அவர்களுக்குச் சேருமாறு கவனித்துக் கொள்வதும் இந்த உறுப்பினர்களின் பொறுப்பு. இத்தகைய விஷயங்களில் பலமான கிராமப் பொதுஜன அபிப்பிராயத்துக்குப் பலன் உண்டு. மகசூலில் 60 சதவிகிதமாக இருந்த மேல்வாரத்தை 40 சதவிகிதமாகக் குறைத்து சென்னை ராஜ்யத்தில் குடிவாரச் சட்டங்கள் இயற்றப்பட்ட போது ஒரு யோசனை தெரிவிக்கப்பட்டது. அதை இங்கு உதாரணமாகக் குறிப்பிட விரும்புகிறேன். எல்லா இடங்களிலும் மேல்வாரத்தை 40 சதவிகிதமாகக் குறைக்க வேண்டும் என்பதும், இதனால் மிஞ்சுகிற 20 சதவிகிதத்தை ($60-40=20$) குறிப்பிட்ட வருஷங்களுக்குக் கூட்டுறவு சங்கத்தில் சாகுபடியாளர்கள் 'டிப்பாஸிட்' செய்ய வேண்டும் என்பதுவுமே அந்த யோசனை. வசதியுள்ள உறுப்பினர்கள் இவ்வாறு 'டிப்பாஸிட்' செய்யும் நிதிகளிலிருந்து சிறந்த விவசாயச் செய்முறைகளைக் கையாள்வதற்குக் குறைந்த வட்டியில் கடன்கள் வழங்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. வேறு சூழ்நிலைகளில் அவற்றுக்குப் பொருத்தமான வேறு வழிகளை வகுத்துக் கொள்ள முடியும். இது போன்ற ஏற்பாடுகளைக் கூட்டுறவு சங்கம் முழுவதும் நல்லெண்ணத்துடனும் பரஸ்பர சகாய மனப்பான்மையுடனும் வகுக்க வேண்டும் என்பதுதான் இங்கு முக்கியமான விஷயம்.

## சர்க்கார் பொறுப்பு

இத்தகைய கிராமாந்தர அமைப்பை உருவாக்கி அதன் அலு வல்களுக்கு உதவி செய்வதில் சர்க்காருக்கு முக்கிய பங்கு உண்டு. சர்க்கார் எடுக்க வேண்டிய முக்கியமான நடவடிக்கைகள் வருமாறு:

முதலாவதாக, மேற்சொன்ன பல்வேறு அபிவிருத்தி வேலைகளை நடத்துவதற்குச் சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த வேலைக் கிரமங்களின் வியாபகமும் அவற்றுக்கான நிதி வசதியும் அதிகரித்துக் கொண்டே போக வேண்டும். பின்தங்கிய பிராந்தியங்களை விசேஷமாகக் கவனிக்க வேண்டும்.

இரண்டாவதாக, கிராமவாசிகளுக்கு வழிகாட்டுவதற்கும் கூட்டு நடவடிக்கைகளுக்கு ஊக்க மளிக்கவும் தொழில் நுணுக்க சர்வீஸ்கள், ஆலோசனை சர்வீஸ்கள் ஆகியவற்றைச் சர்க்கார் ஏற்படுத்த வேண்டும்.

மூன்றாவதாக, தேவைப்படும் குறுகிய கால, நடுத்தர, நீண்ட கால நிதி வசதிக்கு சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும். ஆனால் இவ்விஷயத்தில் ஒரு நிபந்தனை விதிக்க வேண்டும். அதாவது, இத்தகைய கடன் உதவிகளைப் பெறுவதற்குப் பதிலாகச் சங்க உறுப்பினர்களின் 'டிப்பாஸிட்டு'களைப் பெருக்குவதற்கான வேலைத் திட்டம் ஒன்றை ஒவ்வொரு கிராமக் கூட்டுறவு சங்கமும் நிறைவேற்ற வேண்டும். இது அத்தியாவசியமானது. ஏனெனில் சிக்கனப் பழக்கத்தைப் புகட்டுவதுதான் கூட்டுறவு இயக்கத்தின் முக்கியமான குறிக்கோள். யூனியன்களை அமைக்கவும் கிராம சங்கங்களுக்கு வழிகாட்டவும் ஆலோசனை சர்வீஸ்கள் இருக்க வேண்டும். அதோடு தணிக்கையாளர்களும் இருக்க வேண்டும். எனினும் "சமுதாயப் பொது நலனின் அல்லது சுதந்திர ஆவலின் இயல்பான வளர்ச்சியாகக் கூட்டுறவு முறை விளங்குவதைக் கெடுக்கும் அளவுக்கு" உதவியைத் திணிக்கக் கூடாது. இவ்வாறு செய்தால், "சர்க்கா அளிக்கும் உதவியும் இனி அளிக்கப்போகும் உதவியும் கூட்டுறவாளர்களின் தந்நம்பிக்கையைச் சிதைத்துவிடும். "இயக்கத்தின் தார்மீக பலத்தைக் கெடுக்கக் கூடிய காரியம் எதையும் செய்யக் கூடாது.

நான்காவதாக, எல்லாப் பிரதேசங்களிலும் பலவகைப் பயிற்சிகளை அளிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். கம்போஸ்ட் தயாரித்தல், பசுந்தாள் உரம் தயாரித்தல் போன்ற திருந்திய முறைகளில் விவசாயிகளுக்குப் பயிற்சி; பஞ்சாயத்து, கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்குப் பயிற்சி; பஞ்சாயத்து, கூட்டுறவு சங்கக் காரியதரிசிகளாகப் பணி புரிவதற்காகக் கிராமத்தில் உள்ள புத்திசாலி இளைஞர்களுக்கும் பள்ளி ஆசிரியர்களுக்கும் பயிற்சி ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். கிராம நிலை ஊழியர்கள், வட்டார அதிகாரிகள், உயர் நிலை அதிகாரிகள் ஆகியோருக்கு நினைவூட்டுப் பயிற்சியும் அளிக்க வேண்டும். கிராமாந்தர வேலைக்கிரமங்களில், குறிப்பாகக் கூட்டுறவுத் துறையில், உதவி புரிய விரும்பும் உத்தியோக சார்பற்ற தலைவர்களுக்கும் குறுகிய காலப் பயிற்சி அளிக்க வேண்டும். நிரந்தரமாகவும், பரவலான அடிப்படையிலும், கூடுமானவரை அதிகமான நபர்களுக்குப் பயன்படும் விதத்திலும் இந்தப் பயிற்சி வசதிகள் அமைய வேண்டும்.

## வெற்றிக்கு அறிகுறிகள்

இந்தியாவில் வாழும் 30 கோடி மக்களிடையே சமூக மாறுதலை உருவாக்குவது—மனத் திருஷ்டியை மாற்றிப் புது அறிவிலும் புது வாழ்க்கை முறைகளிலும் ஆவல் ஏற்படுத்துவது—கஷ்டமான காரியம். ஆயினும் தோல்வி மனப்பான்மை கொள்ள வேண்டியதில்லை. நாம் விரும்பும் அளவு இந்தச் சமூக மாறுதலை ஏற்படுத்த முடியும் என்பதற்கு அறிகுறிகள் தென்படுகின்றன. கிராமங்களிலும், ஜில்லா நிலையிலும், ராஜ்ய நிலையிலும் இந்த இயக்கத்துக்கு வழிகாட்டுவதற்குத் தலைவர்கள் தோன்றுவர் என்று நம்புவதற்கும் அறிகுறிகள் காணப்படுகின்றன. இந்த அறிகுறிகளுள் சில வருமாறு:

முதலாவதாக, நாட்டில் சுமார் பாதிக் கிராமங்களில் சமுதாய அபிவிருத்தி இயக்கம் அமல் நடந்து வருகிறது. கிராமங்களிலே புரட்சிகரமான மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டிருப்பதையும், வாழ்க்கைத் தரங்களை உயர்த்திக் கொள்ளவேண்டும் என்ற ஆவலும் உறுதியும் எங்கணும் காணப்படுவதையும் இயக்கத்தின் அமல் எடுத்துக் காட்டுகிறது.

இரண்டாவதாக, உலகின் மற்றப் பகுதிகளில் கிடைக்கும் மிக உயர்ந்த மகசூல்களுக்கு ஈடாக ஏக்கர்வாரி உற்பத்தியைத் தங்களால் உயர்த்த முடியும் என்பதை மகசூல் போட்டிகளில் பல விவசாயிகள் வெளிப்படுத்தியுள்ளனர். ஒவ்வொரு அரசாங்கப் பண்ணையையும் சுற்றியுள்ள கிராமங்களில் அப் பண்ணைகளின் உயர்ந்த பட்ச மகசூலை விஞ்சுவதற்கு உற்சாக விவசாயிகள் இடையருமல் முயற்சிக்கிருர்கள். இது சகஜமான அனுபவம். திருந்திய விவசாய முறைகளைப் பரப்புவதற்கான முயற்சிகளுக்கு இவர்கள் இயற்கையான தலைவர்களாக விளங்குவர்.

மூன்ருவதாக, கூட்டுறவுத் துறையில் கிடைத்துள்ள பலன்கள் கவனிக்கத்தக்கவை. சுமார் 78 லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட சுமார் 1,60,000 கிராம சங்கங்கள் 1955-56-ல் இருந்தன. இவற்றில் மூன்றில் இரு பங்கு சங்கங்கள் லாபகரமாக வேலை செய்தன, மூன்றில் ஒரு பங்கு சங்கங்கள் தாம் லாபகரமாக இல்லை. எல்லா நிலைகளிலும் உள்ள உத்தியோக சார்பற்ற ஊழியர்களின் பிரமாதமான சாதனை இது. உயிர் வாழ்வதற்கு மாத்திரம் உதவுகின்ற விவசாயப் பொருளாதாரத்தின் மோசமான சூழ்நிலையில் இத்தகைய சாதனை கைகூடியிருப்பது குறிப்பிடத்தக்கது. விஞ்ஞான விவசாய முறைகளை எல்லோரும் கையாள்வது கூட்டுறவு இயக்கத்தின் வெற்றிக்கு அத்தியாவசியமானது என்பதை உலகெங்கும் கிடைத்துள்ள அனுபவம் காட்டுகிறது. வரப்போகும் வருஷங்களில் அபிவிருத்தி வேலைகளுக்காக ஏராளமான பணம் செலவிடப்படும். அந் நிலைமையில் இந்தச் சிறிய சமுதாயங்கள் உண்மையான மக்களின் இயக்கமாக, தென்பு நிறைந்த இயக்கமாக, கூட்டுறவு இயக்கத்தைக் கட்டி வளர்க்கமுடியும். விழித்து எழுந்த தேசம் ஒன்று சுய முயற்சியால் என்னென்ன சாதிக்கலாம் என்பதற்கு எல்லையேயில்லை.

இந்தக் கிராமாந்தர ஸ்தாபனங்களை மேல் மட்டங்களிலுள்ள ஸ்தாபனங்களுடன் பிணைக்கவேண்டும். அபிவிருத்தி வேலைகளுக்காக ஜில்லா, தாலுகா, அல்லது வட்டார நிலைகளில் பஞ்சாயத்துகளை நிறுவுவதுபற்றி ராஜ்யங்கள் பரிசீலனை செய்து வருகின்றன. கிராமக் கூட்டுறவு சங்கங்களை யூனியன்களாக இணைத்து, யூனியன்கள்மூலம் ஒருபுறம் மத்திய பாங்கிகளுடனும் இன்னொருபுறம்

மார்க்கட்டிங், புராஸஸிங் முதலிய சங்கங்களுடனும் அவற்றை கிராமச் சங்கங்களை) பிணைக்கவேண்டும். எல்லாக் கட்டங்களிலும் உத்தியோக சார்பற்ற, மிகச் சிறந்த தலைவர்களின் ஆதரவைத் திரட்ட வேண்டும். அவர்களுக்கு உத்தியோக ஸ்தாபனம் சிறந்த முறையில் உதவ வேண்டும்.

சமுதாய அபிவிருத்தி வேலைகளின் கட்டங்களை மாற்றி அமைப்பதற்குச் சமீபத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.* அத்துடன், கிராமப் பஞ்சாயத்துகளையும் கிராமக் கூட்டுறவு சங்கங்களையும் அமைப்பதற்கு முதலிடம் அளிக்கப்பட்டிருக்கிறது. எல்லாப் பிரதேசங்களிலும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள் இந்த ஸ்தாபனங்களை ஏற்படுத்த உத்தேசிக்கப்படுகிறது. நமது வரலாற்றில் பல நூற்றாண்டுகளாக, 'கிராம சமுதாயம்' என்ற அடிப்படைக் கருத்து தனது தென்பையும் வலிமையையும் மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறது. ஒரு பெரிய குடும்பத்தைப்போல் அணமை உணர்வு, பொதுத் தேவைகள், பொதுச் சிரத்தை, நெருக்க உறவு என்ற பந்தங்களைக் கொண்ட சமுதாயம் அது. இப்போது விஞ்ஞான விவசாயம், அதற்குத் தேவையான புதிய திருஷ்டிகள், புதிய போக்குகள் ஆகியவற்றுக்கு ஏற்ப கிராம வாழ்க்கையை மாற்றி அமைக்க முற்பட்டிருக்கிறோம். இதையே ஸ்தூலமாகச் சொல்வதானால், எல்லாக் குடும்பங்களும் கிராம சமுதாயங்களில் ஒன்றுசேர்ந்து நான் மேலே விவரித்த வேலைத் திட்டங்களைச் சுய முயற்சியாலும் அண்டை அயலாரின் கூட்டுறவுடனும் நிறைவேற்ற வேண்டும். வாழ்க்கைத் தரங்களை உயர்த்தவேண்டும் என்ற நீண்ட காலக் குறிக்கோளை எட்டிப் பிடிப்பதற்கு உதவும் வேலைக்கிரமங்கள் அவை. மனிதப் பண்புகளை அடிப்படையாகக்கொண்டு இந்த இயக்கத்தை அளவிடவேண்டும். ஆண் பெண்களுக்குச் "சொந்தப் பொறுப்புணர்ச்சியையும் கூட்டுப் பொறுப்புணர்ச்சியையும் ஊட்டி, அவர்கள் சொந்த ஹோதாவில் பூரண வாழ்வு வாழவும், கூட்டு ஹோதாவில் பூரண சமூக வாழ்க்கையைப் பெறவும்," உதவுவது அந்த இயக்கத்தின் குறிக்கோள். இந்த வழியில்தான் கிராம வாழ்க்கை சமூக ரீதியான, தார்மிக

---

* 3-வது அனுபந்தம் பார்க்கவும்.

ரீதியான ஐக்கியத்தைப் பெறமுடியும்; இத்தகைய ஐக்கியமே தேசிய ஐக்கியத்துக்கு அடிப்படை.

நமது ஐந்தாண்டுத் திட்டங்களின் நீண்ட காலக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக அடுத்த இரண்டு மூன்று ஆண்டுகளில் எத்தகைய நிரந்தர ஸ்தாபனங்களைக் கிராமங்களில் ஏற்படுத்த வேண்டும் என்பதைச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். அந்த ஸ்தாபனங்கள் மேற்கொள்ள வேண்டிய காரியங்களையும் குறிப்பிட்டேன். நான் எழுப்பியுள்ள பிரச்னைகளை ராஜ்ய சர்க்கார்கள் ஆராய்வர் என்றும், அவற்றைப் பரவலாக விவாதிக்கச் செய்வர் என்றும், சீக்கிரமே செயலில் இறங்கத் திட்டமிடுவர் என்றும் நம்புகிறேன். இப்போதைவிட மிக அதிகமான அவசர உணர்ச்சி தேவை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் சாத்தியக்கூறுகள் சம்பந்தமாகத் திட்டக் கமிஷன் நடத்திய ஆராய்ச்சியில் புலனாகியுள்ளபடி, நாட்டின் நிலைமை இத் தேவையையே சுட்டிக் காட்டுகிறது.

# அனுபந்தம்-1

*(ஸ்ரீ. வி. டி. கிருஷ்ணமாச்சாரியைத் தலைவராகக் கொண்ட* நிதிக் கமிஷன் 1950 ஜூன் மாதம் தனது யாதாஸ்தைச் சமர்ப்பித்தது. அதில் உள்ள "தொழில் வளர்ப்பும் விவசாய அபிவிருத்தியும்" என்ற அத்தியாயத்தின் சில பகுதிகள் கீழே தரப்படுகின்றன.)*

இந்தியாவின் அபிவிருத்தி பற்றிய கொள்கையை வகுக்கும் போது நாட்டின் வாழ்க்கையிலும் பொருளாதாரத்திலும் விவசாயத்துக்கு உள்ள அடிப்படை முக்கியத்துவத்தைப் பிரதானமாகக் கவனிக்க வேண்டும். இதன் காரணங்கள் தெளிவு: ஜனத்தொகையில் சுமார் 67 சதவிகிதத்தினர் விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள். தவிர, விவசாயம் ஒரு பிரவிருத்தியாக மாத்திரம் இருக்கவில்லை; அது ஒரு வாழ்க்கை முறை; நூற்றாண்டுகளாகக் கோடானு கோடி மக்களின் சிந்தனைகளையும் திருஷ்டிகளையும் அது உருவாக்கி வந்திருக்கிறது. மற்றும் பொருளாதார சாதனங்களை மாத்திரம் கருத்தில் கொண்டால்கூட மொத்த தேசிய வருமானத்தில் 50 சதவிகிதம் வரை விவசாயத்திலிருந்தே கிடைத்து வந்திருக்கிறது. இரண்டாவது உலக யுத்தத்துக்கு முந்திய மதிப்பீடு இது.

உண்மையில் இந்தியப் பொருளாதாரத்தில் விவசாயத்துக்கு இதைவிடவும் அதிக முக்கியத்துவம் உண்டு. ஏனெனில் விவசாயச் சீரமைப்பும் தொழில் வளர்ப்பும் நெருங்கிய பிணைப்புள்ளவை. இவை இரண்டுக்கும் இணைப்பான முறையில் திட்டம் வகுக்க வேண்டும். இந்தியாவில் சுமார் 6½ கோடி குடும்பங்கள் விவசாயத்தை நம்பி வாழ்கின்றன. பருவ நிலைமைகள் காரணமாக வருஷத்தில் ஒரு பகுதியில் மாத்திரமே விவசாய வேலை சாத்தியப்படுகிறது. அதா

---

* கமிஷனின் மற்ற உறுப்பினர்கள் வருமாறு: ஸ்ரீமான்கள் பி. என். கங்குலி, பி. எம். பிர்லா, எம். அனந்தசயனம் ஐயங்கார், முக்தார் சிங், கண்டுபாய் தேசாய், அம்பாலால் ஸாராபாய், டி. எல். மஜும்தார்.

வது, பாசன வசதியற்ற பிரதேசங்களில் மூன்று முதல் நான்கு மாத காலமும், பாசன வசதியுள்ள பிரதேசங்களில் இதைப்போல் சுமார் இரு மடங்கு காலமும்தான் வேலை இருக்கிறது. பயிர் நிலங்களில் 18·9 சதவிகித நிலங்களுக்குத்தான் பாசன வசதியிருக்கிறது. இந்திய விவசாயத் துறையில் வேலையில்லாத் திண்டாட்டமும் மறைமுக வேலையின்மையும் மிக அதிகமாக இருப்பதை இந்தப் புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இந்தத் தீமையின் முழு சொரூபத்தை அறிய வேண்டுமானால் இன்னும் இரண்டு விஷயங்களை நினைவில் கொள்ள வேண்டும். *முதலாவதாக,* விவசாயத்தில் ஈடுபட்டுள்ள குடும்பங்களில் ஏராளமான நபர்கள் வேறு புகல் இல்லாமையால் தான் நிலத்துடன் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள். உற்பத்திக்கு அவர்கள் பெயரளவில்தான் உதவுகிறார்கள்; ஆயினும் வருமானத்தில் பங்கு பெறுகிறார்கள். *இரண்டாவதாக,* ஏற்கனவே ஜனநெரிசல் அதிகமாக இருக்கும் நிலங்களில் வேலை செய்வதற்காக ஆண்டு தோறும் புதிதாகச் சுமார் 30 லட்சம் பேர் வருகிறார்கள். மனித விரயத்தைக் கணக்கிட்டால் இந்த மறைமுக வேலையில்லாத் திண்டாட்டம் எவ்வளவு பிரம்மாண்டமானது என்பதை இலகுவாக உணர்ந்து கொள்ளலாம். இவ்வாறு உபரியாக இருக்கும் தொழிலாளர்கள் அனைவரையும் விவசாயத்திலிருந்து மாற்றினால் விவசாய உற்பத்தி உயரவே செய்யும். நமது பொருளாதார அமைப்பில் ஆழமாக வேர் விட்டுள்ள இந்தத் தீமைக்குப் பரிகாரமாக இருவகை வேலைக் கிரமங்களை *ஏக காலத்தில்* நிறைவேற்ற வேண்டும்:— முதலாவதாக, விவசாயத்தைச் சீரமைக்க வேண்டும். அதாவது விவசாய முறைகளை இடைவிடாமல் செம்மைப்படுத்தியும், தீவிர கலப்பு விவசாய முறையை ஊக்குவித்தும் ஏக்கர்வாரி உற்பத்தியை உயர்ந்தபட்ச அளவுக்கு அதிகரிக்க வேண்டும். இரண்டாவதாக, விவசாயத்தில் உபரியாக உள்ள தொழிலாளர்களை மற்றத் தொழில்களுக்கு மாற்றவேண்டும். அதாவது, விவசாயத்தின் துணைத் தொழில்களிலும் குடிசைத் தொழில்களிலும் பெருந்தொழில்களிலும் மூன்றாந்தரப் பிரவிருத்திகளிலும் அவர்களை ஈடுபடுத்த வேண்டும். (விவசாயமும் தொழில்களும் நீங்கலாக உள்ளவை மூன்றாம் தரப் பிரவிருத்திகள்).

## விவசாயமும் தொழில்களும்

இவ்விதம், விவசாயத்தைச் சீரமைப்பதும் தொழில் துறையில் முன்னேறுவதும் ஒரே வேலைத் திட்டத்தின் இரு பகுதிகள்தாம். 'பின் தங்கிய பொருளாதார அமைப்புகள்' பற்றிய பின்கண்ட வாசகம் இங்கு பொருத்தமானது:—“தொழில்களை வளர்ப்பதை விவசாயச் சீரமைப்பின் ஒரு பகுதியாகக் கருதலாம், அல்லது விவசாய உற்பத்திப் பெருக்கத்தைத் தொழில் வளர்ப்பின் ஒரு பகுதியாகக் கருதலாம். இந்த இரண்டும் ஒரே பிரச்னையின் இணைப்பான இரு பகுதிகள் என்பதை ஞாபகத்தில் கொள்வதுதான் முக்கியமானது.” சிறந்த விவசாயத்தின் மூலம் உற்பத்தி உயர்வதாலும், மூலப் பொருள்களின் தரம் உயர்வதாலும் தொழில்கள் நன்மை அடைகின்றன. அதேபோல் தொழில் வளர்ச்சியின் விளைவாகக் கிடைக்கும் விசை, சிறந்த செய்முறைகள், சிறந்த மார்க்கட்டிங் வசதி, போக்குவரத்து, மற்ற சர்வீஸ்கள் ஆகியவை விவசாய வளர்ச்சிக்கு உதவுகின்றன. அதோடு இந்த இரண்டின் கூட்டு விளைவாகப் பண்டங்களுக்கும் சர்வீஸ்களுக்கும் உள்நாட்டு மார்க்கட்டு உருவாகிறது. இது விவசாய உற்பத்திக்கும், தொழில் உற்பத்திக்கும் மேற்கொண்டு ஊக்கம் அளிக்கிறது.

விரிவான விவசாயக் கொள்கை ஒன்றை வகுப்பது பற்றிய பிரச்னைகளில், நிதிக் கமிஷன் என்ற ஹோதா காரணமாக, எங்களுக்குச் சம்பந்தம் இல்லை. இத்தகைய கொள்கையை வகுத்து நிறைவேற்றுவதற்கு ஜீவாதாரமான ஒரு விஷயத்தை மாத்திரம் வலியுறுத்த விரும்புகிறோம். விவசாயிகள் தங்கள் பழங்காலத் திருஷ்டியை மாற்றிக்கொள்வதற்கும், புது அறிவிலும் புதிய வாழ்க்கை முறையிலும் அவர்கள் உற்சாகம் கொள்வதற்கும் சர்க்கார்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லையேல் எத்தகைய அபிவிருத்தி வேலைகளும் வெற்றி பெற முடியாது. வாழ்க்கைத் தரங்களை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்ற பேரார்வத்தை, சிறப்பாக வாழவேண்டும் என்ற மனவுறுதியை அவர்களுக்கு ஊட்டவேண்டும். இத்தகைய உற்சாகத்தை உசுப்பிவிட்டு அதை உச்ச ஸ்தாயியில் வைத்திருப்பது எப்படி? மக்களை அவர்களது சொந்த வில்லங்கங்களிலிருந்து விடுவிப்பது எப்படி? தங்கள் நிலையை உயர்த்திக் கொள்வதற்கு அவர்

களுடைய தீவிர சிரத்தையையும் ஆதரவையும் எவ்வாறு திரட்டுவது? இக் கேள்விகளுக்கு சர்க்கார்கள் விடை கண்டுபிடிக்க வேண்டும். அதாவது, "முக்கியமான பிரச்னை மனோபாவ ரீதியானதே தவிர, தொழில் நுணுக்க ரீதியானது அல்ல." தேசியப் பொருளாதாரத்தில் தங்கள் பங்கு ஜீவாதாரமானது என்பதை விவசாயிகள் உணருமாறு செய்யவேண்டும். சர்க்காரும் இதை உணர்ந்து, கவனமாகத் திட்டமிட்டு, வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்கான அவர்களது முயற்சிகளுக்கு உதவிசெய்ய உறுதிகொண்டிருக்கிறது என்பதை விவசாயிகளுக்குப் புலப்படுத்த வேண்டும். இதற்குச் சர்க்கார்கள்தாம் அனுதாப சிரத்தையுடன் பரிகாரம் காண வேண்டும். இது பற்றிய வழிமுறைகள் பிராந்தியத்துக்குப் பிராந்தியம் வேறுபடக்கூடும். ஆகவே நாங்கள் தயக்கத்துடன்தான் சில தற்காலிக யோசனைகளைத் தெரிவிக்கிறோம் :—

விவசாய உற்பத்திப் பெருக்கத்துக்கு ஒரு குறியளவை ராஜ்ய சர்க்கார்கள் நிர்ணயிப்பது அவசியம் என்று கருதுகிறோம். இடைக் காலத்தில் ஜனத்தொகை அதிகரிப்பின் விளைவுகளைச் சரிக்கட்டிய பிறகு, கூடுமானவரை குறுகிய காலத்துக்குள், விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களின் வாழ்க்கைத் தரத்தைக் கணிசமாக உயர்த்தும் விதத்தில் அந்தக் குறியளவு அமையவேண்டும். அவர்களுக்கு ஒரு குறிக்கோளைக் காட்டி, அதை அடைவதற்குக் காரிய சாத்தியமான ஏற்பாடுகளையும் செய்யவேண்டும். அந்தக் குறிக்கோளை எட்டுவதற்காக லட்சோப லட்சம் கிராமாந்தரக் குடும்பங்கள் கஷ்ட நஷ்டங்களை அனுபவிப்பதற்குத் தயாராய் இருப்பார்கள். உணவு தானிய இறக்குமதிகளைத் தவிர்ப்பது, முக்கிய தொழில்களின் மூலப்பொருட்களாகிய பருத்தி, சணல் ஆகியவற்றின் உற்பத்தியை உயர்த்துவது என்ற குறுகிய கால வேலைக்கிரமத்தை நாடு இப்போது நிறைவேற்றி வருகிறது. விரிவானதோர் திட்டத்துடன் இதை உடனடியாக இணைக்க வேண்டும். நவீன விஞ்ஞான ஆராய்ச்சிகளைக் கையாள்வது, பல-முனைப் பொருளாதாரத்தை உருவாக்குவது என்ற வழிகளில் இந்தியாவின் விவசாயச் சாதனங்களை மிகுந்த திறமையுடன் பயன்படுத்தும் திட்டமாக அது இருக்கவேண்டும். திட்டவட்டமான குறியளவுகளை அது கொண்டிருக்க வேண்டும். தேச வியாபகமான

உற்சாகத்தை உசுப்பிவிடும் விதத்தில் ஆரம்பக் குறியளவுகள் உயர் நிலையில் இருக்கவேண்டும். எல்லாச் சர்க்கார்களும் விவசாய புன ரமைப்புக்காக விரிவான திட்டங்களைத் தயாரிக்க வேண்டும். உற் பத்தியை அதிகரிக்கவும் கிராம மக்களின் வாழ்க்கைத் தரங்களைக் கணிசமாக உயர்த்துவதற்கும் இத்திட்டங்கள் வழிசெய்ய வேண்டும். இந்தத் திட்டங்களில் பின்கண்ட காரியங்களும் இடம்பெற வேண்டும்.

## விவசாயச் சீரமைப்பு

*முதலாவதாக*, பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், ஜல-மின்சாரத் திட்டங்கள், சிறிய பாசனத் திட்டங்கள் ஆகியவை உள்ளன. இவற் றின் முக்கியத்துவத்தை எவ்வளவுதான் வலியுறுத்தினாலும் மிகை யாகாது. ஏனெனில் தேசப் பிரிவினையின் விளைவாக, மொத்தப் பயிர் நிலத்தில் இந்தியாவுக்குக் கிடைத்த பாசன நிலத்தின் விகிதா சாரம் குறைந்து விட்டது. தேசப் பிரிவினைக்கு முன்னால் மொத்தப் பயிர் நிலத்தில் 26·5 சதவிகிதம் பாசன வசதி பெற்றிருந்தது. பிரி வினைக்குப் பிறகு இந்தியாவில் மொத்தப் பயிர் நிலத்தில் பாசன வசதி யுள்ள நிலத்தின் சதவிகிதம் 18.9; பாகிஸ்தானில் 45·2. விடுமுதலுக்கு எவ்வளவு நிகர லாபம் கிடைக்கிறது என்பதை மாத்திரம் ஆதார மாகக் கொண்டு பாசனத் திட்டங்களை மதிப்பிடக்கூடாது. இதை விடவும் விரிவானவையான சமூக லாபங்களைக் கணக்கில் கொள்ள வேண்டும். மண்ணரிப்பினால் பயிரிட லாயக்கற்றவையாகி விட்ட நிலங்கள், காற்றினாலும் நீர் அரிப்பினாலும் ஏராளமான நிலமும் உற் பத்தியும் நஷ்டமாகியிருப்பது ஆகியவற்றைச் சமாளிப்பதற்கான திட்டங்களும் இதே ரகத்தைச் சேர்ந்தவைதாம். நிலத்தைப் பயன் படுத்தும் முறை ஒரு முக்கியமான பிரச்னை. அது இந்தியாவில் சரி யாகக் கவனிக்கப்படவில்லை என்பதை இங்கு பிரஸ்தாபிக்க விரும்பு கிறோம். இதை நிபுணர்களின் குழு ஒன்று ஆராய்வது அவசரத் தேவையாகும்.

***இரண்டாவதாக***, விவசாயச் செய்முறைகளை அபிவிருத்தி செய் வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக, இப்போதைவிட விரிவான அளவில் ஆராய்ச்சி நடத்த வேண்டும்; ஆராய்ச்சி முடிவு களை வயல்களில் கையாளச் செய்ய வேண்டும்; சிறந்த விதைகளை

யும் உரங்களையும் சப்ளை செய்ய வேண்டும்; சிறந்த சாகுபடி முறைகளைப் புகுத்த வேண்டும்; சாத்தியமான இடங்களில் எல்லாம் புது நிலங்களைச் சாகுபடிக்குப் பண்படுத்த வேண்டும். டவுன்களிலும் கிராமங்களிலும் உள்ள கழிவுப் பொருட்களை எல்லாம் கம்போஸ்ட் உரமாக மாற்றுவதற்குத் தேசவியாபகமாக இயக்கம் நடத்த வேண்டும். இது மிக முக்கியமானது. நிலம் துண்டு துணுக்குகளாகச் சிதறிக் கிடப்பதால் ஏற்படும் சங்கடங்களைக் கூட்டுறவு வழிகளிலோ இதர வழிகளிலோ சமாளிக்க வேண்டும். அதோடு பழச் சாகுபடி, காய்கறிச் சாகுபடி, பால் பண்ணை, கோழி வளர்ப்பு போன்ற புதிய பிரிவுகளை விவசாயத்தில் சேர்க்க வேண்டும்.

*மூன்றாவதாக*, கவனமாகத் திட்டமிட்டு துணைத் தொழில்களை ஏற்படுத்த வேண்டும். பல்வேறு பிராந்தியங்களுக்கு ஏற்ற குடிசைத் தொழில்களையும் சிறு தொழில்களையும் நிறுவ வேண்டும்.

*நான்காவதாக*, மார்க்கட்டிங், சேமிப்பு ஏற்பாடுகளைச் சீர் திருத்த வேண்டும்; பூச்சி பொட்டுக்களால் நஷ்டம் ஏற்படுவதைக் குறைக்க வேண்டும்.

*ஐந்தாவதாக*, விவசாய நிதி வசதி பற்றிய பிரச்னைகள் உள்ளன. விலைகள் சரிந்து விடாதபடி, அவசியப்படும்போது, ஏற்பாடு செய்வதும் இதில் அடக்கம்.

*ஆறாவதாக*, நில உரிமை முறைகளைச் சீர்திருத்துதல், கிராமக் கல்வி, போக்குவரத்து வசதி போன்ற மற்ற ஏற்பாடுகளையும் கவனிக்க வேண்டும்.

## ஒரு ஸ்தாபனம் தேவை

கிராம வாழ்க்கையின் எல்லாப் பிரிவுகளும் இத்தகைய வேலைக் கிரமங்களில் அடங்க வேண்டும். நிர்ணயமான நிதிகள் ஒதுக்கி, உடனடியாகச் செயலில் இறங்குவதற்குத் திட்டம் வகுக்கவேண்டும். சம்பந்தப்பட்ட எல்லாச் சிரத்தையினர்களையும் கலந்தாலோசித்துத் திட்டம் தயாரிக்க வேண்டும் என்பதும், எல்லாக் கட்டங்களிலும் பொதுஜன ஆதரவைப் பெற வேண்டும் என்பதும் முக்கியமானவை.

மூலே முடுக்குகளில் உள்ள கிராமங்களை எல்லாம் எட்டக் கூடிய ஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்துவது இன்றியமையாதது என்பதை மேலே சொன்ன கருத்துக்கள் எடுத்துக் காட்டுகின்றன. அபிவிருத்தித் திட்டங்களுக்கு வெகுஜன ஆதரவைத் திரட்டக் கூடியதாகவும், கிராமங்களில் அவற்றை நிச்சயமாக நிறைவேற்றக் கூடியதாகவும் அந்த ஸ்தாபனம் இருக்க வேண்டும். இவ்விஷயத்தில்கூட திட்டவட்டமான ஏற்பாடு எதையும் நாங்கள் தெரிவிப்பதற்கில்லை. நாங்கள் யோசனைதான் கூற முடியும். ஆராய்ச்சிக்கும், உற்பத்தியாளர்களின் செய்முறைகளுக்கும் இடையே உள்ள பிளவை நீக்குவதற்காக 'விஸ்தரிப்பு சர்வீஸ்' ஒன்றை ஏற்படுத்துவதுதான் தற்போது இந்தியாவின் மிகப் பெரிய தேவை என்று கருதுகிறோம். யு. எஸ் அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகளில் இத்தகைய ஸ்தாபனங்கள் அரிய சேவை செய்துள்ளன. 40 அல்லது 50 கிராமங்களுக்கு ஒரு விஸ்தரிப்பு அதிகாரி வீதம் ஏற்படுத்தி அவருக்கு வேண்டிய சிப்பந்திகளையும் நியமிக்க வேண்டும். பரீட்சார்த்தப் பண்ணை ஒன்றை அவர்கள் நடத்த வேண்டும். இத்தகைய தொகுதியில் உள்ள கிராமங்கள் சம்பந்தமான அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றும் விஷயத்தில் எல்லா அபிவிருத்தி இலாகாக்களுக்கும் ஏஜண்டாக இந்த அதிகாரி விளங்க வேண்டும். அந்தப் பிரதேசத்தில் உள்ள விவசாயிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அவர்களது வழிகாட்டியாகவும் நண்பராகவும் அவர் இருக்க வேண்டும். எல்லா அபிவிருத்திப் பிரச்னைகள் பற்றியும் அவர்களுக்கு அவர் ஆலோசனை கூற வேண்டும். விதைகள், உரங்கள், கருவிகள் முதலிய அவர்களது தேவைகளை எல்லாம் அவர் சப்ளை செய்ய வேண்டும்; மற்றும் எல்லா விதங்களிலும் அவர்களுக்கு உதவி புரிய வேண்டும். இத்தகைய தொகுதி ஒவ்வொன்றிலும் ஒரு கமிட்டி இருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட ஜில்லா அதிகாரிகள், மற்ற அதிகாரிகள், அப்பிரதேசத்தில் செல்வாக்கு உள்ள தலைவர்கள் ஆகியோர் இக் கமிட்டியில் அங்கம் வகிக்கலாம். தொகுதியில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் பல-காரியக் கூட்டுறவு சங்கம் ஒன்று, அல்லது சிறந்த வேளாண்மை முறைச் சங்கம் ஒன்று, நல்ல தலைமையுடன், ஏற்பட வேண்டும். தொகுதி அமைப்புடன் கிராமத்தை இச் சங்கம் பிணைக்க வேண்டும்.

ஜில்லாவில் அல்லது வேறு பொருத்தமான பிராந்தியத்திலும் உள்ள எல்லாத் தொகுதிகளும் ஜில்லா அல்லது பிராந்திய அமைப்புடன் பிணைக்கப்பட வேண்டும். இதன் மூலம் மாகாண விவசாய இலாகா அல்லது மாகாணக் கமிட்டி ஒன்றுடன் அவற்றுக்குத் தொடர்பு ஏற்படுத்த வேண்டும். ஜில்லா அல்லது பிராந்தியத் தொகுதியில் கவனமாகப் பொறுக்கியெடுத்த விஸ்தரிப்புச் சிப்பந்திகளின் கீழ் ஒரு பண்ணையும், உத்தியோக சார்பற்ற தலைவர்களின் பிரதிநிதித்துவக் கமிட்டி ஒன்றும் இருக்க வேண்டும். இத்தகைய ஸ்தாபனம் பிராந்தியத் திட்டங்களை எல்லாக் கட்டங்களிலும் விவாதித்து, அவற்றுக்குப் பொதுஜன ஆதரவைத் திரட்டி, அவற்றை நிறைவேற்றுவதற்குத் தீவிரமாக உதவி புரியும். பிராந்தியத் திட்டங்களுக்கும் மற்றத் திட்டங்களுக்கும் வேண்டிய நிதியைத் திரட்டுவதற்காக, விவசாயிகள் இடையே சேமிப்புப் பழக்கத்தைப் பரப்புவதற்கு ஒரு இயக்கத்தை இந்த ஸ்தாபனம் நடத்த வேண்டும். இத்தகைய ஸ்தாபனத்தின் வித்துக்கள் பல பிரதேசங்களில் காணப்படுகின்றன; நாடெங்கும் வியாபிக்கும் விதத்தில் அவற்றை விஸ்தரிக்க வேண்டும். சிப்பந்திகளும் கமிட்டிகளும் ஒவ்வொரு விவசாயக் குடும்பத்துடனும் நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டும்; அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற உதவி புரிய வேண்டும்; கிராமப் பிரதேசங்களில் சேமிப்புப் பழக்கத்தை வளர்க்க வேண்டும்.

# அனுபந்தம்—2

*(ஸ்ரீ. வி. டி கிருஷ்ணமாச்சாரி தலைமையில்* நியமிக்கப்பட்ட உணவு உற்பத்திப் பெருக்க விசாரணைக் கமிட்டி 1952 ஜூன் மாதம் தனது யாதாஸ்தைச் சமர்ப்பித்தது. அதில் "வருங்காலக் கொள்கை பற்றிய எங்கள் யோசனைகள்" என்ற கடைசி அத்தியாயத்தின் பெரும் பகுதி இங்கு தரப்படுகிறது.)*

உணவு உற்பத்திப் பெருக்க இயக்கம் எதிர்பார்த்த அளவுக்குப் பலன் அளிக்காமைக்கு இரு காரணங்கள் உண்டு என்று பொதுப்படையாகக் கூறலாம். எங்கள் பரிசீலனையில் இவை புலனாயின. முதலாவதாக, அதன் நோக்கம் குறுகலானது, வரையறை உள்ளது. உணவு தானியங்களில் சுய நிறைவு பெறுவதற்கான இயக்கமாக அது, ஆரம்பத்தில், நாட்டின்முன் சமர்ப்பிக்கப்பட்டது. சில மாதங்களுக்குப் பின்னர் தொழிற்சாலை மூலப்பொருள்களுக்குக் கடுமையான பற்றுக்குறை ஏற்படவே உணவு தானியங்கள், பருத்தி, சணல் ஆகியவற்றின் உற்பத்திக்காக இணைப்பான திட்டம் ஒன்று வெளியிடப்பட்டது. அதைத் தொடர்ந்து, கால்நடை அபிவிருத்திக்கான 'கேந்திரகிராம'த் திட்டம், மீன் வள அபிவிருத்தி, விஸ்தரிப்பு இயக்கம், 'நிலச் சீரமைப்பு' முதலியவை ஒன்றன்பின் ஒன்றாக அதில் சேர்க்கப்பட்டன. இணைப்பான உற்பத்திக்காக வகுக்கப்பட்ட திட்டம் தனித்து நிற்க முடியாது என்பதை இவையெல்லாம் எடுத்துக் காட்டின. ஆயினும் அதை அமல் நடத்துவதில் அவ்வப்போது

* கமிட்டியின் மற்ற உறுப்பினர்கள்: (1) ஸ்ரீ. ஆர். கே. பாட்டீல், (2) ஸ்ரீ. எம். பி. பாட்டீல், (3) ஸ்ரீ. தீப்நாராயன் ஸின்ஹா, (4) பண்டித் தாக்கூர் தாஸ் பார்கவா, (5) ஸ்ரீதிரிபுவன் நாராயண் சிங், (5) டாக்டர் மனமோஹன் தாஸ், (7) டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ், (8) ஸ்ரீ. பி. வேங்கடரத்னம், (9) ஸர்தார் தாத்தார் சிங்.

முக்கிய மாறுதல்கள் செய்யப்பட்டதால் சர்க்காரின் கொள்கை என்ன என்பதை நாட்டு மக்களால் துல்லிபமாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை.

இரண்டாவதாக, ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் சுயநிறைவு பெறுவதற்கான தற்காலிக இயக்கம் என்று அது கருதப்பட்டு, அவ்வாறே அமல் நடத்தப்பட்டது. சுயநிறைவு என்ற குறிக்கோளை அடைவது சிரமமான காரியம். ஏனெனில் உற்பத்தி செய்து உபயோகிப்பவர்கள் உட்பட மக்களில் கணிசமான பகுதியினரின் பண்ட உபயோகத்தைக் கட்டுப்படுத்த இயலாது. அதோடு, விரிவான பிரதேசங்களில் பருவ மழை பெய்யாமை அல்லது வெள்ளப் பிரவாகம் போன்ற பருவக் கோளாறுகளால் உற்பத்தி பெரிதும் பாதிக்கப் படுகிறது. எல்லா நடவடிக்கைகளும் தற்காலிகமானவை என்று கருதப்பட்டதால் குறுகிய காலத்தில் சேகரிக்கப்பட்ட விசேஷச் சிப்பந்திகளின் வசம் அவற்றின் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. ராஜ்ய சர்க்கார்களின் அபிவிருத்தி வேலைகளுடனும் மற்ற வேலைகளுடனும் இச்சிப்பந்திகளின் அலுவல்கள் நன்கு இணைக்கப்படவில்லை.

இங்நிலைமையில் அந்த இயக்கம் மக்களின் ஒரு சொற்பப் பகுதியினரைத்தான் கவர முடிந்தது என்பதில் ஆச்சரியம் இல்லை. அதாவது பெரிய நிலச்சுவான்களைத்தான் அது கவர்ந்தது: திருந்திய விவசாய முறைகளை மேற்கொள்வதற்காக அவர்களுக்கு மானியங்களும் மற்ற உதவிகளும் அளிக்கப்பட்டன. அது பரவலான உற்சாகத்தைத் தூண்டிவிடவில்லை; எந்தவிதத்திலும் ஒரு தேசிய இயக்கமாக அது விளங்கவில்லை. நகர ஜனங்களுக்கு நியாய விலையில் உணவு சப்ளை செய்வது, உணவு இறக்குமதியை நிறுத்தி அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்துவது என்ற அவ்வியக்கத்தின் குறிக்கோள்கள் கிராமங்களில் உள்ள லட்சோப லட்சம் சிறு விவசாயிகளைக் கவரவேயில்லை. தவிர ராஜ்ய சர்க்கார்களும் கிராம அபிவிருத்திக்காக நீண்டகாலத் திட்டங்களைக் கவனமாக வகுத்து அவற்றுடன் உணவு உற்பத்திப் பெருக்க வேலைகளை இணைக்கவில்லை. இவ்வாறு செய்வது, அரசியல் சட்டப்படி, அவர்களது பொறுப்பு ஆகும். இந்திய சர்க்கார் செலவில் நடக்கும் திட்டங்களை ஒரு தனி வகை

யாகக் கருதி, ஆண்டுதோறும் மத்திய சர்க்கார் ஒதுக்கும் நிதி களுக்கு ஏற்ப அத்திட்டங்களை விரிக்கவோ சுருக்கவோ செய்வது தான்; பொதுவாக, ராஜ்ய சர்க்கார்களின் போக்காக இருந்து வந் திருக்கிறது.

## வெற்றிக்கு வழி

ஒரு திட்டத்தின் குறிக்கோள்களை நாட்டில் உள்ள லட்சோப லட்சம் சிறு விவசாயிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும்; அதை வகுப் பதில் பங்கு கொள்ளவேண்டும், அதைத் தங்கள் சொந்தத் திட்ட மாகக் கருதவேண்டும், அதை நிறைவேற்றுவதற்குத் தியாகம் புரி யத் தயாராக இருக்கவேண்டும். இவ்வாறு இல்லாத திட்டம் எது வும் வெற்றிபெற முடியாது. நாங்கள் குறிப்பிட்டுள்ள காரணங் களால், இணைப்பு உற்பத்தித் திட்டம் மக்களின் உற்சாகத்தை எழுப்ப முடியவில்லை. உணவுப் பிரச்னை என்பது உணவு இறக்குமதிகளை நிறுத்தும் பிரச்னை மாத்திரம் அல்ல, அதை விடவும் மிக விரிவானது. பெருகி வரும் ஜனத்தொகையின் போஷாக்கை மேன்மேலும் அதி கரிக்கும் விதத்தில் விவசாய உற்பத்தி அபரிமிதமாகப் பெருக வேண் டும். இதுவே உணவுப் பிரச்னை. அதாவது, நவீன விஞ்ஞான ஆராய்ச்சி முறைகளை அனுஷ்டித்து நில வளத்தைத் திறமையுடன் பயன்படுத்துதல், பல-முனைப் பொருளாதார அமைப்பை உருவாக்கு தல் ஆகியவற்றுக்கான ஒரு திட்டத்தின் பகுதியாகவே உணவு உற் பத்தி இயக்கத்தைக் கருத வேண்டும். அதேபோல், கிராம வாழ்க் கைத் தரத்தை உயர்த்துவது என்ற விரிவான பிரச்னையின் இணைப் பான ஒரு பாகமே விவசாய அபிவிருத்தி. கிராம வாழ்க்கையின் பொருளாதார அம்சங்களை விரிவான சமூக அம்சங்களிலிருந்து வேறு படுத்த முடியாது. பல்வேறு சமூகப் பிரச்னைகளுடன் பின்னிப் பிணைந்திருக்கிறது விவசாய அபிவிருத்தி.

கிராம அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள ராஜ்ய சர்க்கார்கள், தனிப் பட்ட ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் அனுபவத்தை ஊர்ஜிதம் செய்

கிறது உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டங்களின் படிப்பினை.* அதாவது, கிராம வாழ்க்கையின் எல்லா அம்சங்களும் பரஸ்பரத் தொடர்பு உள்ளவை, தனிப்பட்ட அம்சங்களைப் பிரத்தியேகமாகக் கவனிப்பதால் நிரந்தரப் பலன்கள் கிடைக்க மாட்டா. குறிப்பிட்ட பிரச்னைகளுக்கு முதன்மை யளிக்கக் கூடாது என்று இதற்கு அர்த்தம் இல்லை. ஆனால் விரிவான குறிக்கோள்களைக் கொண்ட பெரிய திட்டங்களின் இணைப்பான பகுதிகளாகவே இந்தக் குறிப்பிட்ட பிரச்னைகள் பற்றிய திட்டங்கள் இருக்க வேண்டும். கிராம வாழ்க்கைத் தரங்களைக் கணிசமாக உயர்த்தி, அதைப் பூரணமான, வளமான வாழ்க்கையாக மாற்றுவது என்ற லட்சியத்தை நாட்டின் முன் நிறுத்த வேண்டும். இது கைகூடுவதற்கான திட்டங்களை நிறைவேற்றுவதில் ராஜ்ய சர்க்கார்களின் நிர்வாக அமைப்பு முழுவதையும்,

---

* 1. *சர்வோதயா திட்டம், பிர்க்கா அபிவிருத்தித் திட்டம் ஆகியவை பற்றிய பம்பாய், சென்னை சர்க்கார்களின் யாதாஸ்துகள்.*

2. *எட்டாவா திட்டம் பற்றிய யாதாஸ்துகள்.*

3. *பரோடா சமஸ்தான நிர்வாகம் சம்பந்தமாக 1933-34 முதல் வெளியான யாதாஸ்துகளில் 'விவசாயம்' சம்பந்தமான அத்தியாயங்கள். "விவசாயத்தின் எல்லா அம்சங்களையும் அபிவிருத்தி செய்வதும், விவசாயிகளின் மனத் திருஷ்டியை மாற்றுவதும் இந்த ஸ்தாபனத்தின் குறிக்கோளாக இருக்க வேண்டும். உயர்ந்த வாழ்க்கைத் தரம் வேண்டும் என்ற ஆவலை வளர்ப்பதுதான் முக்கிய பிரச்னை. இந்தக் குறிக்கோளை அடைவதற்காகத் தீவிர வேலை செய்ய வேண்டும். கிராமங்களின் கோஷ்டி அமைப்பில்தான் தீவிர வேலை நடத்த முடியும். இத்தகைய கோஷ்டியில் சூப்ரெண்டும், பயிற்சி பெற்ற அவரது சக ஊழியர்களும் அநேகமாய் எல்லா விவசாயிகளுடனும் நேரடித் தொடர்பு கொள்ள முடியும். சிறந்த கிராமத் தலைமையையும் உருவாக்க வேண்டும்."*

4. *" இந்திய விவசாயிக்கு வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும், மற்றவர்களுடன் அவர் கொள்ளும் ஒவ்வொரு உறவு முறையிலும் உதவி செய்ய வேண்டும். இவ்வாறு செய்யாவிடில் அவருக்கு அதிகமாக நன்மை கிடைக்காது. குறிப்பாக ஏழைக் கிராமவாசிகள் இடையே சேவை செய்ததன் விளைவாக இந்த அடிப்படைக் கோட்பாட்டை அனுபவ ரீதியாக அறிந்தோம்." (" வறுமையிலிருந்து விடுதலை பெற" என்ற நூலில் டாக்டர் ஸ்பென்ஸர் ஹாட்ச் எழுதியது.)*

உத்தியோக சார்பற்ற சிறந்த தலைவர்களின் சக்தி முழுவதையும் ஈடுபடுத்த வேண்டும். இவ்வாறு செய்தால்தான், வெகுஜன உற்சாகத்தை உசுப்பி விட முடியும்; தங்கள் நிலையை உயர்த்துவதற்கான மாபெரும் பணிக்கு லட்சோப லட்சம் கிராமாந்தரக் குடும்பங்கள் சிரத்தையுடன் ஆதரவு அளிக்குமாறு செய்ய முடியும்.

இந்தியாவின் அரசியல் சட்டத்தில் "ராஜாங்கக் கொள்கை பற்றிய வழிகாட்டித் தத்துவங்கள்" என்ற பகுதியில் அடங்கியுள்ள கோட்பாடு இதுதான். "தேச நிர்வாகத்துக்கு ஜீவாதாரமானவை" இத் தத்துவங்கள். "மக்களின் போஷாக்குத் தரத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதும், பொது சுகாதாரத்தை அபிவிருத்தி செய்வதும், 'அரசாங்கத்தின் அடிப்படைக் கடமைகளுள் சில" என்று 47-வது பிரிவு கூறுகிறது. "விவசாயத்தையும் கால்நடைப் பராமரிப்பையும் நவீன விஞ்ஞான முறைகளில் அமைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கவேண்டும்," என்று 48-வது பிரிவு விதிக்கிறது. 'கிராமப் பிரதேசங்களில் தனியார்கள் மூலமும் கூட்டுறவு அடிப்படையிலும் குடிசைத் தொழில்களை வளர்ப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கவேண்டும்" என்று 43-வது பிரிவு குறிப்பிடுகிறது. மற்றும், "விவசாயத்திலும் தொழில்களிலும் உள்ள எல்லாத் தொழிலாளர்களுக்கும் வாழ்க்கைக்குப் போதிய ஊதியம் கிடைக்கவும், கண்ணியமான வாழ்க்கைத் தரத்துக்கு ஏற்ற வேலைச் சூழ்நிலைகள் கிடைக்கவும் அரசாங்கம் முயலவேண்டும்..." என்று 43-வது பிரிவு கூறுகிறது. கூடியவரை அதிகமான சமூக நீதியை ஏற்படுத்தவேண்டும் என்பதே இவற்றின் பொருள்.

## க்ஷேமநல அரசாங்கம்

இவ்வாறு, க்ஷேமநல அரசாங்கம் என்ற முறையில் உலகத்திலேயே மிகக் கஷ்டமான மனிதப் பிரச்னைகளுள் ஒன்றை இந்தியா சமாளிக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் அடிப்படையாகப் பார்த்தால், கிராம வாழ்க்கையை அபிவிருத்தி செய்வது என்பது மனிதப் பிரச்னையே. இந்திய மக்களில் 80 சத விகிதத்தினர் கிராமங்களில்

வசிக்கிருர்கள். "தங்கள் பழங்காலத் திருஷ்டியை மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற பேரார்வத்தையும், புது அறிவும் புது வாழ்க்கை முறைகளும் பெறவேண்டும் என்ற உற்சாகத்தையும்,"* கிராமங்களில் வாழும் 6 கோடிக் குடும்பங்களுக்கு ஊட்டவேண்டும். வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவேண்டும் என்ற பேராவலையும் "சிறப்பாக வாழவேண்டும் என்ற மனவுறுதியையும்" அவர்களிடையே தோற்றுவிக்கவேண்டும். இது ஒரு பிரம்மாண்டப் பணி. "இத்தகைய உற்சாகத்தை எவ்வாறு எழுப்புவது? அதை உச்ச ஸ்தாயியில் எவ்வாறு வைத்திருப்பது? மக்களை அவர்களது சொந்தக் கால்கட்டுகளிலிருந்து எவ்வாறு விடுவிப்பது? தங்கள் நிலையை உயர்த்திக்கொள்வதற்கு அவர்களுடைய தீவிர சிரத்தையையும் ஆதரவையும் எவ்வாறு திரட்டுவது?—இக் கேள்விகளுக்கு சர்க்கார்கள் விடை தேடவேண்டும். தேசப் பொருளாதாரத்தில் தங்கள் பங்கு ஜீவாதாரமானது என்பதை விவசாயிகள் உணருமாறு செய்ய வேண்டும். அதேபோல் சர்க்காரும் இதை உணர்ந்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்வதற்காக விவசாயிகள் செய்யும் முயற்சிகளுக்கு உதவிபுரிய உறுதி கொண்டிருக்கிறது என்பதையும் அவர்களுக்குப் புலப்படுத்தவேண்டும். கவனமாகத் திட்டமிட்டு இந்த உதவியை அளிக்கவேண்டும்."

மேன்மேலும் அதிகமான ஜனங்கள் நிலத்தின்மீது சாடுவதால் விவசாயத் துறையில் வேலையில்லாத் திண்டாட்டமும் மறைமுக வேலையின்மையும் பிரம்மாண்ட அளவில் காணப்படுகின்றன. பொருளாதார ரீதியாக இதுதான் அடிப்படை உண்மை. இதுபற்றிய விவரங்களை யாவரும் அறிவர். எனினும் அவற்றை மீண்டும் எடுத்துக் கூறுவது பொருத்தமானதே. பருவ நிலைமைகள் காரணமாக வருஷத்தில் ஒரு பகுதியில்தான் விவசாய வேலையில் ஈடுபட முடிகிறது. நாட்டில ஐந்தில் நான்கு பங்குப் பிரதேசத்துக்குப் பாசன வசதியில்லை. இப் பிரதேசத்தில் வருஷத்தில் மூன்று அல்லது நான்கு

* இங்கும் அடுத்த இரு பாராக்களிலும் உள்ள மேற்கோள்கள் நிதிக் கமிஷன் யாதாஸ்திலிருந்து எடுக்கப்பட்டவை.

மாதங்களே விவசாய வேலை இருக்கிறது. *நீர்ப்பாசன வசதியுள்ள* ஐந்தில் ஒரு பங்குப் பகுதியில் இதைப்போல் இருமடங்கு காலத்துக்கு, அதாவது வருஷத்தில் 6 முதல் 8 மாதங்களுக்கு, வேலை இருக்கிறது. இவ்வாறு விவசாய மக்களில் சுமார் ஐந்தில் நான்கு பங்கினர், வருஷத்தில் மூன்றில் ஒரு பங்கு அல்லது நான்கில் ஒரு பங்குக் காலத்துக்குத்தான் விவசாயத்தில் வேலை பெற முடிகிறது; மற்றவர்களுக்கு இதைப்போல் சுமார் இரு மடங்கு காலத்துக்கு வேலை கிடைக்கிறது.

இந்நிலைமையுடன் வேறு இரு விஷயங்களையும் சேர்த்துப் பார்க்க வேண்டும். "முதலாவதாக, விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களில் கணிசமான பேர் பிழைப்புக்கு வேறு வழியில்லாமையால் தான் நிலத்துடன் கட்டுண்டு கிடக்கிறார்கள். வருமானத்தில் அவர்கள் பங்கு பெறுகிறார்கள், ஆனால் உற்பத்திக்குப் பெயரளவில்தான் உதவுகிறார்கள். இரண்டாவதாக, ஏற்கனவே ஜனநெரிசல் அதிகமாக உள்ள நிலங்களில் வேலை செய்வதற்காக ஆண்டுதோறும் முப்பது லட்சம்பேர் வருகிறார்கள். இவ்வளவு பிரம்மாண்டமான மறைமுக வேலையில்லாத் திண்டாட்டத்தினால், எவ்வளவு மனித விரயம் ஏற்படுகிறது என்பதை இலகுவாகப் புரிந்துகொள்ளலாம். இந்த உபரித் தொழிலாளர்களையெல்லாம் விவசாயத்திலிருந்து மாற்றினால் உற்பத்தி உயரவே செய்யும். நமது பொருளாதாரத்தில் ஆழமாக வேர் ஊன்றியுள்ள இந்தத் தீமைக்குப் பரிகாரமாக இருவித வேலைத் திட்டங்களை ஏககாலத்தில் நிறைவேற்றவேண்டும். முதலாவதாக, விவசாயத்தைச் சீரமைக்கவேண்டும். அதாவது விவசாய முறைகளை மேன்மேலும் செம்மைப்படுத்துவது, தீவிர கலப்பு விவசாய முறையை ஊக்குவிப்பது என்ற வழிகளில் ஏக்கர்வாரி உற்பத்தியை உயர்ந்தபட்ச அளவுக்கு உயர்த்தவேண்டும். இரண்டாவதாக, நிலத்தில் உபரியாக உள்ள தொழிலாளர்களை வேறு தொழில்களுக்கு மாற்றவேண்டும். அதாவது, குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள், அல்லது பெருந் தொழில்களுக்கும்; மூன்றுந்தரப் பிரவிருத்திகளுக்கும் அவர்களை மாற்றவேண்டும்."

இங்கு இன்னொரு விஷயத்தையும் வற்புறுத்துவது அவசியம் அதாவது, கிராமங்களில் உபயோகமின்றிக் கிடக்கும் ஏராளமான மனித சக்தியை ஒன்று திரட்டிச் சமுதாய நலனுக்குப் பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் கிராம அபிவிருத்தி இயக்கம் விறுவிறுப்பு அடையும்.

அதோடு, காலதாமதம் கூடாது என்பது மிக முக்கியமான விஷயம். அவசரமாக நடவடிக்கை எடுக்கவேண்டும், இனியும் தாமதிக்க முடியாது.

## முக்கிய யோசனைகள்

நாங்கள் மேலே சொன்னவற்றிலிருந்து பின்கண்ட முடிவுகளுக்கு வரவேண்டியிருக்கிறது:—

முதலாவதாக, கிராம வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் வியாபிக்கும் விதத்தில் இப்போதைய உணவு உற்பத்திப் பெருக்க இயக்கத்தை விஸ்தரிக்க வேண்டும். நாங்கள் பிரஸ்தாபித்த மனிதப் பிரச்னைக்கு இதன் மூலம் பரிகாரம் காண வேண்டும். இது ஒரு நிரந்தரப் பிரச்னையாகும்.

இரண்டாவதாக, இந்தியா ஒரு க்ஷேம நல அரசாங்கம் என்ற புதிய கருத்தின்படி நிர்வாகத்தினர்களுக்கு ஏற்பட்டுள்ள கடமைகளைத் திறமையுடன் நிறைவேற்றும் விதத்தில் சர்க்காரின் நிர்வாகக் கட்டுக் கோப்பைத் திருத்தி அமைத்து, அதற்கு வேண்டிய வசதிகளை அளிக்க வேண்டும்.

மூன்றுவதாக, கிராமங்களில் வாழும் 6 கோடிக் குடும்பங்கள் தங்கள் நிலையை மேம்படுத்திக் கொள்வதற்குச் செய்யும் முயற்சிகளுக்கு வழிகாட்டுவதற்காக உத்தியோக சார்பற்ற சிறந்த தலைவர்களைத் திரட்ட வேண்டும். மேற் சொன்னதுடன் கூட (நிர்வாகச் சீரமைப்புடன்) இதைச் செய்ய வேண்டும்.

சென்ற பல வருஷங்களாகப் பெரிய ராஜ்யங்களில் நன்கு அமைந்த அபிவிருத்தி இலாகாக்கள் இருந்து வருகின்றன. விவ

சாய இலாகா, கால்நடைப் பராமரிப்பு இலாகா, கூட்டுறவு இலாகா முதலியவை இவை. பொதுக் குறிக்கோள்கள் இல்லாமல், இவை தனித் தனியே வேலை செய்து வருகின்றன; தனித் தனி வேலைக்கிர மங்களைக் கடைப்பிடிக்கின்றன. ஒவ்வொரு இலாகாவும் தனது சொந்த உத்தியோகஸ்தர் வரிசை மூலம் கிராமவாசியுடன் தொடர்பு கொள்கிறது. இந்த வரிசையில் அடித்தளம்தான்—அதாவது கடைசி அதிகாரிதான்—பலவீனமானது. கிராமவாசியுடன் நேரடித் தொடர்பு கொள்ள வேண்டியவர் இவர்தான். பெரும்பாலும் இந்த அதிகாரிகள் போதிய பயிற்சி பெற்றவர்கள் அல்ல; வழிகாட்டும் திறமை இவர்களிடம் இல்லை. மற்றும், ரெவின்யூ அதிகாரிகள் அல்லது ஸ்தல ஸ்தாபனங்களின் நடவடிக்கைகளுடன் இந்த இலாகாக்களின் அலுவல்களுக்குச் சம்பந்தம் இல்லை. (ரெவின்யூ அதிகாரிகளின் அலுவல்கள் பலவிதங்களில் கிராம வாழ்க்கையுடன் தொடர்பு கொண்டவை. கிராமாந்தரப் பிரதேசங்களில் போக்குவரத்து, ஜல சப்ளை, மற்ற சர்வீஸ்கள் ஆகியவற்றுக்கு ஸ்தல ஸ்தாபனங்கள் சட்ட பூர்வமாகப் பொறுப்பு வகிக்கின்றன.) இதன் (பரஸ்பரத் தொடர்பு இல்லாமையின்) விளைவாக, கிராம வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் மேம்படுத்தவும், கிராமவாசியின் திருஷ்டியை மாற்றுவதற்கும், அபிவிருத்திப் பணிக்கு உள்ளூர் முயற்சியையும் சாதனங்களையும் திரட்டுவதற்கும் ஒருமுகமான முயற்சிகள் செய்யப்படவில்லை.

தீவிர கிராம அபிவிருத்தி வேலைக்காக ஒரு ஸ்தாபனம் தேவை என்பதை நாங்கள் மேலே சொன்னவை சுட்டிக் காட்டுகின்றன இந்த ஸ்தாபனம் ஒவ்வொரு விவசாயியுடனும் தொடர்பு கொண்டு கிராம வாழ்க்கை முழுவதையும் இணைப்பாக அபிவிருத்தி செய்வதற்கு உதவ வேண்டும். யு. எஸ். அமெரிக்காவில் உள்ள "விஸ்தரிப்பு" சர்வீஸ், பிரிட்டனில் உள்ள "ஆலோசனை" சர்வீஸ் முதலியவை போன்றதுதான் இதுவும். 100 முதல் 120 கிராமங்களைக் கொண்ட தாலுகா அல்லது தேசிலை—அதாவது, கிராமத்துக்கு அடுத்தபடியாக உள்ள நிர்வாக அமைப்பை—இந்த ஸ்தாபனத்துக்கு வசதியான யூனிட்டாக (ஆதார அமைப்பாக) கொள்ளலாம்.

அதற்குக் கீழே, (1) ஐயாயிரம் முதல் எட்டாயிரம் வரை ஜனத் தொகையை கொண்ட 5 அல்லது 10 கிராமங்களின் கோஷ்டியையும் (2) தனித்தனி கிராமத்தையும் யூனிட்டுகளாகக் கொள்ளலாம்.

## விஸ்தரிப்பு ஸ்தாபனம்

தாலுகா ஒரு அபிவிருத்தி வட்டாரமாக இருக்கவேண்டும். அது ஒரு அபிவிருத்தி அதிகாரி அல்லது "விஸ்தரிப்பு அதிகாரியின்" பொறுப்பில் இருக்கும். ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி இப்பதவியை வகிப்பார். அவரது மற்ற அலுவல்களைக் கவனிப்பதற்கு ஒரு விசேஷ உதவியாளரை நியமிக்க வேண்டும். "விஸ்தரிப்பு அதிகாரிக்கு உதவியாகத் தொழில் நுணுக்க அதிகாரிகள் நான்குபேர் இருப்பர். விவசாயம், கால்நடைப் பராமரிப்பு கூட்டுறவு, என்ஜினீரிங் ஆகியவற்றை இவர்கள் கவனிப்பர். சிறு பாசன வேலைகள், வடிகால், மண் அரிப்புத்தடை நடவடிக்கைகள முதலியவற்றை என்ஜினீரிங் அதிகாரி கவனிப்பார். இவர்கள் ஒரே கோஷ்டியாகச் செயல்புரிவர்; இடைவிடாமல் ஒருவரை ஒருவர் கலந்தாலோசித்து அனுபவங்களைப் பரிமாறிக்கொள்வர். விவசாயிகளுடன் இவர்கள் நெருக்கமான தொடர்பு கொண்டு, அவர்களது நண்பர்களாகவும் வழிகாட்டிகளாகவும் விளங்குவர். "விஸ்தரிப்புப்" பணி பற்றி ஐ. நா. உணவு - விவசாய ஸ்தாபனத்தின் யாதாஸ்தில் (1949 ஆகஸ்ட்) உள்ள இந்த வாசகம் விஸ்தரிப்பு சர்வீஸின் அலுவல்களைக் குறிப்பிடுகிறது :—

"விஸ்தரிப்பு சர்வீஸ் அல்லது ஆலோசனை சர்வீஸ், இவை போன்ற மற்ற சர்வீஸ்கள் ஆகியவற்றின் மிக முக்கியமான அலுவல்கள் வருமாறு: விவசாயம், குடும்ப விஞ்ஞானம், விவசாய விவகாரங்கள் ஆகியவை சம்பந்தமாக விவசாயிகளுக்குப் போதனை அளித்தல்; இந்தத் துறைகள் பற்றிய புத்தம்புதிய ஆராய்ச்சி முடிவுகளை அவர்களுக்குத் தெரிவித்தல்; உற்பத்தியின் தரம், அளவு உற்பத்திச் செலவு ஆகியவை பற்றிப் போதித்தல், விவசாயம், கிராம வாழ்க்கை ஆகியவை சம்பந்தமான சிறந்த வழிமுறைகளைப் போதித்தல்; ஆராய்ச்சிக்குரிய விவசாயப் பிரச்னைகளையும் குடும்பப்

பிரச்னைகளையும் ஆராய்ச்சி ஸ்தாபனங்களின் கவனத்திற்குக் கொண்டு வருதல், பரஸ்பரம் விஷயங்களைத் தெரிந்து கொள்ளவும் விவசாயத் துறையில் தலைவர்களை உருவாக்கவும்வசதியாக விவசாயி களின் கூட்டங்களை நடத்த வாய்ப்பு ஏற்படுத்துதல்.''

5 முதல் 10 கிராமங்களுக்கு ஒரு ஊழியர் வீதம் நியமிக்கப்பட வேண்டும். எல்லாவித அபிவிருத்தி வேலைகளுக்கும் இவர் பொது ஏஜண்டாக இருப்பார். ஆராய்ச்சி முடிபுகளை விவசாயிக்கு அவர் தெரிவிப்பார்; விவசாயின் கஷ்டங்களை நிபுணர்களுக்கு அறிவிப் பார்; விவசாயிக்குத் தேவைப்படும் பண்டங்களையும் பெற்றுத் தரு வார். கால்நடை, பயிர் நோய்கள் சம்பந்தமாக முதலுதவி செய்வ தும் அவரது அலுவல்.

கிராம அபிவிருத்திக்கு ஜீவாதாரமானது கிராம நிலை ஊழியரின் பணி. நாங்கள் ஏற்கனவே கூறியபடி, தாலுகா அல்லது தேசில் கட்டத்தில் உள்ள அபிவிருத்தி கோஷ்டிகளுக்கு அவர் ஏஜண்டாக இருப்பார்; விவசாயிகளுக்கு வழிகாட்டியாகவும் நண்பராகவும் விளங்குவார். அவர்களுடன் அன்றாடத் தொடர்பு கொண்டு, அவர் களது பிரச்னைகளை அன்றாடம் அறிந்து அபிவிருத்தி யோசனைகள் கூறுவார்; விதைகள், ரசாயன உரங்கள் முதலியவை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வார்; மற்றும் எல்லாவித உதவிகளையும் அளிப்பார். கிராம ஊழியர்களை மிகுந்த கவனத்துடன் தெரிந்தெடுக்கவேண்டும். அவர்களுக்குக் கிராம வாழ்க்கையில் அனுபவமும் சிரத்தையும் இருப்பது அடிப்படை யோக்கியதாம்சமாகும். தெரிந்தெடுத்த அபேட்சர்களுக்கு ஓராண்டுக் காலமாவது விவசாயம், கால்நடைப் பராமரிப்பு கூட்டுறவு முதலியவற்றில் ஆரம்பப் பயிற்சி அளிக்க வேண்டும். பயிற்சி நிலையத்தையும் அதன் பண்ணையையும் அடுத் துள்ள கிராமங்களில் நடைமுறை ''விஸ்தரிப்பு வேலை'' செய்வது இந்தப் பயிற்சியின் ஒரு முக்கிய பகுதியாகும். விவசாயிகளுடன் உறவாடும் முறை, மனித உறவுகள் ஆகியவற்றை விஷேசமாகப் போதிப்பது மிகமிக முக்கியமானது.

## ஊரார் பொறுப்பு

உள்ளூர்வாசிகளின் ஒத்துழைப்பைத் திரட்டுவது, உள்ளூர் ஊக்கத்தைத் தூண்டுவது, சமுதாய நடவடிக்கைகளை ஊக்குவிப்பது, கிராமங்களில் உபயோகமின்றிக் கிடக்கும் ஏராளமான மனித சக்தியைப் பயன்படுத்தி சமுதாயம் முழுதுக்குமோ அதன் ஒரு பகுதிக்கோ நன்மை தரும் காரியங்களை நிறைவேற்றுவது ஆகியவை "விஸ்தரிப்பு ஸ்தாபனத்"தின் மிக முக்கியமான கடமைகளுள் சில. அந்தந்தப் பிரதேசத் தலைவர்களின் உதவியுடன் இவற்றுக்கு ஏற்பாடு செய்யவேண்டும். இத்தகைய வேலைகளுக்கு எல்லையற்ற வாய்ப்புகள் உண்டு. இக் கருத்தை விளக்க உதாரணங்கள் தருகிறோம்: ***முதலாவதாக,*** நிரந்தர அபிவிருத்தி வேலைகள் சம்பந்தப்பட்டவரை, பெரிய நீர்ப்பாசனத் திட்டம் ஒன்று அமல் நடக்கும் பிரதேசத்தில், கிராமங்களுக்கான கால்வாய் வெட்டும் வேலையைக் கிராமவாசிகளே கூட்டுறவு முறையில் ஏற்று நிறைவேற்றலாம். நடுவாந்தரர்கள் லாபமடைவதை இது தவிர்ப்பதுடன், கூட்டுறவு இயக்கத்துக்கு ஏராளமான நிதியையும் பெற்றுத்தரும். இந்தப் பணத்தை விவசாய அபிவிருத்திக்குப் பயன்படுத்தலாம். தரிசு நில மீட்சி, நிலங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்டுதல் முதலியவற்றுக்கும் சிறு பாசன வேலைகளுக்கும் இதே கருத்து பொருந்தும். தவிர கிராமப் பாசனக் குளங்கள், குடிதண்ணீருக்குப் பொதுக் கிணறுகள், ரஸ்தாக்கள், கிராமத் தோப்புகள் முதலியவற்றை அமைப்பது போன்ற சமுதாயப் பொதுநல வேலைகளை நிறைவேற்றுவதற்கு உழைப்புத் தான முறையைப் பயனுள்ள விதத்தில் உருவாக்கலாம். ***இரண்டாவதாக,*** விதை உற்பத்தி, பசுந்தாள் உரங்கள், கம்போஸ்ட் தயாரிப்பது முதலியவை சம்பந்தமான உள்ளூர் முயற்சிகளுக்கு ஊக்கமளித்து பயிர்த் தொழிலின் தரத்தை உயர்த்த வேண்டும். சுத்தமான விதைகள் முதலியவை கிடைப்பதற்கு வழி செய்வதுடன் சப்ளைச் சங்கடங்களைக் குறைப்பதற்கும் இது உதவும். ***மூன்றாவதாக,*** லாபகரமான விதத்தில் கூட்டுறவு இயக்கத்தைப் பல விதங்களில் வளர்க்கலாம். குறுகிய கால நிதி வசதி, விவசாயக் கருவிகளையும் பம்புகளையும் கூட்டு உடைமையாகப் பெறுதல், நீர் இறைப்

பது, கூட்டு உடைமையில் களஞ்சியம், கூட்டு விவசாயம், கூட்டுறவு மார்க்கட்டிங் முதலியவற்றுக்கு இவ்வாறு ஏற்பாடு செய்யலாம். **நான்காவதாக,** உப தொழில்கள், குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் ஆகியவற்றைக் கூட்டுறவு முறையில் வளர்க்கலாம். **ஐந்தாவதாக,** மாதர் பணிக்கு ஏற்பாடு செய்வது மிக முக்கிய மானது. ஏனெனில் வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதற்கு அவர்களது ஒத்துழைப்பைப் பெறுவது மிகுந்த பயன் அளிக்கும். இதே போல், "விஸ்தரிப்பு"ப் பிரதேசங்களில் சிறந்த முறையில் இளைஞர் இயக்கத்தையும் தொடங்க வேண்டும்.

கிராம வாழ்க்கையை மேம்படுத்துவதில் கூட்டுறவு இயக்கத்தின் பங்கு மகத்தானது என்பதை இங்கு வலியுறுத்துவது நலம். எத்தனையோ உருவங்கள் கொண்ட கூட்டுறவுத் தத்துவத்தைக் கையாண்டு கிராம வாழ்க்கையின் எல்லாப் பிரச்னைகளுக்கும் பரிகாரம் தேட முடியும். கூட்டுறவுத் தத்துவம் மாத்திரமே இத்தகைய பரிகாரத்தை அளிக்கவல்லது. ஆகவே ஒவ்வொரு கிராமத்திலும் அல்லது ஒவ்வொரு கிராமத்தின் கோஷ்டியிலும் பல-காரியக் கூட்டுறவு சங்கம் ஒன்றையாவது அமைப்பது நம் குறிக்கோளாக இருக்க வேண்டும். சங்கத்தில் ஒவ்வொரு விவசாயக் குடும்பமும் அங்கம் வகிக்க வேண்டும். கிராம நிலை ஊழியர், மற்ற ஊழியர்கள் ஆகியோரின் வேலைக்கிரமங்களில் இதுவே முதலிடம் பெற வேண்டும். இதன் மூலமே கிராமவாசிகள் சுயமுயற்சியால் தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ள முடியும்.

## கிராமத் தலைமை

கிராமத் தலைமை பற்றிப் பிரஸ்தாபித்தோம். தங்கள் கிராமங்களில் உள்ள எல்லாக் குடும்பங்களுடனும் ஊழியர்களுக்குப் பரிச்சியம் இருக்க வேண்டும். கூடுமானவரை அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி விவசாயிகளின் கூட்டங்களில் விவாதித்த பிறகே முடிவுசெய்ய வேண்டும்; அப்போதுதான் இத்திட்டங்களுக்கு அதிகபட்ச ஆதரவு கிடைக்கும். இவை எல்லாம் அவசியம்தான். அதோடு, கிராமங்களுக்கும் கிராமங்களின் கோஷ்டிகளுக்கும் வேண்டிய சிறந்த தலை

வர்களையும் உருவாக்க வேண்டும். ஸர் ஜான் ரஸ்ஸல் குறிப்பிட்டது போல இது ஒரு விஷமச் சக்கரம். அதாவது, கிராமங்களில் கவர்ச்சி இல்லாமையால் ஆர்வமுள்ள இளைஞர்கள் கிராமத்தை விட்டு டவுன் களுக்குப் போய்விடுகிறார்கள். "இதன் விளைவாக, அண்டை அயலாருக்குச் சிறந்த ஆலோசனை கூறக்கூடிய நல்ல விவசாயிகளே (கிராமத்தில்) காணப்படுவதில்லை." தீவிர கிராம அபிவிருத்தி வேலைகள் நடப்பதன் பலனாக இத்தகைய நபர்கள் மேன்மேலும் அதிக எண்ணிக்கையில் கிராமங்களில் தங்கி தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்வர் என்று நம்புகிறோம். ஆனால் "கிராம நல இயக்கத்தை ஒரு பிரவிருத்தியாக இந்திய இளைஞர்கள் மேற்கொண்டால்தான் இந்த விஷமச் சக்கரத்தைத் தகர்க்க முடியும். 'கிராமத்தைப் பராமரிப்பது ஒரு இனத்தின் வளர்ப்புத் தொட்டிலைப் பாதுகாப்பதாகும்' என்று டாகூர் கூறியதன் உண்மையை அவர்கள் உணர வேண்டும்."*

இந்த மாறுதல் ஏற்படுவதற்கு விஸ்தரிப்புச் சிப்பந்திகளும் தலைவர்களும் உதவ முடியும். மற்றும், கிராம ஸ்தாபனங்கள் இல்லாத இடங்களில் அவற்றை ஏற்படுத்த வேண்டும். ராஜ்யங்களில் அமல் நடக்கும் சட்டங்களின் பிரகாரம் பஞ்சாயத்துக்களை நிறுவலாம். ஒவ்வொரு கிராமத்திலும், கிராமங்களின் கோஷ்டியிலும், ஸ்தல நிலைமைக்கு ஏற்ற, பல-காரியக் கூட்டுறவு சங்கம் ஒன்றைஅமைக்க வேண்டும். கடன் வசதி, பண்ட சப்ளைகள், மார்க்கட்டிங் வசதி, விவசாயிகளுக்குத் தேவைப்படும் மற்ற உதவிகள் ஆகியவற்றை இச்சங்கம் அளிக்கும். பள்ளிக்கூடங்களுடன் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சமூகக் கல்வி அளிப்பதற்கு இவை பயன்படும்.

அபிவிருத்தித் திட்டங்களை அமல் நடத்தும் ஏஜண்டாகக் கிராமப் பஞ்சாயத்துக்களை அங்கீகரிக்க வேண்டுமா, அல்லது பல-காரி

*1952 ஜனவரியில் "இண்டர்நேஷனல் அபயர்ஸ்" சஞ்சிகையில், "இந்தியாவின் உணவு உற்பத்திப் பிரச்னைகள்" குறித்து ஸர். இ. ஜான் ரஸ்ஸல் எழுதிய கட்டுரையிலிருந்து.

யக் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகக் குழுக்களை அங்கீகரிக்க வேண்டுமா என்பது குறித்துக் கருத்து வேற்றுமை இருக்கிறது. முந்தியதைச் சில ராஜ்யங்களும், பிந்தியதைச் சில ராஜ்யங்களும் ஆதரிக்கின்றன. கிராம உற்பத்திக் கவுன்சில்களை அமைக்க வேண்டும் என்று திட்டக் கமிஷன் வேறு யோசனை கூறியிருக்கிறது. ஒவ்வொரு பிரதேசமும் தனது விசேஷத் தேவைகளுக்கும் நிலைமைகளுக்கும் ஏற்றபடி இவ்விஷயத்தில் முடிவு செய்து கொள்ள வேண்டும். ஆயினும் ஒரு விஷயத்தை மாத்திரம் இங்கு மறுபடி வலியுறுத்தலாம். அதாவது, உயர்ந்த பட்ச அளவுக்கு உள்ளூர் ஒத்துழைப்பும்,சிறந்த தலைவர்களின் ஆதரவும் கிடைக்காவிடில் கிராம அபிவிருத்திப் பிரச்னைக்குப் பரிகாரம் தேடவே முடியாது. இது ஒரு மனிதப் பிரச்னை. கிராமவாசியுடன் எவ்வாறு உறவு கொள்வது என்பதுதான் இதன் ஜீவாதார அம்சம். வேலைத் திட்டங்களை அவர் மீது திணிக்கக் கூடாது. அவற்றை வகுப்பதில் அவர் தீவிரமாகப் பங்கு எடுத்துக் கொள்ள வேண்டும்; அவை தம்முடைய சொந்தத் திட்டங்கள் என்று அவர் உணர வேண்டும். முதலில் மிகப் பரவலாகக் காணப்படும் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தொடங்கலாம். நம்பிக்கை ஏற்படுத்திய பிறகு மற்ற வேலைத் திட்டங்கள் வரலாம். தவிர, வெவ்வேறு கோஷ்டிகளுக்கு ஏற்ப வேலைக்கிரமங்களும் வழிமுறைகளும் வெவ்வேறு மாதிரியில் அமைய வேண்டும் என்பது முக்கியமானது. மாறுகின்ற நிலைமைகளுக்கு ஏற்ப மாறக்கூடிய நெளிவு சுளிவு அவற்றுக்கு வேண்டும்.

## ஸ்தாபன அமைப்பு

தாலுகா மட்டத்தில் உத்தியோக சார்பற்ற தலைமைக்கு மூலக் குழுவாக சப்-ஜில்லா போர்டை—அந்த போர்டு இருக்கும் இடங்களில்—பயன்படுத்தலாம். இந்த சப்-போர்டு இல்லாத இடங்களில் அந்தப் பிரதேசத்துக்கு உரிய ஜில்லா போர்டு உறுப்பினர்களை இத்தகைய மூலக் குழுவாகக் கொள்ளலாம். மற்றும், அந்தந்தப் பிரதேசங்களின் பார்லிமெண்ட் உறுப்பினர்களையும் ராஜ்ய சட்டசபை

உறுப்பினர்களையும் கூட்டுறவு இயக்கப் பிரதிநிதிகளையும் அதில் சேர்த்துக் கொள்ளலாம்.

நிர்வாக அமைப்பில் ஜில்லாவின் ஸ்தானம் மிக முக்கியமானது. இங்கும் விஸ்தரிப்பு அதிகாரியாகிய கலெக்டர் தலைமையில் அபி விருத்தி நடவடிக்கைகளை இணைக்க வேண்டும். விசேஷ அதிகாரிகள் அவருக்கு உதவி செய்ய வேண்டும். இவர்கள் ஒரே கோஷ்டியாகச் செயலாற்ற வேண்டும். தாலுகா விஸ்தரிப்புச் சிப்பந்திகளுக்கு இவர்கள் வழிகாட்டி அவர்களை மேற்பார்வையிட வேண்டும். மற்றும், ஜில்லாவுக்கு ஒரு சப்ளை ஸ்தாபனமும் இருக்க வேண்டும். உத்தி யோக சார்பற்ற பிரிவாக ஜில்லா போர்டுக் கமிட்டி ஒன்று இருக்கும். தாலுகா ஸ்தாபனத்துக்குப் பதில் இந்தக் கமிட்டியில் அங்கம் வகிக்க விரும்பும் பார்லிமெண்ட், ராஜ்ய சட்டசபை உறுப்பினர்களையும் அதில் சேர்த்துக் கொள்ளலாம். மற்றும் கூட்டுறவு இயக்கப் பிரதி நிதிகள், சமூக சேவை புரிய விரும்பும் மற்ற நபர்கள் ஆகியோரை யும் அதில் சேர்க்க வேண்டும்.

ராஜ்ய மட்டத்தில், முதல் மந்திரி தலைமையில் மந்திரிகள்கமிட்டி ஒன்று இருக்க வேண்டும். கிராமாந்தர நடவடிக்கையில் சம்பந்தம் உள்ள எல்லா மந்திரிகளும் அதில் அங்கம் வகிக்க வேண்டும். இணைப்பான கொள்கைகளை இந்தக் கமிட்டி வகுக்கும். கிராமாந்தர வேலைத் திட்டம் முழுவதையும் கவனிப்பதற்காக ஒவ்வொரு ராஜ்யத்தி லும் அபிவிருத்திக் கமிஷனர் ஒருவர் இருக்க வேண்டும் எனத் திட்டக் கமிஷன் தெரிவித்துள்ள யோசனை உபயோககரமானது. பொதுஜன ஒத்துழைப்பைத் திரட்டுவதற்காக உத்தியோக சார்பற்ற ஸ்தாபனம் ஒன்றை அமைக்கலாம். கிராமப் பிரச்னைகளில் சிரத்தையுள்ள ராஜ்ய சட்டமன்ற உறுப்பினர்கள், கூட்டுறவு இயக்க உறுப்பினர்கள், கிராம சேவை புரியும் உத்தியோக சார்பற்ற பிரமுகர்கள் ஆகியோர் இதில் அங்கம் வகிக்கலாம். இந்த போர்டில் முதன் மந்திரி தலைவராகவும் சம்பந்தப்பட்ட மற்ற மந்திரிகள் உறுப்பினர்களாகவும் இருக்கலாம். காரியதரிசி பதவியை அபிவிருத்திக் கமிஷனர் வகிப்பார்.

மத்திய அரசாங்கக் கட்டத்தில் 'அகில இந்திய கிராம நலக் கவுன்சில்' ஒன்று இருக்கவேண்டும். இக்கவுன்சில் வருஷத்துக்கு இருமுறை கூடலாம். பல்வேறு ராஜ்யங்களில் கிராம அபிவிருத்தி வேலைகளின் முன்னேற்றம் பற்றிய யாதாஸ்துகள் அதற்கு வர வேண்டும். கிராம நலம், விஸ்தரிப்பு சர்வீஸ்களின் அமல் ஆகியவை குறித்து இந்தக் கவுன்சில் விவாதிக்கும். கிராம அபிவிருத்தி, கிராம நலம் சம்பந்தமான பிரச்னைகளில் சர்க்காருக்கு அது ஆலோசனை கூறவேண்டும். சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சகங்கள், சில ராஜ்ய சர்க்கார்கள், பார்லிமெண்ட் ஆகியவற்றின் பிரதிநிதிகளும், விசேஷத் திறமையோ தகுதிகளோ பெற்றுள்ள உத்தியோக சார் பற்றவர்களில் பொறுக்கி எடுத்த சிலரும் இக் கவுன்சிலில் அங்கம் வகிக்க வேண்டும்.

பல்வேறு நிலைகளில் இருக்கவேண்டிய உத்தியோக சார்பற்ற ஸ்தாபனங்கள் குறித்து நாங்கள் மேலே கூறியிருப்பது உதாரண பூர்வமாகத்தான். மற்றப்படி, இத்தகைய தலைவர்களைத் திரட்டுவதற்கும் புதிய தலைவர்களைப் பயில்விப்பதற்கும் ஒவ்வொரு ராஜ்யமும் சிறந்த வழிமுறைகளைத் தானுகவே நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். பணி நடக்க நடக்க ஜில்லா போர்டுகள், சப் - ஜில்லா போர்டுகள் ஆகியவற்றின் அமைப்பிலும் அலுவல்களிலும் மாறுதல்கள் ஏற்படும் என்று எதிர்பார்க்கிறோம். கிராம வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் வியாபிக்கும் விதத்தில் இவற்றின் அலுவல்களை அப்போது விஸ்தரிக்கலாம். எனினும், ஆரம்ப கட்டத்தில் ஏற்பாடுகள் விறைப்பாக இல்லாமல் நெளிவு சுளிவுடன் இருக்க வேண்டும்; அனுபவ பூர்வமாகத் தேவையான மாறுதல்களைச் செய்து கொள்ள வேண்டும்.

## சாதனையை எடை போடுதல்

இயக்கம் வெற்றிபெற வேண்டுமானல் வழிமுறைகளையும் பலன்களையும் எடைபோட்டுப் பார்ப்பது அத்தியாவசியமானது. இதற்காக ஒரு ஸ்தாபனத்தை ராஜ்ய சர்க்கார்கள் ஏற்படுத்தவேண்டும். மத்திய ஸ்தாபனத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அது கூறு

கிற வழிமுறைகளை அனுசரித்து இந்த ராஜ்ய ஸ்தாபனம் வேலை செய்யவேண்டும். இது ராஜ்ய அபிவிருத்திக் கமிஷனரின் நேரடி அதிகாரத்தின் கீழ் இருக்கவேண்டும். ஒரே அடிப்படையில் மதிப்பீடுகளை நடத்துவதற்கு இவ்வேற்பாடு உதவும். சமுதாயத் தொகுதிகள் சம்பந்தமாக இத்தகைய ஸ்தாபனம் ஒன்று இப்போது நிறுவப்படுகிறது; அது மூன்று வருஷ காலம் நீடித்திருக்கும். அதற்கு ஆகும் சேலவை போர்டு பவுண்டேஷனும் தொழில் நுணுக்க ஒத்துழைப்பு ஸ்தாபனமும் (இரண்டும் அமெரிக்க ஸ்தாபனங்கள்) கூட்டாக ஏற்றுக்கொள்ளும். மூன்ருண்டுக் காலத்துக்குப்பின் இவற்றைத் தாங்களே மேற்கொள்ளலாம் என்று ராஜ்ய சர்க்கார்கள் எதிர்பார்க்கின்றன; வருங்காலத் தேவைகளுக்கு ஏற்ப அவற்றை அப்போது விஸ்தரித்துக்கொள்ளலாம். இந்த ஏற்பாட்டின் விளைவாகக் கிடைக்கும் பயிற்சிபெற்ற சிப்பந்திகள் மிகவும் உதவுபடியாக இருப்பார்கள். அமலை மதிப்பிடும் வேலையில் சர்வகலாசாலையும் ஆராய்ச்சி ஸ்தாபனங்களையும் சேர்த்துக்கொள்வது பயனுள்ளது என்று கருதுகிருேம்.

நாங்கள் மேலே விவரித்துள்ள 'விஸ்தரிப்பு' ஸ்தாபனம் நாடெங்கும் மிகக் குறுகிய காலத்துக்குள்—பத்து ஆண்டுகளுக்கு மேற்படாமல்—பரவ வேண்டும். கிராம வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவது என்ற மிகக் கஷ்டமான பிரச்னையை க்ஷேமநல அரசாங்கமாகிய இந்தியா சமாளிப்பதற்கு இதுதான் மிகச் சிறந்த வழி. இதற்கு வேண்டிய சிப்பந்திகளைப் பயில்விப்பது முதல் காரியம். பட்டதாரிச் சிப்பந்திகளைப் பயில்விப்பதற்குப் பெரும்பாலான ராஜ்யங்களில் இப்போது போதிய வசதிகள் உள்ளன; இவர்கள் போதிய தொகையில் கிடைக்கிருர்கள். எனினும் இப்போதைவிட அனுஷ்டான பூர்வமான பயிற்சி அளிப்பது அவசியம். அதோடு பண்ணைகளிலும் 'விஸ்தரிப்புப்' பிரதேசங்களிலும் அவர்கள் நேரடியாக வேலை செய்வதற்கு இப்போதைவிட அதிக அவகாசம் வேண்டும்.

கிராம நிலை ஊழியர்கள் சம்பந்தப்பட்டவரை நிலைமை வேறு மாதிரியாக இருக்கிறது. எங்கள் யோசனைப்படி தேவைப்படும்

தொகையில் இத்தகைய ஊழியர்கள் எந்த ராஜ்யத்திலும் கிடைப்ப தில்லே. தங்கள் தேவைகளை மறுபரிசீலனை செய்யும்படியும், இத் தகைய சிப்பந்திகளைப் பயில்விப்பதற்காக ஏற்கனவே உள்ள நிலையங் களிலோ, புதிய நிலையங்களிலோ பயிற்சி வகுப்புகளை ஏற்படுத்தும்படி யும் ராஜ்யங்களைக் கேட்டுக் கொள்ளவேண்டும். போர்டு பவுண் டேஷன் சார்பில் 25 பயிற்சி நிலையங்கள் நிறுவப்படுகின்றன. சமுதா யத் தொகுதிகளுக்கு வேண்டிய கிராம ஊழியர்களைப் பயில்விப்பதற் காக இந்நிலையங்கள் நான்கு வருஷ காலம் நீடித்திருக்கும்: இவற்றில் ஆறுமாதப் பயிற்சி அளிக்கப்படுகிறது; ஆண்டுதோறும் 3,500 பேர் பயிற்சி பெறுவர். இத்தகைய ஊழியர்களுக்குக் குறைந்தது ஒருவருஷ காலமாவது பயிற்சியளிக்க வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். இந்த 25 நிலையங்களை ராஜ்ய சர்க்கார்கள் பின்னர் ஏற்றுக்கொண்டு நிரந்தரப் பயிற்சி ஸ்தாபனங்களாக நடத்துவர். சில பிரதேசங்களில் மேற்கொண்டு பயிற்சி நிலையங்கள் தேவைப்படலாம்; அவற்றைக் கூடிய விரைவில் நிறுவ வேண்டும்.

## பணச் செலவு

நாங்கள் குறிப்பிட்டுள்ளபடி ஒரு அபிவிருத்தி வட்டாரத்தை நடத்துவதற்கு, சராசரி, சுமாராக பின்கண்டவாறு பணம் செல வாகும்:

### சராசரி 120 கிராமங்களைக் கொண்ட ஒரு தாலுகா அல்லது தேசிலுக்கு

| | |
|---|---|
| 4 "தொழில் நுணுக்க" அதிகாரிகள் | கிராக்கிப்படி, நிலையான பிரயாணப் படி உட்பட ஒவ்வொருவருக்கும் மாதம் சராசரி ரூ. 250—வருஷத் துக்கு ரூ. 12,000 |
| குமாஸ்தா உதவியாளர்கள் | ரூ. 300; அல்லது வருஷத்துக்கு ரூ. 3,600 |

| | |
|---|---|
| 12 கிராம நிலை ஊழியர்கள் (ஒரு ஊழியருக்குச் சராசரி 10 கிராமங்கள்) | ஒவ்வொருவருக்கும் சராசரி மாதம் ரூ. 125 அல்லது வருஷத்துக்கு ரூ. 1,500; எல்லோருக்கும் வருஷத்துக்கு ரூ. 18,000 (கிராக்கிப்படி உட்பட) |
| சப்ளைகளும் சர்வீஸ்களும்—விதை உற்பத்திப் பெருக்கம், பசுந்தாள் உரம், கம்போஸ்ட், மற்ற உள்ளூர்ச் சப்ளைகள் உட்பட | வருஷத்துக்கு ரூ. 3,600 |
| மொத்தம் | வருஷத்துக்கு ரூ. 37,200—அதாவது ஒரு கிராமத்துக்கு ஒரு வருஷத்துக்குச் சராசரி ரூ. 310. |

ராஜ்யங்களில் அமலில் உள்ள சம்பள விகிதங்களே இவ்வட்டாரங்களிலும் நடைமுறையில் பிரயோகமாகும். எனினும் ராஜ்யங்கள் விரும்பினால் இவற்றை மாற்றிக் கொள்ளலாம். ஆனால் மேலே குறிப்பிட்டுள்ள மொத்த நிதி வரம்புக்கு அவை உட்பட்டிருக்க வேண்டும்.

இந்த சர்வீஸ்களை ராஜ்யங்கள் உருவாக்குவதற்கு வசதியாக மத்திய சர்க்கார் உதவி அளிக்க வேண்டும் என்று சிபாரிசு செய்கிறோம். அதாவது, ராஜ்யங்களுக்கு அதிகப்படியாக ஏற்படும் செலவில் பாதியை இவ்வாறு கொடுக்க வேண்டும். தாலுகா அல்லது தேசில் தலைமைக் காரியாலயங்களில் சுமார் பாதியை ராஜ்யங்கள் ஏற்கனவே ஏற்படுத்தியிருப்பதாகவும், கிராம சர்வீஸ்கள் முழுவதற்கும் மானியங்கள் தேவைப்படும் என்றும் வைத்துக் கொண்டால் 120 கிராமங்களுக்கு உதவி அளிப்பதற்குச் சுமாராகப் பின்கண்டவாறு பணம் தேவைப்படும்.

| | |
|---|---|
| தாலுகா நிலைச் சிப்பந்திகளுக்காக ரூபாய் 7,800-ல் பாதி | ரூ. 3,900 |
| கிராமச் சிப்பந்திகளுக்கும் சப்ளை, சர்வீஸ்களுக்கும் | ரூ. 10,800 |
| மொத்தம் வருஷத்துக்கு | ரூ. 14,700 |

இதன்படி ஒரு கிராமத்துக்கு ரூ. 122-அணா 8 அல்லது முழுத் தொகையாக ரூ. 125, குத்துமதிப்பாகச் செலவாகும். இந்தியாவில்

உள்ள 4 லட்சம் ஸ்திரமான கிராமங்களுக்கு இந்த சர்வீஸ்களைப் பத்துவருஷ காலத்தில் விஸ்தரிப்பது என்றால் வருஷத்துக்கு உயர்ந்த பட்சமாக மொத்தம் ரூ. 5 கோடி வீதம் மத்திய அரசாங்க உதவி தேவைப்படும். இந்த அடிப்படையில் ஒவ்வொரு அபிவிருத்தி வட்டாரத்துக்கும் ஐந்தாண்டு காலத்துக்கு ஆண்டுதோறும் மானியங்கள் கொடுக்கப்படவேண்டும். பலன்களை மதிப்பிடுவதன்பேரில் ஐந்தாண்டு காலத்துக்குப் பின் இம் மானியங்களை மறுபரிசீலனை செய்யவேண்டும். அதன் பிறகு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இத்தகைய மறுபரிசீலனைகள் நடக்கவேண்டும். சிப்பந்திகளின் பணியை சம்பந்தப்பட்ட கிராமத்திலுள்ள மக்கள் மேன்மேலும் உணரும்போது செலவில் ஒரு விகிதத்தை ஏற்றுக்கொள்ள அவர்கள் முன்வர வேண்டும்; அதற்கு ஏற்ப மானியங்களை மேன்மேலும் குறைத்துக்கொள்ளலாம். பஞ்சாயத்துகளுக்கும் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும் கிராம நிலை ஊழியர்கள் உதவி புரிவதால் இந்த ஸ்தாபனங்களுக்கான நிர்வாகச் செலவில் ஒரு பகுதி அந்த ஊருக்கு மிச்சமாகிறது. பெரிதும் பின்தங்கியுள்ள பிரதேசங்களுக்கு—பழங்குடிப் பிரதேசங்களுக்கும் மற்றப் பிரதேசங்களுக்கும்—மேற்சொன்னதைவிட அதிகமான மானியங்கள் தேவைப்படும். இது பத்தாவது ஆண்டில் உயர்ந்தபட்சம் வருஷத்துக்கு ரூபாய் ஒரு கோடி வீதம் இருக்கும் என்று மதிப்பிடுகிறோம். நாட்டின் பொருளாதாரத்துக்கு இந்த சர்வீஸ்கள் ஜீவாதாரமானவை என்பதால் இது சம்பந்தமாக எங்கள் சிபாரிசுகளை இந்திய சர்க்கார் ஏற்றுக் கொள்வர் என்று நம்புகிறோம்.

## நிலச் சீர்திருத்தம்

கிராம அபிவிருத்திப் பணியில் உற்சாகம் ஏற்படவும், கிராமங்களில் உள்ள மனித சக்தியை ஆக்க வேலைகளில் ஈடுபடுத்தவும் இன்னொரு விஷயம் அத்தியாவசியமானது. அதுவே நிலச் சீர்திருத்தம். இந்தச் சிக்கலான பிரச்னையைத் திட்டக் கமிஷன் இப்போது பரிசீலித்து வருவதாகவும், அதன் இறுதி யாதாஸ்தில் இது பற்றிய சிபாரிசுகள் இடம்பெறும் என்றும் அறிகிறோம். அதனால் இப்

பிரச்னை குறித்து நாங்கள் விரிவாக எதையும் கூறப்போவதில்லை. பெரும்பாலான ராஜ்யங்களில் ஜமீன்தாரி முறையையும் மற்றச் சலுகை பெற்ற உடைமை முறைகளையும் ஒழிப்பதற்குச் சட்டங்கள் இயற்றப்பட்டு விட்டன. அதனால் இப் பிரதேசங்களில் வேறுவித நில உடைமை முறைகளை ஏற்படுத்துவது பற்றிய முடிவுகளை வகுத்து அவற்றைத் துரிதமாக அமல் நடத்தவேண்டும். நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக வேறு சில பிரச்னைகளும் உள்ளன; அவற்றையும் சமாளிக்க வேண்டும். நாட்டிலுள்ள கோடானுகோடி விவசாயிகளுக்குப் புது வாழ்வு அளிக்கவும், தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்ற ஆவலை அவர்களுக்குப் புகட்டவும், இவ்வாறு உயர்த்திக்கொள்ள அவர்களுக்கு உதவி அளிக்கவும் நடவடிக்கை எடுப்பதுதான் முக்கியமாகத் தேவைப்படுகிறது. இக்காரணத்தினால்தான் தேசிய விஸ்தரிப்பு சர்வீஸை உருவாக்கி, அதை நிரந்தரமாக நடத்தவேண்டும் என்று நாங்கள் பெரிதும் வலியுறுத்தியுள்ளோம்.

சில குறைந்தபட்ச அளவுகளுக்குக் கீழே விலைவாசிகள் சரிந்து விடாதபடி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று விவசாயிகளுக்கு உறுதி அளிக்க வேண்டும். அவர்கள் நிரந்தர அபிவிருத்திகளை நிறைவேற்றவும், நீண்டகால அடிப்படையில் உற்பத்தியை உயர்த்தவும் இது உதவும். அவ்வப்போது குறைந்தபட்ச விலை நிலவரங்கள் எவை என்பது பொது விலைவாசிகள், வேளாண்மைச் செலவுகள் முதலிய விஷயங்களைப் பொறுத்திருக்கும். கட்டுப்படியாகாத அளவுக்கு உணவு தானிய விலைகள் சமீப வருங்காலத்தில் குறையமாட்டா என்று எங்களுக்குத் தோன்றுகிறது. எனினும் விவசாய உற்பத்திக்கு ஊக்கம் அளிப்பதற்காக, இந்தக் கொள்கையை ஏற்பதாக இந்திய சர்க்கார் அறிவிக்கவேண்டும் என்று சிபாரிசு செய்கிறோம்.

# அனுபந்தம் - 3

சமீபகாலம் வரை சமுதாய அபிவிருத்தித் திட்டம் மூன்று கட்டங்களாக அமல் நடத்தப்பட்டு வந்தது. தேசிய விஸ்தரிப்பு சர்வீஸ், தீவிர அபிவிருத்தி (சமுதாயத் தொகுதி) கட்டம், தீவிர அபிவிருத்திக்குப் பிந்திய கட்டம் என்பவையே அவை. சாதாரணமாக தே. வி. ச. கட்டம் மூன்று ஆண்டுக் காலத்துக்கு நீடித்தது. அப்போது உயர்ந்த பட்சம் ரூ. 4 லட்சம் செலவில் குறிப்பிட்ட அபிவிருத்தி வேலைகள் நிறைவேற்றப்பட்டன. இதைத் தொடர்ந்து மேலும் மூன்ருண்டுக் காலம் தீவிர அபிவிருத்தி வேலைகள் நடத்தப்பட்டன. முழு அளவுச் சிப்பந்திகளுடன் சுமார் ரூ. 8 லட்சம் செல்வில் இவை நிறைவேற்றப்பட்டன. அதன் பிறகு அந்த வட்டாரத்தில் தீவிர அபிவிருத்திக்குப் பிந்திய கட்டம் அமலுக்கு வந்தது. அப்போது ஆண்டுதோறும் செலவுக்கு 30,000 ரூபாயே ஒதுக்கப்பட்டது.

சமுதாய அபிவிருத்தித் திட்ட அமலை ஆராய்வதற்காக ஸ்ரீ பல்வந்த்ராய் மேத்தா தலைமையில் ஒரு கோஷ்டியைத் திட்ட வேலைகள் சம்பந்தமான கமிட்டி நியமித்தது. மேற்சொன்ன முறைக்குப் பதிலாக ஐந்தைந்து ஆண்டுகள் கொண்ட இரு கட்டங்களாக இத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்று அந்தக் கோஷ்டியினர் சிபாரிசு செய்தனர். தே. வி. சர்வீஸ், தீவிர அபிவிருத்திக் கட்டம், தீவிர அபிவிருத்திக்குப் பிந்திய கட்டம் என்ற பாகுபாட்டைக் கைவிடுமாறு அவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சிபாரிசுகள் சம்பந்தமாக இந்திய சர்க்காரின் முடிவைப் பின்கண்ட குறிப்பு விளக்குகிறது: —

'சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் அடிப்படைக் கோட்பாட்டை முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டக் கமிஷன் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறது:

" கிராமங்களில் சமூக-பொருளாதார வாழ்க்கையை மாற்றுவதற்கான ஒரு ஏற்பாட்டைத் தொடங்குவதற்குச் சமுதாய அபிவிருத்தியை வழிமுறையாகவும் கிராமாந்தர விஸ்தரிப்பை அதற்கான ஸ்தாபனமாகவும் ஐந்தாண்டுத் திட்டம் கருதுகிறது."

இந்தக் கோட்பாட்டை அமல் நடத்துவதற்கான வேலைத் திட்டத்தை வகுக்கும்போது மூன்று அம்சங்களைக் கவனிக்கவேண்டும்:

(1) கிராமாந்தரப் பிரதேசங்களில் தேசிய விஸ்தரிப்பு சர்வீஸை நிரந்தர ஸ்தாபனமாகப் புகுத்துதல்; திட்டமிடுவதற்கும் அபிவிருத்திக்கும் ஆதார அமைப்பாக வட்டாரம் இருக்கும்.

(2) பின்கண்ட காரியங்களுக்கு வழிமுறையாகக் கருதி சமுதாய அபிவிருத்தியை ஊக்குவித்தல்:

(அ) சர்க்காரின் அபிவிருத்தி ஸ்தாபனங்கள் எல்லாவற்றுக்கும் இடையேயும்; உத்தியோக ஸ்தாபனம், மக்களின் ஸ்தாபனம், மக்கள் ஆகியோர் இடையேயும் இணைப்பான சிந்தனையையும் செயலையும் உருவாக்குதல்.

(ஆ) மக்களின் சமூக-பொருளாதார திருஷ்டியை மாற்றுதல்—குறிப்பாகக் கிராம ஸ்தாபனங்கள் மூலம் மாற்றுதல்: பஞ்சாயத்துகள், கூட்டுறவுசங்கங்கள், இளைஞர் சங்கங்கள், மகிலா மண்டல்கள் (மாதர் சங்கங்கள்) ஆகியவை இவற்றுக்கு உதாரணங்கள்.

(இ) பல-காரிய முறையை அடிப்படையாகக் கொண்டு பிரதேசவாரியாகத் தீவிர அபிவிருத்தி ஏற்படுத்துதல்.

(3) 'ஸ்தாபனத்தை'யும் 'வழி முறை'யையும் பலப்படுத்துவது, அனுஷ்டான ரீதியான க்ஷேமநல அரசாங்கத்தின் அமைப்பு முறையாக விளங்கும் விதத்தில் கிராம வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் வளர்ப்பது ஆகியவற்றுக்காக ஒரு வேலைத் திட்டம் வகுத்தல்.

இந்த மூன்று அம்சங்களையும் ஒப்புக்கொண்டால் பிறகு தே. வி. ச. என்றும், தீவிர அபிவிருத்திக் கட்டம் என்றும், தீவிர அபிவிருத்திக்குப் பிந்திய கட்டம் என்றும் பாகுபடுத்த வேண்டிய அவசியம் இல்லை. புதிய ஏற்பாட்டின்படி அபிவிருத்தி இலாகாக்கள் தங்கள் வசம் உள்ள நிதியிலிருந்து வட்டார வாரியாக முன்னைவிட அதிகப் பணம் ஒதுக்க வேண்டியிருக்கும் என்பது ஒரு முக்கிய விஷயம். முன்னேற்ற வேகம் நீடிப்பதற்காக மாத்திரம் அன்றி, பிரதேசங்களில் மேன்மேலும் அதிகமான அபிவிருத்தி காண்பதற்காகவும் இவ்வாறு நிதி ஒதுக்கவேண்டி யிருக்கும். எந்த ஒரு இலாகாவின் திட்டவட்டமான பொறுப்புக்கும் உட்படாமல் இருக்கும் இனங்கள் சம்பந்தப்பட்டவரை அவற்றுக்கென போதுமான நிதியைப் பிரத்தியேகமாக ஒதுக்கவேண்டும்.

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இலாகாக்களுக்கு ஒதுக்கப்படும் நிதிகள், மற்ற நிதிகள் ஆகியவற்றை வட்டார ரீதியாக ஒன்று சேர்த்து, தீவிர அபிவிருத்திக்குப் பிந்திய வட்டாரங்கள் உட்பட எல்லா வட்டாரங்களுக்கும் வேண்டிய நிதியைப் பெற்றுத் தருவது அவசியமாக இருக்கும். அதாவது, வட்டாரத் திட்டங்களிலிருந்தே மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று சுருக்கமாகக் கூறலாம்.

முதலாவது கட்டத்தில் ஒரு வட்டாரத்துக்கு ஆறு வருஷ காலத்துக்கு ரூ. 15 லட்சம் ஒதுக்கவேண்டும் என்றும், இரண்டாவது கட்டத்தில் மேற்கொண்டு ஆறு வருஷ காலத்துக்கு ரூ. 5.5 லட்சம் ஒதுக்கவேண்டும் என்றும் (பல்வந்த் ராய் மேத்தா) கோஷ்டி யோசனை கூறியிருக்கிறது. இதைக் கவனமாகப் பரிசீலித்ததன் பேரில், இந்தக்கட்டங்கள் ஒவ்வொன்றும் ஐந்தாண்டு காலம் நீடிக்க வேண்டும் என்று இந்திய சர்க்கார் கருதுகின்றனர். வேலைத் திட்டத்தின் வேகத்தையும் விறுவிறுப்பையும் பாதுகாப்பதற்கு இது உதவும். ஆயினும் குறிப்பிட்ட இடங்களில் முதலாவது கட்டத்தின் கால வரம்பை நீடிப்பது அவசியமாய் இருந்தால் அவ்வாறே ஒரு வருஷ காலம்வரை நீடிக்கலாம்.

நிதி ஒதுக்குவது சம்பந்தப்பட்டவரை, அனுபவ ரீதியாகக் கடந்த காலத்தில் ஏற்பட்ட செலவு விகிதத்தைக் கருத்தில் கொண் டால், முதல் கட்ட ஐந்து ஆண்டுக் காலத்துக்கு ரூ. 12 லட்சமும், இரண்டாவது கட்ட ஐந்து ஆண்டுக் காலத்துக்கு ரூ. 5 லட்சமும் ஒதுக்கவேண்டும் என்று (சர்க்கார்) கருதுகிறது.

ஒவ்வொரு வட்டாரத்துக்கும் வேலைக்கிரமத்தையும் பட்ஜட் மதிப்பீடுகளையும் தயாரிக்கும்போது பின்கண்ட குறிக்கோள்களைக் கருத்தில் கொள்ளவேண்டும் :

(1) பல்வேறு வேலைக்கிரமங்களை வகுப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் வட்டார அமைப்பு; கிராம அமைப்பு ஆகியவற்றை ஆதார உறுப்புகளாகக் கொள்ளவேண் டும். ஒவ்வொரு வட்டாரத்திலும் ஆரம்பத்திலிருந்தே இவ் வாறு கொள்ளவேண்டும்.

(2) கிராமப் பஞ்சாயத்து, கிராமக் கூட்டுறவு சங் கம், கிராமப் பள்ளிக்கூடம், மற்றும் வட்டார அல்லது ஜில்லா நிலையில் உள்ள ஒரு சட்டபூர்வமான ஸ்தாபனம் ஆகியவை வட்டார அபிவிருத்தி வேலைக்கிரமத்துக்கு அஸ்திவாரங்கள் ஆகும். திட்டமிடுதல், வேலைக்கிரமத்தை நிறைவேற்றுதல் ஆகியவை சம்பந்தமான பொறுப்பு முழுவதையும் இவற்றுக்கு மாற்றவேண்டும். இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள் இந்த ஸ்தாபனங்களை ஏற் படுத்தி, முதல் கட்டம் பூர்த்தியாவதற்கு முன்பிருந்தே அவற்றை இயங்கச் செய்யவேண்டும்.

(3) வேலைக்கிரம பட்ஜட்டில் சேர்க்கப்பட்டுள்ள ஸ்தாபனங்கள், இலாகா பூர்வமான ஸ்தாபனங்கள் ஆகிய வற்றின் வேலைக்கிரமங்களையும் நடவடிக்கைகளையும் வட் டார அபிவிருத்தித் திட்டத்தில் பூரணமாக இணைக்கவேண் டும். ஒரு உத்தியோக ஸ்தாபனத்தின் பொறுப்பில் உள்ள அபிவிருத்தி வேலை எதுவும் வட்டாரத் திட்டத்துக்குப் புறம் பாக இருக்கக் கூடாது.

(4) உழைப்பாகவும் பணமாகவும் மற்ற வழிகளிலும் உள்ளூர்ச் சமுதாயத்தினர் பங்கெடுத்துக்கொள்ள வாய்ப்

பளிப்பது வேலைக்கிரம பட்ஜட்டின் நோக்கம். கூடுமான வரை மேற்சொன்ன நிதிவசதிகள் இந்த வேலைக்கிரம பட்ஜட்டில் சேர்க்கப்பட வேண்டும். அவை நீங்கலாக உள்ள நிதிகளை அபிவிருத்தி பட்ஜட்டுகளில் சேர்ப்பதைக் கொள்கையாகக் கொள்ளவேண்டும். அங்கீகாரம் பெற்ற அபிவிருத்தித் திட்டத்தின் பிரகாரம் இந்நிதிகளை வட்டாரங் களில் உபயோகிக்க வேண்டும்.

இந்த வேலைத் திட்டத்தை இரு கட்டங்களாகப் பாகுபடுத்த உத்தேசிக்கப்படுகிறது. அவை 1-வது கட்டம், 2-வது கட்டம் எனப் படும். 1-வது கட்டம் என்பது தீவிர அபிவிருத்திக் கட்டமாகும். மக்க ளின் ஒத்துழைப்பைச் சமுதாய அபிவிருத்தியின் வழிமுறையாகக் கருதி அதை வளர்க்கவும், அந்தந்தப் பிரதேசங்களின் திட்டங்களை வகுப்பதில் பஞ்சாயத்துகளுக்கு நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தவும் இக்கட்டத்தில் ஏற்பாடு செய்யப்படும். சுயபலத்துடன் இயங்கும் விதத்தில் கிராம சமுதாயங்கள் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கின்றன என்பதற்கு முதல் கட்டத்தின் வெற்றியே அத்தாட்சியாக இருக்கும் இத்தகைய சமுதாயங்களை உருவாக்குவதுதான் திட்டத்தின் அடிப் படைக் குறிக்கோளாகும். தீவிர அபிவிருத்திக்குப் பிந்திய கட்ட மாகிய இரண்டாவது கட்டத்தில் சமுதாய அபிவிருத்தி முறையின் விரிவான அம்சங்களைத் தீவிரமாக அமல் நடத்துவது 'நோக்கம்' முந்தியதைவிட இதன் வேலைக்கிரம பட்ஜட் சிறியது. அபிவிருத்தி வேலைகளை விடச் 'சமுதாய அபிவிருத்தி முறையை' அதிகமாக வலியுறுத்தும் இனங்களுக்கு மாத்திரமே இந்த பட்ஜட்டில் நிதி ஒதுக் கப்படுகிறது. இரண்டாவது கட்ட வட்டாரங்களில் ஆரம்ப முதலே வேலைத் திட்டத்தை வட்டார அல்லது ஜில்லா நிலையில் உள்ள சட்ட பூர்வமான ஸ்தாபனங்களிடம் ஒப்படைக்கவேண்டும். இரண்டாவது கட்டத்தின் அமைப்பு இதையே எடுத்துக் காட்டுகிறது.

திட்ட விஸ்தரிப்பை மாற்றியமைப்பது சம்பந்தப்பட்டவரை, ஏற்கனவே அங்கீகாரம் பெற்ற வேலைக்கிரமப்படி பார்த்தால் கூட 1,000 தே. வி. ச. வட்டாரங்கள் 1,960, அக்டோபரில்தான் ஆரம்பமாகும். அதாவது, மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட காலம்

தொடங்குவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்புதான் இவை ஆரம்ப மாகும். திறமையுடனே திறமையில்லாமலோ, எப்படியாவது இரண்டாவது திட்ட காலத்தில் நாடு முழுவதிலும் ச. அ. திட்டத்தைப் பரப்ப வேண்டும் என்ற பிடிவாதக் கருத்து இந்திய சர்க்காருக்கு இல்லை. 1963 அக்டோபர் வாக்கில்தான் நாடு முழுவதிலும் தேசிய விஸ்தரிப்பு சர்வீசைப் பரப்ப வேண்டும் என்று அவர்கள் தீர்மானித்துள்ளனர். 1953, அக்டோபரில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் தே. வி. ச. வேலைத் திட்டம் ஆரம்பமானதிலிருந்து 10 ஆண்டுகள் பூர்த்தியாவதை இது குறிக்கிறது. பார்க்கப்போனால், 1952-ல் உணவு உற்பத்திப் பெருக்க விசாரணைக் கமிட்டியும் இதையே சிபாரிசு செய்திருந்தது. இரண்டாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 200 கோடி வரம்புக்கு உட்பட்டு வருங்கால நிதி ஒதுக்கல்கள் சரிக்கட்டப் படும். வருடாந்தரத் திட்டங்களையும் இதற்குப் பொருத்தமான முறையில் தயாரிக்க வேண்டும். 1958-59-க்குத் திட்டக் கமிஷன் ஏற்கனவே அங்கீகரித்துள்ள நிதி வரம்புகளுக்கு உட்பட்டு அவ்வருஷத்துக்கான சமுதாய அபிவிருத்திச் செலவை சரிக்கட்டிக் கொள்ள வேண்டும்.

***ஒவ்வொரு வட்டாரத்திலும் விஸ்தரிப்புக்குப் பூர்வாங்கக் கட்டம்*:** விவசாய உற்பத்தி மீண்டும் வலியுறுத்தப்படுவதால், 1959, ஏப்ரல் முதல் அமைக்கப்படும் ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு வருஷ காலத்துக்கு, விஸ்தரிப்புக் கட்டத்துக்குப் பூர்வாங்கமாக விவசாயத் துறையில் மாத்திரம் வேலைகள் நடைபெற வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது; ஆகவே இத்தகைய வட்டாரம் ஒவ்வொன்றுக்கும் வட்டார அபிவிருத்தி அதிகாரி ஒருவர், ஒரு விவசாய விஸ்தரிப்பு அதிகாரி, மூன்று பயிற்சி பெற்ற ஐந்து கிராம சேவக்குகள் ஆகியோரை நியமிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த வட்டாரம் 1-வது கட்டத்தை அடையும்போது இந்தச் சிப்பந்திகளை, அப்போதைய வட்டாரச் சிப்பந்திஸ்தாபனத்தில் கிரகித்துக் கொள்ளலாம்.

4862

பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்
செய்தி - ஒலிபரப்பு அமைச்சகம்
பழைய செக்ரடேரியட், டில்லி-6.
கிளை :—8, ஸான்தோம் ஹைரோடு, சென்னை-4.